வெளியீடு 23-10-2002

Issued 23-10-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 6, 2001 – தொகுதி 10 – எண் 3

Thursday the 6th September, 2001 – Volume 10 – No. 3

...றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

**6-9-2001**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 767-798

**தகவல் கோரல்—**

(அ) காவேரி-டெல்டா பகுதிகளில் குறுவை நெல் கொள்முதல் செய்தல் 799-802

(ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள் 802-805, 809

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு**

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, ஈரோடு அரசு மருத்துவமனைகளில் உள்ள Reserve மருத்துவர்களை மாற்றுதல் 806-809

**4. கவன ஈர்ப்பு**

குமரி மாவட்டம், குழித்துறை, தேவி குமரி மகளிர் கல்லூரியில் ஆசிரியைகள் நியமனம் செய்யப்படாதது 810-813

**5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

(அ) கோரிக்கை எண் 29-சமூக நலன்

(ஆ) கோரிக்கை எண் 21-மீன்வளம்

(இ) கோரிக்கை எண் 22-கால்நடை வளர்ப்பு 814-994

(ஈ) கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்.

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி .. 814, 818, 834, 841-842 852, 899-920 923

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. கே. பி. இராஜேந்திர பிரசாத் 818, 821, 826, 883-8[illegible]

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு 930, 932, 940-941, 984-993

*திரு. கே. என். சேகரன் .. 827-833

*திரு. ப. சிதம்பரம் .. 835-839

திரு. சோ. பாலகிருஷ்ணன் .. 839-845

திருமதி பூ காசாம்பு .. 845-851

*திருமதி சி. எம். சூரியகலா .. 852-858

*திரு. எச். எம். ராஜு .. 858-863

*செல்வி. க. பாலபாரதி .. 864-870

*திருமதி எஸ். ராஜம்மாள் .. 871-876

*திரு. ஏ. எஸ். கண்ணன் .. 876-883

*திரு. எஸ். ஏ. எம். உசேன் .. 933-940

*திரு. கே. எஸ். தென்னரசு .. 942-946

*திரு. ஆ. ராஜகோபால் .. 947-951

திரு. என். கே. பெருமாள் .. 951-956

திரு. ஆ. செல்வராஜ் .. 957-962

*திரு. ஜி. கோதண்டராமன் .. 962-969

*திருமதி டி. யசோதா .. 969-974

*திரு. பி. கே. டி. நடராஜன் .. 974-980

*திரு. கே. மகேந்திரன் .. 981-984

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 995-996

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஆவணி 21, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 செப்டம்பர் 6, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

ஒருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் வாழ்கின்றவரை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

45—

**பீடித் தொழிலாளர்களுக்கு வாரியம்**

***1933-திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பீடித் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித்

தொழிலாளர்கள், அமைப்பு ரீதியில் உள்ள தொழிலாளர்கள் ஆவார்கள். பீடித் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் 1976 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம் மற்றும் 1978 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர்கள் நல நிதி விதிகள் ஆகியவற்றின்கீழ் மத்திய அரசால் நேரடியாக அதன் தொழிலாளர் நல அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, பீடித் தொழிலாளர்களுக்காக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் உட்பட தமிழ்நாட்டில் தனி வாரியம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, வேலூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் குறிப்பாக எங்களுடைய திருப்பத்தூர், நாட்றாம்பள்ளி பகுதிகளிலே சுமார் 10 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அறிக்கையின்படி 1.8 இலட்சம் பீடித் தொழிலாளர்கள்தான் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 8.2 இலட்சம் பீடித் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் அந்தஸ்தின்றி இன்றையதினம் தினக்கூலிகளாக நடத்தப்படுகின்றார்கள். எனவே, இவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்றால், இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது இவர்களுக்கென்று தனி வாரியம் அமைத்து, குறிப்பாக, இதிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை இஸ்லாமிய சமுதாயத் தோழர்கள் எல்லாம் விவசாயம் பாதிக்கப்பட்ட காரணத்தினாலே பீடித் தொழிலைச் செய்து பிழைத்து வருகின்றார்கள். இவர்கள் வாழ்க்கையிலே வளம் பெற வேண்டுமென்றால், 1993 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி ஒவ்வொரு தொழிலாளருக்கும் அந்த நிர்வாகம் 50 ஆயிரம் ரூபாயை ஈட்டுத் தொகையாகக் கட்ட வேண்டும் என்பது இன்றுவரை கட்டப்படாமல் இருக்கிறது. எனவே, இந்த அரசு இதில் தலையிட்டு, இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா? அதேபோல, இவர்களுக்கு E.S.I. மருத்துவமனை கட்டித்தர திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கென்று ஏற்கெனவே வாரியம் அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு இருக்கிறது. பரிசீலித்து, இது அமைப்பு சாரா தொழிலிலே வரவில்லை. அமைப்புக்கு உட்பட்ட தொழிலாக இருக்கின்ற காரணத்தால் இது ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு, இவர்களுக்கென்று தனியாக ஒரு வாரியம் அமைக்க

v24478
சென்னை-600 008





இயலாது என்று அரசால் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், பீடித் தொழிலாளர்களுக்கென்று. அந்த வாரியத்திற்கென்று நிதி ஆதாரத்தைப் பெருக்குவது என்பது அந்தத் தயாரிப்பாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற செஸ் கட்டணத்திலிருந்து பெறப்படுகிறது. இது முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தினுடைய திட்டத்தின்கீழ் வருவதால், மாநில அரசின் சார்பில் அமைப்பு ரீதியாக இருக்கின்ற ஒரு தொழிலை மீண்டும் அமைப்பு சாராத தொழில் என்ற தலைப்பின் கீழ் கொண்டுவர இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் தெரிவித்ததைப்போல், தமிழகத்திலே ஏறத்தாழ 7 இலட்சம் மக்கள் இன்று பீடித் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல வாரியம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று ஏற்கெனவே அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்றுதான் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது தமிழக அரசு சுதந்திர தினத்தன்று ஓர் அறிவிப்பைச் செய்தது. பொது இடங்களில் பீடி அல்லது புகை பிடிப்பதைத் தடை செய்வதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அப்படி வருகின்ற நேரத்தில் கடுமையாகப் பாதிக்கப்படுகின்ற தொழிலாளிகள் பீடித் தொழிலாளிகள்தான். அந்தப் பாதிப்பு பீடித் தொழிலாளிகளுக்குத்தான் ஏற்படுகிறது என்ற பிரத்யேகமான சூழ்நிலையைக் கணக்கில் எடுத்து, இந்தத் தொழிலாளிகளுக்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அரசின் முன்னால் ஒரு சமூகப் பிரச்சினை என்ற முறையில் வந்திருப்பதனால், இவர்களுக்கு, இவர்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, இந்த வேலையை இழக்கக்கூடிய நபர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட விஷயங்களைப்பற்றி பரிசீலித்து, இவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையிலே உள்ள வேலைகளைச் செய்வதற்கு ஒரு நல வாரியம் அமைப்பது வழியாகத்தான் முடியும் என்பதை தமிழக அரசு பரிசீலித்து, ஒரு நல வாரியம்—இந்த வேலைகளை எல்லாம் செய்து முடிப்பதற்கான ஒரு நல வாரியம் என்ற முறையில்—அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதைப் போல சட்டப்படி அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்து மீண்டும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அறிக்கைப்படி 1.8 லட்சம் பேர் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் தொழிலாளர்களுக்கு சர்வீஸ் கார்டு, லாக் புக், அடையாள அட்டை, லீவ் கார்டு, இதிலே எவ்வளவு பேருக்கு வழங்கியுள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய கணக்கு என்னிடம் இல்லை. அதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் விளக்கம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் 8 லட்சம் என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1.8 லட்சம் என்ற அடிப்படையிலேயும் எண்ணிக்கை இருப்பதாக இங்கே அறிவித்தார்கள். பொதுவாக எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தை ஒட்டியிருக்கிற செங்கம் பகுதியில் பீடித் தொழிலாளர்கள் அதிகமாகத்தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்கள்கூட விடுபட்டது என்கிற குறைபாடு இருக்கிறது. எனவே எந்த அடிப்படையிலே அரசு எண்ணிக்கையை எடுக்கிறது? அதே நேரத்தில் பொதுமக்கள் பயன்படுத்துகிற பொது இடங்களில் பொதுமக்கள் செல்கிற பகுதிகளில் பீடி பிடிக்கக் கூடாது என்கிற சட்டம் வருகிற காரணத்தினால் பெரும்பான்மையாக இந்தத் தொழில் முடக்கப்படுகிற ஒரு நிலை ஏற்படுகின்ற காரணத்தினால் பீடித் தொழிலாளிக்கு உதவித் தொகை வழங்க இந்த அரசு அறிவிக்க





விரும்புமா? குறிப்பாக பீடித் தொழிலிலே வயது அதிகமாக அதிகமாக அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் காச நோய் என்கிற நோயும் வருகிறது. அப்படி வருகிறபோது அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிற திட்டம் இந்த அரசிடம் உள்ளதா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்
> அவன் காணத் தகுந்தது வறுமையாம்
> பூணத் தகுந்தது பொறுமையாம்"

என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பாடினார். வறுமையே மிஞ்சியிருக்கிற தொழிலாளர்களின் வாழ்வில் ஒரு சமூகப் பாதுகாப்பைத் தர வேண்டும் என்றுதான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழிலாளர்களுக்கு எல்லாம் ஓய்வூதியத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, எல்லா தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள் என்பதையும், அதற்கு வேண்டிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய எல்லா ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படும் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுடைய பாதிப்பைப் பற்றி இங்கே சொல்லப்படுகிறது. புகை பிடிப்பதைத் தடை செய்கிற காரணத்தினலே சுமார் 7 லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலை. இதைப் போலவே இயந்திரமயமாக்கப்பட்ட காரணத்தினாலே தீப்பெட்டித் தொழிலும் பாதிக்கப்பட்டு, பல லட்சம் தொழிலாளர்கள் அவல நிலைக்கு ஆளாகிறார்கள். ஆகவே குடிசைத் தொழிலாக இருக்கின்ற, பாரம்பரியத் தொழிலாக இருக்கின்ற இப்படிப்பட்ட சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் எல்லாம் பாதிக்கப்படுவதன் மூலமாக நாட்டிலே ஒரு புதிய சிக்கல் ஏற்படும். மிகப் பெரிய வேலைவாய்ப்பு இழப்பு, அதனாலே பொருளாதார இழப்பு, அதன்பிறகு சமூகத்திலே மிகப் பெரிய பிரச்சினை

என்ற அளவிலேகூட வந்துவிடுகிற ஒரு அபாய சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே இப்படிப்பட்ட குடிசைத் தொழிலுக்குரிய அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான திட்டத்தைப் பற்றி, அந்த அறிவிப்பு வருவதற்கு முன்னாலே அவர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளைப் பற்றி சிறப்புக் கண்ணோட்டத்துடன் நம்முடைய அரசு அணுகி, அதற்குரிய தீர்வு காண்பதற்கான முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துப்படி கண்டிப்பாகத் தொழிலாளர்களை மிகப் பெரிய அளவில் பாதிக்கக்கூடிய நிலைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நிச்சயமாக விடாது என்பதை அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நல வாரியம் அமைக்கப்படுமா என்ற இந்தக் கேள்வி தற்போது ஆய்வில்தான் உள்ளது. பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த பீடித் தொழிலைப் பொறுத்தவரையில் இது பரவலாக நாடு முழுவதும் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களில் மிகப் பரவலாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு உரிய சிறப்பு என்னவென்றால் ஒரு தனித் தொழிற்சாலையில் உட்கார்ந்து மற்ற தொழிற்சாலைகளைப் போல இந்தத் தொழில் நடைபெறுவதில்லை. ஆங்காங்கே வீடுகளிலே இருந்துகொண்டேகூட செய்கிறார்கள். அஃதன்னியில் ஆண்கள் மட்டும் அல்லாமல் பெண்களும் இதிலே கணிசமாக ஈடுபட்டிருக்கிறார்கள். குழந்தைகளும், வயதிற்கு வராத குழந்தைகளும்கூட இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் ஒரு சரியான கணக்கு இதுவரையில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1.8 இலட்சம் என்று சொல்கிறார்கள். வேறுவிதமாக 10 இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எவ்வளவு தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கு தேவை.



முற்பகல் 10-10

எனவே இதற்கெல்லாம் வாரியம், நல வாரியம் என்ற ஒன்று இருந்தால் குழந்தைகள் பெண்கள் இவர்களெல்லாம் ஈடுபட்டிருக்கிற இந்தத் தொழிலில் சிறப்பான சமூக நீதி கிடைக்கும். எனவே அரசு இப்பொழுதாவது சரியான கணக்கு எடுத்து பாகுபாடு செய்து எவ்வளவு பேர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற சரியான விவரங்களோடு செயல்படுத்துவதற்காக ஒரு வாரியம் அல்லது அதற்குத் தேவையான வேறு வகையிலே முனைப்போடு செயல்பட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எடுத்துத் தெரிவித்ததைப்போல அமைப்புரீதியாக உள்ள ஒரு தொழிலை அமைப்புசாரா என்ற அந்தத் தலைப்பில் கொண்டுவருவது மிக மிகக் கடினம். அது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். எனவே தனியாக வாரியம் என்று வருகிறபோது அமைப்புசாரா தொழில்களுக்குத்தான் வாரியம் என்று தனியாக உருவாக்கமுடியும். மேலும் இந்த பீடித் தொழிலை பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் 1976-ஆம் ஆண்டும் 1978 ஆம் ஆண்டும் இரண்டு சட்டங்களைப் போட்டு அதன் மூலமாக இந்தியா முழுவதும் இருக்கின்ற பீடித் தொழிலாளர்களுக்கு வேண்டிய நல உதவிகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்த கருத்திற்கிணங்க வாரியத்தை அமைக்க முடியுமா என்பதை மீண்டும் ஆராயலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இந்த பீடித் தொழிலில் எத்தனை பேர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற சரியான கணக்கு இல்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பாக 1.8 இலட்சம் தொழிலாளர்கள் இருப்பதாக தெரிவித்திருக்கிறோம். அதுதான் அரசிடம் இருக்கின்ற கணக்கு. மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் தெரிவித்ததைப்போல இலட்சக்கணக்கான பேர் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். பெண்களும் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கிற உண்மையான கணக்கை நாம் எடுப்பதற்கு துறையின் மூலம் துரிதமான நடவடிக்கை எடுப்போம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிற கணக்கு எங்களுடைய வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைதான் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எங்களுடைய மாவட்டத்திலே 1 இலட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மேல் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்தக் கேள்வியே வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் என்று ஆரம்பித்திருக்கிற காரணத்தால் மாவட்ட கணக்கைத்தான் அமைச்சருக்கு துறை கொடுத்திருக்கும் என்றும் கருதுகிறேன். ஆனால் தமிழகம் முழுவதும் பத்து இலட்சம் பேருக்கு மேல் இருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாரியம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்று சொல்கிறார்கள். அந்தபோல ஓய்வூதியத் திட்டம் இவர்களுக்கு கொடுக்கப்படும் என்றும் சொல்கிறார்கள். நான் தங்கள் மூலமாக அறிய விரும்புவது எல்லாம் இந்த புகை பிடிப்பது பொது இடங்களிலே கூடாது என்று வருகின்றபோது நிச்சயமாக அவர்களுக்கு ஒரு மாற்றுத் தொழிலை நாம் கொடுத்தாக வேண்டும். 10 இலட்சம் பேர் தொழிலை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு மறுவாழ்வு கொடுக்கப்பட வேண்டியது ஒரு தலையாய கடமை என்கின்ற காரணத்ினாலே அரசாங்கம் அதை உணர்ந்து அவர்களுக்கு என்ன மாற்றுத் திட்டத்தை வைத்திருக்கிறது? ஏனென்றால் ஓய்வூதியம் கொடுத்து நீங்கள் ஓரேயடியாக பண்ணினாலும் ஓய்வூதியத்தை வைத்துக் கொண்டு அவர்கள் பிழைப்பை நடத்திட்விட முடியாது. ஆகவே இப்படிப் பாதிக்கப்படப் போகிற 10 இலட்சம் பீடித் தொழிலாளர்களுக்கு அரசு ஏதாவது புனர்வாழ்வு கொடுப்பதற்காக மாற்றுத் திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓய்வூதியம் தரப்படும் என்று சொல்லவில்லை. பீடித் தொழிலாளர்கள் எல்லாம் இப்படிப் பாதிக்கப்படுகிறார்களே என்று சொல்கிறபோது அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு எல்லாம் ஒரு அருமையான ஓய்வூதியத் திட்டத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதைத்தான் சொன்னேனே தவிர பீடித் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் தரப்போகிறோம் என்று சொல்லவில்லை ஒன்று. இரண்டாவது சரியான கணக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையினுடைய உரிமையாளர்கள் சரியான கணக்கைத் துறைக்குத் தராமல்



மறைக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. எனவே அதில் உண்மையான கணக்கு என்ன என்பதைக் கண்டறிந்து, அவைக்குத் தெரிவிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. எஸ். எஸ். மணி நாடார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

46—

## இலவச உயர் கல்வி

*749—**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை ஏறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவச உயர்கல்வி தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்களின் கல்வித் தரம் உயர வேண்டும். சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள அவர்கள் துரதிருஷ்டவசமாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். Socially and economically backward என்ற அந்த நிலைமையில் உள்ள அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா? பனையேறும்போது இறக்கின்ற பனைத் தொழிலாளர்களுக்கு அதிக நஷ்டஈடு கொடுக்க அரசு ஆவன செய்யுமா? இலவச கல்வி பயன்பெறும் வகையில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு இலவச கல்வி கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, நஷ்டஈடு கொடுக்கப்படுமா என்பது மட்டும்தான் ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம் கேட்கலாம். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கலாமா என்பதை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரிடம்தான் கேட்க வேண்டும். ஊரகத் தொழில் துறை அமைச்சர் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையேறும் தொழிலாளர்கள் தொழில் செய்கிறபோது துரதிருஷ்டவசமாக இறக்க நேரிட்டால் அவர்களுக்குத் தற்போது அரசின் சார்பாக 15 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாகவும், அப்படித் தொழில் செய்கிறபோது விபத்து ஏற்படுகின்ற அந்தக் கால கட்டத்திலே உடல் ஊனமுற்றால் அவர்களுக்கு அந்த ஊனத்திற்கு ஏற்றவாறு 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை வழங்க தற்போது அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது என்பதை நான் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சிவசாமி.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையேறும் தொழிலாளர்களுடைய பணியில் இன்னொரு மரமான தென்னை மரத்திலேயிருந்தும் அவர்கள் பதனீர் இறக்குகின்றார்கள். இன்றைக்கு நாட்டிலேயிருக்கின்ற cool drinks உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளைப்போல, அந்தப் பதனீரையும் பதப்படுத்தி ஒரு cool drinks-ஆக வெளியிடுவதற்கு அரசு ஒரு தொழிலை ஆய்வு செய்கிறபோது அவர்களுடைய எதிர்கால கல்வி மட்டுமல்லாது அவர்களுடைய வாழ்க்கைக்கும் ஏதுவாக இருக்கும். எனவே, அது சம்பந்தமாக அரசு ஏதேனும் ஆய்வு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாமன்றத்தின் வாயிலாக நல்ல ஆலோசனை வழங்கியிருக்கின்றார்கள். அவர்களுடைய ஆலோசனையை அரசு கனிவோடும், பரிவோடும் பரிசீலிக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையேறுகின்ற தொழிலாளர்கள் இன்றைக்கு அந்த வேலையினுடைய



சிரமத்தைக் கருதியும், அவர்களுக்கு வரக்கூடிய வருமானம் என்று சொல்கிறபோது மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அந்தத் தொழிலையே மறக்கக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தால் 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்களுக்கு அதை ஒரு இலட்சம் ரூபாயாக-பனையேறுகின்ற தொழிலாளி விபத்திலே மரணம் அடைந்தால் அதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதேமாதிரி, பனை மரத்திற்கு மாத்திரம்தான் அப்படிக் கொடுக்கிறார்கள். பனையேறுகின்ற தொழிலாளி தென்னை மரத்திலே ஏறி தேங்காய் வெட்டுகின்றபோது இப்படி விபத்து ஏற்பட்டால், பனையேறினால்தான் அதைக் கொடுப்போம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, பனை மரத்திலே ஏறினாலும் சரி, தென்னை மரத்திலே ஏறினாலும் சரி, ஏறுகிறபோது விபத்து ஏற்பட்டு அவர்கள் உயிரிழக்க நேரிட்டால் பனைமரம், தென்னை மரம் என்று பாகுபாடு இல்லாமல், அரசு அந்த உதவித் தொகையைக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை வழங்குகின்றபோது தற்போது பனையேறுகின்ற தொழிலாளர்களுக்கு மட்டும்தான் விபத்து நேரிடுகின்ற அந்தக் கால கட்டத்திலே நிவாரண உதவியாக அரசின் சார்பாக உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதையும், அதேபோன்று தென்னை மரம் ஏறுகின்றபோது விபத்து நேரிடுகின்றபோது அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்கிற ஒரு நிலையை இன்றைக்கு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவர்களுடைய நல்ல யோசனையை தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று அந்த ஆலோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திருமதி பூ. காசாம்பு. மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

47—

## உணவுப் பொருட்கள்

***1865—திருமதி பூ. காசாம்பு:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள். வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலை ஒன்றியப் பகுதியில் நியாய விலைக் கடையில் உணவுப் பொருட்கள் சரிவர பொதுமக்களுக்கு வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சரிவர கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், கல்வராயன்மலை ஒன்றியப் பகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான முழு அளவு, அதாவது 100 விழுக்காடு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) நடப்பாண்டிலும் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு தடங்கலின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

**திருமதி பூ. காசாம்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும். விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம், கல்வராயன்மலைப் பகுதியில் வாழும் மக்கள் பட்டினியோடும், பசியோடும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயவிலைக் கடையில் வழங்கும் பொருட்கள் சரியாகப் போய் சேருவதில்லை. அப்பொருட்கள் கல்வராயன்மலைப் பகுதியில்



இருக்கும் நியாயவிலைக் கடைக்குப் போய் சேர அரசு முடிவெடுக்குமா? மேலும் 100 சதவிகித பொருள்கள் கிடைக்க அரசு வழிசெய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன்மலைப் பகுதியிலே மொத்தம் 24 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அந்த 24 கடைகளுடன் மூன்று பெரும் பல்நோக்கு லேம்ப் சொசைட்டிகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கடைகளில் 10,452 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்டிருக்கிற இந்தக் கடைகளுக்கு 100 சதவிகித ஒதுக்கீட்டுக்குத் தேவையான அளவுக்கு முழுமையாக கொடுக்கப்படுகிறது. அந்த 100 விழுக்காடும் முழுமையாக அந்தப் பகுதியிலே பயன்படுத்தப்படுகிறது என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி:** தமிழகத்திலே மொத்தம் எத்தனை நியாய விலைக் கடைகள் இருக்கின்றன? அதிலே நியாயமான முறையிலே எத்தனை கடைகளிலே விநியோகம் நடைபெறுகிறது என்று அரசு கணக்கெடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 27,733 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அனைத்துக் கடைகளும் நியாயமான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் புள்ளிவிவரப்படி தமிழகத்திலேயும் பட்டினிச் சாவுகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் இருக்கிறதா? அதிக அளவு நெல் அரிசிகள் stock செய்து வீணாவதைத் தடுக்கின்ற வகையில் நியாய விலைக் கடைகளிலே 20 கிலோவிலிருந்து 30 கிலோ வரை அரிசி வழங்க ஆவன செய்யப்படுமா? ரேசன் கடைகளில், ரேசன் கார்டு இல்லாதவர்களுக்கு எல்லாம் ரேசன் கார்டுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி, இது கல்வராயன் மலையில், நியாய விலைக் கடையைப் பற்றியது. பொதுக் கேள்வி கேட்டால், மொத்தமாக அவரால் விளக்கம் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கல்வராயன்மலை சம்பந்தப்பட்ட கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அனைத்துக் கேள்விகளையும் தனியாகக் கேட்டால் முழு விவரங்களும் உறுப்பினர் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன். இது கல்வராயன்மலை, சிங்காநல்லூர் அல்ல. (சிரிப்பு).

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கூட்டுறவுத் துறை சம்பந்தமான முக்கியமான விஷயம். இரண்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் முதல்வர் அவர்களைச் சந்தித்து நியாய விலைக் கடைகளில் இப்போது வழங்குகிற அத்தியாவசியப் பொருட்களுடன் ரவை, மைதா, பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், போன்ற அத்தியாவசியப் பொருட்களை இணைத்து விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்திலாவது அடுத்த ஆண்டிலாவது இந்தப் பொருள்களை நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகிப்பதற்கானத் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமப்பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு வழங்குகின்ற ரேசன் பொருட்களைக் காட்டிலும், மலைப் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்குக் கூடுதலாக உணவுப் பொருள்கள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு . உறுப்பினர் மலைப்பகுதியிலே வசிக்கின்றவர்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் மண்ணெண்ணெய்





அதிகமான அளவுக்கு வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை மலைப்பகுதியில் வசிக்கிற அனைவருக்கும் Plain-ல் வசிக்கிறவர்களைவிட கூடுதலாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு பதில் சொல்வது என்னுடைய கடமை என்கிற காரணத்தாலே சொல்கிறேன். தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு இல்லை என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற விவரங்களுக்கு எல்லாம் அவர் தனிக் கேள்வி போடவேண்டுமென்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது மலைப் பிரதேசங்களுக்கு மண்ணெண்ணெய் அதிகமாகத் தருகிறோம் என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே இந்த அவையில் அதிகமாக சர்க்கரையும் கேட்டிருந்தேன். அதுவும் அல்லாமல், சில இடங்களிலே ரேஷன் கார்டுகள் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்குக் குறைவாக இருக்கும் பட்சத்திலும் அவர்கள் எல்லாம் பகுதிநேர ரேஷன் கடை வேண்டும் என்று கேட்கிறார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரிலே இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். அந்தமாதிரி மலைப் பிரதேசங்களுக்கு மட்டும் பகுதிநேர ரேஷன் கடைகள் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு குடும்ப அட்டை இல்லையென்று விண்ணப்பங்கள் வருகின்றனவோ, அவற்றையெல்லாம் முறையாகப் பரிசீலித்து, முறையாக யார் யாருக்கு வழங்கப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் வழங்குவதற்கு இந்தத் துறை முழுமையாக ஈடுபட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் என். நன்மாறன்.

[ 2001 செப்டம்பர் 6

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளிலே எடை குறைவு என்கிற புகார் அடிக்கடி நாம் சந்திக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இதனை நிவர்த்தி செய்வதற்காக பாக்கெட்டுகளிலே போட்டு பொருட்களை விற்பனை செய்கிற அந்த முறையை அரசு பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிற அந்த ஆலோசனையைச் செயல்படுத்துவதன் மூலம், 1,500 கோடி ரூபாய் மானியம் வழங்கிக்கொண்டிருக்கின்ற அரசுக்கு மேலும் நிதிச் சுமை ஏற்படும் என்பதாலே இப்போது இருக்கிற முறையிலேயே உரிய அளவிலே பொருட்களை வழங்குவதற்கு தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 குடும்ப அட்டைகள் இருக்கின்ற கிராமங்களுக்குப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

இன்னொரு செய்தி. அதிகாரிகள் தற்போது தமிழக அரசு 250 கார்டுகள் இருக்கின்ற பகுதிகளைப் பிரித்துக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருப்பதாக ஒரு தகவலைச் சொல்கிறார்கள். அது பற்றியும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதைப்போல் 27,733 நியாய விலைக் கடைகள் இப்போது தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எங்கெல்லாம் மக்களின் தேவைக்கு ஏற்ப கோரிக்கைகள் வருகின்றனவோ அவற்றின் அடிப்படையிலே நியாய விலைக் கடைகள் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்.



2001 செப்டம்பர் 6 ]

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ரேஷன் கார்டுகள் 500-க்கு மேலாக உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரித்து புதியதாக ரேஷன் கடையை ஆரம்பிப்பதற்கு ஏதாவது திட்டம் நம் அரசிடம் இருக்கிறதா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். நிச்சயமாக கோரிக்கைகள் வருகிறபோது தேவையின் அடிப்படையிலே உரிய நியாயம் அவற்றில் இருக்கிறபோது மக்களின் தேவையின் அடிப்படையிலே நியாய விலைக் கடைகளைக் கூடுதலாகத் திறப்பதிலே இந்த அரசு முனைப்போடு இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களிலே நியாய விலைக் கடைகள் போதுமான அளவிற்கு இல்லை. தொலைதூரம் நடந்துபோய் பொருட்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்று மக்கள் கருதுகிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது 250 அட்டைகள் இருந்தால் ஒரு நியாய விலைக் கடை வருமா; 500 அட்டைகள் இருந்தால் ஒரு நியாய விலைக் கடை வருமா என்று கேட்டார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையைக் கருதி, நியாயமாக இருந்தால் கொடுக்கப்படும் என்கிறார்கள். அப்படியொரு நியாயவிலைக் கடையைப் புதியதாகத் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க வேண்டுமென்றால், அடிப்படையிலே என்ன கூறுகள் இருக்க வேண்டும், எந்த அளவு தோலை வைத்து ஒரு நியாய விலைக் கடை தொடங்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது என்பதையும், எத்தனை கார்டுதாரர்கள் இருந்தால் ஒரு நியாய விலைக் கடை தொடங்கலாம் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற ஒரு நியாய விலைக் கடைக்கும், புதியதாக திறக்க வேண்டும் என்று சொல்கிற கடைக்கும் சுமார் 2 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்றும், அப்படிப்

[ 2001 செப்டம்பர் 6

புதியதாக கோரிக்கை வருகிற அந்தக் கடையின் பகுதிக்கு சுமார் 250 கார்டுகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றும் அரசு விதி நிர்ணயித்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலிலே நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், பல்வேறு பகுதிகளுக்கு நாங்கள் நன்றி அறிவிப்பு செய்யச் சென்ற நேரங்களிலே எல்லாம் மக்கள் எங்களுக்கு கடந்த ஆட்சியிலே ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை, ரேஷன் கார்டுகள் வாங்கித் தாருங்கள் என்று எங்களிடம் அதிகப்படியான மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்களையெல்லாம் நாங்கள் பரிந்துரை செய்து வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில் கிராமப்புறத்திலே இருக்கிற ஏழை மக்களுக்கு ரேஷன் கார்டுகள் கிடைக்கின்ற வண்ணம் எம்.எல்.ஏ.-க்களுடைய பரிந்துரைகளுக்குத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து அவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கின்ற வகையில், விரைவில் ரேஷன் கார்டுகள் வழங்க ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக யார் கோரிக்கை வைத்தாலும், நியாயம் இருந்தால் அதை இந்தப் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு நியாயம் வழங்கிக் கொண்டிருக்கிறது. அதிலேயும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்வார்கள் என்று சொன்னால், அதைப் பரிவோடும், விரைவாகவும் இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



2001 செப்டம்பர் 6 ]

48—

## பட்டா

*677—**திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு பட்டா கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வேண்டி 2000-2001 ஆம் ஆண்டில் 2,986 மனுக்கள் பெறப்பட்டன. இதில் 2,297 விண்ணப்பதாரர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சிய 689 விண்ணப்பதாரர்கள் வீட்டுமனைப்பட்டா பெற தகுதி இல்லாதவர்கள். அவர்களின் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 2001-2002 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 702 விண்ணப்பதாரர்களில் 540 பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டன. எஞ்சிய 162 விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. விவசாயத்திற்கு நிலப்பட்டா கோரி 2000-2001-ல் 406 மனுக்கள் பெறப்பட்டன. இதில் 313 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டன. மீதமுள்ள 93 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதேபோல, 2001-2002 ஆம் ஆண்டு இதுவரையிலும் நிலப்பட்டா கோரி 45 மனுக்கள் பெறப்பட்டன. இதில் 35 பேர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டன. எஞ்சிய 10 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைச்

சொல்லிக் கொள்கிறேன் செஞ்சி தொகுதியிலே குடியிருக்கின்ற நரிக்குறவர்கள் நரசிங்கராயன் பேட்டை, முடையூர் கிராமங்களில் வட்டாட்சியர் அவர்களால் இடம் காட்டப்பட்டு அங்கு நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புவதோடு, அதே போன்று செஞ்சி வட்டம் அன்னமங்கலம் என்னுடைய சொந்த கிராமம். அந்தக் கிராமத்தில் காட்டு நாயக்கர்கள் 50 ஆண்டு காலமாக கல்லாங்குத்து புறம்போக்கில் வீடு கட்டி நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை செஞ்சி தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வேண்டி விண்ணப்பித்தவர்களில் தகுதியில்லாதவர்கள் போக பாக்கி உள்ள அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. இனிமேல் வீட்டுமனைப்பட்டா வேண்டி விண்ணப்பதாரர்கள் மனு கொடுப்பார்களேயானால், தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. ஆஸ்டின், மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**49—**

### வனத் தீயணைப்பு

***3222—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகளில் ஏற்படும் தீயை அணைக்க ஹெலிகாப்டர் வசதியுடன் கூடிய வனத் தீயணைப்புப் படையை அரசு அமைக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம்-வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) காடுகளில் ஏற்படும் தீயை அணைக்க ஹெலிகாப்டர் வசதியுடன் கூடிய வனத் தீயணைப்புப் படையை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின் சார்பாக சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் ஏற்படும் தீயை அணைக்க ஹெலிகாப்டர் வசதியுடன் கூடிய வனத் தீயணைப்புப் படை அமைக்க வேண்டும் என்று ஆஸ்டின் கேட்டுவிட்டு **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது வேண்டாம்.

*முற்பகல் 10-35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** சரி, பேரவைத் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்க அதை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் சில செய்திகளைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீயைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக உலக அளவில் இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்ற செய்திகளையெல்லாம் தினசரி பத்திரிகைகளின் வாயிலாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமது நாட்டிலேயே வன வளம் இல்லாத காரணத்தினாலே மழை வளம் குறைந்து கொண்டே இருக்கிறது. ஆகவே வன வளத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு இப்போது புதிய முயற்சியாக ஏற்பாடு செய்து அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அதையும் பாதுகாக்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான முயற்சியை நமது அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களின் அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்ள 25 கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற வகையிலே சோளிங்கர் தொகுதியிலுள்ள காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன், இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது.

வினா எண் 50, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**50—**

**நிலத்தடி நீர்**

***2128—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலத்தடி நீர் மேம்பாடு செய்ய 15 ஏக்கர் நிலத்திற்கு 50 சென்ட் நிலத்தில் கட்டாயமாக நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலத்தடி நீர் மேம்பாடு செய்ய 15 ஏக்கர் நிலத்திற்கு 50 சென்ட் நிலத்தில் கட்டாயமாக நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அரசு ஆணையிட சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிலத்தடி நீர் மிகக் கீழே சென்றுவிட்ட காரணத்தால் இன்னும் 10 ஆண்டு காலங்களில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத சூழ்நிலை வருமென்று ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் கூறி இருக்கிறார்கள்.





அதை மனதிலே வைத்து இந்த நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்பாகவே நான் கேட்ட கேள்வி இது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை மனதிலே வைத்து, அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நிதியமைச்சர்கூட நிதிநிலை அறிக்கையிலே மிக விளக்கமாக பல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்றார்கள். என்னுடைய கேள்வி, தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு அரசு அப்படி கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதற்கு மானியம் கொடுக்க முடியவில்லை என்றாலும், அரசாங்கம் தனி முயற்சி எடுத்து இந்த விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, எடுக்கவிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களிடையே நீரைத் தேக்க வேண்டும்; பெய்கின்ற மழை நீரில் ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல் தடுக்க வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சியை இன்றையதினம் அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் கஷ்டம் ஒரு பக்கம்; பாசனத்திற்கு நீர் தட்டுப்பாடு ஒரு பக்கம். நிலத்தடி நீர் கீழே சென்று கொண்டிருக்கக்கூடிய இக்கட்டான சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையில் நாம் நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய இதே வேளையிலே நம்முடைய அரசுகூட நிதிநிலை அறிக்கையிலே நீர் வளத்தைப் பெருக்குவதற்காக நல்ல திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் நான் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மேலே பேசுகின்ற நேரத்திலே ஆங்காங்கே கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க வேண்டும்; Check Dam கட்ட வேண்டுமென்று சொல்லி, கோரிக்கை வைத்துப் பேசுகின்ற நேரத்திலே, அப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி Check Dam, கசிவு நீர்க் குட்டைகள் கட்டுகின்ற நேரத்திலே பூகம்பம் ஏற்படும் என்ற நிலையையெல்லாம் சொன்னார்கள். வல்லுநர்கள் சொல்வதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் பொறியியல் வல்லுநர்களையும், மற்றவர்களையும் கலந்து பேசினேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வராது; இதனால் பூகம்பம் ஏற்படாது என்ற நிலையெல்லாம்

சொன்னார்கள். ஆகவே இப்படி பூகம்பம் ஏற்படும் என்ற ஒரு நிலை நீராதாரத்தைப் பெருக்குவதற்குத் தடையாக இருக்குமா அல்லது அதையெல்லாம் தவிர்த்து தொடர்ந்து நீர் வளத்தைப் பெருக்குவதற்கு, ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு அரசு என்னென்ன வழிவகைகளைச் செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முதலமைச்சர் அவர்கள் சொன்னது, அணைக்கட்டு. இப்போது நீங்கள் சொல்வது நீர்த்தேக்கக் குட்டை, Check Dam.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. இந்த அரசினுடைய நோக்கமே, அங்கங்கே பெய்கின்ற மழை நீரைச் சேமித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதன் மூலமாக விவசாயத்தையும், குடிதண்ணீர்ப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும் என்பதற்காக இந்த அரசாங்கம் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தடி நீர் குறைவதைத் தடுப்பதற்காக ஆழ்துளைக் கிணறுகள் போடப்படுகின்றன. இப்போதெல்லாம் ஆழ்துளைக் கிணறுகள் 1000 அடிகள் போட்டால்தான் தண்ணீர் வருகின்றது. ஆனால், குட்டைகளிலே தண்ணீர் தேங்குவது இல்லை. கசிவுநீர்க் குட்டை கட்டுவது மிகக் குறைவாக இருக்கிறது. இதைத் தவிர்க்கும் முறையில் ஆழ்துளைக் கிணறுகள் - ஒவ்வொரு பகுதியிலும் 50 அடி, 100 அடி என்று பல இடங்களில் அந்த ஆழ்துளைக் கிணறுகள் - தண்ணீருக்காகப் போடப்படுவதில்லை. மழை பெய்யும்போது அந்த ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீரைச் சேமித்து, அந்தத் தண்ணீர் வெளியே நிலத்தின் வழியாகச் செல்லும்போது, தண்ணீர் மட்டம் மேலே வந்துவிடும். அதை மனதிலேகொண்டு, 50 அடி, 100 அடி என்று பல இடங்களில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, நிலத்தடி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுதான் Rain Water Harvesting, மழைநீர்ச் சேமிப்பு. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து செயல் விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்திலேகூட, இந்தத் திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாகத்தான் நீராதாரத்தைப் பெருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்கள், கரும்புக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் பெரியார் விருது பெற்று உட்கார்ந்திருக்கிறார், அவரை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சிவசாமி.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் மேம்பாடு செய்ய வேண்டுமென்பதற்காக கோவை, பெரியார் மாவட்ட மக்கள் குளம் குட்டைகளுக்கு நீர் நிரப்ப வேண்டுமென்பதற்காக நீண்டகாலமாகக் கேட்டுவந்த, அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலத்தடி நீர் மேம்பாடு பற்றியும், நவீன விவசாய மேம்பாடு பற்றியும், தரிசு நில மேம்பாடு பற்றியும், ஒன்றிய வாரியாக விவசாயிகள் பயன்பெறுகின்ற விதமாக, வேளாண்மைத் துறை மூலமாக, கருத்தரங்கங்கள் மற்றும் பொருட்காட்சிகள் நடத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, மக்களிடத்திலும், விவசாயிகளிடத்திலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்தில், இதுபோன்ற கூட்டங்கள் எல்லாம் நடத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

[ 2001 செ.ப்டம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றியெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு, தனியார் 20 ஏக்கர், 30 ஏக்கர் என்றெல்லாம் தரிசு நிலங்களை வைத்திருக்கிறார்கள். அந்தத் தரிசு நிலங்கள் மேடு பள்ளமாக, சரிவு நிலங்களாக இருக்கின்ற காரணத்தால், அவற்றை ஒன்றுமே செய்ய முடியாமல் விவசாயிகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் சாதாரண ஏழை விவசாயிகளாக இருக்கிறார்கள். நீர் ஆதாரம் இல்லை. அந்த நீராதாரத்தை ஏற்படுத்துவதற்கு, அவர்கள் சொந்தமாக நிலத்தில் குட்டைகள் வெட்டிக்கொண்டால், அதற்கு அரசு ஏதாவது மானியம் வழங்க முன்வருமா, குட்டைகளை வெட்டுவதற்கு அரசு உதவி செய்யுமா, அவர்கள் வாழ்வு மேம்பாடு அடைய உதவி செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்களிலுள்ள கரம்பை மண்ணையெல்லாம், விவசாயிகள் எடுத்துச் செல்வதால் குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன. இதனால் நீர் அதிகமாக அந்தக் குளங்களில் தேங்குகின்ற வாய்ப்பிருக்கிறது. இதனால் நிலத்தடி நீரும் அதிகமாகி, குடிதண்ணீருக்குப் பயன்படுகிறது. ஆனால், இந்த விவசாயிகள் கரம்பை மண்ணை எடுத்து வரும்போது, அதிகாரிகள் பிடித்து விடுகிறார்கள். இதனால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இதை நம்முடைய அரசு பரிசீலிக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.



2001 செப்டம்பர் 6 ]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் தேக்கப்பட வேண்டும் என்ற திட்டம் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. மழைநீர் தேக்கப்படும்போது இயற்கை ஏற்பாட்டில் தலையீடுகள் ஏற்பட்டு இயற்கையாகவே தண்ணீர் பாயவேண்டிய இடங்களில் எல்லாம் தண்ணீர் பாயாமல், ஒரு சில இடங்களில் தேக்கி வைப்பதனால் ஏற்படுகின்ற விளைவுகள் என்ன? இதுகுறித்து அரசு, நிபுணர்களுடைய கருத்தைப் பெற்றுள்ளதா? அதே நேரத்தில் ஆழ்துளைக் கிணறுகள் முறையின்றி, வரையின்றி நிலைக்கின்ற இடங்களில் எல்லாம் தோண்டப்பட்டால் அது புவியியல் இயற்கை ஏற்பாட்டில் சிக்கலை ஏற்படுத்தும்: அதிலே குறைபாட்டை ஏற்படுத்தும்: அதனால் நிலச்சரிவுகள் பல இடங்களில் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது என்ற ஒரு கருத்து சொல்லப்படுகிறதே: அதுகுறித்து அரசு ஆய்வு செய்துள்ளதா? அந்த ஆய்வின் அடிப்படையில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்கும், மழைநீரைத் தேக்கி வைப்பதற்கும் ஏதாவது வரைமுறையை அரசு ஏற்படுத்தி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதன் மூலமாக நிலச்சரிவுகள் ஏற்படும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நாம் நிலத்தடி நீரை உயர்த்துவதன் மூலமாக அவ்வளவு தூரத்திற்கு கிணறுகளைத் தோண்ட வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆகவே, இப்போது நம்முடைய நோக்கம், திட்டம் எல்லாம் நிலத்தடி நீரை உயர்த்த வேண்டும். நிலத்தடி நீரை எப்படி உயர்த்துவது? Rain Water harvesting மூலமாக உயர்த்துவது என்கின்ற நோக்கத்தில், அரசு மட்டுமல்ல, பொதுமக்களையும் இதில் involve செய்து, எல்லோரையும் சேர்த்து, எல்லோருக்கும் விழிப்புணர்ச்சியை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குவதன் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இந்த நிகழ்வுகள் எல்லாம் நடக்காமல் பார்த்துக்கொள்ள முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Rain Water harvesting பற்றிச் சொல்லுகின்றார்கள். இப்போதுதான் மழையே வருவதில்லையே, எங்கே இருந்து நாம் harvest செய்வது? எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற்கை மழை பொழியச் செய்வதற்கு ஏதாவது ஒரு திட்டம் தயாரித்து, மக்களுக்கு வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்

[ 2001 செப்டம்பர் 6

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செயற்கை மழை பொழிய வைப்பது பற்றிச் சொன்னார்கள். அதை நாம் பரிசீலிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ் ஊற்றைப் பாதுகாப்பதற்கு, மழைநீர் கீழ் ஊற்றைப் பாதுகாப்பதற்கு, கீழ் ஊற்றை மேலே உறிஞ்சி எடுப்பதைப் போன்று ஆழ்குழாய்களை அமைத்து பூமியிலே இருந்து உறிஞ்சி எடுக்கின்ற திட்டங்கள் பல மாநிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன. அந்தவகையிலே நீர் ஆதாரம் இருக்கின்ற பகுதிகளில் குழாய்களை அமைத்து அதன் மூலம் பூமியிலே இருந்து தண்ணீரை உறிஞ்சி எடுக்கின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த நம்முடைய அரசு முன்வருமா, இதுபோன்ற திட்டத்திற்கு மாவட்டங்கள் தேர்வு செய்யப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே ஒரு சில பகுதிகளிலே நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. ஒரு சில பகுதிகளிலே நிலத்தடி நீர் குறைவாக இருக்கிறது. சில பகுதிகளில் நிலத்தடி நீர் மிகவும் குறைவாக இருக்கிறது. இதுபோன்ற பகுதிகளை எல்லாம் இப்போது ஆய்ந்து அறிந்து அதற்கு ஏற்ப, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ப உறுப்பினர் சொல்வது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. ஜி.கே. மணி. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

51—

### தொழிற்சாலை

•2018—**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் அதிகமாகக் கிடைக்கும் கிரானைட்டை வெட்டியெடுத்து மெருகூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஒரு தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தின் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



2001 செப்டம்பர் 6 ]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

முற்பகல் 10-50

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் கனிம வளம் நிறைந்த பகுதி. இந்த மாவட்டத்தில், என்னுடைய பென்னாகரம் தொகுதியிலேகூட, அரசுக்குச் சொந்தமான நிலத்திலே, தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலத்திலே, வனத் துறைக்குச் சொந்தமான எல்லா இடங்களிலேயும் பல்வேறு விதமான கிரானைட் கற்கள் இருக்கின்றன. இதுவரையிலே அந்த கிரானைட் தொழில் ஓரளவிற்குச் சிறப்பாக நடந்துவந்தாலும்கூட, சமீபகாலமாக அதுவும் நலிவடைந்துவிட்டது. இப்படி நலிவடைந்த நேரத்திலே, இந்த கிரானைட் கற்களை வெட்டியெடுக்கக்கூடிய தொழிலிலே ஈடுபடக்கூடிய தொழிலாளிகள் எல்லாம், கர்நாடகம், ஆந்திரா, ஒரிசா போன்ற வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய நிலையெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கிராமப்புற மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையிலேயும், இதனால் அன்னியச் செலாவணி பெருகுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலேயும், ஏற்றுமதிக்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலேயும், இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு—அரசுக்குச் சொந்தமான நிலம் என்று சொல்லக்கூடிய வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்திலே, அதோடுமாத்திரமல்லாமல், வனத் துறைக்குச் சொந்தமான நிலத்திலே கிரானைட் கற்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இப்படி நல்ல நோக்கத்தோடு—புதிய முறையிலே —Licence அங்கீகாரம் கொடுப்பதற்கு அரசு முன்வருவதோடு, வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதற்கு இந்த புதிய நவீன திட்டத்தின் அடிப்படையிலே, இந்த கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கும் தொழிலை ஊக்குவிக்குமா? அதேநேரத்திலே, வெட்டியெடுப்பதோடு மாத்திரமல்லாமல், மெருகூட்டி விற்பனை செய்கின்ற நேரத்தில், இன்னும் கூடுதலாக அரசுக்கு வருமானம் வர வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, இந்த மெருகூட்டும் தொழிலை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா; மறுபரிசீலனை செய்து அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர் வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட சாத்தியக்கூறுகள் அவசியம் தேவைப்படுகின்றன:

அமைக்கப்படும் தொழிற்சாலையைச் சுற்றி 50, 60 கிலோமீட்டர் வரம்பிற்கு தரமுள்ள பாறைகள் அமையப்பெற வேண்டும். தொழிற்சாலைப் பகுதிகளில் எப்பொழுதும் அதிக அளவு தண்ணீர் வசதி, மின் வசதி கிடைக்கப்பெற வேண்டும். தொழிற்சாலைக்குச் சரியான போக்குவரத்து வசதி அமையப்பெற வேண்டும். எந்தவொரு புதிய கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலையையும் அமைப்பதற்கு முன், கிரானைட் சார்ந்த பொருள்களுக்கான சர்வதேசத் தேவைகளை நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். ஏற்கெனவே தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை மணலியிலும், தருமபுரி மாவட்டம், மாதேபள்ளியிலும் இரண்டு கிரானைட் தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. இந்த இரண்டு தொழிற்சாலைகளும் தற்போது முழுத் திறனில் செயல்படவில்லை. இதற்கு முக்கிய காரணம், தற்பொழுது உலகச் சந்தையில் இந்தியாவினுடைய கிரானைட், சீனா, தென்னாப்பிரிக்கா, மெக்சிகோ, பிரேசில் போன்ற நாடுகளிலுள்ள கிரானைட் கற்களோடு போட்டி போடுகின்ற நிலைமை இருக்கிறது. அதனால், இந்திய கிரானைட்டுகளுக்கு கிராக்கி சரிந்துள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில், தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் கிரானைட் கற்களை அடிப்படையாகக் கொண்ட, கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்குகிற நேரத்திலே, 'Polishing Unit' வருவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். அவர்கள், தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளையெல்லாம் சொன்னாலுங்கூட, அந்த சாத்தியக்கூறுகள் இருந்தாலும் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். அந்த 'Polishing Unit' அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னாலுங்கூட, வெட்டியெடுப்பதற்கு அரசு முன்வரலாம். இன்று, தரமான கற்கள் இல்லை; உலகச் சந்தையிலே மற்ற நாடுகளிலே இருப்பதைவிட தரம் குறைவாக இருக்கிறது; Marketing செய்ய முடியவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, Black Granite என்று சொல்லக்கூடிய கருப்பு கற்கள் தரமுள்ளதாக இருக்கின்றன. மற்ற கற்கள் சற்று தரம் குறைவாக இருந்தாலுங்கூட, அந்தக் கருப்பு கற்கள், உலகச் சந்தையிலே நல்ல விலை போகக்கூடிய



சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுதும்கூட, தமிழ்நாடு கனிம நிறுவனத்திலே அந்தத் தொழில் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலே, அந்த 'Black Granite' என்று சொல்லக்கூடிய கருப்பு நிற கிரானைட் கற்கள்-கருப்புத் தங்கம் என்றே சொல்லலாம்; அந்த அளவிற்கு விலைமதிப்புள்ள கற்கள் ஒரு கன மீட்டரினுடைய விலை, 60,000 ரூபாய், 70,000 ரூபாய் வரைக்கும் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலே, வனத் துறையிடமிருந்து பெற்று, அந்தத் தொழிலைச் செய்வதற்கு முன்வர வேண்டும் என்ற அந்த ஆவலோடு, இது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலே மீண்டும் மறுபரிசீலனை செய்து, இதை நிறைவேற்ற முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்பு கிரானைட், Kashmir White இவை இரண்டும் உலகச் சந்தையில் நல்ல விலையில் இருக்கின்றன. ஆனால், நமது மாநிலத்தில் கருப்பு கிரானைட் குன்னம் போன்ற பகுதிகளில்தான் இருக்கிறது. அதை வெட்டியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும், புவியியல் ஆராய்ச்சி மூலமாக வேறு எங்கும் கருப்பு கிரானைட் இருந்தால், வனத் துறையில் இருந்தாலும் அனுமதி பெற்று, கருப்பு கிரானைட் வெட்டியெடுப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1991-1996 ஆம் ஆண்டு காலங்களில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பு ஏற்றவுடனே, தருமபுரி மாவட்டத்தை தத்து எடுத்துக்கொண்டு, டாமின் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்த நிறுவனத்தின் சார்பாக மாதேபள்ளியில் ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறார்கள். அது இப்போது சிறப்பாக நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. புதிய தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கவில்லையென்று சொன்னாலும்கூட, அதை விரிவுபடுத்தக்கூடிய நிலையிலே அரசு இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, மேலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே தருமபுரி மாவட்டத்திலே அரியதாகக் கிடைக்கக்கூடிய தாதுப் பொருளான மாலிப்டினம்

கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே அந்தத் தொழிற்சாலை வரவிருந்தது. எனவே, மீண்டும் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே அந்தத் தொழிற்சாலையை தருமபுரி மாவட்டத்திலே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பல்வேறு சாத்தியக்கூறுகள் இருந்தால் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்கப்படலாம் என்று சொன்னார்கள். அதுவும் குறிப்பாக மூலப்பொருள் 50 கிலோமீட்டர் அளவிற்கு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையிலே எடப்பாடி தொகுதி, சங்ககிரி தொகுதி, இடையிலே இருக்கக்கூடிய சூரியமலையிலே வெள்ளைக் கற்கள் எடுக்கிறார்கள். இப்போது அமைச்சர் பதில் சொல்லும்போது, அந்த வெள்ளைக் கற்களுக்கு உலக நாடுகளிலே நல்ல கிராக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இந்த நல்ல வெள்ளைக் கற்கள் எடப்பாடி தொகுதியிலே வெட்டி எடுக்கப்படுகின்றன. அங்கே அந்தக் கற்களை எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, மெருகூட்டுவதற்குத் தேவையான அத்தனை சாத்தியக்கூறுகளும் என்னுடைய பகுதியிலே இருக்கிறது. சங்ககிரி பகுதியிலே இருக்கிறது. இதனால் பல இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். இந்தச் சாத்தியக்கூறுகளை அரசு கவனத்திலே கொண்டு அங்கு ஒரு மெருகூட்டும் தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அந்த நல்ல Kashmir White தரம் வாய்ந்த கிரானைட் கற்கள் இருந்தால், புவியியல் ஆராய்ச்சி மூலமாக ஆராய்ந்து அந்த கிரானைட் கற்களை வெட்டி எடுக்கின்ற அளவிற்கு அவை தரமுள்ளனவா, வெளி மார்க்கெட்டில் விற்பனை ஆகுமா என்பதை ஆராய்ந்து அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[ குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



## 2. தகவல் கோரல்

### (அ) காவேரி-டெல்டாப் பகுதிகளில் குறுவை நெல் கொள்முதல் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி, சொல்லுங்கள்.

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 29 ஆம் தேதி, காவேரி-டெல்டா பகுதிகளில் குறுவை விவசாயம் செய்யப்பட்டு, அறுவடை நடந்துகொண்டிருக்கிறது என்றும், அந்த நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினைத் தொடங்குமா, சென்ற ஆண்டு கொடுத்த ஊக்கத் தொகையைவிட அதிகமாகத் தருகின்ற நிலை ஏதாவது இருக்கின்றதா என்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 5 ஆம் தேதி நடைபெறுகிற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுத்து அறிவிக்கின்றேன் என்று தெரிவித்தார்கள். அந்தக் கூட்டம் நடைபெற்றதா என்று தெரியவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவைக் கூட்டம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** அது பற்றிய விவரத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இல்லாவிட்டாலும் அவை முன்னவர் அவர்கள் தெரிவிப்பாரா அல்லது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் தேதி அதுகுறித்து முடிவு எடுக்கப்படவுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி அவர்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொள்முதல் தள்ளிக்கொண்டே போகிறது. அதற்கு விரைவாக ஏதாவது நடவடிக்கை எடுத்து, இன்றோ அல்லது நாளைக்கோ நெல்லை வாங்குகின்ற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபடுமா, அந்த விவசாயிகளுடைய நஷ்டத்தைத் தீர்ப்பதற்கு வழிவகை காணப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[ 2001 செப்டம்பர் 6

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு முக்கிய பிரச்சினை, பணப்பிரச்சினை. ஏற்கெனவே சம்பா கொள்முதலுக்கு ரிசர்வ் வங்கி மூலமாக 880 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வாங்கும் அளவு நிர்ணயிக்கப்பட்டு, முழுப்பணமும் வாங்கப்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் 350 கோடி ரூபாய்தான் ரிசர்வ் வங்கி அனுமதியளித்திருந்தது. அதற்கு மேலாக, 530 கோடி ரூபாய் மேலும் கடன்பெற்று அந்தப் பணத்தில் 500 கோடி ரூபாயை உடனடியாகத் திருப்பிச் செலுத்தினால்தான் தற்போது குறுவை கொள்முதலுக்குப் பணம் தரமுடியும் என்று ரிசர்வ் வங்கி கூறியிருக்கிறது. இதுகுறித்து நிதிச் செயலாளர்கூட பம்பாய்க்குச் சென்று வந்தார். ரிசர்வ் வங்கியினுடைய மேல்நிலை அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துவிட்டார்கள். மீண்டும், தற்போது ஸ்டேட் வங்கியை நாங்கள் அணுகியிருக்கிறோம். ஸ்டேட் வங்கியை அணுகி, ஸ்டேட் வங்கி மூலமாக term loan கேட்டிருக்கிறோம். ஸ்டேட் பாங்க் மூலமாக 500 கோடி ரூபாய் term loan வாங்கி, அதை ரிசர்வ் வங்கிக்கு நாம் தரவேண்டிய பாக்கி 500 கோடி ரூபாய் தந்தால்தான், குறுவை கொள்முதலுக்குப் பணத்தைத் தர முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் தற்போது உண்மையிலேயே நடைமுறையிலே இருக்கின்ற பண நெருக்கடியை ஒட்டிய நிலை. இதைச் சீர்செய்யத்தான் தற்போது ரிசர்வ் வங்கியை அணுகி, ஸ்டேட் பாங்க் மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சில தினங்களில் அது முடிந்துவிடும் என்று நம்புகிறோம். அந்த நிதிநிலை சீர்செய்யப்பட்டவுடன் குறுவை கொள்முதல் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் இல்லாத காரணத்தால், நாம் கொள்முதல் செய்யவில்லை என்ற ஒரு நிலை இருந்தாலும் இப்போது அதை விவசாயிகளிடமிருந்து யாரும் வாங்குவதற்குத் தயாராக இல்லை. தாளடி சம்பா சாகுபடி செய்ய இயலாது. குறுவை நெல்லைக் கொள்முதல் செய்யாவிட்டால் விவசாயம் செய்வதற்கு நிச்சயமாக அது இடம் தராது. அவற்றை உடனுக்குடன் விற்றாக வேண்டும். அதற்கு ஒரு நடவடிக்கையை தற்காலிகமாகவாவது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, மத்திய வங்கிகள் மூலமோ அல்லது மாநில வங்கிகள் மூலமோ, ஏதாவது தற்காலிகமாகக் கடன் பெற்று அதை வாங்குகிற சூழ்நிலையை இந்த 10 ஆம் தேதிக்குள்ளாவது அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 6 ]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்க வேண்டிய இடத்திலெல்லாம் ஏற்கெனவே பணத்தை சென்ற அரசு வாங்கிவிட்டது. கடனைத் திருப்பிக் கொடுக்காத நிலை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உண்மையான நிலை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். எந்த அளவுக்கு ஒரு பெருமுயற்சி என்றால், நிதிச் செயலாளர் அவர்களை நாங்கள் ரிசர்வ் வங்கிக்கு, பாம்பேக்கு அனுப்பி, வெறும் 500 கோடி ரூபாய்க்கு அரசு திண்டாடக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. ஏற்கெனவே முந்தைய ஆட்சிக் காலத்தில் என்பதை அவை புரிந்துகொள்ள வேண்டும். இது உண்மையான நிலை என்பதை அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா வகைகளிலும் முயற்சி எடுத்துவிட்டு, முடியாத சூழ்நிலையிலேதான் ஸ்டேட் பாங்கிடம் சென்று term loan என்ற கடனை வாங்கி, அதை ரிசர்வ் வங்கிக்குச் செலுத்த வேண்டிய பணத்தைத் தந்தால்தான் குறுவைக்குப் பணம் தர முடியும் என்று ரிசர்வ் வங்கி கூறிவிட்டது. சென்ற ஆண்டு அதற்கு முன்னர் எல்லாம் இந்தக் கொள்முதலைப் பொறுத்தவரைக்கும் ஒன்று, 1 ஆம் தேதி முதல் கொள்முதல் தொடங்கப்படுகிறது; அல்லது, 15, 16 ஆம் தேதிக்கு மேல் கொள்முதல் தொடங்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாதவகையில் எத்தகைய பண நெருக்கடிப் பிரச்சினைகள் சென்ற ஆட்சியில் உருவாக்கப்பட்டுவிட்டாலும்கூட, உணர்வுகளைக் காப்பதில் புரட்சித் தலைவி அவர்கள் அரசு முக்கிய அக்கறையோடு இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்த்து விடுவோம் என்பதை அவைக்கு நான் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) திரு. மணி அவர்களே சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் அவர்கள் பணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். வெறுங் கையால் எப்படி முழம் போடமுடியும்? பணம் வரட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,--

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். எல்லோரும் உட்காருங்கள்.

*(ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக செப்டம்பர் மாதம் முதல் தேதியில் மத்திய அரசு நெல்லுக்கு விலை நிர்ணயித்து. அது இப்போது வழக்கமாக இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே பிரச்சினைதானா?

**திரு. ஜி. பழனிசாமி:** அதே பிரச்சினைதான். ஆனால், இதுவரையில் மத்திய அரசு விலை நிர்ணயிக்கவில்லை. அதிலே ஒரு தடுமாற்றமான நிலைமை இருக்கிறது. மத்திய அரசு விலை நிர்ணயிப்பதற்கு மாநில அரசு கேட்கவில்லை. அதோடு மட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அதே நிலைதான் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற பிரச்சினை. நெல்லைக் கொள்முதல் செய்துகூட, பின்னர்கூட நாம் பணம் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, இதைக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்து, அமைச்சர் விளக்கம் அளிக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

அடுத்து, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, ஈரோடு அரசு மருத்துவமனைகளில் அதிகமாக உள்ள ரிசர்வ் மருத்துவர்களை, மருத்துவர்கள் குறைவாக உள்ள மருத்துவமனைகளுக்கு மாற்றுவது குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்பாக....

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)





(திமுக. உறுப்பினர் திரு. மீ.அ. வைதியலிங்கம், தனது இருக்கை மேலே ஏறி நின்றுகொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் எதிர்புறம் இருப்பவர்களுக்கு மட்டும் பேச வாய்ப்புக் கொடுப்பதாகவும், தனக்குப் பேச வாய்ப்புத் தருமாறும் கேட்டுக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வைதியலிங்கம், உங்கள் உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைத்தான் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இவ்வளவு நேரம் திரு. மணி அவர்கள் சொன்னதைத்தான் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய இருக்கைக்குக் கீழே நின்று பேசுங்கள். உங்களுடைய உயரத்திற்கு மைக்கைக் கொண்டுவர முடியாது. கீழே நின்று பேசுங்கள். என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த 16 ஆம் தேதியும், 18 ஆம் தேதியும் என் தொகுதியினுடைய முக்கியமான பிரச்சினை சம்பந்தமாக, உங்களிடத்திலே கவன ஈர்ப்பு அறிவிப்புகள் தந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்புப் பற்றி உங்களுக்கு விளக்கம் சொல்லி இருக்கிறேன். தாம்பரத்திலே உள்ள குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக கொண்டு வந்தீர்கள். அமைச்சர் விளக்கம் சொன்னார். இப்போது மறுபடியும், பம்மல் போன்ற பகுதிகளிலே குடிநீர்ப் பிரச்சினை என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது என் ஆய்விலே இருக்கிறது. அறைக்கு வந்து விளக்கம் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அவர் அவ்வாறு செய்ததற்குச் சொல்லிவிடுகிறேன். அவ்வளவு அநாகரிகமாக அவர் நடந்து கொள்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்

முற்பகல் 11-05

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் நாளுக்கு நாள் குடிநீர்ப் பிரச்சினை மிகக் கடுமையாகி அங்கே உள்ள மக்கள் அதிக வேதனைக்கு ஆளாகின்றார்கள்; போராட்ட உணர்வுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே அந்த குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி ஒரு பகுதி பற்றி ஏற்கெனவே விளக்கப்பட்டாலும்கூட தொடர்ந்து ஏற்படுகிற அந்தக் கடுமையான நிலைமையைத் தணிக்க அரசு ஏதாவது ஒரு வகையில் வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் வைதியலிங்கம் அவர்கள் அந்தப் பிரச்சினையை அவையில் எடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே என்னுடைய அறையிலே வந்து கேட்டார். நான் விளக்கம்கூட சொன்னேன். ஏற்கெனவே தாம்பரம் பகுதியிலே உள்ள குடிநீர்ப் பற்றாக்குறை சம்பந்தமாக கேட்டார். அமைச்சர் அதற்கு விளக்கம் சொன்னார். அதைப்போல சாத்தூர் ராமச்சந்திரன் அவர்கள் சாத்தூரிலே உள்ள குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக சொன்னார். அமைச்சர் விளக்கம் சொன்னார். இப்பொழுது மழை இல்லாத காரணத்தால் எல்லாத் தொகுதிகளிலும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது, பற்றாக்குறை இருக்கிறது. தாம்பரம் தொகுதியிலே வைதியலிங்கத்திற்கு மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. அது ஒரு பொதுப் பிரச்சினை. எல்லா உறுப்பினர்களுக்கும் உள்ள பிரச்சினை. ஆகவே அதுகுறித்து அமைச்சர் அவர்கள் நேற்று பேசியிருக்கிறார்கள். மானியக் கோரிக்கைகளிலும் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்துச் சொல்வதற்காக எழுந்து நின்று அவ்வளவு சிரமப்பட வேண்டிய அவசியமே இல்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். பிரச்சினையைத் தீர்ப்பதிலே பல கஷ்டங்கள் இருந்தாலும்கூட, சில நாட்கள் கடந்துதான் தீர்க்க முடியும் என்றாலும்கூட, இந்த அவையிலே எழுப்பிவிட்டால் அங்கே உள்ள மக்களுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கிறது. எழுப்பி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற ஒரு உணர்வு, போராட்ட உணர்வை மெல்ல குறைக்கக்கூடிய வாய்ப்பு உடையது. அதனைத் தாங்கள் விரும்புகிற அளவிலே பயன்படுத்திக் கொள்ளலாம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையின் கவனத்தை ஈர்ப்பதற்கு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவர வேண்டுமே தவிர கவனத்தை ஈர்ப்பதற்கு மேலே எழுந்து நிற்கக் கூடாது. திரு. கணேசன், சொல்லுங்கள்.

**திரு. பீ.அ. வைதியலிங்கம்:** என்னை தயவு செய்து விளக்கம் சொல்ல விடுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** இந்தப் பக்கம் திரும்ப மாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் திரு. மணி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குத்தான் நான் விளக்கம் கேட்டு சொல்லிக்கொண்டிருந்தேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** நாங்கள் எல்லாம் பேசக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்கள் மூத்த உறுப்பினர் அல்லவா? அவர் பெரியார் விருது பெற்றிருக்கிறார். அவர் சொல்லிக்கொண்டு இருக்கின்ற ஒரு கருத்தை நான் கேட்டு விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) திரு. கணேசன், என்ன சொல்லுங்கள்?

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிக முக்கியமான பிரச்சினை காவேரி நீர்ப் பிரச்சினை. இன்று 6 ஆம் தேதி காவேரி நதிநீர்ப் பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சம்பந்தமாக டெல்லியிலே கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது அதைப்பற்றி ஒன்றும் கிளற வேண்டாம். (குறுக்கீடு) பொதுப் பணித் துறை அமைச்சர் ஏதாவது பதில் சொல்ல வேண்டுமா? டெல்லியிலே பேச்சுவார்த்தை நடக்கிறது இன்றைக்கு. Monitoring Committee Meeting இன்றைக்கு டெல்லியிலே நடக்கிறது. அதிகாரிகள் போய் இருக்கிறார்கள். அதற்கு ஏதாவது பதில் வந்ததற்குப் பிறகு விளக்கம் சொல்வார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, எல்லா நாளிதழ்களிலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் செல்வதாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அல்ல, அது அதிகாரிகள் மட்டத்தில் நடக்கிற கூட்டம். திரு. கணேசன் உட்காருங்கள்.

[ 2001 செப்டம்பர் 6

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சென்னை, மதுரை, கோவை, திருச்சி, ஈரோடு அரசு மருத்துவமனைகளில் உள்ள reserve மருத்துவர்களை மாற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை, மதுரை, கோவை, திருச்சி, ஈரோடு அரசு மருத்துவமனைகளில் அதிகமாக உள்ள Reserve மருத்துவர்களை, மருத்துவர்கள் குறைவாக உள்ள மருத்துவமனைகளுக்கு மாற்றுவது குறித்து திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து உள்ளார். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். இது குறித்து சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. சி. ஞானசேகரன், வழக்கம்போல இல்லாமல் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, சென்னை, கோவை, மதுரை, ஈரோடு போன்ற பெரிய மாநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் மட்டும் Reserve Doctors அதிகமாக இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத் தலைநகரான வேலூரில் 5% Reserve Doctors இருக்கலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் எங்களுக்கு அந்த அளவுக்கு பல மாவட்ட மருத்துவமனைகளிலே Reserve Doctors இல்லாத காரணத்தினாலே யாராவது ஒரு Doctor கிராமப்புறங்களிலே விடுமுறையிலே போகிறார் என்று சொன்னால், தாலுக்கா மருத்துவமனை Doctor விடுமுறையிலே போகிறார் என்று சொன்னால் Deputation அனுப்புவதற்குக் கூட Doctors கிடைப்பதில்லை. கிராமப் பகுதிகளில்தான் Expert Opinion நிறைய தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட Expert Doctors எல்லாம் மாநகரங்களிலே குவிந்துபோய் இருக்கிறார்கள். ஆகவே குவிந்து கிடக்கக்கூடிய பகுதிகளிலிருந்து அவர்களை மாவட்டத் தலைநகரங்களுக்கு கொஞ்சம் Decentralize செய்ய வேண்டும். எங்களுடைய வேலூருக்கு புதிதாக மருத்துவமனை வர இருக்கிறது. அங்கே திடீரென்று All India Medical Council Inspection வந்தால்கூட போதிய அளவுக்கு Doctors கிடையாது. தூத்துக்குடியில் அதே பிரச்சினை இருக்கிறது. இப்படி தூத்துக்குடி, வேலூர் போன்ற புதிய மருத்துவக் கல்லூரி அமையக்கூடிய இடங்களில் Doctors Shortage இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து போதிய அளவு ரிசர்வ் டாக்டர்களை எங்களுடைய வேலூர் மருத்துவமனைக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இந்த அரசுக்கு நல்ல ஆலோசனை வழங்கக்கூடிய வகையில் இந்தச் சிறப்புக் கவனஈர்ப்பைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சில மருத்துவமனைகளில் அளவுக்கு அதிகமாக Reserve Duty Doctors இருப்பதும் பல மருத்துவமனைகளில் டாக்டர்கள் பற்றாக்குறை இருப்பதும் உண்மைதான். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் இன்றைக்கு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

முற்பகல் 11-10

பொதுவாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட அரசு பொது மருத்துவமனைகள் ஆகியவற்றில் மருத்துவர் பணியிடங்கள் காலி ஏற்படும்போதோ அல்லது வேறு சில அவசர அவசிய அடிப்படையில் மருத்துவர்கள் தேவைப்படும்போதோ, நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில், அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் குறிப்பிட்ட அளவு மருத்துவர்கள் Reserve Duty என்ற வகையில் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். இதன் நோக்கம நோயாளிகளுக்கு மருத்துவமனைகளில் தங்குதடையின்றி மருத்துவ வசதி அளிக்கவும், அதேபோல மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பயின்றுவரும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட பாடம் கற்பிக்கிற மருத்துவர் பணியிடம் காலியாக இருந்தால், மருத்துவக் கல்வி பாதிக்கப்படும் என்பதையும் கருத்தில்கொண்டு, அந்தந்த இயக்குநர்களின் துறைகளுக்கு Reserve Duty என்ற வகையில் ஒதுக்குப் பணி மருத்துவப் பணியிடங்கள் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்பட்டு வருகின்றன. அதுவும் அனுமதிக்கப்பட்ட மொத்த மருத்துவர் பணியிடங்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மட்டுமே அத்தகைய ஒதுக்குப் பணி மருத்துவர் பணியிடங்கள் தற்காலிகமாக வழங்கப்பட வேண்டும். அப்படி ஒரு நல்ல நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த நடைமுறை கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அந்த இடத்தை விரும்பும் மருத்துவர்களின் வசதிக்காகவும், அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கவும் அதிக அளவில் மாறுதல் செய்யப்பட்டுவிட்டன. கிட்டத்தட்ட அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்களில் பாதி அளவுக்கு அப்படிப்பட்ட ஒதுக்குப் பணி மருத்துவர்கள், அதாவது Reserve Duty

Doctors அவர்களது வசதிக்கு ஏற்ப பணியில் இருக்க அனுமதிக்கப்பட்டுவிட்டனர். உதாரணமாக, ஈரோட்டில் Sanctioned Posts 42 தான். ஆனால், அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட Reserve Duty Doctors மட்டும் 29 பேர். கோவை, திண்டுக்கல், விழுப்புரம், தேனி, சிவகங்கை போன்ற இடங்களில் கூடுதலாக ஒவ்வொரு இடத்திலும் 15-க்கும் மேற்பட்ட Reserve Duty Doctors பணியில் அமர்த்தப்பட்டுவிட்டனர். இதனால், நீலகிரி, பெரம்பலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, கடலூர் போன்ற இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது.

சென்னை மாநகரத்தை எடுத்துக்கொண்டால்கூட அரசு பொது மருத்துவமனை, அதுபோல் மதுரை மாநகர் அரசு பொது மருத்துவமனை போன்றவற்றில் அதிக அளவில் Reserve Duty Doctors இருப்பதால் அந்த மாநகரப் பகுதிகளில்கூட Peripheral Hospital-களில் மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தொகுதியான வேலூரில்கூட மூன்றே மூன்று Reserve Doctors தான் இருக்கிறார்கள். அந்த மருத்துவமனையில் கூடுதலாக Reserve Doctors இன்னும் நியமிக்கப்பட வேண்டும். அதேபோல, தருமபுரியிலும் கூடுதலாக Reserve Doctors நியமிக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்னும் பல மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு இதுபோன்ற ஒதுக்குப் பணி மருத்துவர் இடங்கள் ஒதுக்கப்படாத நிலைமை இருக்கிறது. எனவே, இந்த நிலைமையை எல்லாம் கருத்தில்கொண்டுதான் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் எல்லா இடங்களிலும், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில்கூட மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் புதிதாக மருத்துவர்கள் நியமனங்களுக்கு வழிவகை செய்தும், கூடுதலாக இருக்கும் இதுபோன்ற ஒதுக்குப் பணி மருத்துவர்களை பற்றாக்குறை உள்ள இடங்களுக்குப் பகிர்ந்து அளிக்கவும் சில நடவடிக்கைகளை எடுக்க ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி இருக்கிறார்கள்.

அந்த வகையில் சில நடவடிக்கைகளை இந்த அரசு நல்ல நோக்கத்தோடும், குறிப்பாக மருத்துவ வசதியை நாடிவரும் பொதுமக்களின் நலன் கருதியும் எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில்தான் சில தினங்களுக்கு முன்னால்கூட மதுரையிலே இருந்து கூடுதலான Reserve



Duty Doctors தூத்துக்குடிக்கு மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதை மருத்துவமனைகளில் பணியாற்றும் பல டாக்டர்கள் வரவேற்கிறார்கள். தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கமும் இதற்கு ஆதரவு தெரிவித்து இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டுதான் இனி வருங்காலங்களில் ஒதுக்குப் பணி மருத்துவர் பணியிடங்கள், அந்த மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட, அதாவது ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த மருத்துவர் பணியிடங்களில் 10 சதவீதத்திற்கு மிகாமல் பார்த்துக்கொள்ளப்படும். இந்த நடவடிக்கை மூலம் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் ஒதுக்குப் பணி மருத்துவர் பணியிடங்கள் நியமனம் செய்யப்பட்டு அதிக அளவில் இருப்பது தவிர்க்கப்படும். இதனால் தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு ஒதுக்குப் பணி மருத்துவர்கள் ஒதுக்கீடு செய்வதற்கு இது வழிவகை செய்யும். ஒதுக்குப் பணி மருத்துவப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை இதுபோன்ற நடவடிக்கை நிச்சயமாகப் பூர்த்தி செய்யும் என்ற வகையில் இந்த விளக்கம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-15

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் (குறுக்கீடு) என்ன மணி அவர்களே?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சரிடம்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்கு கல்வி அமைச்சர் வரட்டும். கல்வி அமைச்சர் வந்த பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) வேண்டாம். கல்வி அமைச்சர் வந்த பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

## 4. கவன ஈர்ப்பு

### குமரி மாவட்டம் குழித்துறை, தேவி குமரி மகளிர் கல்லூரியில் ஆசிரியைகள் நியமனம் செய்யப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் திரு. டி. மணி ஆகியோரில் ஒருவர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், குழித்துறையில் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான தேவி குமரி மகளிர் கல்லூரியில் போதுமான ஆசிரியைகள் நியமனம் செய்யப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின்கீழ் ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையர் தலைவராகவும், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் இணை ஆணையர்/செயல் அலுவலர் செயலராகவும், நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மொத்தம் 38 விரிவுரையாளர் பணி இடங்களும் மற்றும் 1 உடற்பயிற்சி ஆசிரியர், 1 நூலகர் பணியிடங்களும் உள்ளன.

மொத்த ஆசிரியர் பணியிடங்கள், அதில் காலியாக உள்ள பணியிடங்கள் மற்றும் காலியாகவுள்ள பணியிடங்களில் கல்லூரிக்







கல்வி இயக்குநரால் பூர்த்திசெய்ய அனுமதிக்கப்பட்ட பணி இடங்கள் ஆகிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

| பதவிப்பெயர் | மொத்தப் பணியிடங்கள் | காலியாக உள்ளவை | கல்லூரிக் கல்வி இயக்குநரால் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தமிழ் | 3 | 2 | — |
| 2. ஆங்கிலம் | 3 | 1 | — |
| 3. வேதியியல் | 5 | 1 | 1 |
| 4. பொருளியல் | 5 | 3 | 2 |
| 5. விலங்கியல் | 5 | 1 | — |
| 6. தாவரவியல் | 4 | — | — |
| 7. மலையாளம் | 1 | — | — |
| 8. கணிதம் | 5 | — | — |
| 9. இயற்பியல் | 2 | — | — |
| 10. வணிகவியல் | 4+1(பகுதி நேரம்) | — | — |
| 11. வரலாறு | 1 | — | — |
| 12. உடற்பயற்சி ஆசிரியர் | 1 | — | — |
| 13. நூலகர் | 1 | 1 | 1 |
| மொத்தம் | 40+1=41 | 9 | 4 |

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள திருக்கோயில்களின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரிகளில் ஏற்படும் ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்திட அரசாணை

(நிலை) எண் 574, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 26-11-1999-ன் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பிக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை எதிர்த்து திரு. சுரேஷ்குமார் என்பவரால், சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண்.712/2000 தாக்கல் செய்து, இடைக்கால மனு 1068/2000 என்ற எண்ணில் 27-4-2000-ல் இடைக்காலத் தடை பெற்றுள்ளார். இத்தடையை நீக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்குரைஞர் ஆஜராகி வாதாடியபின் 27-8-2001 அன்று விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தீர்ப்பாணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தடையின் காரணமாக ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் ஏற்பட்டுள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. கடந்த 30-8-2001 அன்று குழித்துறை மகளிர் கல்லூரி மாணவியர்கள் சுமார் 600 நபர்கள் குழித்துறை ஜங்ஷனில் போக்குவரத்தை தடை செய்துள்ளனர். பின் அவர்களிடையே சுமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வட்டாட்சியர் மற்றும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் முயற்சியால் மாணவியரைக் கலைந்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கலைந்து சென்றுள்ளனர். 10 மாணவியர்கள் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து விண்ணப்பம் அளிக்க அனுமதிக்கப்பட்டு அவ்வாறே மாணவியர்கள் மாவட்ட ஆட்சியரிடம் விரைவில் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய விண்ணப்பம் அளித்துள்ளனர்.

மேற்கண்ட நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து தீர்ப்பாணை பெறப்பட்டவுடன் உடனடியாகக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கிடையே, மணிநேர அடிப்படையில் வேறு ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடத்தச் செய்து மாணவியர்களுக்கு உதவிட கல்லூரிச் செயலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரமான அந்த அறிக்கையைப் படித்தேன். இந்த அரசும், இந்தத் துறையும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களும் வேகமாக அதிலே தலையிட்டு அதை நிறைவேற்றுவதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டதற்கு நான் முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே நான்கு ஆண்டுக் காலம், இந்த மாமன்றத்திலே அந்தத் துறையினுடைய அமைச்சருக்கு 10



கடிதங்கள் கொடுத்திருப்பேன். அந்தக் கல்லூரியிலே பல விவகாரங்கள் இருக்கின்றன. கட்டடப் பற்றாக்குறை இருக்கிறது, ஆசிரியைகள் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் யாருடைய செவியிலே சங்கு ஊதினால் எப்படி இருக்குமோ, அந்த அளவிலேதான் நிலைமை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். நான் யாரையுமே குறை சொல்ல விரும்பவில்லை. அந்தக் கல்லூரியிலே 9 ஆசிரியைகள் இல்லையென்று சொன்னால், எப்படி ஒரு கல்லூரி செயல்பட முடியும்?

இப்போதுகூட, இந்தச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திலே கலந்துகொள்வதற்காக நான் வந்தபோது, எனக்கு இரண்டாவது நாள் இந்தத் தகவலைச் சொன்னார்கள். உடனே மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் இதைச் சொல்லி, அவர்களும் உரிய நடவடிக்கைக்கான முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலே இருக்கிற அரசியல் காழ்ப்புணர்ச்சி உடையவர்கள் ஏதோ நான் இதைக் கண்டுகொள்ளவில்லை என்ற முறையிலே தவறான பிரசாரங்களையெல்லாம் செய்து வருகிறார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் மாவட்ட அதிகாரிகள் அதிலே கவனம் செலுத்தவில்லை என்ற குறைபாடு இருக்கிறது என்பதைக்கூட நான் சுட்டிக்காட்டி உள்ளேன். அந்த 9 ஆசிரியைகளை நியமனம் செய்வதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஏற்கெனவே Lab இல்லை என்ற காரணத்தால், மாணவிகள் அரை கிலோ மீட்டர் தாண்டி இன்னொரு பகுதிக்குச் செல்ல வேண்டிய துரதிருஷ்டமான நிலை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில் ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடத்திலே நேரில் சொன்னதற்கு இணங்க, நேற்று முன்தினம் ஆணையர் அவர்களை அந்தக் கல்விக்கூடத்திற்கு அனுப்பி அங்கிருக்கிற பணிகளையெல்லாம் மேற்கொண்டு, அவர்கள் கூறிய குறைகள் அத்தனையும் அறிந்து வருமாறு சொல்லியிருக்கிறேன். 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்காமலேயே, தட்டாமலேயே உங்களுக்கு அந்தப் பணியைச் செய்ய இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (ஐ) கோரிக்கை எண் 29 - சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் கோரிக்கை எண் 29 - சமூக நலன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.824,39,14,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 742, திரு. மீ.அ. வைதியலிங்கம். உட்கார்ந்தே பதில் சொல்லுங்கள், எழுந்துவிடாதீர்கள். (சிரிப்பு)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களைச் சீரமைத்து சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

அவையில் நான் அவ்வளவு நாகரிகம் தெரியாமல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 170, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எட்டாம் வகுப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவியைப் பழைய முறையிலேயே வழங்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2343, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2562, திரு. எச்.எம். ராஜு*.

***திரு. எச்.எம். ராஜு*:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை இளம் பெண்களுக்குத் திருமண நலத் திட்ட உதவிகள் வழங்கும்போது திருமணத்திற்கு முன்பே அவர்களுக்கு அப்பணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2973, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 586, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3144, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள உடல் ஊனமுற்றோர்கள், விதவைகள், முதியோர்களுக்கு வழங்கும் உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3595, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, காந்தி நகர் (முத்தூர் பேரூராட்சி), சின்னம்மன் கோவில்பாளையம் ஆகிய பகுதிகளில் பாலர் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1760, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3000, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3537, திரு. ஐ. கணேசன்.





**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3200, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2614, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 877, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 759, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2047, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3296, திரு. இ. பாரிமோகன்.

**திரு. இ. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.824,39,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) கோரிக்கை எண் 21 - மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21—மீனளம். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.51,12,33,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 723, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 147, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2233, திரு. ஜி.கே. மணி.

---

@231 முதல் 307 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2559, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1936, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2737, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3190, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2620, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 871, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 768, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2029, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3297, திரு. கி. பரிமோகன்.

**திரு. கி. பரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3088, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு. டி. சுதர்சனம்.





**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதியில் உள்ள 200-க்கும் மேற்பட்ட குளங்கள் மற்றும் ஏரிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீன் வளர்ப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,12,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3399, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

**கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திரபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.165,14,63,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1951, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கால்நடை மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு உடனடியாக வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 144, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், பாலமதி, முல்லைக்கொம்பை, சிறுகாஞ்சி, கொணவட்டம், வெள்ளக்குட்டை கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2500, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3087, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3152, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஆட்டுக்காரனூர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1389, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், கொளத்துப்பாளையத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3353, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1823, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3107, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1879, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2689, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3286, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3191, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2619, டாக்டர் சே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 767, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1966, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதியில் அல்லிக்குழி ஊராட்சியில் கால்நடை மருத்துவ நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3625, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் வெரியப்பூர், வடகாடு, சந்திரப்பட்டி, ஓடைப்பட்டி, பெரியகோட்டை, மஞ்சநாயக்கன்பட்டி, கொத்தயம், அ. நால்ரோடு, வாகரை, புளியம்பட்டி ஆகிய ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3960, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,14,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 917, திரு. கு. ஜெயக்குமார்.

**THIRU K. JAYAKUMAR:** Hon. Speaker Sir, "To discuss the need to construct a cold-storage at Nammakkal exclusively for the use of poultry farmers to store eggs", I move—

"That the sum of Rs.165,14,63,000/- allocated under Demand No.22 - Animal Husbandry be reduced by Rs.100/-"

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் மற்றும் கால்நடை வளர்ப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். திரு. கே.என். சேகரன்.

***திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவரவர்களே, பேரறிஞர்களும் சான்றோர்களும் இடம்பெற்ற இந்தப் பேரவையிலே நானும் இடம் பெறுவதற்கு வாய்ப்பை நல்கிய தமிழ் மொழிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் 65 ஆண்டுகளுக்கு மேலாக ஓய்வறியாமல் பணியாற்றுகின்ற உலகத் தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவர், கழகத் தலைவர், எங்கள் குடும்பத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிற பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் தளபதி அவர்களுக்கும், என்னுடைய தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்கு உழைத்திட்ட கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலன், மீனளம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளின் மானியக் கோரிக்கைகளிலே பேசுகிற வாய்ப்பை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இது என்னுடைய கன்னி உரை என்பதால் நீண்டநேரம் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் பேசுவதற்கு அனுமதி வழங்கிட அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மனிதச் சமுதாயம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகரன், 10 மணித்துளிகளில் குறுக்கீடு இல்லாமல் சிறப்பாக, நன்றாகப் பேசலாம்.

---

@ 308 முதல் 365 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**திரு. கே.என். சேகரன்:** மனிதச் சமுதாயம் உயர வேண்டுமானால் பெண்கள் உயர வேண்டும், ஆண்களுக்கு நிகராக, சரிநிகர் சமானமாக உரிமைகள் பெற்று வாழவேண்டும் என்பதற்காக கலைஞர் அரசு மகளிர் உயர்வுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியது. பெண்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றால்தான் ஆண்களுக்கு நிகராக வாழ முடியும் என்பதால் பெற்றோர் சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்குகிற தனிச் சட்டத்தை 1989ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும் அதேபோல அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும் அரசின் திட்டங்களாக அறிவிக்கின்ற வகையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த முறை பல திட்டங்களையெல்லாம் அறிவித்தார்கள்.

1989-லே கழக அரசாலே 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்' என்கிற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தால் 8ஆம் வகுப்புவரை படித்த பெண்களுக்குத் திருமண உதவித்தொகை ரூ.5,000/- வழங்கப்பட்டது. 1996-லே இந்த உதவித்தொகையை ரூ.10,000/-ஆக உயர்த்தி கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். ஏழை, எளிய மாணவிகளிடையே படிக்கின்ற ஆர்வம் பெருகுவதோடு மட்டுமல்லாமல், ஏழைப் பெற்றோர்களுக்கும் தங்கள் பெண்கள் திருமணம் பற்றிய கவலை அவர்களிடத்திலிருந்து நீங்கக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் சிறப்பாக அமைந்தது. 1989-லே கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே 'அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்' என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து கலப்பு மணம் செய்பவர்களுக்கு உதவித் தொகையை வழங்கினார்கள். அதேபோன்று இந்தத் தொகையை ரூ.10,000/-ஆக 1996-லே உயர்த்தி, மணமக்களிலே ஒருவர் ஆதிதிராவிடர் எனில், 1997 முதல் உதவித்தொகையை ரூ.20,000/-ஆக அதிகப்படுத்தி தி.மு.கழக அரசு வழங்கியது. இதையும் இந்த அரசு வழங்க முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

1975-லே 'டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு திருமணத் திட்டம்' கொண்டுவந்து உதவித்தொகை 1989-லே ரூ.5,000/- என்றும், 1997-98-லே ரூ.7,000/- என்றும், 2000-லே ரூ.10,000/- என்றும் தி.மு.கழக அரசு வழங்கியது. அதேபோன்று 'அன்னை தெரசா நினைவு ஆதவரற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ்' கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1997-லே நிதி உதவியாக 2,000 ரூபாய்

என்றும், 1998/-லே ரூ.3,000/- என்றும், 1999-லே ரூ.5,000/- என்றும், 2000-லே ரூ.7000/- என்றும் படிப்படியாக உயர்த்தி வழங்கினார்கள். இந்த உதவித் தொகைகளை எல்லாம் 10,000 ரூபாய் என்று எல்லாத் திட்டங்களுக்கும் இந்த அரசு அறிவித்ததை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

1989-லே கலைஞர் அரசு அமைந்தபோது 'ஈ.வே.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம்' என்ற திட்டத்தைக் கொண்டுவந்து, குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் குறைவாக உள்ள மாணவியர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கியது. 1996-லே தி.மு.கழக அரசு மீண்டும் அமைந்தவுடன், ஆண்டு வருமானம், 12,000 ரூபாய் என்பதை 24,000 ரூபாய் என உயர்த்தியது. அதுபோன்று நலிந்தோர்க்கு உதவித்தொகை வழங்குகிற வகையிலே மாத ஓய்வூதியம் ரூ.100/- என்பதை 1997-லே ரூ.150/- ஆகவும், 2000-லே ரூ.200/- ஆகவும் உயர்த்தியதோடு பயனாளிகளுடைய எண்ணிக்கைக்கு இருந்த உச்சவரம்பை 1997-லே கலைஞர் அரசு இரத்து செய்தது.

இத்திட்டத்தால் முதியோர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவைகள், உடல் ஊனமுற்றோர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றோர் பயன் பெற்றனர்.

முற்பகல் 11-30

பெண்களுக்கான முன்னேற்றத் திட்டங்களாக கலைஞர் அரசு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தது. 1996-லே முதல் தடவையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மானிய உதவி வழங்கும் அற்புதமான திட்டத்தை அறிமுகம் செய்தது. அதுமட்டுமல்லாமல், தொழில் வளாகங்களிலே தொழில் மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் 1996-லே தொடங்கப்பட்டது.

அதேபோன்று, மீனவ மகளிருக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மோட்டார் பொருத்திய 25 வாகனங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, மீனவ மகளிர் மீன் விற்பனைக்கு உதவி செய்தது. இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு, தமிழகம் முழுவதும் 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் தற்போது பதவி பெற்றுள்ளனர்.



ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட பெண்கள் வாழ்க்கையில் உயர, சேமிப்புடன் கூடிய மகளிர் சிறு வணிகக் கடன் என்ற அற்புதமான திட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் 1999-லே கொண்டு வந்தார்கள். ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மகளிர் சிறு வணிகக் கடன் பற்றி எந்தக் குறிப்பும் இல்லாதது உண்மையிலேயே வருத்தம் அளிக்கக்கூடிய ஒரு செய்தியாக இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கியதோடு மட்டுமல்லாமல், தொடக்கப் பள்ளிகளிலே பெண்களை அதிக அளவில் ஆசிரியர்களாக நியமனம் செய்ய வழிவகுத்தது டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு 1989-90-லே, இரண்டு வாரங்களுக்கு ஒரு முட்டையும், 1998 முதல் வாரத்திற்கு ஒரு முட்டையும், சத்தான உணவு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே அளித்தது. ஆனால், இந்த அரசு சத்துணவுக் கட்டடங்களுக்கும், பாத்திரங்களுக்கும் நிதியை ஒதுக்கியிருந்தாலும்கூட, உணவுக்காக வழங்கப்படுகின்ற அந்த உணவு விகிதத்தை அதிகரிக்கவில்லை. அதை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சத்துணவுப் பணியாளர்கள்-பகுதி நேரப் பணியாளர் என்று 16-4-1989-ல் ஆணையிட்ட தி.மு.கழக அரசு, சத்துணவுப் பணியாளர்களுக்குச் சிறப்புச் சேமநலத் திட்டத்தை 25-4-1998-ல் விரிவுபடுத்தியது.

கலைஞர் அரசு ஒரு குழந்தைக்கு வழங்கிய சத்துணவு மானியம் 13 காசு என்பதை 18 காசாகவும், 2000-2001-ல் 18 காசு என்பதை 23 காசாகவும் உயர்த்தி வழங்கியது.

இந்த அரசு தொட்டில் குழந்தைத் திட்டம் என்கிற திட்டத்தை, பெண் சிசு வதையைத் தடுக்கும் நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறது. அந்த நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றபோது, நடைமுறைச் சிக்கல்கள், சமூகக் குற்றங்கள் இவையேதும் நடைபெறாமல் எச்சரிக்கையோடு செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

28-7-2001-ல் 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தி வெளியாகியுள்ளது. அதற்குரிய பதிலை அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தமிழாக்கத்தை இந்த அவையிலே இப்போது படிக்கிறேன்.

'மணிலா பவுடரைக் கொடுக்க தடை செய்த இந்த அரசு, அதற்கு ஈடுகட்டக் கொடுக்க வேண்டிய பொருட்களை போதிய அளவுக்குக் கொடுக்கவில்லை. அதனால் அங்கன்வாடிகளில் 10 பேர்களுக்குக் கொடுக்க வேண்டியவை தற்போது 5 பேர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குக் கொடுத்து வந்த இந்தச் சத்துணவு நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் மணிலா பவுடருக்குப் பதிலாக வழங்கப்படும் கோதுமை மற்றும் மாவுப் பொருட்களில் புரோட்டீன் சத்து குறைவாக உள்ளது' என்று அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. இதுபற்றி அரசு விசாரித்து, அதற்கான பதிலை அமைச்சரவர்கள் இந்த அவையில் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து மீன் வளத் துறையிலே சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசில் 'சிங்காரவேலர் மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்' என்கின்ற, மீனவர்களுக்காக வீடு கட்டித் தருகின்ற ஒரு திட்டத்திலே 2000-2001-லே ஆண்டுக்கு 4 ஆயிரம் வீடுகள் என்ற விகிதத்திலே 20 ஆயிரம் வீடுகள் கட்டத் திட்டமிட்டு, 12,665 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்துவதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்திற்கு சிங்காரவேலர் பெயரை டாக்டர் கலைஞர் அவர்கள் வைத்திருந்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ இந்த அரசு சிங்காரவேலர் என்கின்ற பெயரை இந்தத் திட்டத்திலேயிருந்து நீக்கிவிட்டது. ஆகவே மீனவர் குடும்பத்தில் பிறந்த மிகப் பெரிய தலைவரான அவருடைய பெயரை இந்த அரசு ஏன் நீக்கியது என்பதை இந்த அவையிலே நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த டீசல் மானியம் லிட்டர் ஒன்றுக்கு 35 காசு என்பதை 45 காசாக உயர்த்தி, 1997-98 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு



வருகிறது. 7000 பயனாளிகளுக்கு 5 கோடியே 21 இலட்சம் ரூபாய் டீசல் மானியம் வழங்கப்பட்டுள்ளது. முந்தைய அண்ணா தி.மு.க. ஆட்சியில் 2,498 பயனாளிகளுக்கு மட்டுமே வெறும் 62 இலட்சம் ரூபாய் அளவிற்கு டீசல் மானியம் வழங்கப்பட்டது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையிலே இது ஏழை எளிய மக்களுக்கு செல்வம் வழங்கக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பினையும், பொருளாதாரத்தையும் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை கலைஞர் அரசு சிறப்பாக கடந்த காலங்களிலே செய்து வந்தது. ஆசியாவிலேயே முதலாவதாக கால்நடை கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக 1990 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் ஒரு புதிய பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 120 புதிய கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டதோடு, 50 மருந்தகங்கள் மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டன. கால்நடை மருத்துவமனையில் வளர்ப்புப் பிராணிகளுக்கு 5 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டதையும் குடற்புழு நீக்கத்துக்காக வசூலிக்கப்பட்ட ஒரு ரூபாய் கட்டணத்தையும் 1996-லே தலைவர் கலைஞர் அவர்கள் இரத்து செய்தார்கள். இதுபோன்று விவசாயிகளுடைய கால்நடைச் செல்வங்களுக்காக, அவர்களுடைய பொருளாதாரம் உயர வேண்டும் என்பதற்காக, கால்நடைக்காக பல்வேறு திட்டங்களை எல்லாம் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தியது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளை எல்லாம், (மணியடிக்கப்பெற்றது) இந்த அவையில் எடுத்து வைப்பதற்கு எனக்கு பேரவைத் தலைவர் அவர்கள் ஐந்து மணித்துளிகளாவது நேரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகரன், இரண்டு மணித் துளிகளிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.என். சேகரன்:** பாரத மிகுமின் தொழிலகத்தில், எல்.சி.எஸ்.சிலே பணியாற்றுகின்ற மூவாயிரம் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கும் அதிகமாக பத்து ஆண்டுகள் வரை பணியாற்றிய அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பணி நிரந்தரம்

செய்யப்படாமலிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பணி நிரந்தரம் செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால் நிறைய விவசாயிகளுக்கு நன்மைகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே நீண்டகாலமாக குளங்கள் எல்லாம் தூர் வாரப்படாத காரணத்தால் அந்தக் குளங்களில் நெய்வேலி காட்டாமணக்கு போன்ற செடிகள் மண்டி காடுகளாகக் காட்சியளிக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்கி தூர் வாருவதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று பெருமழை பெய்கிறபோது ஏற்படுகிற வெள்ளத்தால் வேங்கூர், அரசங்குடி, திருவெறும்பூர், நடராஜபுரம் போன்ற பகுதிகளில் விவசாய விளைநிலங்களிலிருக்கிற அந்த நெற்பயிர்கள் எல்லாம் வெள்ளத்திலே மூழ்கி சேதமடைகின்றன. இது தொடர்ந்து ஆண்டுதோறும் நடைபெற்று வருகிற ஒரு நிகழ்வாக இருக்கிற காரணத்தால், விவசாயிகளுடைய துயரைப் போக்குகின்ற வகையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு கடந்த இரண்டு ஆண்டுகளிலே அங்கேயிருக்கிற கவுர் வாய்க்கால், ஆனந்தகாவேரி போன்ற கால்வாய்களை எல்லாம் தூர் வாரியது. விடுபட்ட, எஞ்சிய தூர்வாரப்படாத கால்வாய்களையெல்லாம் மீண்டும் இந்த அரசு தூர் வாரி விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் அங்கே (மணியடிக்கப்பெற்றது) நிறைய குடியிருப்பு மனைப் பட்டாக்கள் எல்லாம் வழங்கப்படாமலிருக்கின்றன. துவாகுடி, திருவெறும்பூர், பொன்மலைப்பட்டி, செம்பட்டு போன்ற பகுதிகளிலெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு குடியிருப்பு, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சமத்துவபுரம். கடந்த ஏப்ரல் மாதத்திலேயே அவற்றின் பணிகள் எல்லாம் நிறைவுற்ற நிலையிலும்கூட அவை பயனாளிகளுக்கு வழங்கப்படாமலிருக்கின்றன. அவற்றை உடனடியாக பயனாளிகளிடத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று மாநகராட்சிப் பகுதியிலேயிருக்கின்ற மின்விளக்குக் கம்பங்கள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகரன், கொஞ்சம் நிமிர்ந்து பாருங்கள், ரொம்பப் பணிவாக பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள். (சிரிப்பு) இன்னும் ஒரு மணித்துளியிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.என். சேகரன்:** மாநகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மின்விளக்குக் கம்பங்கள் எல்லாம் பழுதடைந்து எப்பொழுது விழுமோ என்ற நிலையிலேயிருக்கின்றன. அவற்றின் ஆபத்தை உணர்ந்து புதிய மின் விளக்குகள் அமைப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

சென்னை மாநகரத்திலே ஓடுகின்ற பஸ்களில் எல்லாம் இங்கே பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் புற்றுநோய் வருகிறது என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. எனது பகுதியிலே திருவெறும்பூர் பகுதியிலே குப்பைகளைக் கொட்டுவதற்குச் சரியான இடம் இல்லாத காரணத்தால் சாலையோரங்களில் எல்லாம் பிளாஸ்டிக் பொருட்கள் கலந்த அந்தக் குப்பைகள் கொட்டப்பட்டு கொளுத்தப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அவற்றிற்கு உரிய நிலங்களை ஆர்ஜிதம் செய்து அந்தப் பேரூராட்சிப் பகுதிகளுக்கு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, துவாக்குடி பகுதியிலே 100 மீட்டர், 200 மீட்டர், ஆழமுள்ள பாறைக் குழிகள் எல்லாம் பயனற்ற நிலையிலே நீர் நிரம்பிய நிலையிலே இருக்கின்றன. வருடந்தோறும் 2, 3 பேர் அந்த நீரிலே மூழ்கி இறந்து விடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இந்தக் குப்பைகளைக் கொண்டு அந்தப் பாறைக் குழிகளை எல்லாம் மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதி மக்களுடைய கோரிக்கைகளை எல்லாம் இந்த அவையிலே பொறுப்போடும், கடமை உணர்வோடும் எடுத்து வைத்திருக்கின்றேன். இந்தக் காட்சிகளை எல்லாம் தொலைக்காட்சியின் மூலமாக எங்கள் தொகுதி மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், இந்த அரசும் அந்தக் கோரிக்கைகளை எல்லாம் அதே பொறுப்புடன் நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிதம்பரம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'இந்து' பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியைப் பற்றி இங்கே ஒரு விளக்கம் கேட்டார்கள். அதை மட்டும் தெரிவித்துவிட்டு பதிலுரையிலே என்னுடைய பதிலைத் தெரிவிக்க இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சேகரன் அவர்கள் சொன்னதைப்போல குழந்தைகளுக்கோ, தாய்மார்களுக்கோ சத்துணவு வழங்குவதில் எந்தக் காலதாமதமோ குறைவோ ஏற்படவில்லை. 23-6-2001 முதல் கூட்டுறவு இணை உணவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தியை மேற்கொண்டு 27-7-2001 முடிய 737 டன்கள், செயல்படுத்தக்கூடிய திட்ட மையங்களுக்கு விநியோகம் செய்து வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் தொடர்ந்து உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள அத்தனை I.C.D.S. மையங்களின் மொத்தத் தேவையே மாதம் ஒன்றுக்கு 595 டன்கள் மட்டுமே. சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் 12 திட்டங்கள் 1022 மையங்களில் செயல்படுத்தப்படுகின்றன. சென்னை திட்ட அலுவலரும் இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்துவிட்டு பல்வேறு இடங்களிலே போய் இந்தத் திட்டத்தின் மூலமாக ஒழுங்கான முறையிலே மாவு சப்ளை செய்யப்படுகின்றதா என்று அறிவதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களை அனுப்பிப் பார்த்துவிட்டு வரச் செய்தபோது அது அத்தனையும் தவறான கருத்து. முடக்கப்பட்ட சத்துமாவைப் பொறுத்தவரை சென்னை நகரின் மொத்த இருப்பு 47.5 டன்கள் மட்டுமே. ஆனால் 'இந்து' பத்திரிகையில் 4200 டன்கள் என்று எழுதப்பட்டுள்ளது தவறாகும். உண்மைக்கு மாறான தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். ஊட்டச் சத்து மையங்களின் தேவைக்கேற்ப 25 கிலோ, 50 கிலோ மட்டுமே இருப்பில் வைக்கப்படுகிறது. ஆனால் செய்தியில் 50 கிலோ, 100 கிலோ என்று எழுதப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தவறான தகவலை வெளியிட்டிருப்பதை அவர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மா, அவர் 'இந்து' பத்திரிகையில் வந்ததைத்தான் படித்தார். திரு. சேகரன், உங்களுடைய பதிலை 'இந்து' பத்திரிகைக்கே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிதம்பரம்.



**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, 'போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும், எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்' என ஆர்ப்பரித்து அவனியிலே உலா வந்து வெற்றிக் கனியை இம்மண்ணிலே விளைவித்த இதய தெய்வம், என் இனிய தலைவியே, நின்விரல் அசைவால் எனக்கும் ஒரு முகவரி இம்மண்ணில் எழுதப்பட்டது. அதற்கு நன்றி செலுத்த என் கண்கள் பனித்தபோது, அதில் உங்கள் திருமுகம் தெரிந்தது. மக்கள் நலன் காக்கும் மாமணியே, 'மகத்' தில் பிறந்த மகத்துவமே, மனித நேயப் பண்பாடே, மகளிர் நலன் காக்கும் தாயே, மன்றத்தில் பெருமை குன்றமாய் நிற்கத் தென்றலாய் உம் ஆட்சி திக்கெட்டும் பரவட்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

'நீர் இன்றி அமையாது இவ்வுலகு' என்றார் வள்ளுவர். அவர் சொன்னது குடிக்கும் நீரை. ஆனால் தமிழக மக்கள் அதற்கு இப்படி உரை எழுதினார்கள். நீர் இன்றி - அதாவது 'நீங்கள் இன்றி அமையாது இவ்வுலகு' என்று எழுத ஆரம்பித்தார்கள். அன்னையே, அவனியிலே இதுதானே உண்மை? அதிசயம் கூட அதிசயப்படும் அதிசயமே! ஆராவமுதமே! அன்னையே! அவையிலே இடம் கொடுத்த அற்புதமே! நின் திசை நோக்கி எனது இளம் பேச்சைத் தொடங்குகிறேன்.

முற்பகல் 11-45

சிறப்பானதொரு தமிழக பட்ஜெட்டை இந்தச் சபையில் சமர்ப்பித்து அறிவித்த மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதிவாழ் மக்களுக்கு என்னை வெற்றியடையச் செய்ததிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவையில் பேச வாய்ப்பு தந்தமைக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கோ அடையாளம் தெரியாமல் கிடந்த என்னை, வழக்கறிஞரை, என் பவானிசாகர் தொகுதிக்கு ஒன்றிய கழகச் செயலாளராக அறிவித்து, அடுத்த ஓர் ஆண்டு காலத்திற்குள் என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி அழகு பார்த்த பெருமை நான் வணங்கும் தெய்வம் அம்மா அவர்களுக்குத்தான் உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

எனது பவானிசாகர் தொகுதி நீர்வளம் நிறைந்த தொகுதியாக தெரிந்தாலும், அங்கு கால்நடைகளும் குடிநீர்ப் பற்றாக்குறைக்கு ஆளாகி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் வண்ணம் கருணை உள்ளம் கொண்ட தாய், அவினாசி, அத்திக்கடவு நீர்செறிவுத் திட்டத்தை நடப்பு பட்ஜெட்டில் அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், என் தொகுதிவாழ் மக்களின் சார்பிலும் கோடான கோடி நன்றி காணிக்கைகளை புனிதப் பாதத்திற்கு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே தேர்தலின்போது கடுமையான எதிர்ப்புகள் இருந்தபோதிலும், அம்மாவை எதிர்த்து 4, 5 கட்சிகள் இருந்தபோதிலும், அம்மாவின் வேட்பாளராகிய என்னைத் தோற்கடிக்க அவர்கள் எதிர்த்து நின்றபோதும், அம்மா அவர்கள் கடும் வெயிலையும் பாராது, அவினாசி வழியாக பு. புளியம்பட்டி, பவானிசாகர் தொகுதிக்கு வந்து என்னை ஏழு முறை வாக்காளராய் பொது மக்களின் முன்பு என் பெயரைச் சொல்லி வாக்குக் கேட்டதற்கு அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தினர் சார்பிலும், என் சார்பிலும் ஏழேழு ஜென்மத்திற்கு நன்றிக் கடனைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் துண்டைப் பிடி, துணியைப் பிடி என்று தோற்றுப் போனார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியான பவானிசாகர் தொகுதியிலே மீன்வளம், Private Tender கொடுத்ததன் காரணமாக தனியார் துறைக்குத் தாரை வார்த்ததன் காரணமாக, ரூ.52 இலட்சத்திற்கு மேல் நஷ்டம். இப்படி கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏகப்பட்ட நஷ்டத்தை ஏற்படுத்தியதோடு, பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் குடும்பங்களுக்குப் பல சிரமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியாருக்குக் கொடுத்ததன் வாயிலாக அரசு மீன்குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள் எனது தொகுதியில் பயனின்றி வீணாக வெயிலில் காய்ந்து கிடக்கின்றன. மீன் முதல் ரகம் கிலோ ரூ.25-க்கு விற்றது தற்போது மீன் முதல் ரகம் கிலோ ரூ.45-க்கு மேல் விற்கிறார்கள். அங்கே பங்கு மீனவர்களுக்குச் சரியான கூலியோ, மீனோ கொடுப்பதில்லை.



முந்தைய ஆட்சியில் இந்த சிறுமுகையிலேயிருந்து South India Viscose மூலமாக வருகின்ற கழிவுநீர் உடல் நலத்தை மட்டும் பாதித்ததோடு அல்லாமல் மூளைக் காய்ச்சல், ஜன்னி, ஆடு, மாடுகளுக்கு நோய், விவசாயப் பயிர்களுக்குப் பாதிப்பு மற்றும் மீன்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு இறத்தல் போன்றவை ஏற்பட்டன. இப்போது நமது அம்மா அவர்களுடைய அரசால் நிதி நிலைகளுக்கேற்ப நிதிநிலை அறிக்கையில் ஊக்கமளிக்க வேண்டிய வகையில் இராமேஸ்வரத்தில் ரூ.53.86 கோடி செலவில் மீன் பிடித் துறைமுகம், ரூ.10.60 கோடி செலவில் பழையாறு மீன் பிடித் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளையும் மேற்கொள்ள மத்தியிலே நிதி கோரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிவாழ் மக்கள் மிகவும் ஏழையாகவும் பின்தங்கியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் வாயிலே மண்ணைப் போடுகின்ற அளவிற்கு துப்பாக்கி வைத்து இந்தத் தனியார் துறை மிரட்டி வருகிறார்கள். ஒரு டெண்டர்—இன்னமும் அதை நீட்டித்துத் தராமல் இருப்பதை அம்மா அவர்கள் தலையிட்டு அந்த ஏழை மீனவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அதை இரத்து செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அம்மா, மீன் வளம் சிறக்க ஆவன செய்வதோடு, அவர்களுடைய வாழ்க்கையிலே அவர்கள் சிறப்புற்று வாழ பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன். எனது தொகுதியின் பிரச்சினைகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர்ப் பிரச்சினை, முதலாவது. அடுத்தது பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கட்டிய வீடுகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவை சிறிதும் திரும்பிப் பார்க்கப்படாமல் அப்படியே பழுதடைந்து கிடக்கின்றன. அவற்றைப் பராமரிக்க வேண்டுமென்றும் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொது மருத்துவமனை ஒன்று புஞ்சம் புளியம்பட்டியிலே இருந்தபோதிலும், அது இடிந்து விழும் அபாயத்திலே இருக்கிறது. அதைப் பொறியியல் நிபுணர்கள் பயன்படுத்தக்கூடாது என்று கூறிவிட்டார்கள். ஆகவே, புளியம்பட்டியிலே ஒரு மருத்துவமனை புதியதாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே இதுநாள் வரை ஒரு கலைக் கல்லூரியோ பெண்களுக்கு அரசு கல்லூரியோ இல்லை என்று சொல்லி, அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே விவசாயப் பெருமக்களுக்கு தென்னை மரத்திலே ஏற்பட்டிருக்கும் Eriophyid—சிலந்திப் பூச்சி நோயைத் தடுக்கவும் வழிசெய்ய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

கரும்புக்குத் தகுந்த விலை கொடுக்க வேண்டும். நீண்ட நாள் கோரிக்கையான, 25 ஆண்டுக் காலமாக நான் வக்கீலாக பணியாற்றிய பவானிசாகர் தொகுதியிலும், சத்தியமங்கலத்திலும் ஒரு சார்பு நீதிமன்றம் இல்லை என்பதையும் ஒரு அரசுக் கட்டடம்கூட இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சூழல் நிறைந்த எனது பவானிசாகர் தொகுதியை ஒரு சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

போக்குவரத்துத் துறை, பள்ளிக்கூடப் பெண்களுக்கு அதிகமான பஸ்களை வழங்கவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். T.T.K. காலுறைத் தொழிற்சாலை மூடியிருக்கிறது. அதைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். எல்.பி.பி. வாய்க்காலின் மத்தியிலே குருமந்தூரிலிருந்து பள்ளிக்கூடக் குழந்தைகள் செல்ல ஒரு பாலம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். நெசவாளர்கள், தொட்டம்பாளையம், அரசூர், சாவக்கட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள், கூட்டுறவுக் கடன்கள் வாங்கி ஜப்தி நடவடிக்கையில் இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். பவானிசாகர் தொகுதியிலே P.W.D. நிலத்திலே 30 ஆண்டுகளாக பட்டா வழங்காமல் இருக்கிறவர்களுக்கு அந்தப் பட்டாக்களை கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். கடந்த 5 ஆண்டுக்காலத்தில் அரசு இயந்திரம் என்னும் விளை · கம்பி அறுந்து, கருதியிழந்து, பயனற்றுக் கிடந்தது. இப்பொழுது, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் வீணை என்னும் அரசு புதுப் பொலிவுடன் சுகமான ராகங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை மக்களுக்கு அளித்து வருகிறது என்பதைச் சொல்லி, எனக்கு கன்னிப் பேச்சு பேச வாய்ப்பு கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தானைத் தலைவி, தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற் பாதங்களைத் தொட்டு, வணங்கி, எனக்கு அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை என்றாலும், என் உயிர் மூச்சு உள்ளவரை அம்மா அவர்களுடைய ·புகழைப்



போற்றிப் பாடுவேன் என்று கூறி பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறை, கால் நடை வளர்ப்பு, மீனளம் என்ற மிக முக்கியமான இந்த மூன்று மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நலத் துறை இந்த நாட்டிலே குறிப்பாக நம்முடைய தாய்க்குலங்களுக்கு எந்தெந்த வகையில் இந்த அரசு நன்மைகளைச் செய்து வருகிறது என்பதை பட்டியலிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். அவையெல்லாம் மிக ஒழுங்காக, சிறப்பாக, நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கூடுமான வரை ஒவ்வொரு இடங்களுக்கும் நேரடியாகச் சென்று விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களில் வருகின்ற புகார்கள் என்ன என்று சொன்னால், இந்தத் திட்டங்கள் எல்லாம் முறையாக நிறைவேற்றப்படுவது இல்லை என்பதுதான்.

குறிப்பாக ஒரு விதவைக்குக் கொடுக்கவேண்டிய பணம் அவருடைய கணவர் இறந்தவுடன், அவருடைய தலை மகனுக்குக் கொடுக்க வேண்டிய பணம், எல்லாம் முடிந்து அவர்கள் கொடுக்க வேண்டியதை எல்லாம் கொடுத்துவிட்ட பிறகும்கூட, அந்தப் பணம் வந்து சேருவதில்லை என்ற குறைபாடு பல இடங்களில் சொல்லப்படுகிறது என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல ஏராளமான திட்டங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். எல்லாம் மிக அருமையான திட்டங்கள். திட்டங்கள் எல்லாம் ஒழுங்காக, முறையாகச் செயல்படுகின்றனவா என்பதை ஒவ்வொரு அதிகாரியிடத்திலும் கேட்டுத் தெரிந்துகொள்வதைவிட, நீங்கள் நேரடியாகச் சென்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, நம்முடைய உடல் ஊனமுற்றவர்களை, கண் பார்வையில்லாதவர்களை எல்லாம் மிகக் கனிவுடன் பார்க்கவேண்டும். சென்ற சட்டமன்றத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே நடந்துகொண்டிருந்தபோது, இங்கே கண் பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பெரிய போராட்டமாக இல்லை, அவர்களுடைய கோரிக்கை மாநாடு போன்று நடத்திக்கொண்டிருந்தார்கள். அதிலே அனைத்துக் கட்சிகளையும்

அழைத்திருந்தார்கள். ஆனால் யாரும் வரவில்லை. நான் மட்டும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் கேட்டு, அவர்களுடைய நிலைமையைப் பார்த்து மிகுந்த துக்க உணர்வுடன் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து, சட்டமன்றத்திலே நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தேன். அப்போது, அன்றைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் கண் பார்வையில்லாதவர்கள், இந்த உடல் ஊனமுற்றவர்கள் கூடவா என்னை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற ஒரு கேள்வியினைக் கேட்டார்கள். நான் சொன்னேன். அவர்கள் போராடுவதாக நீங்கள் எண்ணக்கூடாது. அவர்களுடைய கோரிக்கைகளை வேறு வழியில்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், நீங்கள் அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டேன்.

இன்றைக்கு, அதே கண் பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் எல்லாம் என்னை வந்து பார்த்தார்கள். நீங்கள் அன்று சட்டமன்றத்திலே பேசினீர்கள், அன்றைய முதலமைச்சர் உடனடியாக அதற்கு ஆவன செய்கிறேன் என்றார்; ஆனால், எதுவும் நடக்கவில்லை, இந்த அரசிலாவது எங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலே நீங்கள் பேசவேண்டுமென்று எனக்கு கோரிக்கை வைத்தார்கள். முக்கியமாக, இந்தக் கண் பார்வை இழந்தவர்களில் படித்தவர்களுக்கு எல்லாம் நாம் வேலை கொடுக்கின்ற ஒரு பணியை உடனடியாகச் செய்யவேண்டும். அதேபோல உடல் ஊனமுற்றவர்கள் என்பவர்கள் இன்று சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

உதாரணமாக, நான் என்னுடைய தொகுதியிலே நீண்டகாலமாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன் என்ற முறையிலே, நான் தொகுதிக்குள் செல்கின்றபோது 4, 5 பேர் சேர்ந்து ஒருவரைத் தூக்கிக்கொண்டு வருவார்கள். இவருக்கு ஏதாவது செய்யுங்கள், செய்யுங்கள்; இந்தக் குழந்தைக்கு ஏதாவது செய்யுங்கள் என்று சொல்வார்கள். இதையெல்லாம் கருதி, நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருந்தபோது, ஒரு பெருந்தனக்காரரை அணுகி, அவரிடம் பணமும் நிலமும் பெற்று, ஒரு உடல் ஊனமுற்றோர் பள்ளியை நானே தலைமை தாங்கி நடத்தி வருகிறேன். அந்தப் பள்ளிக்கு அரசு உணவு கொடுக்கிறது. மற்ற எந்தவிதமான வசதிகளும் இதுவரை செய்யப்படவில்லை. அந்தப் பள்ளிக்குக் கட்டடம் கிடையாது. அந்த இளம் மாணவர்களுக்கு வண்டிவசதி கிடையாது. அவர்கள் எல்லாம் இப்போது மேல்படிப்பிற்குச் செல்ல வேண்டுமானால்,



அவர்களை உயர்நிலை படிப்புகளிலே சேர்க்க வேண்டுமானால், அவர்களுக்குப் போக்குவரத்து வசதி கிடையாது இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் அந்தப் பள்ளியை நடத்திக்கொண்டிருக்கிறேன். ஆனால், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நடக்கின்ற பள்ளிகளிலேயே நீங்கள்தான் உருப்படியாக அந்தப் பள்ளியை நடத்துகிறீர்கள். ஆகவே, உங்களுக்கு மாவட்டம் முழுவதிலுமிருந்தும் நாங்கள் மாணவர்களை அனுப்புகிறோம் என்று சொல்லி, ஏராளமான மாணவர்களை அனுப்புகிறார்கள். எங்களால் அவர்களுக்கு எந்த வசதியும் செய்ய முடியவில்லை. முதுகுளத்தூரில் இப்படி ஒரு பள்ளியை நடத்திக்கொண்டிருக்கிறேன். அதில் ஒரு பெரிய மனவருத்தம் என்னவென்று சொன்னால், விடுமுறைக்குக்கூட தாய்-தந்தையர்கள் வந்து அந்தக் குழந்தைகளை அழைத்துச் செல்வது கிடையாது. தீபாவளிக்குக்கூட அவர்களை வந்து அழைத்துச் செல்வது இல்லை என்ற ஒரு கொடுமையான நிலைமையை நான் நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்த அரசுதான் அவர்களுடைய தாயாக, தந்தையாக இருந்து உடல் ஊனமுற்ற குழந்தைகளை, கண்பார்வையற்றவர்களைக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நீண்டகால கோரிக்கை அது. அந்தக் கோரிக்கை...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய பாலகிருஷ்ணன் அவர்கள், இங்கே முன்னாள் முதல்வரிடம் ஊனமுற்றவர்களைப் பற்றிச் சொல்கிறபோது, அவர்களுமா என்னை எதிர்க்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, பிறகு, அப்போது எந்தக் காரியமும் நடக்கவில்லை என்று குறைபட்டார்கள். ஆனால், இப்போது எங்களின் இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, 'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்' என்கிற ஒப்பற்ற வார்த்தைகளுக்கு இணங்க, அவர்கள் கோட்டைக்கு வருகிறபோதெல்லாம் அவர்களைச் சந்தித்து, உறுப்பினர்கள் சொல்லாமல், அவர்களைத் தாயுள்ளத்தோடு அணுகி அவர்கள் கொடுக்கிற கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,

அவர்களுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார்கள். இதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மிகுந்த நன்றி. இந்தச் சத்துணவு அமைப்பாளர்கள் நீண்ட கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மொத்தமாக அவர்களுடைய கோரிக்கைகள் 16 கோரிக்கைகள். அவற்றை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லிவிடுகிறேன். அவற்றில் ஒன்றிரண்டை மட்டும் இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், பள்ளி மையம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், உலக வங்கி உதவியுடன் நடைபெறும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, சத்துணவுத் திட்டத் துறை என ஏற்படுத்திட வேண்டும் என்று கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

இத்திட்டத்தில் 18 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். சென்ற ஆட்சியில் சத்துணவு அமைப்பாளர்களுக்குப் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் G.P.F. தொடங்கப்படுவதாக அறிவித்து, அஞ்சலகம் மூலம் பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டமாக - P.P.F. என்று மாற்றிவிட்டார்கள் என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை அறிமுகப்படுத்தினால் 2 இலட்சம் சத்துணவுப் பணியாளர்களிடமிருந்து ஆண்டிற்கு 17 கோடி ரூபாய் சேமிப்பாக அரசிற்குக் கிடைக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் அமைப்பாளர்கள் இறந்தால், கருணை அடிப்படையில் அமைப்பாளர்களாகப் பணி வழங்குவதற்கு சென்ற ஆட்சியில் தடை ஏற்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்தடையை நீக்கி இறந்த சத்துணவு அமைப்பாளர் குடும்பங்கள் வாழ்வு பெறும் வண்ணம் விரைவில் தகுந்த உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இன்னும் ஏராளமான கோரிக்கைகள் உள்ளன. அவற்றை அமைச்சரிடம் நான் கொடுத்துவிடுகிறேன்.

நண்பகல் 12-00

அடுத்தபடியாக மீன் வளம். தமிழ்நாடு ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் உள்ள கடற்கரையைக் கொண்டது. தமிழகத்தில் என்னுடைய தொகுதி மட்டும் கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் அளவிற்கு கடற்கரைப்





பகுதியான கடலாடி தொகுதி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயுள்ள மீனவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் மூன்றே மூன்று கோரிக்கைகள்தான். அவர்கள் மீன் பிடித்துவிட்டு, இரவு நேரங்களில் திரும்பி வரும்போது, அவர்களுடைய கிராமங்கள் தெரிவதற்கு வசதியாக கிராமங்களில் கடற்கரையில் மெர்க்குரி விளக்குகள் போட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறார்கள். அதேபோல, மீன்களை ஏற்றி வெளியூர் செல்வதற்கு வசதியாக எல்லா கிராமங்களுக்கும் ரோடுகள் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதேபோல, அங்கிருக்கிற மீனவர் குடிமக்கள் குடிசைகளிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நல்ல தரமான வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அத்துடன் நம்முடைய மீனவர்களுக்கு மிகப் பெரிய பல ஆபத்துக்கள் இன்று வந்து கொண்டு இருக்கின்றன. உதாரணமாக, நம்முடைய சென்னை மீனவர்கள் இங்கே இருந்து ஆந்திரக் கடற்கரையில் மீன் பிடிக்கச் செல்கின்றபோது, ஆந்திரத்தில் ஒரு பெரிய மோசடி கும்பல் இப்பொழுது என்ன செய்கிறது என்று சொன்னால், அவர்கள் கடலுக்குள்ளேயே நுழைந்து அவர்களுடைய மீனோடு சேர்த்து இழுத்துக் கொண்டு போய் பேரம் பேசி பெரும் பணம் வாங்கிக் கொண்டு அந்த மீன் படகுகளையும், மீனவர்களையும் விடுவிக்கிறார்கள். இது நாள் தோறும் நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை இலட்சக்கணக்கான ரூபாய் இப்படி கொடுத்து, கொடுத்து, நாங்கள் துன்பப்படுகிறோம் என்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். அத்தோடு இந்தப் படகுகளுக்கு கொடுக்கின்ற டீசலுக்கு மானியம் 58 பைசா என்பதை இப்போது 37 பைசாவாக குறைத்துவிட்டதாகவும் ஒரு குறையைச் சொல்லி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இலங்கைப் பகுதியில் நம்முடைய மீனவர்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் என்பது மிக அதிகம். அவற்றையெல்லாம் நாம் நேரடியாக மத்திய அரசோடு கலந்து பேசி நம்முடைய மீனவர்களுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் ஒரு கடுமையான உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டும். மீனவர்கள் கடலில் செல்கிறபோது, அங்கு எல்லை என்பது தெரிவதற்கு வாய்ப்பே கிடையாது. எல்லை என்பது ஒரு Notional line-னே தவிர ஒரு வேலியோ, எதுவுமோ கிடையாது. ஆகவே, உருப்படியாக நம்முடைய மீனவர்கள் மீன்பிடித்துத் திரும்புகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [ 2001 செப்டம்பர் 6

இப்பொழுது இராமேஸ்வரத்தில் 50 கோடி ரூபாய் அளவில் ஒரு மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த இருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக் கூடியது. அதேபோல, என்னுடைய தொகுதியில் வாலிநோக்கம், மூக்கையூர், ரோஜ்மாநகர் என்ற அருமையான 3 மீன்பிடி இடங்கள் இருக்கின்றன. அவற்றில் படகை நிறுத்துவதற்கான தடுப்புச் சுவரை மட்டும் கட்டிக் கொடுத்துவிட்டால், ஏராளமான மீனவர்கள் மீன்பிடிக்க இராமேஸ்வரத்திற்குக்கூட போக மாட்டார்கள். அவர்கள் நல்ல முறையிலே மீன்பிடிப்பார்கள். அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது கால்நடை. கால்நடை நம்முடைய நாட்டின் செல்வம். ஒரு காலத்தில், ஓர் அரசனுக்கும், இன்னோர் அரசனுக்கும் சண்டை வந்துவிட்டால் கால்நடைகளைத்தான் அவன் ஓட்டிக் கொண்டு சென்று விடுவான். அவற்றை மீட்பதற்காகத்தான் யுத்தமே அப்போது நடந்துகொண்டு இருந்தது. இப்பொழுது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை என்பது ஒரு பெரிய சிரமமான காரியமாக இருக்கிறது என்று கால்நடை வைத்திருக்கின்றவர்கள், ஆடு வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். இங்கே இந்த அவையில்கூட ஆடு மேய்ப்பவர்களைப் பற்றிய கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது கிட்டத்தட்ட அரை மணி நேரம் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு இடம் கொடுத்து, குரும்பர், குரும்பன், குரும்பா என்றெல்லாம் ஒரு பெரிய விவாதமே நடந்தது. ஆடு மேய்ப்பவர்களில் வடக்கே இருப்பவர்கள் குரும்பர். தெற்கே இருப்பவர்கள் இடையர். அந்தக் குரும்பருக்கும் இடையருக்கும் வேறுபாடு இல்லாமல் எங்கெங்கே ஆடு மேய்க்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களையும் semi-nomadic என்ற வகையில் ஒன்று சேர்த்து இந்த நாட்டில் அவர்களை பாதிக்கப்பட்ட மக்களாகக் கருதி, ஆடு மேய்ப்பவர்களுக்கு என்று ஒரு தனி வாரியத்தை ஏற்படுத்தி, அவர்களுடைய குழந்தைகள் நன்கு படித்து முன்னேறுவதற்கும், அவர்கள் வைத்திருக்கின்ற ஆடுகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

காடுகள் என்பது இன்று மிகச் சுருங்கிவிட்டன. என்னுடைய தொகுதியிலேகூட ஒரு காலத்தில் 60 மைல் நீளத்திற்கு மிகப் பெரிய காடு இருந்தது. அந்தக் காடுகளுக்கு எல்லாம் இப்போது பட்டா



2001 செப்டம்பர் 6 ] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கொடுக்கப்பட்டுவிட்டது. அதன் காரணமாக ஆடுகள் மேய்ப்பதற்கே வழியில்லாத ஒரு மோசமான சூழ்நிலை நிலவுகிறது. அதையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மறைமலைநகர் பக்கத்தில் ஓர் அருமையான ஆராய்ச்சி நிலையம், கால்நடை ஆராய்ச்சி நிலையம் வைத்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு நானே சென்று பார்த்தேன். (மணியடிக்கப்பெற்றது) அங்கே உள்ள அதிகாரிகள் அதையெல்லாம் என்னிடம் காண்பித்தார்கள். அங்கே நெருப்புக் கோழிகளை புதிதாக வளர்க்கிறார்கள். அங்கே கிட்டத்தட்ட 60 நெருப்புக் கோழிகளை வளர்க்கிறார்கள். அவர்களிடம் கேட்டதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இது தமிழகத்திற்கு மிகப் பொருத்தமான ஒரு கோழி; 120-லிருந்து 150 கிலோ எடையுள்ள கோழிகளாக இவை இருக்கின்றன. இவற்றை வளர்ப்பதற்கு பரிசோதித்துக் கொண்டிருக்கிறோம். இதனை உருப்படியாகச் செய்துவிட்டால் தமிழகத்தில் ஒரு சிறப்பான முறையில் இந்தக் கோழி வளர்ச்சியை உருவாக்கலாம் என்று சொன்னார்கள். அதைப்போல வெள்ளாட்டிற்கு, மாடுகளுக்கு எல்லாம் அங்கே சிறந்த முறையில் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை நம்முடைய கால்நடை வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி காடுகளையும் உருவாக்கி, மாடுகளையும் வளர வைத்து, ஆடுகளையும் வளர வைத்து, இந்த நாட்டினை ஒரு செல்வச் சீமையாக மாற்ற வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி காசாம்பு.

**திருமதி பூ. காசாம்பு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்தப் பேரவையில் பேசுவதற்கும், பணியாற்றுவதற்கும் அரியதொரு வாய்ப்பினைக் கொடுத்த சமூகநீதிக் காவலர், மனிதநேயப் பற்றாளர், நல்லிணக்க நாயகர் எங்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தாயகத்தின் தலைவர் சின்ன டாக்டர் அய்யா அவர்களுக்கும், என்னை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையருக்கும், சங்கராபுரம் தொகுதிகளில் வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்கு அயராது உழைத்த தோழமைக் கட்சி சகோதர, சகோதரிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகி, சரவணப் பண்டாரச்சி பெரியம்மாள் மகள் என்பதால் எனக்குப் பொது வாழ்க்கையில் வாய்ப்பளித்து உதவிய டாக்டர் அய்யா அவர்களின் பண்பு பாராட்டுக்குரியது. எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

'பெண்கள் நாட்டின் கண்கள்' என்று சொல்வார்கள். நாட்டு முன்னேற்றத்தின் அளவுகோலாகக் கருதப்படுபவர்கள் பெண்கள். எனவே, பெண்ணடிமையைப் போக்கி, பெண் கல்வி, பெண்ணுரிமை, பெண் விடுதலை பேண வேண்டுமென வலியுறுத்துபவர்தான் பெண்ணுரிமைக் காவலர் டாக்டர் அய்யா அவர்கள். பெண்கள் பாதுகாக்கப்பட, பெண்கள் போற்றப்பட ஆண்டுக்கொரு நாள் 'அன்னையர் தினம்' கொண்டாடப்பட வேண்டுமென பாட்டாளி மகளிர் சங்கத்தின் சார்பில் எங்கள் டாக்டர் அய்யா அவர்கள் சொல்லி வருகிறார்கள். இதைத்தான் எங்கள் தலைவர் திரு. ஜி.கே.எம். அவர்களும், துணைத் தலைவர் திரு. ஐ. கணேசன் அவர்களும்கூட இம்மாமன்றத்திலே 'அன்னையர் தினம்' கொண்டாடுவதை அரசே அறிவிக்க வேண்டுமெனப் பேசினார்கள். சமூக நலத் துறை மூலமாக பாட்டாளி மகளிர் சங்கத்தின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன். 'அன்னையர் தினம்' என்று ஆண்டுக்கு ஒரு நாள் கொண்டாட அரசு அறிவிக்க வேண்டும்.

பெண் சிசுக் கொலை, வரதட்சணைக் கொடுமை, மாமியார் சித்ரவதை ஆகியவை அறவே ஒழிக்கப்பட அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெண் என்பவள் தன் பெற்றோர்களால் கண் போன்று பாதுகாக்கப்பட்டு வளர்த்து திருமணம் செய்து கொடுக்கப்படுகிறாள். ஆனால் திருமணம் செய்த நாள் முதல் தான் இறக்கும் நாள் வரை கணவன் வீட்டில் சம்பளமில்லாத வேலைக்காரியாக வாழ்நாள் முழுவதும் உழைக்கும் நிலை இன்றும் நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

ஆண்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கிறார்கள். அதைச் சிக்கனமாகச் செலவு செய்யக்கூடியவர்கள், பக்குவமாக குடும்பத்தை நடத்தக்கூடியவர்கள், பெற்ற குழந்தைகளை நன்கு படிக்க வைத்து ஒழுக்கமுள்ளவர்களாக, வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படக்கூடியவர்களாக வளர்க்கும் பொறுப்பு தாய்மார்களுக்குத்தான் உள்ளது. எனவே, குடும்ப முன்னேற்றத்திலும், நாட்டு முன்னேற்றத்திலும்



அதிகம் பங்கு வகிப்பவர்கள் பெண்கள்தான். எனவேதான் பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் சம வாய்ப்பு, சம அந்தஸ்து, சம உரிமை, சம பங்கு வேண்டுமென்று எங்கள் டாக்டர் அய்யா அவர்கள் சொல்லி வருகிறார்கள்.

பெண்கள் குடும்ப வருமானத்தைப் பெருக்க பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் கறவை மாடு வளர்த்தல், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, ஊதுபத்தி தயாரித்தல், சோப்பு தயாரித்தல் போன்ற ஏராளமான சிறுதொழில்கள் செய்திட மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டும்.

*பிற்பகல் 12-10*

தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குவதும் பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி கொடுப்பதும் வரவேற்கக்கூடியது. அதேபோல மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்க வேண்டும்; பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவிற்கு ஒரு குழந்தைக்கு 22½ பைசா மானியம் வழங்கப்பட்டு வருகிறது. விலைவாசி உயர்வுக்கேற்ப இது போதாது. இதைக் கூடுதலாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தை வளர்ப்பும், சத்துணவும் மிக முக்கிய அங்கம் வகிக்கின்ற காரணத்தினாலே சத்துணவை தனித் துறையாக உருவாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு பணியாளர்கள் வரிசையிலே, பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நலக் காப்பக அமைப்பாளர்கள், ஊட்டச்சத்து அமைப்பாளர்கள், அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களெல்லாம் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். இதிலே பணியாற்றக்கூடிய பெரும்பான்மையோர் பிளஸ்-2, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு எல்லாம் படித்தவர்கள். இவர்கள் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களாலே கொண்டு வரப்பட்டு இதுவரையில் பணியாற்றி, இவர்களுக்கு வயதும் கடந்துவிட்டது. இவர்களில் சிலருடைய குழந்தைகள் திருமணம் ஆகக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். சிலருடைய குழந்தைகளுக்கு திருமணம் ஆகி, பேரக்

குழந்தைகளெல்லாம் எடுத்துவிட்டார்கள். ஆகவே, இப்படி இருக்கக்கூடிய இவர்கள் வேறு அரசு வேலைக்குச் செல்ல முடியாது. ஆகவே, வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலே மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் கால கட்டத்திலே விலைவாசி உயர்வை அடிப்படையாகக் கொண்டு இந்த பகுதிநேரப் பணியாளர்களாக பணியாற்றக்கூடிய இவர்களை முழுநேரப் பணியாளர்களாக உயர்த்தி, பணி நிரந்தரம் என்ற அமைப்பிலே கொண்டு வந்து, கூடுதலாக சம்பளம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதே, நேரத்தில் தற்போது காலியிடம் ஏற்படக்கூடிய பணியிடத்தில் அந்த சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களை புதியதாக நியமனம் செய்கின்றார்கள். அப்படி நியமனம் செய்யப்படுகின்ற நேரத்திலே 2 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லி பணி நியமனம் செய்யப்படுகிறது. 2 ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி அவர்கள் பிழைப்பை நடத்த முடியும்? இது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, இவர்கள் அனைவருக்கும் அரசு ஊதிய உயர்வு வழங்கி, முழுநேரப் பணியாளர்களாக மாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் மேற்படிப்பிற்கு அரசு கல்லூரியோ, தனியார் கல்லூரியோ எதுவுமே இல்லை. எனவே, கல்லூரியும், தொழிற் கல்வியும் தேவை என்பதை அரசின் கவனத்திற்கு இம்மாமன்றத்தின் மூலம் கொண்டு வருகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கல்வராயன்மலையில் கடுக்காய் கொட்டை விளைகிறது. கடுக்காய் கொட்டையை மூலதனமாகக்கொண்ட கடுக்காய் தொழிற்சாலை ஒன்றை அமைத்து அங்கு வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தர இவ்வரசை இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வராயன்மலையில், உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு குடியிருப்பு இருந்தும், தலைமையாசிரியர் உட்பட எந்த ஆசிரியரும் தங்குவதே இல்லை. பள்ளி மாணவர்கள் கல்வித்தரம் மோசமாக உள்ளது. தக்க நடவடிக்கை எடுத்து மலைவாழ் மக்களின் கல்வித்தரத்தை உயர்த்த இவ்வரசை கேட்டுக்கொள்கிறேன்.



கல்வராயன்மலையில் மூங்கிலைப் பயன்படுத்தி தொழில் செய்து வரும் மக்களான காட்டுநாயக்கன் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதே இல்லை. எனவே, இவ்வரசு தக்க நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுகிறேன்.

விதவைப் பெண்கள் மற்றும் தாய், தந்தையர் இருவரையும் இழந்துத் தவிக்கும் குழந்தைகள் நலன் காக்க இவ்வரசு தகுந்த முன்னேற்பாடுகளை செய்துத் தருமாறும் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் மிகவும் முன்னேறிய மாநிலம் என்ற நிலைக்குத் தமிழ்நாட்டை உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபூண்டுள்ளார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பட்ட நிலையில் உள்ள எனது தொகுதிக்கு, இவ்வரசு சிறுதொழில் நிறுவனங்களை அமைத்துத்தர வேண்டுகிறேன்.

மக்கள் வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பதில் இம்மாநிலத்தில் கிடைக்கும் மருத்துவ அடிப்படை வசதி முக்கிய பங்காற்றுகிறது. ஆனால், எனது தொகுதிக்குட்பட்ட கல்வராயன்மலைப் பகுதியில் மருத்துவமனை வசதி ஏதும் இல்லை. எனவே, அப்பகுதியில் அரசு பொது மருத்துவமனையையும், மகப்பேறு மருத்துவமனையையும் அமைத்துத்தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வராயன்மலையில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் மலைவாழ் மக்கள் விவசாயம் செய்யும் நிலத்திற்கு பட்டா கிடையாது. கிராமத்தைச் சுற்றிலும் நத்தம், புறம்போக்கு இடங்கள் கிடையாது. அவர்களுக்கென்று மயானம் கிடையாது. எல்லா நிலங்களும் Reserved Forest நிலங்கள். அவர்கள் வசிக்கும் வீட்டிற்கும், விவசாய நிலங்களுக்கும் பட்டா வழங்கவும், நத்தம் புறம்போக்கு இடங்களை ஏற்படுத்தித்தரவும், இந்த அரசை இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

நகரப் பேருந்து வசதி கிடைக்காத மக்களுக்காக நகரப் பேருந்து இயக்கும்பொருட்டு, அரசு பேருந்துப் பணிமனை ஒன்றையும்

சங்கராபுரத்தில் அமைத்து, இயக்கிட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை இம்மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரம் ஒரு தாலுகாவாக இருந்தும், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சிறிதளவும் ஏற்படவில்லை. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. எனவே, நீதிமன்றம் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை இம்மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மூங்கில்துறைப்பட்டு அண்ணா நகரில் ஒரு மேல்நிலைத்தொட்டி அமைத்துத் தரவும், மேலும், அங்குள்ள மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி ஒன்றை அமைத்துத் தரவும் கேட்டுக்கொள்கிறேன். கல்வராயன்மலைப் பகுதியில் இருக்கும் மோட்டாம்பட்டி, மாயம்பாடி ஆகிய கிராமங்களில் மருத்துவமனை இருந்தும், அங்கு டாக்டர்களோ, கம்பௌண்டர்களோ யாரும் வருவதில்லை. இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மாநிலம் முழுவதும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். மானியக் கோரிக்கையோடு முடியுங்கள். மாநிலத்திலுள்ள அனைத்துப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசுகிறீர்களே? உங்கள் தொகுதி குறித்து மட்டும் பேசி முடியுங்கள்.

**திருமதி பூ. காசாம்பு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேசுகிறேன். இது என்னுடைய கன்னிப் பேச்சு. கச்சிராயப்பாளையம்-எடுத்தவாய்நத்தம், கச்சிராயப்பாளையம்-பொட்டியம் செல்லும் தார்ச் சாலைகளை சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சி ஒன்றியம், சங்கராபுரம் ஒன்றியம், உட்கிராமத்திற்குச் சென்ற பேருந்துகள் சென்ற ஆட்சியின்போது நிறுத்தப்பட்டன. அவை மீண்டும் உட்கிராமத்திற்குச் செல்ல தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சத்துணவுத் திட்டம் கண்ட பின்புதான் கிராமப்புறங்களில் படிப்போர் எண்ணிக்கை உயர்ந்தது. ஆகவே, இந்தத் திட்டத்தை தேவையான அளவு விரிவுபடுத்த வேண்டும். சத்துணவுக் கூடம் இல்லாத பகுதிகளுக்கு, முக்கியமாக எனது சங்கராபுரம் தொகுதியில் சத்துணவுக் கூடம் ஏற்படுத்தித்தர வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு—



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி.எம். சூரியகலா அவர்கள்.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி காசாம்பு அவர்கள் பேசுவதற்கே நேரம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி காசாம்பு, நீங்கள் பேசி முடியுங்கள்.

**திருமதி பூ. காசாம்பு:** பெண்களுக்கான சேவை, சமூக நலத் துறை மூலம் செய்யப்படுவது பாராட்டத்தக்கது. கிராமப் பகுதியில், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மிகவும் பின்னடைந்துள்ளார்கள். அவர்களது பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டம் ஒன்று விரிவான முறையில் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா அவர்கள். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** Point of clarification.?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் பேசியதிலே என்ன Clarification? இன்னும் 9 பேர் பேசவிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதிலே என்ன Point of Clarification.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமங்கள்தோறும் இப்போது பெண்கள் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்தப் பெண்கள் சுய உதவிக் குழுக்களில் சுமார் 20 பேர் இணைந்து நடைபெறுகிற சூழ்நிலையில், வங்கிகளில் பணத்தைப் போடுகிறபோது, யாராவது அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்த வங்கியிலே கடன் பெற்றிருந்தார்கள் என்று சொன்னால், நியமிக்கப்பட்ட அந்தக் குழுக்களால் திரட்டப்படுகிற நிதி வங்கியிலே முடக்கப்படுகிறது. எனவே, சில பகுதிகளிலே பெண்கள் சுய உதவிக் குழுக்கள் முடங்கியிருக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெண்கள்தான் பேசவிருக்கிறார்கள். திருமதி சி.எம். சூரியகலா அவர்கள். (குறுக்கீடு)

[ 2001 செப்டம்பர் 6

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையின்போது இதுகுறித்து விளக்கமாகத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லா முதலமைச்சர், தென்னகத்தின் பீஷ்மாச்சாரியா, இந்தியாவின் மகிள சிரோண்மணி என்றெல்லாம் விருதுகள் பல பெற்றதோடு, புத்தாயிரம் ஆண்டில் புதிய தமிழகத்தைப் படைக்கும் பெருந்தலைவி என்ற பெருமையையும் பெறப்போகும், எங்கள் தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றியினையும், வணக்கத்தையும் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, என்னுடைய கன்னிப்பேச்சைத் தொடங்குகின்றேன்.

பெண்கள் ஆண்டு இந்த ஆண்டு. இந்தப் பொன்னான ஆண்டில் பெண் குலத்திற்கே பெருமைத் தேடித்தந்து அவர்களுக்கு உரிமைகளையும் பெற்றுத்தந்துள்ளார் உத்தமத்தலைவி அவர்கள். சாதாரண குடும்பத்தில் பிறந்து, எங்கோ ஒரு கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இந்த எளியவளை தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் அறிஞர்களும், அரசியல் பெருந்தலைவர்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்திருந்த சட்டப்பேரவையில் உட்காரவைத்து ஒரு அரிய வாய்ப்பை எனக்கு அளித்த பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கே உரியது. அதற்காக என் உயிருள்ளவரை நான் அவருக்கு நன்றியுடையவளாக இருப்பேன்.

டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமை, பெண் குலத்திற்கே பெருமை என்ற வகையில், அவர்மீது நம்பிக்கை வைத்து, என்னை இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்த குடியாத்தம் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், எனக்கு வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்கத் தவறியவர்களுக்கும், எனது தொகுதி மக்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'வெற்றி மீது வெற்றி வந்து எம்மைச் சேரும்,
அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உம்மைச் சேரும்.

என்று சொல்லும்படி, துஷ்டர்களையும், துரோகிகளையும், தூள், தூளாக்கிய எங்கள் துர்க்காதேவியே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் கஷ்டங்களையும், கவலைகளையும் நீக்க வந்த கருணை வெள்ளமே, கடந்த காலத்தில் நீங்கள் செய்த சாதனை சாதாரணமானதல்ல; பெண் குலத்தைப் பாதுகாக்கும் ஒரே ஆட்சி எங்கள் புரட்சித் தலைவியின் நல்லாட்சிதான்.



2001 செப்டம்பர் 6 ] [திருமதி சி.எம். சூரியகலா]

*பிற்பகல் 12-20*

ஒரு கவிஞன் பாடினான்;

"சூடுபட்டா வாடிவிடும் மத்த இலை; இது
சூரியனைச் சுட்டெரிக்கும் ரெட்டை இலை"

என்ற வாக்கை மெய்ப்பிக்கும் வகையில், இரட்டை இலையை வெற்றி இலையாக மாற்றிய வீரத் தலைவி அவர்களே, நீங்கள் ஊருக்கு உழைத்தவரின் ஒரே வாரிசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதுமைகளே இல்லையென்று சொல்லலாம். ஆனால், புதுமைப்பூக்கள் பூத்துக்குலுங்கும் புரட்சிகரமான பட்ஜெட் இது என்று நாடே பாராட்டுகிறது.

"தாயினும் சிறந்த கோயிலில்லை" என்பது பழையமொழி. "எங்கள் தலைவியைப் போலொரு தலைமையில்லை" என்பது இன்றைய புதுமொழி. (மேசையைத் தட்டும் ஒலி)

தலைமைப் பண்போடு, தாய்மை உணர்வோடு தமிழகத்திலுள்ள ஊரகங்கள் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக கோடிக்கணக்கான ரூபாயில், திட்டங்களைத் தீட்டி காந்தியின் கிராம ராஜ்யக் கனவை நனவாக்கி வரும் தங்களை இந்தத் தமிழ்நாடு என்றைக்கும் மறவாது.

குடிநீரைப் பொறுத்தவரை, வானம் வழங்கத் தவறினாலும், நானும் வழங்கத் தவறமாட்டேன் என்று தொலைதூரங்களில் இருந்தெல்லாம் இரயில் வாகனங்களின் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும், தண்ணீர் கொண்டுவந்து மக்களின் தாகத்தைத் தீர்க்கும் தங்களின் தாயுள்ளத்திற்கு தமிழகமே நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது.

இரயில் வேகன்களில் அரிசி கடத்தி கொள்ளையடித்தது முந்தைய ஆட்சிக் காலம். இரயில் வேகன்களின் மூலம் தண்ணீர் கொண்டு வந்து மக்கள் உள்ளங்களை கொள்ளை கொள்வது டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நலன் மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், பொறுப்புணர்ந்து செயல்படும் பொறுப்புணர்ச்சி உள்ளவர் அம்மா. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டே இருந்ததைக் கடந்த 10 ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 1996-இல் இருந்து ஐந்தாண்டுகள் ஆட்சியில் இல்லாத நிலையிலும்கூட, புரட்சித் தலைவி தமது பிறந்த நாள் விழாக்களின்போது, 'மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுங்கள்; அதுவே எனக்குப் பிறந்த நாள் வாழ்த்து கூறுவதாகும்' என்று அறிவித்த ஒரே தலைவி புரட்சித் தலைவி அவர்கள். சமூக நலன்களில் மிகுந்த அக்கறை கொண்டவர், சமூக நீதி காத்த வீராங்கனை, எங்கள் முதல்வர் அம்மா அவர்கள், சமூக மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களை தமது நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள்.

1991-96 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் தொட்டில் குழந்தை திட்டத்தை திமுக ஆட்சி தூக்கிப் போட்டுவிட்டது. குப்பைத் தொட்டி என்று சிறுகதை எழுதிய முன்னாள் முதல்வர், பெண் குழந்தைகளைக் காப்பாற்றும் திட்டத்தையே தூக்கிப் போட்டுவிட்டார். மீண்டும் ஆட்சிக்கு வந்த எங்கள் அம்மா அவர்கள், மீண்டும் அந்தத் திட்டத்திற்குப் புத்துயிர் கொடுத்து இருக்கிறார்கள்.

தர்மத் தாயான எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தருமபுரி, மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ. 12.96 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளும் உள்ள குழந்தை நல மையங்களை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதேபோல, பெண் குலத்தின் பொன் விளக்கான முதல்வர் அவர்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை 1992-ல் அறிமுகப்படுத்தினார். அதை இப்போது புதுப்பித்துள்ளார்கள்.

ஒரேயொரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பங்களின் பெற்றோரில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு operation செய்து கொண்டிருந்தால், அந்தக் குழந்தையின் பெயரால் ரூ.20,650-ஐ வைப்பீட்டுத் தொகையாக அளித்து அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு அக்குழந்தையின் பள்ளிப் படிப்பிற்கு மாதம் ரூ.150 வழங்க ஏற்பாடு செய்துள்ளார். 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தொகை 80,000 ரூபாயாக வழங்கப்படும்.



அதேபோல, 2 பெண் குழந்தைகள் இருப்போருக்கு ஒவ்வொரு குழந்தையின் பேரிலும் ரூ.14,450 தொடக்க வைப்பீட்டுத் தொகை அளிக்கவும் ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக நடப்பாண்டில் ரூ.22.70 கோடி ஒதுக்கிய ஆட்சி புரட்சித் தலைவியின் புனித ஆட்சி. சவால் விட்டு கேட்கிறேன்; இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி ஒரு திட்டம் உண்டா?

அதுமட்டுமல்ல, மகளிர் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அம்மா அவர்கள் 5 இலட்சம் மகளிர் சுய வேலைவாய்ப்பு பெற புதிய திட்டம் போட்டு இருக்கிறார்கள். கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறவர்களின் தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடராகவோ, பழங்குடியினராகவோ இருந்தால், 20,000 ரூபாய் உதவித் தொகை தொடர்ந்து வழங்கவும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் எங்கள் முதல்வர் அவர்கள் கட்சியில் மட்டுமல்ல; அதிகாரத்திலும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்ட ரீதியான எல்லாக் குழுக்களிலும் மகளிருக்கு 30 சதவிகித பிரதிநிதித்துவம் உண்டு என்று அறிவித்திருப்பது பெண் குலத்திற்கே பெருமையாகும். பெண்கள் ஆண்டில் இந்த ஆணையைப் பிறப்பித்த அம்மா அவர்களுக்கு பெண் குலத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு, வாஜ்பாய் அரசு, இன்னும் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில் இப்படி ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்த புரட்சித் தலைவி அவர்களை இந்தியப் பெண்குலமே பாராட்ட, போற்றக் கடமைப்பட்டிருக்கிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, வங்கிகளில் கடன் வசதி பெறவும் குழுக்கள் மூலம் சுயமாக பணிகள் செய்யவும் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தவும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

பிற்பகல் 12-25

வீட்டின் விளக்காகத் திகழும் பெண்கள் நாட்டின் கலங்கரை விளக்காகத் திகழ வேண்டும் என்ற அடிப்படையிலும், பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை முழுமையாக அவர்களைச் சென்றடைய அரசு கண்காணிக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி சி.எம். சூரியகலா] [2001 செப்டம்பர் 6

கழகம் தொடங்கிய நாளிலிருந்து, குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் பல கட்சிகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்த தொகுதியை முதன்முதலாக இரட்டை இலைச் சின்னத்திற்கு வாய்ப்பளித்து, குடும்ப வாரிசு அரசியலுக்கு முடிவுரை எழுதி, அம்மாவை மீண்டும் கோட்டையில் (மேசையைத் தட்டும் ஒலி) அமர வைத்த தமிழக மக்கள், அம்மாவிடம் நிறைய நலத் திட்டங்களை எதிர்பார்க்கின்றனர். தொகுதி மக்களின் எதிர்பார்ப்புகளை அம்மாவின் மேலான கவனத்திற்கு இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

குடியாத்தம் நகரில் கழிவுநீர் செல்லும் கால்வாய்கள் சரிவர பராமரிப்பு இல்லாமல் உருத்தெரியாமல் போய் உள்ளன. கழிவு நீர், நகரின் அனைத்து தெருக்களிலும் தேங்கியுள்ளன. அதனால் கொசுக்கள் அதிகம் உள்ளதால், அப்பகுதிவாழ் மக்களுக்கு யானைக்கால் நோய் உள்ளது. மக்கள் சுகாதாரத்தோடு வாழ பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

குடியாத்தம் நகரை இரண்டாகப் பிரிக்கும் கவுண்டனிய மகாநதி அருள்மிகு கெங்கையம்மன் கோவில் அருகே தரைப்பாலம் சேதம் அடைந்து போக்குவரத்திற்குப் பயன்படாத நிலையில் உள்ளது. தரைப்பாலம் உள்ள இடத்தில் மேம்பாலம் கட்டினால் நகரில் போக்குவரத்து நெரிசல் முற்றிலுமாக குறைந்துவிடும். ஆகவே, மேம்பாலம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

குடியாத்தத்தில் இயங்கிவரும் அரசு கல்லூரியில் இதுநாள்வரை நடைமுறைப்படுத்தாத பி.காம்., பி.எஸ்சி (விலங்கியல்), பி.எஸ்சி (கம்ப்யூட்டர் சயின்ஸ்), எம்.எஸ்சி (வேதியியல்), எம்.எஸ்சி (இயற்பியல்), எம்.ஏ. (பொருளாதாரம்) போன்ற பாடப்பிரிவுகள் இந்தக் கல்வி ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன். தனியாக மகளிர் கல்லூரிக்கு அனுமதி வழங்க ஆவனபுரிய வேண்டுகிறேன்.

ஏழை குடும்பத்தில் பிறந்த பெண் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கும் நிதி பெற முடியாத நிலையில் உள்ளது. கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு வரை உள்ளது. அதைக் குறைத்து 8-ம் வகுப்பு படித்த ஏழைப் பெண்கள் நிதி உதவி பெற அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.



2001 செப்டம்பர் 6] [திருமதி சி.எம். சூரியகலா]

தமிழ்நாட்டில் அதிகமான நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள், தீப்பெட்டித் தொழிலாளர்கள் வாழும் நகரம் குடியாத்தம். நெசவாளர்கள் அனைவரும் வறுமைக் கோட்டின்கீழ் பசியும், பட்டினியுமாக வாழ்ந்து வருகின்றனர். நெசவுத் தொழில் நசிந்துள்ள நேரத்தில், முந்தைய தி.மு.க. அரசால் சிட்டா நூலுக்கு திணிக்கப்பட்ட 2 சதவிகித வரியை இரத்து செய்து நெசவாளர்களின் வாழ்வில் வெளிச்சம் கொண்டு வர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத் தேங்கி இருக்கும் கைத்தறி லுங்கிகளை Co-optex மூலம் மற்றும் இதர துறைகள் மூலம் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு உதவிட மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். அதோடு நெசவாளர்களுக்கு அரசு மூலம் குடியிருப்பு வசதி செய்துதர ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

கீழ்ப்பட்டி, வளத்தூர், உள்ளி, சிங்கல்பாடி, அலங்காநல்லூர், கொத்தகுப்பம், கூடல்நகரம் ஆக 18 ஊராட்சிகளில் பாலாற்றில் தோல் கழிவு நீர் கலந்ததால், குடிநீரில் உப்பு கலந்துள்ளது. மேற்படி ஊராட்சிகளில் உள்ள கிராம மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவை அவசியமாகிறது. குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

முதலியார் ஏரி, கதிர்குளம், கே. வலசை, அரிகவாரிபல்லி, பூரகமானபல்லி, கொச்சாலூர், புட்டவாரிபல்லி, ஆர். வெங்கடாபுரம் போன்ற கிராமங்களில் 1500 ஜனத்தொகை இருந்தும், முந்தைய தி.மு.க. அரசு பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இங்கு வாழும் கிராம மக்கள், பள்ளி மாணவர்கள் நகருக்கு வர பேருந்து வசதி இல்லாமல் மிகவும் கஷ்டத்தில் உள்ளனர். ஆகவே, இக்கிராமங்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அதிநவீன Ambulance கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன். மின்சாரம் தடைபடும் நேரத்தில் 110 கே.வி. திறன்—(மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன் - கொண்ட Generator அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

குடியாத்தம் நகரில் தீயணைப்பு வாகனம் மிகவும் பழமை வாய்ந்ததாக உள்ளது. அது 1-6-1991-ம் தேதி வாங்கப்பட்ட 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தீயணைப்பு வாகனம். அதை மாற்றி அதிநவீன தீயணைப்பு வாகனம் கிடைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்க கேட்டுக்கொள்கின்றேன்.

குடியாத்தம் நகரில், சித்தூர் கேட்டிலிருந்து பரதராமி வரை 18 கிலோமீட்டர் தார்ச்சாலை மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. அதைச் செப்பனிட ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நாட்டுக்கு அழகு சேர்க்கும் நதிகளாக, ஏட்டுக்கு அழகு சேர்க்கும் படங்களாக, வீட்டிற்கு அழகு சேர்க்கும் பெண்களாக, தோட்டத்திற்கு அழகு சேர்க்கும் மலர்களாக, மரத்திற்கு அழகு சேர்க்கும் கனிகளாக, தண்ணீர் குளத்திற்கு அழகு சேர்க்கும் பொற்தாமரைகளாக, சான்றோர்கள் வகித்த இந்தப் பேரவைக்குப் புகழ் சேர்க்கும் புதுமைப் பெண்ணாக, தாய்க் குலத்திற்கே அழகு சேர்க்கும் எங்கள் தலைவி, தங்கத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, அனைவருக்கும் நன்றி கூறி, எனது உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு.

*(பிற்பகல் 12-30)*

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன், மீனளம், கால்நடை வளர்ப்பு ஆகிய மூன்று மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறிக்கொண்டு, ஒரு கோரிக்கைக்கு 5 நிமிடங்கள் என்றாலும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 நிமிடங்கள் ஆகும். ஆகவே, எல்லா உறுப்பினர்களுக்கும் அவ்வாறு நேரம் ஒதுக்க வேண்டும். முதன்முதலிலே எல்லாம் ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் தனித்தனியாக இருந்தது. இந்தத் தடவை சில மானியக் கோரிக்கைகள் எல்லாம் சேர்த்து எடுக்கப்பட்டதனால், எல்லாக் கோரிக்கைகளிலும் சரிவர பேச முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மகளிர், சிறார், இயலாமையுற்றோர், முதியோர் நலனில் அக்கறை செலுத்துவது, தொட்டில் குழந்தைத் திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்தது, பெண் சிசுக் கொலைக்கு எதிராக பெரிய அளவிலே பிரச்சாரம் செய்தல் என்ற அறிவிப்பு, குழந்தை ஏற்பு மையங்களுக்காக 12.96 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பது, ஒரு பெண் குழந்தை இருந்து, வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில், பெற்றோரில் எவரேனும் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்திருந்தால், அக்குழந்தையின்பேரில் தொடக்க வைப்பீடாக ரூ.20,650 அளிக்கும் நல்ல திட்டம், பள்ளிப் படிப்பு வரை மாதம் ஒன்றுக்கு ரூ.150 இதன் மூலம் வட்டி கிடைக்கும் என்ற அறிவிப்பு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தக் குழந்தைக்கு 80 ஆயிரம் ரூபாய் தருவதன் மூலம், அந்தக் குழந்தையின் மேல் படிப்பிற்கோ அல்லது திருமணத்திற்கோ உதவும் அந்த நலத் திட்டம், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில், பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்திருந்தால், ரூ.14,450 வைப்பீடாக அளிக்கும் திட்டம், அதற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 150 அளிக்கக்கூடிய அளவிலே வட்டி, 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழந்தைக்கு 40 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் திட்டம், இந்தத் திட்டங்களுக்காக ரூ.22.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளமை, இவையெல்லாம் வரவேற்கப்பட வேண்டிய நல்ல திட்டங்கள்.

மேலும், மகளிர் சுய நிதிக் குழுக்களைச் சார்ந்தவர்கள் பயிற்சிகள் பெற ஏதுவாக 15 இலட்சம் ரூபாய் செலவில் 6 சமுதாய நிதியாதார மையங்கள் அமைக்கும் நல்ல திட்டம், திருமணம் செய்து கொள்ள பெண்களுக்கு ஒரே சீராக எல்லோருக்கும் ரூ. 10 ஆயிரம் வழங்கும் திட்டம், கலப்புத் திருமணத்தில், தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினரைச் சார்ந்தவராக இருந்தால், அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் தொடர்ந்து அளித்தல் ஆகிய திட்டங்கள் எல்லாம் சிறப்பான திட்டங்கள்.

மன நலம் குன்றிய குழந்தை, அந்தக் குழந்தைக்குத் துணையாக வருபவர்களுக்கு இலவசப் பேருந்து பயணம் செய்வதற்கு இருக்கும் வருமான உச்ச வரம்பை நீக்கிய திட்டம், இந்தத் திட்டங்களை எல்லாம் வரவேற்று என்னுடைய கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இன்று காலை வெட்டுத் தீர்மானத்தில் சொன்னதுபோல, ஏழையெளிய இளம் பெண்களுக்குத் திருமணத்திற்காக நல்ல நலத் திட்டங்களை நாம் தருகிறோம்; அந்தப் பணம்—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றாகத் தெரியும்—திருமணம் ஆன பிறகுதான் அவர்களுக்கு வந்து சேர்கிறது. அந்தப் பெண்கள் மிகவும் கஷ்டப்பட்டு அந்தத் திருமணத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அந்தத் திருமணத்திற்குக் கொடுக்கும் அந்தப் பணத்தைத் திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக கண்டிப்பாகக் கொடுக்க வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவ்வாறு திருமணத்திற்கு முன்பாக என்றால், அவர்கள் அதை வாங்கிக் கொண்டு திருமணம் செய்து கொள்ளாமல் போய்விடுவார்கள்; அதையும் பாருங்கள்.

**திரு. எச்.எம். ராஜு:-** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அப்படியெல்லாம் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லோருக்கும் திருமணத்திற்குப் பின்புதான் பணம் வந்து சேர்கிறது; தயவுசெய்து அப்பணத்தை முன்பே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, பொங்கல் திருநாளில் ஏழையெளியவர்கட்கு இலவச வேட்டிச் சேலைகள் கொடுக்கிறோம். ஒரே கூட்டமாக இருக்கிறது. தாலுகா அலுவலகங்களிலே பெண்களும் ஆண்களும், கூட்டமாக இருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்காக தயவுசெய்து அந்தந்த நியாய விலைக் கடைகளிலேயே அவர்களுக்கெல்லாம் இவை கொடுக்கப்பட்டால், அந்தக் கூட்டங்கள் எல்லாம் தவிர்க்கப்படும். அவை சேர்பவர்களுக்கு, அந்த ஏழையெளிய மக்களுக்கு அந்தந்த நியாய விலைக் கடைகளில் அவர்கள் ரேஷன் வாங்கும்போது கொடுத்தால் கண்டிப்பாக அவை போய்ச் சேரும் என்ற கருத்தை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊனமுற்றோருக்குத் தகுதியின் அடிப்படையில் நலத் திட்டங்களை வழங்க வேண்டும். 80 சதவிகிதம் ஊனமுற்றோருக்கெல்லாம்கூட, சில நலத் திட்டங்கள் கிடைப்பதில்லை. அந்த ஊனமுற்றோர்கள் மிகுந்த வருத்தப்படுகிறார்கள். அதேசமயத்தில் 20 சதவிகிதம் 25 சதவிகிதம் என்று ஊனமுற்றோர்கள் பட்டியலில்



மருத்துவர்கள் அளித்த சான்றிதழ்களின்பேரில் அவர்களுக்கெல்லாம் நலத் திட்டங்கள் கிடைக்கின்றன. இதைக் கொஞ்சம் சீர் செய்து வைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-35*

ஊட்டியில் குந்தா தாலுகா எமரால்டில் குழந்தைகள் பாலர் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு 100 குழந்தைகள் இருக்கிறார்கள். எல்லோரும் ஏழை கூலித் தொழிலாளர்களுடைய குழந்தைகள். அவர்கள் இப்பொழுதெல்லாம் 4, 5 கிலோ மீட்டர் சென்று படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே குந்தா தாலுகாவில் உள்ள எமரால்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பாலர் பள்ளியை ஆரம்பித்துத் தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குழந்தைத் தொழிலாளர்களை எல்லாம் வேலைக்கு அமர்த்துபவர்கள் மீது நாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. இது மிகவும் கொடுமையானது. இதற்கு ஒரு நடவடிக்கை நாம் எடுக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்கு எல்லாம் அவர்கள் முதலாளியாக இருக்கிறார்கள். அதனால் பல தொல்லைகளுக்கு அந்தக் குழந்தைகள் எல்லாம் ஆளாகிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறையானது தயவு செய்து அவர்களை எல்லாம் கண்டு பிடித்து தகுந்த தண்டனையைக் கொடுக்கும் வகையில் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்கிறேன். குழந்தைகள் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியை இன்னும் அதிகரித்துத் தரவேண்டும். குழந்தைகள் ஒரு வயது முதல் 6 வயது வரை உள்ள அவர்களுக்கெல்லாம் நல்ல சத்துணவு கொடுத்து அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றினால் கண்டிப்பாக 100 வருடங்களுக்கு அந்தக் குழந்தைகள் வாழும் என்று பெரியவர்கள் சொல்வார்கள், குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய வயது பிறந்தது முதல் 6 வயது வரை காப்பாற்றினால் குழந்தைகள் தானாகவே வளரும் என்ற நல்ல கருத்தை பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகையை மேலும் அதிகரித்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சத்துணவு மையங்கள் சிலவற்றைச் சீர் செய்து கொடுக்க வேண்டும். பழைய கட்டடங்களில் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களில் சில மையங்கள் மழையினால்

ஒழுகிக் கொண்டிருக்கின்றன. காற்றினால் அந்தக் கட்டடங்கள் இடிந்துவிடும் சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே, தயவு செய்து அந்த மையங்களை எல்லாம் அந்த மையத்தினுடைய அதிகாரி யார் என்று பார்த்து அவர்கள் எல்லோரிடமும் ஒரு திட்டத்தை வாங்கி அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றையெல்லாம் சீர் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவு மையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நீண்டநாள் கோரிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முக்கியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்த அளவில் அரசு அவர்கள் எல்லோருக்கும் ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தால் சரியாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஊட்டி தொகுதியில் பல இடங்களில் சத்துணவு அமைப்பாளர்கள் இல்லாமல் காலியாக உள்ளது. அதனால் குழந்தைகள் எல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கண்டிப்பாக அந்த அமைப்பாளர்களை நியமித்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். பார்வையற்ற கல்லூரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை பெறுவதற்கான அந்த வரம்பை நீக்க வேண்டும். பார்வையில்லாமல் படிக்கும் அவர்களுக்கு என்று வருமான வரம்பை வைத்திருக்கிறோம். அதை நீக்கினால் இன்னும் பார்வையற்றவர்களுக்கு நாம் உதவியாகச் செயல்பட முடியும் என்று சொல்லி மானியக் கோரிக்கையில் ஓரிரு வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 நிமிடம் கேட்டீர்கள், 8 நிமிடம் ஆயிற்று.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு மேய்ச்சல் நிலம் என்பதைக் காலம் காலமாக கால்நடைகளுக்காக நாம் வைத்திருக்கிறோம். அவையெல்லாம் மாற்றப்பட்டு பல பகுதிகளிலே குடிசைகள் எல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம். கால்நடை மூலமாக நாம் அதிக அளவிலே வருமானம் சம்பாதிக்கும் வகையிலும், விவசாயிகளுக்கு உதவும் வகையிலும் அந்த மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த நிலமாகவும் தயவு செய்து மாற்ற வேண்டாம். இருக்கும் அந்த கொஞ்ச நஞ்ச மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நீலகிரி மாவட்டத்தில் கால்நடை



மருத்துவமனைகளில் மருத்துவர்கள் காலி இடங்கள் எல்லாவற்றையும் தயவு செய்து உடனடியாக நிரப்ப வேண்டும். கால்நடை கிராம மருந்தகங்களில் போதுமான மருந்துகள் இல்லை. அந்த மருந்தகங்களுக்கு எல்லாம் மருந்துகள் வழங்கப்பட வேண்டும். கால்நடைக்காக அரசு கடன் உதவியை ஊக்குவிக்கும் வகையிலே, விவசாயிகளை ஊக்குவிக்கும் முறையிலே அந்தக் கடன் உதவியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைத் தீவனம் சில இடங்களில் போதிய அளவிலே கிடைப்பதில்லை. அந்தத் தீவனம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், பால் ஒரு லிட்டர் 8 ரூபாய் என்று விவசாயிகள் விற்கும்போது mineral water என்று சொல்லி 12 ரூபாய் அளவுக்கு குடிக்கும் தண்ணீருக்கு கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் பாலுக்கு அந்த அளவுக்கு பணம் போதவில்லை. விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன். தயவு செய்து முடிந்த அளவில் கொடுக்கும் பணத்தை......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பால்வளத் துறை மானியக் கோரிக்கை இன்று பிற்பகல் இருக்கிறது.

பிற்பகல் 12-40

**திரு. எச்.எம். ராஜு:** சாரி, சார். நம் நாட்டு மீனவர்கள் எல்லாம் இலங்கை கடற்படையினரால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; சுட்டுத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் எந்த வகையிலும் சுடப்படாமல் தடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு, அந்த நிலையில் நாம் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். மீனவர்களுக்கு வீட்டு வசதியை சீர்செய்தல், அவர்களுக்கு தொழில் இல்லாத 4 மாதங்களில் 1,200 ரூபாயிலிருந்து 1,500 ரூபாய் வரை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கைகளை வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். கடற்கரைப் பகுதி, இயற்கைச் சீற்றத்தினால் மீனவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக அந்த இடங்களில் எல்லா வசதியும் உள்ள ஒரு மீனவ மையத்தை அமைத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி, இதுவரைக்கும் எனக்குப் பேச சந்தர்ப்பத்தைக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வாழ்க பாரதம்; வளர்க பாரதத் திருநாடு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் குறித்த கொள்கை அறிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கொள்கை உடன்பாட்டோடு நான் வரவேற்கின்றேன். குறிப்பாக 'மகளிர் எல்லாம் அரசியலை கைப்பற்றி ஆண்டால், மாநிலத்தில் போர் இல்லை. சாக்காடு இல்லை' என்று கவிஞர் குறிப்பிட்ட வரியை இந்தக் கொள்கை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருப்பதை நான் வரவேற்கின்றேன். ஏனென்றால், பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்பதுதான் அந்தக் கவிஞர் குறிப்பிட்டிருப்பது. தந்தை பெரியார் அவர்கள் 1920-களிலேயே இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடிக் கொண்டிருந்த சூழ்நிலையிலேகூட பெண் உரிமையை வலியுறுத்தியும், பெண்களினுடைய சுதந்திரத்தை வலியுறுத்தியும், ஸ்தாபன ரீதியாக பல்வேறு தீர்மானங்களை இயற்றியவர்; பெண் உரிமையை வலியுறுத்தியவர்; அந்த வழியிலே வந்த இந்த அரசின் சார்பாக வைக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை அறிக்கையை நான் வரவேற்கின்றேன்.

மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியினுடைய அரசாங்கம் 2001-வது ஆண்டிலே பெண்களுக்கு அதிகாரத்தைத் தருகிறோம் என்று சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியிலே இடம் பெற்று இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகமும், மகளிருக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதாவை சட்டமாக்குவோம் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால், 2001-ம் இப்பொழுது முடியப் போகின்றது. பெண்களுக்குப் Power-ம் வரவில்லை. அநேகமாக Power Soap ஏதாவது கையிலே கொடுப்பார்களா என்பதும் எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் மத்திய அரசாங்கம் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவதில் பெண்களை ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அத்தகைய கொள்கையாளர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு உடந்தையாக இருப்பதை நான் ஏற்கவில்லை; மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்கவில்லை; ஆகவேதான், பெண்கள் அரசியலிலே பங்கேற்பதை நாம் உறுதிபடுத்தவேண்டும்.

இன்று அரசில் பெண் முதல்வராக இருப்பது என்பது மட்டுமல்ல, இந்த அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு



சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பழங்குடிப் பெண். அதுமட்டுமல்ல அவர் சத்துணவு ஊழியராக இருந்து வளர்ந்தவர். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அடித்தட்டிலே இருக்கக்கூடிய ஒரு பெண்ணைக் கண்டறிந்து, அரசியலிலும், ஆட்சியிலும் பங்கேற்க வைப்பது என்பதுதான் தந்தை பெரியார் அவர்கள் கண்டிருக்கக்கூடிய மிகப் பெரிய கனவு. அக்கனவை முதல்வர் அவர்கள் நனவாக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, வாசிக்கிறபோது—நிதி தாருங்கள் என்பதற்கு, நீதி தாருங்கள் என்று வார்த்தை தவறுதலாகக் குறிப்பிட்டார். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக்கண்டு கலங்காமல், அவர் பேசி முடித்து அமர்ந்தவுடனேயே, பின்புறமாகத் திரும்பி, அவரை உற்சாகப்படுத்தி, நன்றாகப் பேசினீர்கள் என்று குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் குறிப்பிட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தார். இவரும் அந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, வணக்கத்தைத் தெரிவித்தார். இந்தச் சபையிலே இப்படிப்பட்ட, நிகழ்ச்சிகள் நடைபெறுவதின் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். அடித்தட்டு நிலையிலே இருந்து வரக்கூடியவர்களை ஊக்குவிக்கக்கூடிய தலைமை என்பதுதான் பெண்களை அரசியலிலே கொண்டுவந்து சேர்க்கும் என்பதை நான் காண்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் என்னை, மன்னித்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சியாக இருக்கிறபோது பல்வேறு போராட்டங்களை நடத்தி, தமிழகத்திலே அவர்களுடைய பெயர் வெளியிலே தெரிகிறது; ஆனால், அவர்களது கட்சி, ஆளும் கட்சியாக வருகிறபோது, அப்படிப் போராடியவர்களுடைய இடம் எல்லாம் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). அப்போது அமைச்சரவையிலே அவர்களுடைய பெயர் இடம் பெறாதபோது, அவர்கள் கேட்காமல் விட்டாலும், மற்றவர்கள் கேட்கிறபோது, 'அவர் எனது உடன்பிறப்பு எனது இதயத்திலே இடம் பிடித்து இருக்கிறார்; ஆனால் அமைச்சரவையிலே இடம் இல்லை' என்று சொல்லக்கூடிய நிலைமைதான் அவர்களுடைய ஆட்சியிலே இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-45*

ஆகவேதான் இப்படி ஆட்சியில் பெண்களுக்கான பங்கேற்பு என்பதை இந்த அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்கு ஒரு மிகப்பெரிய சந்தேகம் வந்தது. நவீனமயமாக்கப்படாமல் இருக்கிறபோதே, காவல் துறை, உழைக்கின்றவர்களை, போராடுகின்றவர்களை கடந்த காலத்தில் தாக்கிக் கொண்டிருந்ததே. நவீனமயமாக்கப்பட்டால் எத்தகைய தாக்குதலைத் தொடுப்பார்களோ என்ற சந்தேகத்தில் நான் அமர்ந்திருந்தேன். ஆனால் அந்த மானியக் கோரிக்கைக்கு சம்பந்தப்படாமல் மணிமகுடம் வைத்ததுபோல, போராடிய துப்புரவுப் பெண் தொழிலாளர்களுக்கு அவர்களை கோட்டைக்கு வரவழைத்து அவர்கள் கேட்காமலேயே ஊதியத்தை உயர்த்தினேன் என்று அவர்கள் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அடுக்கப்பட்ட முட்டையிலேயே நசுக்கப்பட்ட கடைசி முட்டையாக இருக்கின்றவர்கள்தான் துப்புரவுத் தொழிலாளிகள். அதுவும் பெண் தொழிலாளிகள். அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தியது என்பது தமிழகம் முழுவதும் பேசக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக மாறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இப்படிப் பெண்களின் பிரச்சினைகள்மீது, அடித்தட்டுப் பெண்களுடைய பிரச்சினைகள்மீது ஆழ்ந்து கவனம் செலுத்தக்கூடிய இந்த அரசாங்கத்தினுடைய பார்வை விரிவாக்கப்பட வேண்டுமென்றுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று சத்துணவுத் திட்டத்தைப் பற்றி நான் சொல்கிறபோது, ஒரு காலத்தில் குழந்தைகளுக்குப் பிள்ளைச்சோறு என்று சொல்வார்கள். மிட்டாக்கள் வீடுகளிலும், மிராசுகள் வீடுகளிலும் அரிசி என்பது ஆடம்பர உணவாக இருந்தது. அவர்கள் இல்லங்களுக்குச் சென்று பிள்ளைச்சோறு ஒரு பிடி கவளைச்சோறு வாங்கி வந்து ஏழைத் தாய்மார்கள் பிள்ளைகளுக்கு ஊட்டுவார்கள். அப்படிப்பட்ட ஆடம்பரமாக இருந்த அரிசி உணவை ஏழைக் குழந்தைகளின் தட்டுகளிலே கொண்டு வந்து போட்டதால்தான் சத்துணவுத் திட்டம் என்பது அண்ணா தி.மு.க. (மேசையைத் தட்டும் ஒலி) அடிவேராக, அடித்தட்டு மக்களை அரசியலாக மாற்றியிருக்கிறது.

அந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் மக்களும், முட்டைதான் வழங்கினார்களே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அந்தச்



சத்துணவுத் திட்டத்தினை செழுமைப்படுத்தக்கூடியவர்கள் யார் என்பதை அறிந்துகொண்டிருக்கிறார்கள். அந்தச் சத்துணவுத் திட்டத்தில் ஒரு கிராம் எண்ணெய் என்று தி.மு.க. ஆட்சியில், குறைத்திருக்கிறார்கள். ஊழியர்களுடைய நலனைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்களுடைய மாநாட்டுக்குச் சென்று, உங்களை நான் கரை சேர்ப்பேன் என்று கூறினார்கள். ஆனால் அவர்களும் கரை சேரவில்லை. அவர்களையும் கரை சேர்க்கவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலைமைதான் கடந்தகாலத்தில் உருவாக்கப்பட்டது. ஆகவே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்களும், இந்த அரசாங்கமும் பொது மக்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய சத்துணவுத் திட்டத்தை செழுமைப்படுத்த வேண்டும். சத்துணவு ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதோடு, குறைந்தபட்சம் இடைக்காலமாக மூவாயிரம் ரூபாயையாவது அவர்களுக்கு ஊதியமாக வழங்க முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான் 'தேசிய மகப்பேறு உதவி' திட்டத்தைப் பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த 500 ரூபாய் கிராமப்புறங்களிலே பிரசவ காலத்தில் பெண்கள்..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நன்றாகப் பேசுகிறார்கள். பேசட்டும்.

**செல்வி க. பாலபாரதி:** 500 ரூபாய் பிரசவ காலத்தில் பெண்களுக்குக் கொடுப்பது பற்றி குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்ன நடந்தது என்றால், நான் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தில் இருக்கிறேன். பிரசவ காலத்தில் 8-வது மாதத்தில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்தால், குழந்தை பிறந்து, தவழ்ந்து, பேச ஆரம்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) காது குத்தல் முடிந்தவுடன், அது அம்மாவிடம் எனக்காக ஒரு Application போட்டாயே, கிடைத்ததா, கிடைக்கவில்லையா என்று கேட்கக்கூடிய அளவுக்கு காலம் என்பது இழுத்தடிக்கப்பட்டது. ஆகவே, சமூக நலத் துறையில் இத்தகைய கிராமப்புறப் பெண்களுக்குப் போகக் கூடிய திட்டங்கள் உரிய காலத்திலே போகின்றனவா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தத் தொகை வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. அவற்றைக் கொடுப்பதற்கும், அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கோலப்பன் குழு பரிந்துரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல கிராமப்புறப் பெண்களுக்கு பிரசவ கால நிதி உதவியாக 1,500 ரூபாய் கொடுப்பதற்கும் இந்த அரசாங்கம் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் ஏதாவது ஒரு திட்டத்தை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான் சமூக நலத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் முதியோர் ஓய்வூதியம் 200 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை பல்வேறு அரசாங்கங்களும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆயிரம் ரூபாய்க்கான சொத்து இருந்தால்தான் அவர்களுக்கு இந்த உதவித் தொகை கிடைக்கிறது. 19-9-1962-லே ஓர் அரசாணை போடப்பட்டது. 1103 எண்ணில் இருக்கக்கூடிய அந்த அரசாணை என்ன சொல்கிறது என்றால் ரூ. 300 மதிப்புள்ள குடிசை வீடோ அல்லது நிலமோ இருந்தால் அவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கலாம் என்று பழைய அரசாணை சொல்கிறது. அந்த அரசாணையோடு ஒப்பிட்டால் இந்த ஆயிரம் ரூபாய் மதிப்பு கிட்டத்தட்ட 7 ஆயிரம் ரூபாயாக வந்து நிற்கும். ஆகவே, அந்த பழைய அரசாணையை வைத்துக் கொண்டால்கூட இப்பொழுது அந்த வருமான உச்ச வரம்பு என்பது 7 ஆயிரமாக திருத்தப்பட்டால்தான் சாதாரண ஏழை மக்களுக்கு இந்த ஓய்வூதியம் கிடைக்கும். இல்லையென்று சொன்னால், இரண்டு ஜன்னல்களைப் பார்த்துவிட்டுகூட ஆயிரம் ரூபாய் மதிப்பு சொத்து இருக்கிறது. ஒரு குடிசையைப் பார்த்துவிட்டு விசாரணை செய்ய வந்த அதிகாரிகள் ஆயிரம் ரூபாய் இல்லாமல் எப்படி குடிசை போட முடியும் என்று கேட்கிறார்கள். உண்மையும் அதுதான். ஆயிரம் ரூபாயிலே குடிசையே போட முடியாது. ஆகவே, ரூ.7,000 என்று அந்த அரசாணையைத் திருத்துவதற்கு இந்த ஆட்சியிலே ஓர் உறுதியான நடவடிக்கை எடுத்தால் ஏழை எளியவர்கள் பயன்பெறுவார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து, வறியோர் நலத் திட்டத்திலே பெண்ணினுடைய கணவன் இறந்தவுடனேயே விதவைப் பெண்களுக்கு 10,000 ரூபாய் வழங்கக்கூடிய திட்டம். இதிலே சென்ற தி.மு.க. ஆட்சியில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்தால் அந்தப் பெண்ணுக்கு அந்தப் பணம் கிடைக்காது. ஏனென்றால் நோய்வாய்ப்பட்டு இறக்கக்கூடிய கணவன் உழைக்கவில்லை. ஆகவே, உழைக்காத ஒரு கணவனுக்கு அந்தப் பெண்தான் சம்பாதித்துப் போட்டிருப்பாள்; ஆகவே, அந்தப் பெண்ணிற்கு 10,000 ரூபாய் கொடுக்க வேண்டியது இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், இது பெண்கள் ஆண்டு என்று சொல்கிறோம். கஷ்டப்பட்டு, கடைசி வரை கணவனுக்காக உழைத்த அந்தப் பெண்ணிற்கு இது தண்டனையா என்பதை நாம் பார்க்க வேண்டும். அதுபோன்றுதான் அந்தத் திட்டத்திலே 7,000 ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் இன்றைக்கு குறைந்தபட்ச வருமானமே 12,000 ரூபாயாக நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, இதுவும் அரசாணை விதிகளிலே இருக்கக்கூடிய முரண்பாடாக இருப்பதால் பழையகால விதிகள் இன்றைக்குப் பொருந்தாது. ஆகவே, இவற்றை மாற்றுவதற்கு நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல திருமணத்திற்கு முன்பாகவே அந்தப் பெண்களுக்கு அந்தத் திட்டத்தினுடைய நிதி உதவி கிடைக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் வரதட்சணை பிரச்சினை வருகிறது. என்னைத் திருமணம் செய்தால்தானே உனக்கு 10,000 ரூபாய் கிடைக்கிறது என்று மிரட்டக்கூடிய அளவிற்கு நிலைமை மோசமாகிறது. ஆகவே, இந்தத் திட்டமும், பதிவுத் திருமணம் முடிந்தவுடனேயே அவர்களது பெண் வீட்டார் ஒப்புதலோடு பெண் வீட்டார் கையிலே பணம் சேரக்கூடிய விதமாக திருத்தப்பட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் விதவை பென்ஷனுக்கு, 18 வயது வாரிசு இருந்தால் போதும், விதவைப் பெண்களுக்கு 200 ரூபாய் ஓய்வூதியம் தரலாம் என்று குறிப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த வாரிசு ஆண் வாரிசா? பெண் வாரிசா? பல இடங்களிலே ஆண் வாரிசு இருந்தால், அந்த விதவைப் பெண்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க மறுக்கப்படுகிறது. அதே கொள்கைக் குறிப்பில் 60 வயதான முதியோர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஆண் வாரிசு இருந்தால் அவர்களுக்கு உதவித் தொகை தரப்படுவது இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் மூலமாக பெண் குழந்தைகளை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தின்படி பார்த்தால் ஆண் குழந்தைதான் வாரிசு, ஆகவே ஆண் குழந்தைதான் பெற்றோர்களைப் பராமரிப்பார்; ஆகவே ஓய்வூதியம் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று ஒரு மாறுபட்ட

காந்லாத உருவாக்குகிறது. ஆகவே, ஆண் தலைமகனாக இருந்தாலும், தந்தையையும் தாயையும் காப்பாற்றுவார் இல்லை. ஆகவே, தயவுசெய்து ஆண் வாரிசு இருந்தாலும், சொத்தைப் பார்த்து அவர்களுக்கு அந்த உதவித் தொகை என்பது நிச்சயிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஊனமுற்றவர்கள் பரிதாபமான நிலையிலே இருக்கிறார்கள். கேரள அரசாங்கத்தைப் போன்று 5 சதவிகிதம் வேலைவாய்ப்பிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து ஒரு பெண் உறுப்பினர்தான் பேச இருக்கிறார். அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும். பல் மாவட்டத்திலே வருமான வரம்பு நீக்கப்பட வேண்டும். கடும் உடல் ஊனமுற்றோர்களுக்கான தொகையை ரூ.155-லிருந்து 300-ஆக உயர்த்த வேண்டும். சென்ற ஆட்சியிலே சமூகப் பாதுகாப்பு நிறுவனத்தில், சென்னையில் லட்சுமி என்ற சிறுமி தற்கொலை செய்து கொண்டாள். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திலே அதற்கான காரணத்தைக் கண்டறிந்து குற்றம் இழைத்தவர்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படவில்லை. அது ஏன் நடந்தது என்பதையும் விசாரணை செய்ய முன் வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, மீனவர்கள் சம்பந்தமாக சொல்லவிழைகிறேன். கன்னியாகுமரி விளவங்கோடு தொகுதியில், மார்த்தாண்டம் துறையிலே மன்னவிளை பகுதியில் ஒரு தூண்டில் வளைவு ஏற்படுத்த வேண்டும். பழவேற்காடு பகுதியில் கழிவுநீர் கலப்பதால் மீனவர்களுக்கு நோய் ஏற்படுகிறது. அதைத் தடுக்க முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை நம்புடைய.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து ஒரு பெண் உறுப்பினர்தான் பேச இருக்கிறார். அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். உங்களுடைய கோரிக்கையை எழுதி சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கொடுத்து விடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** ஆகவே, நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். ராஜம்மாள்.



***திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சரித்திரப் புகழ்பெற்ற இந்தத் தமிழக சட்டப் பேரவையிலே, நமது இதய தெய்வம் தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள இந்த வேளையில், தமிழகத்தின் தென்கோடி பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் பெண் வேட்பாளராக என்னை நிறுத்தி, வெற்றி பெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையில் பூவோடு சேர்ந்த நாராக நாங்களும் மணம்பெறும் இந்த நேரத்திலே, மீனளம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைகளில் கன்னிப் பேச்சாக நான் பேச வாய்ப்பளித்தமைக்காக என் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தங்களுக்கும், நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 1000 கிலோமீட்டர் நீளமுள்ள தமிழக கடற்கரைப் பகுதியில் குடியிருக்க வீடுகள் இல்லாமல் அல்லல்படும் மீனவர்களின் நலன் கருதியும் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் மீனவர்களின் நலனிலும் அக்கறை கொண்ட இந்த அம்மா அவர்களின் அரசு இவர்களுக்கென 4000 வீடுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 37 ஆயிரம் செலவில் கட்டித் தரப்படும் என்று அறிவித்துள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-55

நீண்ட நெடுங்காலமாக உள்நாட்டு மீனவர்கள், தங்களுக்கும் கடல் மீனவர்களைப் போல இலவச வீடுகள் கட்டித்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தும் பல ஆண்டுகள் ஆட்சியில் இருந்த தி.மு.க. அரசு செவி மடுக்காத சூழ்நிலையில், புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவித்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

அதேபோல, நிதிநிலை அறிக்கையில் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத் தொகையை ரூ. 1080-லிருந்து ரூ. 1200 ஆக உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழில் இல்லாத நான்கு மாதங்களில் பொருளாதார ரீதியாக துன்பப்படும் மீனவர்களின் துயரத்தைப் போக்க இத்திட்டத்தில்

மீனவர்கள் ரூ.50 மட்டும் செலுத்தினால் போதும் என்றும், எஞ்சிய பங்குத் தொகை ரூ.25-ஐ மாநில அரசு ஏற்கும் என்றும், தாயுள்ளம் கொண்ட நம் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளதையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

தமிழகத்தில் மீன் வளம் குறைந்து வருகிறது. எனவே, ஆழ்கடலில் நமது மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது, அண்டை நாடான இலங்கைப் பகுதியில் திசை தெரியாமல் செல்கின்ற நேரத்தில் இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டு வீழ்த்துவதைக் கண்டு மனம் பதறிய நமது முதலமைச்சர் அம்மா அவர்கள் நம் மீனவர்கள் நம்முடைய மீன் பிடி கடல் மண்டலப் பகுதியிலேயே மீன் பிடிக்க இயலும் வகையில் ஒவ்வொரு 4 கடல் மைல் தொலைவிற்கும் ஒன்று என்ற வீதம், கடலில் இரவும் பகலும் கடல் எல்லை தெரியும் வகையில் வழிகாட்டி விளக்குகளுடன் கூடிய மிதவைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதற்கு நமது இதய தெய்வம் அம்மா அவர்களை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் தனது கணவர், உறவினர் திரும்பி வருவார்களா என்ற நம்பிக்கை இல்லாத இந்தச் சூழ்நிலையை அறிந்துதான் நமது புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்து, இலட்சக்கணக்கான மீனவப் பெண்களின் கண்ணீரைத் துடைத்திருக்கிறார்கள்.

கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் கடல் மீனவர்களுக்கு 20000 வீடுகள் கட்டித் தரப்படும் என வாக்குறுதி அளித்து, 5 ஆயிரம் வீடுகளுக்கு மேல் கட்டப்படாமல் பல்வேறு நிலைகளில் விட்டுச் சென்று விட்டார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படாமலேயே மீனவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் சுமார் 50 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் எனது தொகுதியில், மீனவர்கள் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் பழமை வாய்ந்த மீன்பிடித் துறைமுகம் தூத்துக்குடி துறைமுகம் ஆகும். ஆண்டு மொத்த ஏற்றுமதியில் கணிசமான அளவு எனது தொகுதியில் இருந்துதான் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச்



செலாவணி ஈட்டப்படுகிறது. இந்த அளவுக்கு உழைக்கும் மீனவர்கள் எனது தொகுதியில் உள்ளார்கள். எனவே, நடப்பு ஆண்டில் எனது தொகுதிக்கு அதிக அளவு இலவச வீடுகள் ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்படும் மீனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு நாளைக்கு 50 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. இதை இன்னும் உயர்த்தினால், கஷ்டப்படும் மீனவக் குடும்பங்களுக்கு வசதியாக இருக்கும்.

இயற்கைச் சீற்றங்களான புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் கடற்கரை ஓரம் உள்ள மீனவர்கள் அத்தியாவசிய உணவுப் பண்டங்களைப் பெற்றுக்கொள்ள தனியாக, உணவுப் பொருள்கள் வழங்கும் துறை மூலமாக ஒவ்வொரு கிராமத்திலும் பண்டகசாலையை அமைத்துத் தர வேண்டும்.

மேலும் எனது தொகுதியில் உள்ள மீன்பிடித் துறைமுகம் ஆழப்படுத்தப்பட வேண்டும். இத்துறைமுகத்தில் இருந்துதான் கணவாய், இறால் போன்ற மீன்கள் அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுவதால், இப்போதிருக்கின்ற ஏலக் கூடம் போதுமானதாக இல்லை. உள்கட்டமைப்பு, வசதியான கழிவுநீர்போக்கு, தண்ணீர் வசதி, சோடியம் விளக்கு வசதிகள் எல்லாம் செய்து தரப்பட வேண்டும்.

இந்த மீன்பிடித் துறைமுகத்தில் அதிகமான பணப்புழக்கம் இப்போது உள்ளது. மேலும், தினமும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், வியாபாரிகள், மீனவர்கள் வந்து செல்வதால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. இவற்றைச் சீர்செய்ய இந்த மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு புறக்காவல் நிலையம் அமைத்து, எனது தொகுதி மீனவ மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

என் தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் பேச அனுமதி கோருகிறேன். தூத்துக்குடியில் மாவட்ட மீனவர் federation செயல்படாமல் உள்ளது. இதைச் செயல்பட வைக்க ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தூத்துக்குடி தொகுதி 51 வார்டுகள் கொண்ட ஒரு நகரம் ஆகும். 10 பஞ்சாயத்துகளும் ஒரு ஒன்றியமும் கொண்ட தொகுதியாகும். முந்தைய ஆட்சியில் இருந்தவர்கள் என்னுடைய தொகுதிக்கு என்ன செய்தார்களோ தெரியவில்லை. தூத்துக்குடி தொகுதி மிகவும் சீர்கெட்டுப் போயிருக்கிறது. சாலைகள், குடிநீர் வசதி இல்லை. எங்கள் பகுதியில் பக்கிள் ஓடை இருக்கிறது. அதை தூர் வாரி சாக்கடை நீரை அதில் சேர்த்துவிட்டால் கடலில் போய்க் கலந்து விடும். சென்னைக்கு கூவம்போல தூத்துக்குடிக்கு பக்கிள் ஓடை இருப்பதால் சுத்தம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று அம்மா அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அனைத்துச் சாலைகளும் போட வேண்டிய கட்டாயத்தில் உள்ளன என்பதையும் இந்த மாமன்றத்திலே அம்மா அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சுற்றுச்சூழல்களைப் பாதிக்கும்வகையில் தொழிற்சாலைகள் உள்ளன. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியில் மருத்துவக் கல்லூரி கட்டி வருகிறார்கள். தூத்துக்குடியில் பல ஆண்டுகளாக மாவட்ட அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. Medical College இருக்கும் இடத்தில் சகல வசதிகளுடன் கூடிய மருத்துவமனை இருப்பது அவசியம். ஆகவே, அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அம்மா அவர்களிடம் பணிவோடு வேண்டுகிறேன். என் தொகுதியாகிய தூத்துக்குடியில் அரசினர் கலைக் கல்லூரியோ, அரசினர் பொறியியல் கல்லூரியோ இல்லை. (மணியடிக்கப்பெற்றது) கல்லூரிகளை ஏற்படுத்த வாய்ப்பு அளிக்க வேண்டுகிறேன். மேலும் Para-medical Course என்று சொல்லப்படும் B.Sc. Nursing கல்லூரிகள் வந்தால் பெண்கள் பயின்று பின்னர் வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உண்டு. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தயவுகூர்ந்து என் தொகுதியில் இதுபோன்ற கல்லூரிகளை ஏற்படுத்தி வேலைவாய்ப்பிற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.



**திருமதி எஸ். ராஜம்மாள்:** மேலும் முந்தைய ஆட்சியில் குடும்ப அளவு பங்கீட்டு அட்டை வழங்குவதில் நிறைய முறைகேடுகள் நடந்துள்ளன. ஆயிரம் குடும்பங்கள் இருக்கும் இடங்களில் அதற்கு அதிகமான குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக ரேஷன் கடைகளிலே எண்ணற்ற முறைகேடுகள் நடக்கின்றன. வியாபாரிகளின் வசம் நிறைய தவறான ரேஷன் கார்டுகள் இருப்பதால் தேவைக்கு அதிகமாக ரேஷன் பொருள்கள் விநியோகம் செய்யப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி மீனவப் பெருமக்கள் அதிகம் வசிக்கும் தொகுதியாகும். அவர்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லை. முந்தைய தி.மு.க. அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதில் 27 வீடுகள்தான் கட்டியுள்ளது. கடலோரப் பகுதியில் குடிசை போட்டுத்தான் மீனவப் பெருமக்கள் வாழ்கின்றார்கள். ஆகவே, அவர்கள் உடைமைகளையெல்லாம் இழந்து கஷ்டப்படும் நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு விசைப் படகு, நாட்டுப் படகு கொடுத்து—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** ஒரே ஒரு நிமிடம். படகுகள் கொடுத்து உதவினால் அந்த ஏழை மீனவப் பெருமக்கள் வாழ்வில் இருள் அகன்று ஒளி கிடைக்கும். படகோட்டி படத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பாடியுள்ளதுபோல், 'ஒருநாள் போவார், ஒருநாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்' என்பதைப் போன்று ஒவ்வொரு நாளும் கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்துதர மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன். இந்தியா, கிராமங்களில் நிறைந்து வாழ்கிறது என்பார்கள். இன்றையதினம் நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கிராமப்புறப் பகுதிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க கிராமப்புறப் பகுதிகளில் பண்ணை வருமானத்தைப் பெருக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளம் தம்பதிகளுக்கு கால்நடை பராமரிப்பு முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் ஏழை விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கிற Denmark நாட்டின் நிதி உதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டத்தை தமிழகத்தில் உள்ள 330

ஊராட்சி ஒன்றியங்களிலும் விரிவுபடுத்தி செயல்படுத்த இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு தமிழகத்தில் மீண்டும் அம்மா அவர்கள் வெண்மைப் புரட்சி செய்துள்ளதை கால்நடை வளர்ப்பவர்கள் சார்பாக மனதாரப் பாராட்டுகிறேன். அதுபோன்று கால்நடை பாதுகாப்புத் திட்டத்தையும் நடப்பு ஆண்டில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் நீட்டித்து இனி எந்தவொரு கால்நடைக்கும் மருத்துவ சிகிச்சை கிடைக்கவில்லை என்பதே இருக்கக்கூடாது (மணியடிக்கப்பெற்றது) என்று அதற்கும் 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ள...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ஏ.எஸ் கண்ணன். திருமதி ராஜம்மாள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சரிடம் உங்கள் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள் (குறுக்கீடு) சரி நன்றி சொல்லிவிட்டு உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மீண்டும் என் பணிவான நன்றியைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஏ.எஸ். கண்ணன். இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். எனவே, நீங்கள் சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

***திரு. ஏ.எஸ் கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனித வளம், மீனளம், கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கைகள் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பணிவன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மானியங்களைப் பார்க்கிறபோது முதல்வர் அவர்களும் சரி, இந்த மானியத்தில் பொறுப்பேற்றிருக்கிற மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களும் சரி, தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடைய தாயுள்ளங்களை அந்தத் திட்டங்களில் எங்களால் பார்க்க முடிகிறது. ஆதரவற்ற சிறார்களுக்குத் தொடர்புள்ள வழக்குகளில் விசாரணைக் குழு அமைப்பதற்காக திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு இளைஞர் நலக் குழுவை அமைப்பதற்காக இந்த நேரத்திலே நான் மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 1-05

அதேபோல குழந்தைகள் நலம் என்று பார்க்கின்றபோது குழந்தைத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை குறைந்தபட்சம் இப்போது 32 இலட்சத்திற்கு மேல் என்று சொல்லப்படுகிறது. இதைக் குறைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்வேன். முதியோர் இல்லங்கள் என்று பார்க்கும்போது 4 முதியோர் இல்லங்களைக் கட்டுவதற்காக முடிவு செய்யப்பட்டிருப்பதை நான் இந்த நேரத்திலே வரவேற்கின்றேன். அதேநேரத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகிற மானியங்கள் 250 ரூபாய் என்பதை 500 ஆக உயர்த்தப்பட்டிருப்பதால் இந்த நேரத்திலே மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய கட்சியின் சார்பாக பணிவான வணக்கத்தையும், நன்றியையும் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து சத்துணவு பற்றி இங்கே பேசப்பட்டது. அவர்களுடைய பணி நிரந்தரம் பற்றி இங்கே உறுப்பினர்கள் பேசினார்கள். 3ஆம் தேதிகூட மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். பணி நிரந்தரம் பரிசிலனை என்று கூறியிருக்கிறார்கள். அதேநேரத்திலே அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளில் இரண்டை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்கிறபோது அவர்களுக்கு ஊதியம் கிடைப்பதில்லை. அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதேபோல பண்டிகை போன்ற காலங்களில் அவர்களுக்கு முன்பணம் கிடைப்பதில்லை. இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து நிறைவேற்றும்படி இந்த நேரத்திலே பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து மீனவர்களுடைய பிரச்சினை. அன்பார்ந்த அமைச்சர் அவர்களே இந்த நேரத்தில் நான் ஏற்கெனவே எழுப்பப்பட்ட பிரச்சினையை மீண்டும் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகின்றேன். 1-9-2001 அன்று என்னுடைய பக்கத்துத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சுதர்சனம் அவர்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்தக் கடல் நீரும், ஆற்று நீரும் கலக்கிற மணல் மேட்டைப் பற்றி இங்கே பேசினார்கள். அதைத் தூர் வார வேண்டும் என்று அவர் பேசியபோது இங்கே அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கான பதிலையும் கூறியிருக்கிறார்கள். ரூ.80 இலட்சத்திலே அந்தத் தூர் வாரும் பணி உடனடியாக நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே

பணிவன்போடு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில் அதன் தொடர்புடைய மற்றொரு விஷயத்தையும் நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். தூர் வாரினால் கடல் நீர் ஆற்றுக்குள்ளே வருவது மட்டுமல்ல. இன்றைக்கு அதைவிட மிகப் பெரிய அபாயம் என்னவென்றால் அங்கே பக்கத்திலேயிருக்கின்ற அனல் மின் நிலையத்திலிருந்து கொதி நீர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எந்த மானியக் கோரிக்கையில் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்?

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மீனவர்களுடைய பிரச்சினை பற்றி பேசுகிறேன். மீனவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, பொதுப் பணித்துறை தூர் வார வேண்டும் என்று சொன்னதுபோல் இருந்தது.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அந்தக் கொதி நீர் அந்த ஆற்றிலே கலப்பதால் அங்கே உற்பத்தி ஆகின்ற விலையுயர்ந்த நண்டு, இறால், மீன் போன்றவை இப்போது உற்பத்தியாவதில்லை. இன்னும் சொல்லப்போனால் அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் வருடத்திற்கு 100 கோடி ரூபாய் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. அழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆதலால் ஆற்றுப் படுகையை ஆழப்படுத்துவது மட்டும் அல்ல, அந்த அனல் மின் நிலையத்திலிருந்து அந்த ஆற்றுக்குள் கலக்கின்ற கொதி நீரையும் நிறுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தால் தான் அங்கே இருக்கிற ஏறக்குறைய 50,000 மீனவர்கள் பிரச்சினையை இந்த அரசு தீர்த்ததாக இருக்கும் என்று நான்.....

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின் நிலையம் மற்றும் வட சென்னை அனல் மின் நிலையங்களிலிருந்து வெளிவருகிற சுடுநீர், கொதி நீர் காரணமாக அங்கே Productivity மீன் உற்பத்தி இல்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தக் கருத்து ஆய்வு செய்யப்பட்டது. நம்முடைய போற்றுதலுக்குரிய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1 கோடி ரூபாய் செலவில் இட்டத்திட்ட வட சென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகிற அந்தக்



கொதி நீர் ஆற்றுக்குள்ளே விழாமல் அந்தக் கொதி நீர் ஏறக்குறைய 4 கிலோ மீட்டருக்கு, 150 மீட்டர் width அகலத்திலே செல்லும்போது ஏறக்குறைய அந்த outlet-லே வருகிறபோது அந்தக் கொதிநீர் குளிர் நீராக வந்து ஆற்றிலே விழுகின்ற அளவிற்கு ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். டிசம்பரிலே இந்தப் பணி முடிவடையும். முடிவடையும் போது, இந்தப் பிரச்சினை இருக்காது.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல பல ஆண்டுகளாக இருக்கின்ற பிரச்சினை 50,000 மக்கள் வாழ்கிற அந்தப் பகுதியிலேயிருந்து பழவேற்காட்டுக்கு வரவேண்டும் என்றால் அங்கே இருக்கிற ஆற்றில் படகு மூலம்தான் அந்த மக்கள் அந்தப் பகுதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஏற்கெனவே பேசிய தோழியர் பாலபாரதி சொன்னபடி ஆற்று நீரில் இறங்குகிறபோது அந்த மக்களுக்குப் பல்வேறு வியாதிகள் ஏற்படுகின்றன. அரசு அதிகாரிகளுடைய குழுக்கள் வந்து பார்வையிட்டபோதுகூட அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து, இந்த நேரத்திலே அந்த மீனவ மக்கள் சார்பாக நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

ஏற்கெனவே, கடந்த ஆட்சியில் கூட கடந்த ஆட்சியாளர்கள் 7-10-2000 அன்று பாலத்தைக் கட்டுகிறேன் என்று ஒரு கல்வெட்டை அங்கே புதைத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், வேலை தொடங்கப்படவில்லை. ஏனோ தெரியவில்லை. மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வேன். அந்த 50 ஆயிரம் மக்கள் பழவேற்காட்டுக்கும் சென்னைக்கும் வர வேண்டுமென்றால் தொடர்புடைய அந்த இடத்தில் பாலத்தைக் கட்ட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களை இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சுகாதாரப் பிரச்சினை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழவேற்காடு ஆறு என்று சொல்கிறபோது, வடக்கும் தெற்கும் என்று சொன்னால், வடக்கில் ஊனங்குப்பம், காமராஜ்

காட்டுப்பள்ளி, Light Hous, நடுக்குப்பம், நடுவூர் மாதா குப்பம், தெற்கில் ஏறக்குறைய 10 கிராமங்கள் இருக்கின்றன. வடக்கில் இருக்கின்ற மீனவக் குப்பங்கள் ஆற்றைக் கடந்து தெற்குக்கு வரவேண்டுமென்று சொன்னால், அதிலே பெரிய அளவுக்கு சிக்கல் இருக்கிறது. மழைக் காலத்திலே வெள்ளோட்டம் இருக்கின்ற சூழ்நிலையில் பல்வேறு நிலைகளிலே மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்கிற அந்த கருத்தினை உணர்ந்து நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றைக்கு பழவேற்காட்டுப் பகுதியிலே ஏறக்குறைய 4 கோடி ரூபாய்க்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து பணியைத் தொடங்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். ஆனால், அந்தப் பாலத்தைத் தொடங்கினால் நம்முடைய அம்மாவுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நற்பெயர் வந்துவிடும் என்ற ஒரே காரணத்திற்காக அன்றைக்கு தி.மு.க. அரசு அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது. மீண்டும் நம்முடைய கோரிக்கையை ஏற்று, நம்முடைய அமைச்சர் மூலமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பணியை நிறைவேற்றி வைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் அவர்களுக்கு தொகுதியின் சார்பாக நான் நன்றியைக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மேலும் ஒரு பிரச்சினை, அங்கே இருக்கின்ற பொது மருத்துவமனை. அந்தப் பொது மருத்துவமனையில் ஒரே ஒரு டாக்டர்தான் இருக்கிறார். அந்த டாக்டர்கூட மதியம் 12 மணி வரைகூட அங்கே இருப்பதில்லை. நான்கூட இரண்டு முறைசென்று பார்த்தேன். அவரைக் கேட்கின்றபோது என்ன சொல்கிறார் என்றால், வேண்டுமென்றால் என்மீது புகார் கொடுங்கள், என்னை transfer செய்யட்டும் என்றே சொல்கிறார். காரணம், 18 கிலோமீட்டர் தூரம், சென்னையிலிருந்து வருவதென்றால் ஏறக்குறைய 50 கிலோமீட்டர் தூரம் வர வேண்டுமென்ற ஒரு சிக்கலை அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அந்தப் பொது மருத்துவமனையிலே இருக்கின்ற பெரிய பிரச்சினை என்ன என்றால், 50 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியில், கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றபோது அங்கே கடிக்கின்ற விஷ மீன்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு உடனடியாக மருத்துவ உதவி அங்கே தேவைப்படும்போது அங்கே டாக்டர்கள் கிடையாது. மருத்துவம் கிடையாது. அந்த மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு மருத்துவம் தேவையென்றால் பொன்னேரிக்குத்தான் வர வேண்டும். இதைவிட கொடுமை, கடலில் சென்று இறக்கின்றபோது



அந்தப் பிணப் பரிசோதனை என்பது அந்த மருத்துவமனையில் கிடையாது. அதனால், பொன்னேரிக்கு எடுத்துக்கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில் இரண்டு மூன்று நாட்கள் கடலிலே இறந்து, மிதந்து கிடந்த அந்தப் பிணத்தை எடுத்துச் செல்கிறபோது, பிரேத பரிசோதனைக்குப் பிறகு, அந்தப் பிணத்தை மீண்டும் சொந்தக்காரர்கள் எடுத்துக்கொண்டு பழவேற்காடு பகுதிகளில் அந்தக் குப்பங்களில் வைத்து ஈமச்சடங்கை செய்வதற்குக்கூட அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காமல், பொன்னேரியிலேயே அதை அடக்கம் செய்கிற ஒரு மோசமான நிலையிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழவேற்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திலே டாக்டர்கள் பற்றாக்குறையைப் பற்றி இங்கே குறிப்பிட்டு, அங்கே உடனடியாக டாக்டர்கள் நியமனம் செய்ய வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் அங்கே மருத்துவர் பணியிடம் நிரப்பப்படும் என்ற செய்தியை அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற புரட்சித் தலைவி அமைச்சரவையிலே இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மீண்டும் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து, இந்த மானியத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு நலத் திட்டங்கள் - பொருளாதார நெருக்கடியைப் பற்றி நேற்று எங்களுக்கு வகுப்பே நடத்தினார்கள் எங்களுடைய நிதியமைச்சர் - இருந்தாலும் பல்வேறு நலத் திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட்டிருப்பதை எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

பிற்பகல் 1-15

மீனவர்களுக்குத் தற்போது வீட்டு வசதி வாரியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற அந்த மூன்று சென்ட் நிலம் மற்றும் அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற அந்தச் சலுகைகளை இப்போது மீண்டும் நீட்டித்து கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் அனைவருக்கும் தருவது என்று புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி முடிவு

செய்திருக்கிறது. அதேநேரத்தில் ரூ.37,000 மதிப்புள்ள 400 வீடுகளைக் கட்டுவது என்றும் முடிவெடுத்து இருப்பதை இந்த நேரத்தில் நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

அதேநேரத்தில், புயல் பருவக்காலச் சேமிப்புகளைப் பற்றி இங்கே ஏற்கெனவே உறுப்பினர்கள் பேசிவார்கள். மீனவர்களிடமிருந்து 75 ரூபாய் வசூலிக்கவேண்டுமென்ற அந்தத் திட்டத்தில் 50 ரூபாய் தந்தால் போதும், 25 ரூபாயை அரசாங்கமே தரும் என்று சொல்லி, எட்டு மாதங்களில் 600 ரூபாய் அவர்களுடைய பணத்தில் அரசும் மானியமாக 600 ரூபாய் போட்டு 1500 ரூபாய் வழங்குவதற்கான ஒரு நல்ல திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக நான் இந்த நேரத்தில் என் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மாநில அரசு மட்டும் இந்த மானித்தை வழங்கும் அதேநேரத்தில், மத்திய அரசிடம், நாம் கொடுப்பதற்கு இணையாக 600 ரூபாயைக் கேட்டு வாங்கி, இந்த மீனவர்களுக்கு 1800 ரூபாயாக வழங்கினால் நன்றாக இருக்கும் என்று நான் அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், மேற்காணும் திட்டங்களை மீனவர் சங்கங்களில் இருக்கின்ற மகளிர்க்கும் அமல்படுத்த வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த அரசு மகளிருக்கான அரசு என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இலங்கை-இந்தியா ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தில் மீன் பிடிக்கும் மீனவர்கள் அங்கே தங்கியிருக்கவும், அவர்களுடைய வலைகளை உலர்த்துவதற்கும் உரிமை உண்டு. நான் இந்த நேரத்தில் மேற்காணும் ஒப்பந்தத்தை கறாராக அமல்படுத்தவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், தமிழக அரசு கட்சத் தீவை மீட்போம் என்று எடுக்கின்ற நடவடிக்கைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றென்றும் ஆதரவு தரும் என்பதை நான் பணிவன்புடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கால்நடைப் பிரச்சினை. மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தைக் கால்நடைகளுக்கு ஜீவனத்திற்கு ஆதரவாகப் பயன்படுத்த வேண்டும். அந்த நிலத்தை வேறு எந்த வகையிலும் பயன்படுத்தக்கூடாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக இந்த நேரத்திலே மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஏற்கெனவே, கடந்த கால ஆட்சியில் Denmark நாட்டின் உதவித் திட்டத்தோடு, இளம் தம்பதிகளுக்கு கால்நடை பராமரிப்புப் பயிற்சியை அளிப்பதற்காக 49 ஊராட்சி ஒன்றியங்களில் அவை அமல்படுத்தப்பட்டு



செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், இந்த ஆட்சியில், அதை ஏறக்குறைய ஆறுமடங்காக உயர்த்தி 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தியிருப்பதற்காக இந்த நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்பையும், நன்றியையும் கூறி, பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழகத்தின் தென்கோடி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள எல்லையை ஒட்டியிருக்கும் விளவங்கோடு தொகுதியில் இடைக்கோடு கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். எங்கள் பகுதி கேரளாவின் அருகில் இருப்பதால், எனது பெற்றோர் என்னைச் சிறுவயதிலேயே மலையாளப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். அனைத்துப் பாடங்களையும், மலையாளத்தில் கற்ற நான் வீட்டிலும், வெளியிலும், மலையாளத்தில்தான் பேசிவந்தேன். நான் படிக்கும் காலத்தில் 1972-இல் புரட்சித் தலைவர் அ.இ.அ.தி.மு.க. இயக்கத்தைத் தொடங்கிய காலத்தில் கழகத்தில் தீவிரத் தொண்டனாகச் செயலாற்றி வந்தேன். அதன்பிறகு, பல ஆண்டுகாலமாக கழக கிளைச் செயலாளராகப் பணிபுரிந்து வந்தேன். 1988-இல் கழகம் பிளவுபட்டபோது, அம்மா அவர்களின் தலைமையேற்று தீவிரமாக பணியாற்றி, அம்மா அவர்களின் ஆசியோடு ஒன்றியச் செயலாளராக கட்சித் தேர்தலில் வெற்றிபெற்று அந்தப் பதவியிலே தொடர்ந்து செயல்பட்டேன். அப்பொழுதெல்லாம் கழகப் பொதுக்கூட்டங்களில் நான் மலையாளத்தில்தான் பேசுவேன் என்பதை இம் மாமன்றத்திலுள்ள எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். முழு நேரம் கழகப் பணியில் மட்டுமே ஈடுபட்டு வந்த என்னை அடையாளம் கண்டு ஒரு பக்தனுக்கு இறைவன் வரம் அளிப்பதுபோல், அம்மா அவர்கள் என்னை மாவட்டச் செயலாளராகவும், பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினராகவும், எங்கள் மாவட்ட மக்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் வண்ணம் அமைச்சராகவும் ஆக்கியதோடு, மலையாளம் படித்த என்னை குறுகிய காலத்தில் தமிழில் பேசவும், படிக்கவும், எழுதவும் கட்டாயமாக்கி

அழகு பார்க்கும் அம்மா அவர்கள் முன்பு ஒரு உண்மைத் தொண்டனாக விளங்குவதோடு, விரைவில் அம்மா அவர்களின் ஆசியோடு இந்த மாமன்றத்தில் மற்ற அமைச்சர்களைப் போல் தூய தமிழில் பேசுவேன் என அம்மாவின் பாதமலர்களை வணங்கி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

மீன் வளத் துறையின் மானியக் கோரிக்கை எண் 21 மீது நடைபெற்ற விவாதத்தில் இம் மாமன்றத்தில் முதன்முறையாகப் பங்கேற்று மீன் வளத்தைப் பெருக்கவும், மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பல்வேறு கருத்துகளுக்கும், கோரிக்கைகளுக்கும் பதிலளிக்கும் பெரும் வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் வங்காள விரிகுடாவையொட்டி 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் உள்ள 591 மீனவ கிராமங்களில் 6.80 இலட்சம் மீனவர்கள் வசித்து வருகிறார்கள். இக்கிராமங்கள் தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் உள்ள 25 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ளன. இவர்களில் 2.50 இலட்சம் மீனவர்கள் 8,009 விசைப் படகுகள் மற்றும் 41,770 பாரம்பரியப் படகுகள் மற்றும் கட்டுமரங்கள் மூலம் கடலில் தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கடலை ஒட்டியுள்ள 41,400 சதுர கிலோ மீட்டர் கடற்பரப்பில் ஆண்டுதோறும் 3.37 இலட்சம் மெட்ரிக் டன் மீன்கள் இவர்களால் பிடிக்கப்படுகின்றன. இதேபோன்று சுமார் 3.70 இலட்சம் ஹெக்டேர் நீர்ப்பரப்பு, உள்நாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் 56 சிறிய மற்றும் பெரிய நீர்த்தேக்கங்களும், 18,920 சிறிய மற்றும் பெரிய குளங்களும், 21,161 ஊராட்சிக் குளங்களும் மற்றும் 6 கழிமுக நீர்நிலைகளும் உள்ளன. இந் நீர்ப்பரப்பில் 60,000 உள்நாட்டு மீனவர்கள் ஆண்டுதோறும் 1.10 இலட்சம் மெட்ரிக் டன் மீன் பிடித்து வருகின்றனர். கடற்கரைப் பகுதி மற்றும் உள்நாட்டுப் பகுதியிலுள்ள மீன் வளத்தைப் பெருக்கவும், அதனைச் சார்ந்துள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவும், இவ்வரசு பல்வேறு



சமுதாய நலத் திட்டங்களையும், மீனவர் மேம்பாட்டுத் திட்டங்களையும் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை மீன் வளத் துறையைச் சேர்ந்த சுமார் 1,600 அலுவலர்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்துகிறார்கள்.

இவ்வளவு அடிப்படை வசதிகள் இருந்தும் கடந்த 5 ஆண்டுகளாக அறிவிக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் பல்வேறு காரணங்களால் முழுமையாகச் செயல்படுத்தப்படாமலும், முடிக்கப்படாமலும் உள்ளன என்பதை இம் மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, மீனவர் நலத் திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாகச் செயல்பட்டுவரும் இலவச வீட்டு வசதித் திட்டம் கடந்த 5 ஆண்டுகளில் தொய்வடைந்துள்ளது. 20,000 வீடுகள் கட்டவேண்டுமென்று அரசு நிர்ணயித்து, அதற்கான நிதி சுமார் ரூபாய் 70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டும், இதுவரை 15,558 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4,442 வீடுகளில் சில ஆரம்பிக்கப்படாமலும், பல வீடுகள் பல்வேறு நிலைகளில் முடிவுபெறாமலும், இன்று பயனாளிகள் பயன்படுத்த இயலாத அவல நிலையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வீடுகள் முழுமையாகக் கட்டிமுடிக்கப்பட வேண்டுமெனில், அதற்குச் சுமார் 15 கோடி ரூபாய் கூடுதலாகத் தேவைப்படுகிறது. மேற்படி வீடுகள் கட்டுவதில் கடந்த ஆட்சியில் விஞ்ஞான முறையில் சுமார் 4 கோடி ரூபாய் அளவில் ஊழல் நடந்துள்ளதாகத் தெரிய வருகிறது. இது குறித்து விசாரணை பொதுப் பணித் துறை தனிப் பிரிவில் நடைபெற்று வருகிறது. விசாரணை முடிவுற்றதும் சம்பந்தப்பட்டவர்கள்மீது இவ்வரசு கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தகைய சூழ்நிலையில் மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் உள்ள இவ்வரசு, இவ்வாண்டு 4,000 வீடுகள் மாநில அரசு நிதியுதவியுடனும், 1,000 வீடுகள் மத்திய அரசின் நிதியுதவியுடனும் கட்டி முடிக்கும் திட்டத்தோடு மட்டுமல்லாமல், முழுமையாகக் கட்டிமுடிக்கப்படாத வீடுகளையும், படிப்படியாகக் கட்டிமுடித்து, பயனாளிகளுக்கு ஒப்படைக்கவும் திட்டமிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் உள்நாட்டு மீனவர்களுக்கு, சென்ற ஆண்டு 1,000 வீடுகள் கட்ட திட்டமிட்டிருந்தும். அவற்றில் 94 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் உள்நாட்டு மீனவர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் இது தவிர சிறப்பான திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. ஆனால், உள்நாட்டு மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையிலான இவ்வரசு இந்த ஆண்டு 1000 வீடுகளையும் உள்நாட்டு மீனவர்களுக்கு முழுமையாகக் கட்டிமுடிக்கும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

இத்திட்டத்தின்கீழ் இது வரை சொந்தமாக 3 சென்ட் காலிமனை உள்ள மீனவர்கள் மட்டுமே பயனடைந்து வந்தனர். இந்த ஆண்டு முதல் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள காலிமனை இல்லாத மீனவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலம் கடற்கரைப் பகுதியில் உள்ள நிலமற்ற மீனவர்களுடன் காலிமனை இல்லாத உள்நாட்டு மீனவர்களும் பயன்பெறுவர்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் எந்தவித பாதுகாப்புமின்றி, இயற்கை இன்னல்களாலும், இலங்கை கடற்படையினராலும், சொல்ல இயலாத துன்பத்திற்கு ஆளாகின்றனர். இவர்களின் பாதுகாப்புக்காக ரூ.450 இலட்சம் செலவில் 5 கடலோர சுற்றுக்காவல் விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் 2 ஆண்டுகளாக 5 இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் படகுகளை உடனடியாக இயக்கி கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இவ்வரசு திட்டமிட்டுள்ளது. தமிழகக் கடற்கரை பகுதி முழுவதும் தொய்வின்றி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கடலோர பாதுகாப்புப் படையினரின் துணையோடு இப்படகுகள் மிகக் குறுகிய காலத்தில் இயக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது தவிர, இரவிலும் பகலிலும் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பன்னாட்டு கடல் எல்லைக் கோட்டை கடந்து அண்டை நாட்டுக் கடல்பரப்பில் மீன்பிடிப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் 4



கடல் மைல்களுக்கு ஒன்று வீதம் 25 ஒளிரும் மிதவைகள் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது. மேலும் நம் நாட்டு மீன்பிடி விசைப் படகுகளை இலங்கைக் கடற்படை மற்றும் இந்தியக் கடற்படையினராலும் எளிதில் இனங்கண்டுகொள்ளும் வகையில் மீன்பிடிப் படகுகளில் ஒளிரும் வண்ணம் பூசுவதற்கு ரூ.42.50 இலட்சம் இவ்வாண்டு செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் 8,500 மீன்பிடிப் படகுகளுடன் கூடிய மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரிடமிருந்து பாதுகாக்கப்படுவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்கள் நலனுக்காக பல ஆண்டுகளாக சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மீனவர்களுக்கு கடலில் மீன்பிடிக்கச் செல்ல இயலாத 4 மாதங்களுக்கு ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் மாதம் ரூ.270 வீதம் ரூ.1080 நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இவ்வாண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு நிவாரணத்திற்கான பங்குத் தொகை விகிதத்தை மாற்றியமைத்து, பயனாளிகள் 2 பங்கும், மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஒரு பங்கும் அளிக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது. இதன்படி ஆண்டொன்றுக்கு மீனவர் பங்கு ரூ.600-ம் மத்திய மாநில அரசுகளின் பங்கு முறையே ரூ.300-ம் ஆகும். மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மீனவர்களுக்காக ஆண்டொன்றுக்கு ரூ.200 கூடுதலாகச் செலுத்தி ஒவ்வொரு குடும்பமும் ரூ.1200 நிவாரணம் பெற வழிவகுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ரூ.4.8 கோடியை எங்களது இதய தெய்வம் அம்மாவின் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய ஆட்சியில் கடலில் மீன் பிடித்துத் திரும்பும் மீனவர்களுக்காக 10 மீன்பிடி இறங்கு தளங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.350 இலட்சம் கடந்த ஆண்டு வரை செலவழிக்கப்படாமல் உள்ளது. இதற்குக் காரணம் மீன்பிடி இறங்கு தளங்கள் தேர்வு செய்வதில் நடந்த குளறுபடியாகும். ஆனால், இவ்வரசு தகுதியான 10 இடங்களை தேர்வு செய்ததோடு இவ்வாண்டே 10 மீன்பிடி இறங்கு தளங்கள் அமைக்கும் பணிகளும் தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர் நலத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 10 மீனவர் அங்காடிகள் ரூ.182 இலட்சம் செலவில் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. முந்தைய ஆட்சியில் 3 அங்காடிகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீனவ மகளிர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு மீதமுள்ள 7 அங்காடிகளையும் விரைந்து கட்டிமுடிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலே கூறப்பட்டுள்ள மீனவர் நலத் திட்டங்களுடன் 2001-2002 நிதியாண்டில் ரூ.103.18 இலட்சத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு உத்தேசித்துள்ளது.

1. உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்குவதில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு மீனவளத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் வரும் நீர் நிலைகளுக்கு 75 மிதவைக் கூடுகள் வாங்க ரூபாய் 4.10 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(பிற்பகல் 1-30)

2. அதேபோல் பாலார்-பொறந்தலாற்றில் தற்போதுள்ள மீன் பண்ணைகளின் நிலையை உயர்த்த ரூ.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு.கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

3. கடல் மீனவர் நலனுக்காக நீண்ட நாள் கோரிக்கையான திருவள்ளூர் மாவட்டம், சுண்ணாம்புக்குளம், பெரியகுப்பம் ஆகிய இடங்களில் முதன்மை வாய்க்கால் மற்றும் படகு நிறுத்தும் வசதிகளை ஏற்படுத்த ரூ.5.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இரண்டு மீன் சினைப் பண்ணைகளை வலுப்படுத்தி உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. தேனாம்பேட்டையில் உள்ள அலுவலர்கள் பணிபுரியும் மீன் வளத் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் அலுவலகத்தில், தண்ணீர்த் தட்டுப்பாட்டை போக்கும்பொருட்டு ஆழ்துளைக் கிணறு அமைக்க ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



6. கடல் மீனவர்கள் நலத் திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்த மீன்வளத் துறைக்குச் சொந்தமான படகுகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தலுக்கு ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. கடலில் மீன்பிடிக்கச் செல்பவர்களுக்கு மீன் ஆதாரம் குறித்த தகவல்களை அறிவிக்கும் நவீன முறையை வலுப்படுத்த ரூ.5.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கடலில் மீன் கூட்டம் இருக்கும் இடத்தை அறிந்து அதனை மீனவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க இயலும்.

8. கடல் மீனவர் பாதுகாப்புக்காக 8,500 மீன்பிடிப் படகுகளில் வண்ணம் பூசுவதற்கு ரூ.42.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 41,770 பாரம்பரிய மீன்பிடிக் கலங்களில் சுமார் 25,000 மீன்பிடிக் கலங்களில் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அவற்றில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர சுமார் 8,000 இயந்திரப் படகுகள் மூன்று கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பிலுள்ள மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை இயக்க டீசல் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

டீசல் எரிபொருளாகப் பயன்படுத்தும் இயந்திரப்படகுகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்காக மைய அரசுடன் சேர்ந்து மாநில அரசு ஆயத்தீர்வையில் ஒரு பகுதியை மானியமாக வழங்கி வருகிறது. இதன் மூலம் லிட்டருக்கு 45 காசுகள் வீதம் ரூ.200 இலட்சம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், சென்ற ஆண்டு பல்வேறு காரணங்களால் இத்தொகை முழுவதுமாக பயன்படுத்தப்படாததால் செலவழிக்கப்படாத ரூ.78 இலட்சம் திருப்பி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது. இவ்வாண்டு இக்குறைபாடுதனை அகற்றி ஒதுக்கீடு முழுவதும் பயனாளிகளுக்குப் போய்ச் சேரும் வகையில் இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைப்படி பல திட்டங்கள் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இருப்பினும் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும்

உயர்த்திட கருணை உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையின்படி பல புதிய திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவையாவன—

1. வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மீனவக் குடும்பங்களுக்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கும் நிவாரணத் தொகையுடன் இவ்வாண்டு முதல் கடலில் மீன் பிடிக்கச் செல்ல இயலாத நான்கு மாதங்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி வீதம் 80 கிலோ அரிசி பொது விநியோக மையங்கள் மூலம் ஏற்கெனவே வழங்கப்படும் சலுகை விலையில் கிலோவுக்கு ரூபாய் ஒன்று குறைத்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மிகவும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மண்ணெண்ணெயை எரிபொருளாக உபயோகிக்கும் பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை பயன்படுத்தும் மீனவர்களுக்கு எந்த ஒரு மானியமும் அரசால் வழங்கப்படுவதில்லை. ஆகவே, மண்ணெண்ணெயை எரிபொருளாகப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு ஆயத் தீர்வையில் ஒரு லிட்டருக்கு 50 காசுகள் மானியம் வழங்கப்படும். இதற்கான மைய அரசின் பங்கினைப் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு கடல் பகுதியில் முகத்துவாரம் அடைப்பினை நீக்க உடனடி போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும். இதற்கான முதல் கட்ட வேலைக்காக ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டு உடனடியாக பணி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. 300 மீனவ கிராமங்களில் பொதுக் கழிப்பிடம் ஊரக வளர்ச்சித் துறை மூலம் இந்தாண்டு கட்டிமுடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பத்தில் ஒருவருக்கு ரூ.5,000 வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. உள்நாட்டு மீனவர்கள் கணக்கெடுத்தல் நடத்தப்படும்.

7. மீனவர்களின் குழந்தைகளுக்குப் படகோட்டுதல் மற்றும்



நீச்சல் பயிற்சி விளையாட்டுகளில் பங்குபெறும் வசதி தமிழ்நாடு மாநில விளையாட்டுத் துறை மூலமாக மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. மீனவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஊராட்சிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

9. மீனவர் நல கருத்தரங்கு மாதம் ஒன்றுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடத்தப்படும்.

10. வயது முதிர்ந்த மீனவர்கள் மற்றும் குறைந்த வருமானம் உள்ள மீனவர்களுக்கு முதியோருக்கான ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. மீனவக் கிராமங்களுக்கு மருத்துவ வசதிகள் நடமாடும் ஊர்தி மூலம் செய்து தரப்படும்.

12. மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ள மீனவர்களுக்கு தன்னாற்றல் பெறுவதற்கான விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்படும்.

13. தூய்மையாக உள்ள 10 மீனவ கிராமங்களைத் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கப்படும்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்று, ரூ.51,12,33,000-க்கான மீன் வளத் துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கால்நடை பராமரிப்புத் துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கால்நடைத் துறையை சீக்கிரம் ஓட்டி முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** எல்லாம் நல்ல திட்டங்கள் அல்லவா? சொல்லித்தானே ஆகவேண்டும்.

[திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்] [ 2001 செப்டம்பர் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கை எண் 22 மீது நடைபெற்ற விவாதத்தில் இம்மாமன்றத்தில் முதல் முறையாகப் பங்கேற்று உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பினை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது அன்புத் தெய்வம், உலகத் தமிழ் மக்களின் விடிவெள்ளி, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் நல்லாட்சியில், தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தினையும், உற்பத்தியினையும் அதிகப்படுத்தி கால்நடைகளை வளர்க்கும் கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்து எல்லோரும் வளம் பெற்று வாழ, தமிழக முதல்வர் அம்மா அவர்களால் அரிய பல திட்டங்கள் தீட்டப்பட்டு, கால்நடை பராமரிப்புத் துறை சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்பு கிராமப்புற மக்களுக்கு ஒரு கூடுதல் வருமான ஆதாரமாக இருப்பதுடன் புரதச்சத்துமிக்க உணவையும் அளித்து வருகிறது. கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், கால்நடைகளின் உடல் நலம் பேணவும் 1994 ஆம் ஆண்டு நமது ஆட்சியில் 46000 கிடேரி கன்றுகள் அனைத்து மாவட்டங்களிலும் தத்தெடுக்கப்பட்டு அவை இன்று பசுவாக பாலைப் பொழிந்து வருவதால், இன்று நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே பால் உற்பத்தியில் சிறந்து விளங்கி, பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 261 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கால்நடைகளுக்கு 1006 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2126 கிளை நிலையங்கள் மூலமாக கால்நடை மருத்துவ வசதி, தரம் உயர்த்தும் பணி மற்றும் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இது தவிர ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த மாடு, ஆடு, கோழி ஆகியவற்றை வளர்ப்பதற்கான திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

இருப்பினும் சென்ற 5 ஆண்டுகளில் கால்நடை மருத்துவ வசதி அனைத்து பகுதிகளிலும் பல்வேறு காரணங்களால் சீராக கிடைக்கவில்லை. மேலும், பல்வேறு கால்நடை பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு முழுவதுமாகச் செலவிடப்படவில்லை. தமிழ்நாடு முழுவதும் உள்ள 1006 கால்நடை மருத்துவ நிலையங்களில் சிலவற்றில் தேவையான அலுவலர்கள் இல்லாமையால்



2001 செப்டம்பர் 6 ] [திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்]

கால்நடைகளுக்குத் தேவையான நோய்த் தடுப்பு மருத்துவ நடவடிக்கைகளும், நோய் தீர்க்கும் மருத்துவ வசதியும் முழுமையாக வழங்கப்படவில்லை.

மேற்கூறிய அவல நிலையைப் போக்கும் வகையில் இதயதெய்வம் அம்மா அவர்கள் தலைமையில் இயங்கும் இவ்வரசு இவ்வாண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 1006 கால்நடை மருத்துவ நிலையங்களும் வேலை நாட்கள் முழுவதும் இயங்கும் வகையில் பணியாளர்களை பணியமர்த்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலைப்பகுதிகளில் உள்ள அலுவலகங்களிலும், கிராமங்களிலுள்ள மருந்தகங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் நீண்ட நாள் நிரப்பப்படாமல் இருக்கும் கால்நடை மருத்துவ அலுவலர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் காலியாக உள்ள கால்நடை நிலையங்களை நிரப்ப, கால்நடை ஆய்வாளர் பயிற்சி தொடங்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும் தேவையான இன்றியமையாத அடிப்படை, மேய்ச்சல் வசதி, ஊரகப் பகுதிகளில் உள்ள மேய்ச்சல் தரை மற்றும் மந்தைவெளி புறம்போக்கு நிலங்களாகும். கால்நடைகளுக்குத் தேவையான மொத்த மேய்ச்சல் தரை 2.50 இலட்சம் ஹெக்டேர் ஆகும். ஆனால், இப்போது 1.25 இலட்சம் ஹெக்டேர் நிலம் மட்டுமே உள்ளது. இதற்கான காரணம் கடந்த ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலம் முழுவதும் பல்வேறு துறைகளால் பல்வேறு பயன்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வந்தன. இதனை மாற்றி தவிர்க்க முடியாத காரணங்களினால், இந்நிலங்கள் பிற பயன்களுக்காக மாறுதல் செய்ய நேரிட்டால் அதற்கு ஈடான நிலம், கோரும் நிறுவனத்தால் மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றோடு கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலப்பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள தரிசுநில மேம்பாட்டு வாரியத்தின் உதவியோடு மேய்ச்சல் நிலங்களாக மாற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடைகளுக்கான அடிப்படை வசதிகளான மேய்ச்சல்நிலப் பாதுகாப்பு குறித்து, முதன்முறையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கால்நடைகளின்பால் கருணை கொண்டு இது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்] [ 2001 செப்டம்பர் 6

பிற்பகல் 1-40

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும் முழுமையானப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த ஆண்டுகளில் ஒருசில பகுதிகளில் மட்டுமே செயல்பட்ட கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தை, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இந்த ஆண்டில் அனைத்து ஊராட்சிகளிலும் ரூ.270.00 இலட்சம் செலவில் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்பதாவது மற்றும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆகியவை ஒருங்கிணைந்து, வளமான எருமை மற்றும் பசு இன மேம்பாட்டிற்காக ரூ.100.20 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் ஒரு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கருத்துரு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்ட ஒப்புதல் பெற்றபின், மாநில அளவில் திட்ட அமலாக்கும் நிறுவனம் ஒன்றினை அமைத்து, இத்திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைத்தவிர, பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.206.85 இலட்சம் செலவில் ஏழு திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. கடந்தகால ஆட்சியில் இரண்டு வருடங்களாக கால்நடை நலப்பணிக்குக் கால்நடை மருந்தகங்கள் எதுவும் திறக்கப்படவில்லை. கால்நடைச் செல்வத்தை நோயிலிருந்து காப்பாற்றி, தரத்தை உயர்த்தி, ஏழைகளின் வருவாயைப் பெருக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 10 கால்நடை மருந்தகங்களை ரூ.23.00 இலட்சம் செலவில் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள். மேற்படி 10 இடங்களைத் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து, எந்த இடங்கள் என்பது மிக விரைவில் அறிவிக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், முந்தைய ஆட்சியில் கொல்லைப்புற கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கோழிகள் வளர்க்க மகளிருக்கு முழு மானியத்தில் கோழிக் குஞ்சுகள் வழங்கினார்கள். இத்திட்டம், இந்த ஆட்சியில் மீண்டும் தொடர, பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமப்புற மக்களின் வருவாயை உயர்த்தும் நோக்குடன்



2001 செப்டம்பர் 6 ] [திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்]

இவ்வாண்டு 5775 பயனாளிகளுக்கு ரூ.34.65 இலட்சம் செலவில் மானிய விலையில் வழங்க, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், ஒரு பயனாளிக்கு 10 கோழிகள் வீதம் ரூபாய் 600 செலவில் கொடுக்கப்படவுள்ளது. இதில் ஆதிதிராவிட வகுப்பினருக்கு 50 விழுக்காடு மானியமும் மற்றவர்களுக்கு 33 1/3 விழுக்காடு மானியமும் வழங்கப்படும்.

தமிழகத்தில், பால் உற்பத்தியைப் பெருக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முந்தைய ஆட்சியில் கிராமப்புற மக்களுக்கு முழு மானியத்தில் கலப்பின கிடேரிக் கன்றுகள் வழங்கியதால், பால் உற்பத்திப் பெருகியது. பின்னர் வந்த ஆட்சியில் தொடராத இத்திட்டத்தை, மீண்டும் தொடர, இவ்வாண்டு கிராமப்புற விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் நோக்குடன், அவர்களுக்குப் புரதச் சத்து மிகுந்த உணவை அளிக்கவும், தரம் உயர்த்தப்பட்ட கிடேரிக் கன்றுகள், 800 பயனாளிகளுக்கு ரூ.28.00 இலட்சம் செலவில் மானிய விலையில் வழங்கவும் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், ஒரு பயனாளிக்கு ரூ.3,500/- மதிப்பில் கலப்பின கிடேரிக் கன்று வழங்கப்படும். ஆதிதிராவிடர்களுக்கு 50 விழுக்காடு மானியமும், மற்றவர்களுக்கு 33 1/3 விழுக்காடு மானியமும் வழங்கப்படும்.

அனைத்து கிராம மக்களின் வாழ்வு உயர அன்புள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செம்மறி ஆடுகள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். ஏழை மக்கள் பயன்பெறும்வகையில், 750 பயனாளிகளுக்கு, மானிய விலையில் ரூ.45.00 இலட்சம் செலவில், செம்மறி ஆடுகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு 50 விழுக்காடு மானியமும், இதரப் பயனாளிகளுக்கு 33 1/3 விழுக்காடு மானியமும் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒரு பயனாளிக்கு ரூ.6000/- மதிப்பில் ஒரு கிடா, 4 பெட்டை ஆடுகள் வழங்கப்படும்.

மாநிலத்தில் இயங்கி வரும் நான்கு உறைவிந்து நிலையங்களில் திருநெல்வேலியில் உள்ள அபிஷேகப்பட்டி நிலையத்திற்கு தற்போதைய எருமையின உறைவிந்துக் குச்சிகளின் தேவையினைப் பூர்த்தி செய்ய, புதியதாக 20 மூர்ரா இனப் பொலிகாளைகளை ரூ.6.00 இலட்சம் செலவில் வாங்கிட, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள.

பிற்பகல் 1-45

கொருக்கையிலுள்ள கால்நடைப் பண்ணை, 495 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பண்ணைக்குப் பாசனத்திற்குத் தேவையான நீர், நான்கு குளங்களிலிருந்து பெறப்படுகிறது. இக்குளங்கள் தற்பொழுது ஆழம் குறைந்துள்ளதால், இரண்டு குளங்களை ரூ.3.00 இலட்சம் செலவில் தூர் வாரி, இப்பண்ணையைச் சேர்ந்த நிலங்களுக்கும், சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் பயன்பட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

டானிடா திட்டத்தின்கீழ் பயன்பெறும் 49 ஊராட்சி ஒன்றியங்கள் தவிர ஏனைய 336 ஊராட்சி ஒன்றியங்களிலும், 5 ஆண்டுகளில் ரூ.336 இலட்சம் செலவில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஊராட்சியிலும் தொடர் பணியாளர் தம்பதியினரைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து, கால்நடை மருத்துவத்தின் அடிப்படை சேவைகளை நிலைப்படுத்தி, அனைத்துக் காலங்களிலும் அனைத்து ஊரகப் பகுதிகளிலும் வழங்க இயலும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் செயல்படும்பொழுது, மாநில அரசின் முன்னோடி நடவடிக்கையை ஊக்குவிக்கும் நோக்கில், டானிடா திட்ட தலைமை அமைப்பு, மாநில அரசின் இத்திட்டம் செயல்படுவதற்குத் தேவையான பயிற்சி, விளம்பரம் மற்றும் அத்தியாவசிய மருந்து செலவிற்கான நிதி ஒதுக்கீட்டினை 336 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்கண்ட திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களின் கால்நடைகளை, ஆண்டு முழுவதும் முழுமையாகப் பாதுகாக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய முழுமையானப் பாதுகாப்பு, ஆண்டு முழுவதும் வழங்குவது, முதன்முறையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த பல ஆண்டுகளாக, நமது கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் உலக அரங்கிலும், வட மாநிலங்களிலும் உரிய வாய்ப்பைப் பெற இயலாத நிலை இருந்து வந்தது. இதற்குக் காரணம், இந்திய கால்நடை மருத்துவச் சட்டப் பிரிவுகள், நமது தமிழ் மாநிலத்தில் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர்



இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றவுடன், இந்நிலையை மாற்றவும் அதன் மூலம் நமது மாநிலக் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் உயர் கல்விக்காகப் பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான தகுதியை உருவாக்கவும், இந்திய கால்நடை மருத்துவச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் செயல்படுத்த முடிவெடுத்துள்ளார்கள். அதற்கான கொள்கை குறிப்பு இம்மாமன்றத்தில் விரைவில் வைக்கப்படும் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

கடந்தகால ஆட்சியில், தென்மாவட்டங்களுக்கான வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நான்கு திட்டங்களை அறிவித்தனர். ஆனால், இத்திட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. எடுத்துக்காட்டாக,

1. செம்மறியாடு வழங்கும் திட்டத்தின்கீழ், 300 பயனாளிகளுக்குக் கொடுக்க வேண்டியது, 226 பயனாளிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

2. கொல்லைப்புற கோழி வளர்ப்பில், 2400 நபர்களுக்குக் கொடுக்க வேண்டியதில், 143 பயனாளிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

3. இராஜஸ்தான் மாநிலத்திலிருந்து சோக்ளா இன கிடாக்களை வரவழைத்துப் பயனாளிகளுக்கு வழங்கும் திட்டம் தொடங்கப்படவில்லை.

4. நீலநாக்கு நோய் ஆராய்ச்சிக்கூடம் நிறுவும் திட்டம் இன்னும் முழுமையாகத் தொடங்கப்படவில்லை.

இதுபோன்று கடந்தகால ஆட்சியில் எந்தத் திட்டமும் சரிவரச் செயல்படுத்தப்படவில்லை.

கடந்தகால ஆட்சியில் கால்நடைகளுக்கு மருந்துகள் வாங்கியதில் சுமார் ரூ.21 கோடியில் முறைகேடுகள் நடந்துள்ளன. தவறு செய்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாய் பேசாத பிராணிகளின் நலனுக்காக வழங்கப்பட்ட மருந்தில் ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும், விசாரணைக்குப்பின் சம்பந்தப்பட்டவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் ஏழையெளிய மக்கள், குறிப்பாக கிராமப்புற விவசாயப் பெருங்குடி மக்கள், நேரடியாகப் பயன்பெறும்வகையில், இத்துறையின் மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் அனைத்து அம்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மக்கள் பயனடையும் வகையில் பல புதிய திட்டங்கள் தொலை நோக்கோடும், திட்டப் பயன்கள் மக்களை விரைவாய்ச் சென்றடையும்வகையிலும் நிறைவேற்றப்பட உள்ளன. இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல கருத்துகளை ஏற்று, இம்மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்று, ரூ.165,14,63,000-க்கான கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய காலத்திலே தமிழைக் கற்று முறையாக உச்சரித்து பதிலுரை வழங்கிய அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் திருத்தம் ஒன்றைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் ஈமச் சடங்குக்காக ரூபாய் 500 மட்டும் வழங்கப்படும். 5000 என்று தவறாகச் சொல்லப்பட்டதை 500 என்று திருத்திக்கொள்ளவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சைபரை அடித்துவிட்டீர்கள், சரி.

**திரு. துரைமுருகன்:** 5000 எங்கேயிருந்து வரும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் திருப்தியைத் தெரிவித்துள்ளார்.





**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றிரண்டு பேர்தான் பேசினார்கள். தமிழ்நாட்டிலே கால்நடைகளே இல்லாத ஒரு நிலை சமீபத்திலே வந்துவிடுமோ என்ற ஒரு அபாயம் இருக்கிறது. எல்லா கால்நடைகளுமே, கேரளாவிற்குக் கடத்தப்படுகின்றன. அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியினுடைய பார்டரில் கேரளாவில் இருக்கிறதனாலே இதனை அனுமதிக்கக் கூடாது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா? அதேபோன்று இந்த அதிகாரிகளைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சருடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே அவர் பேசுகின்றபோது, கடா என்றெல்லாம் சொன்னார்கள்; அவற்றையெல்லாம் பசு, கன்று, காளைக் கன்று என்று அதிகாரிகள் திருத்தி, உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் கொண்டு வர வேண்டும். அப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணுக்குத் தெரியாத வேரையும், இந்த மண்ணிற்கு அடையாளம் காட்டிய புண்ணியநதி, எங்கள் புரட்சித் தலைவி அவர்களே, எனக்கு முகம் தந்தீர்கள்; முகவரி தந்தீர்கள்; மொழியும் தந்தீர்கள். எல்லாமுமாய் இருந்து என்னைக் காக்கும் தாயே, அன்னை மாகாளி கடைக்கண் வைத்தாள், ஆஹா என்று எழுந்தது பார்யுகப் புரட்சி. யுகப்புரட்சிக்கே பெண் தெய்வத்தைக் காரணமாக்கிக் காட்டினான் கவிவேந்தன் பாரதி.

ஆட்சித் திமிரால், சூழ்ச்சியால் சபை நடுவே, பாஞ்சாலி பங்கப்பட்டபோது, துரியோதனன் கண் முன்னாலேயே துச்சாதனர்கள் அவளது துகிலைத் தொட்டு இழுத்தபோது, (மேசையைத் தட்டும் ஒலி) கூந்தலைப் பற்றியபோது, பாஞ்சாலி செய்த சபதமும், கொலைக்களப்பட்ட கோவலனுக்காக மன்னனை வீழ்த்தி, மதுரையை எரித்த கண்ணகியின் கோபமும், பொட்டு நகை ஏதுமில்லை; புன்னகையே என் பொன் நகை, ஆனாலும் அழகு சொட்டும் முகம், அட்சய பாத்திரம் என்னும் அமுதசுரபியைக் கையில் ஏந்தி, பசிப்பிணிப் போக்கிய மணிமேகலையின் அறமும், வழிவழி வந்த அந்தப் பெண்

குலத்தின் பிரதிநிதியாக பொட்டு நகை ஏதுமில்லாமல் அழகு சொட்டும் முகத்தோடு அட்சயப் பாத்திரம் ஏந்திய மணிமேகலையாக மதுரையை எரித்த கண்ணகியாக, மகாபாரதத்துப் பாஞ்சாலியாக வாழ்ந்து கொண்டிருக்கிற எங்களின் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் எண்ணங்களை, சிந்தனைகளை, திட்டங்களை சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையின் மூலம் செயல்படுத்துகிற வாய்ப்பினை எனக்கு வழங்கிய அம்மா அவர்களின் காலடி மண்ணை, என்னுடைய கண்ணிலே ஒற்றி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மேலும், என்னை வெற்றிப்பெறச் செய்த, ஆலந்தூர் தொகுதியின் வாக்காளர்ப் பெருங்குடி மக்களுக்கு என்னுடைய நன்றியினை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பறம்பு மலை பாரிக்குப் பின்னால், நாங்கள் கண்டெடுத்த பரங்கிமலை பாரி வள்ளல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளல்' எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். சத்துணவுத் திட்டம், டாக்டர் புரட்சித் தலைவரின் இலட்சியக் கனவென்றால், அந்தக் கனவை நனவாக்கிய பெருமை முழுவதும் புரட்சித் தலைவியையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

கிரேக்கப் பேரறிஞன் சாக்ரட்டீஸுக்கு ஒரு பிளாட்டோ போல, பிளாட்டோவுக்கு ஒரு அரிஸ்ட்டாட்டில் போல, அரிஸ்ட்டாட்டிலுக்கு ஒரு அலெக்ஸாண்டர் போல, காரல்மார்க்ஸுக்கு ஒரு லெனின் போல, புரட்சித் தலைவருக்குப் பிறகு, காலம் நமக்குத் தந்த கற்பக விருட்சம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அரசியலுக்கு வராமல் போயிருந்தால், தமிழ்நாட்டு அரசியலே தடம் மாறிப் போய் இருக்கும். தம்பி சண்டப்பிரசண்டனாயிருப்பான். தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரனாகியிருப்பான் (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 1-55*

புரட்சித் தலைவி அரசியலுக்கு வந்தார், தமிழ்நாட்டு அரசியல் பிழைத்தது. எதேச்சாதிகாரத்தை வீழ்த்த, மக்கள் சக்தியின் வடிவமாகப் போர்க்கோலம் பூண்டார். ஒரு கட்சிக்கும், ஒரு நாட்டிற்கும், ஒரு



பெண், தலைமையேற்பது என்பது புதிதல்ல. மேற்கின் மகளாக, பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சரும், கிழக்கின் மகளாக, வங்காள தேசத்தின் ஷேக் ஹஸீனா, முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவும், வடக்கின் மகளாக அன்னை இந்திராவும் வடிவம் காட்டியதைப் போலத்தான் தெற்கின் மகளாக புரட்சித் தலைவி உருவாகி, திசையெல்லாம் வென்றார். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனாலும், இதிலும் ஒரு அடிப்படை வேறுபாடு உண்டு. பெண்களை இயல்பாகவே மதிக்கிற பெருமைமிக்க நாடு, இங்கிலாந்து நாடு. இன்றளவும் எலிசபெத் ராணிகள்தான் அதனை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். எனவே, திருமதி தாட்சர் பெண் என்பதால், இழிவுபடுத்தப்படவில்லை; தடைபடுத்தப்படவில்லை. தூக்குமேடையிலே உயிர் துறந்த ஜுல்பிஹாரலி பூட்டோவின் மகள் என்கிற காரணத்தால், அனுதாபமும், செல்வாக்கும் பெனாஸிர், தலைமைக்கு வர உதவின. நேரு குடும்பத்தின் பாரம்பரிய பெருமையும், பண்டித நேருவின் மகள் என்ற வலிமையான பின்னணியும், இந்திரா காந்தி அரசியல் உயர்வுக்கு ஏணிப் படிகளாயின. ஆனால், இத்தகைய எந்தப் பின்புலமுமே இல்லாமல், ஒரு அரசியல் கட்சித் தலைமைக்கும், ஒரு மகத்தான மக்கள் சக்திக்கும் உரிமை மிக்கவராக புரட்சித் தலைவி விளங்குவது என்பது ஓர் அரசியல் அற்புதம் (மேசையைத் தட்டும் ஒலி).

அவர் அளவுக்கு எந்தப் பெண்ணும் காயப்பட்டதில்லை. அவர் அளவுக்கு எந்தப் பெண்ணும் சோதனைகளைத் தாங்கியதில்லை. ஆனாலும், அடிக்கிற பந்தைப்போல, அவர் துள்ளி எழுகிறார். அரைக்கப்படுகிற சந்தனம் போல, அவர் மனம் தருகிறார். புரட்சித் தலைவி அரசியலுக்கு வந்த காரணம் பற்றி, புரட்சித் தலைவியே சொல்கிறார்; "தாயைத் தெய்வமாக மதித்து வணங்குபவர் டாக்டர் புரட்சித் தலைவர். தாயும், மகனும் பட்டினியாகக் கிடக்க ஒரு வாய்ச் சோறு கிடைத்தால், தன் மகனுக்கு உணவாகக் கொடுத்துவிட்டு, தான் பட்டினிக் கிடப்பாளே தவிர, தன் வயிற்றை நிரப்பிக்கொள்ள வேண்டுமென்று எண்ணவே மாட்டார். இதனைத்தான் டாக்டர் புரட்சித் தலைவர் நன்றாக அறிந்து, அதன் விளைவுதான் 100 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) 42 ஆயிரம் பெண்கள் இதன்மூலம் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். நான் அண்ணா தி.மு.க. -வில் இணைவதற்கு இந்தச் சத்துணவுத் திட்டமே முக்கிய காரணம்" என்று விளக்கம் தந்தார்.

அடுத்துச் சொல்கிறார், "புரட்சித் தலைவரின் சத்துணவுத் திட்டத்தை எதிர்ப்பவர்கள், பழிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் உருப்படுவதில்லை; உருப்படமாட்டார்கள்." (மேசையைத் தட்டும் ஒலி) என்னப்பா இப்படிச் சபிக்கிறாளே என்று பார்க்கிறீர்களா? இதை நானா சொல்கிறேன்? இல்லவே இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், திருவள்ளுவரே இதைச் சொல்லியிருக்கிறார்.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

என்கிறார் வள்ளுவர். பிறருக்கு உதவி செய்ய அளிக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகிறவனுடைய, அதைக் கொடுக்கவிடாமல் தடுக்க முயற்சி செய்பவனுடைய சுற்றம், உணவும், உடையும் இல்லாமல் கெடும் என்று திருவள்ளுவர் அப்போதே சொல்லி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்தான உணவு, நல்ல வாழ்க்கைத்தரம், ஆரோக்கியமான வாழ்வுக்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்திலேயே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதைத்தான் புரட்சித் தலைவர் தந்தார். புரட்சித் தலைவி செயல்படுத்தினார். இடையிலே வந்தவர்கள் என்ன காரணத்தினாலோ, இந்தச் சத்துணவுத் திட்டம், எம்.ஜி.ஆர். தொடங்கிய காரணத்தாலோ, என்னவோ இதை அப்படியே கிடப்பிலே போட்டுவிட்டார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். சத்துணவுக் கூடங்கள் பழுதடைந்திருக்கின்றன, அவற்றைப் பராமரிக்க வேண்டும்; அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். இந்தப் பராமரிப்பு விட்டுப் போனதற்கு என்ன காரணம்? அதிலே, எம்.ஜி.ஆர்.-உடைய பெயர் இருந்ததுதான் காரணம். எந்தச் சத்துணவுப் பள்ளிக்கூடமும் இந்த ஐந்தாண்டுக் காலத்திலே பராமரிக்கப்படாமல், பக்கத்திலே பன்றி மேய்ந்து கொண்டிருக்கிறது என்றுகூட புகார் சொன்னார்கள். அதைக் கவனிப்பதற்கு ஆள் இல்லை. ஆனால், இன்றைக்கு, தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளையெல்லாம் கேட்டதற்குப் பிறகு, அவற்றைப் பழுதுபார்ப்பதற்குத் திட்டங்கள் தீட்டித் தந்திருக்கிறார்.



மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். சத்துணவு ஊழியர்களையெல்லாம் நிரந்தரமாக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை உறுப்பினர்கள் இங்கே கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்த உறுப்பினர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் அரசு பரிசீலிக்கும் என்று நான் சொல்ல முடியவில்லை. காரணம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காலை பத்திரிகை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குடும்பப் பத்திரிகையான பத்திரிகையிலே ஒரு துணுக்குச் செய்தி படித்தேன். அதைக் கட்டம் கட்டிப் போட்டிருக்கிறார்கள். சத்துணவு அமைச்சர் பரிசீலிக்கும் என்கிறார்; வேளாண்மைத் துறை அமைச்சர் பரிசீலிக்கும் என்கிறார். பரிசீலிக்கும் என்று சொன்னால் என்ன அர்த்தம்? நாளைக்கு வாங்கப் போகிற கடனுக்கு இன்றைக்கு உத்தரவாதம் தருகிறீர்களா என்று ஒரு பத்திரிகையிலே துணுக்கு படித்துவிட்டு வந்தேன்.

பிற்பகல் 2-00

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இன்றைக்கு இதே பாழடித்துவிட்டுப் போன, தி.மு.க. ஆட்சியிலே விட்டுவிட்டுப் போன இந்தச் சத்துணவுத் திட்டத்தைக்கூட, அந்தத் துணுக்கிலே சொல்லியதைப்போல அவர்கள் வாங்கியிருக்கிற கடனுக்கு நாங்கள் இன்றைக்கு ரொக்கம் செலுத்தக் கூடிய நிலையிலே நாங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொல்லிக் காட்டுகிறார்கள். பரிசீலிக்கும் என்று அமைச்சர்கள் சொல்கிறார்களே, எப்படிப் பரிசீலிப்பார்கள்? அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்கிறார்கள். நாங்கள் அமைச்சராக இருக்கிறோம். ஒருவர் வந்து மனு தருகிறார், மனு தருகிறபோது, 'இல்லை' 'இல்லை' முடியாது: அரசாங்கத்தினிடத்திலே பணம் இல்லை, திருப்பி எடுத்துக் கொண்டு போங்கள்' என்றா சொல்ல முடியும்? சொல்ல முடியாது. 'நாங்கள் பரிசீலிக்கிறோம், பார்த்துச் செய்கிறோம், அரசினுடைய கவனத்திற்கு எடுத்துப்போய் நிலைமைகளைச் சரி செய்து உங்களுக்குச் சொல்கிறோம்'; இதைத்தானே சொல்ல முடியும்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பட்டிருக்கிற கடனை இன்றைக்கு நாங்கள் அடைப்பதற்குத் தவியாய்த் தவித்துக்கொண்டு இருக்கிறோம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சற்று நேரத்திற்கு முன்னாலே இங்கே பதில் அளித்தார்கள். இங்கே சத்துணவு அமைப்பாளர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள்

எல்லாம் கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். எங்களுக்கும் அவர்களை நிரந்தரமான ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்கிற ஆசைதான். அவர்களில் அதிகமானவர்கள் பெண்களாக இருக்கிற காரணத்தால், அரசாங்கம் தரக்கூடிய அத்தகைய உதவிகளையும் அவர்கள் பெற வேண்டும், சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, அரசினுடைய நிதிநிலையைக் கருத்திலே கொண்டு அதைக் கவனத்திலே எடுத்து ஆவன செய்வதற்கு அரசு முயற்சிக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், இலட்சக்கணக்கான - 2,26,000-க்கு மேற்பட்ட சத்துணவு ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருக்கிற காரணத்தால், கருணையோடு அதை எடுத்துக்கொண்டு அரசு முயற்சிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொட்டில் குழந்தைத் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். எங்களுடைய தலைவர் கொண்டு வந்த திட்டம்; எங்கள் தலைவர் பாராட்டிய திட்டம்; செயல்படுத்தத் தூண்டிய திட்டம் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். பாராட்டினார் சிலவற்றைக்கூட நன்றி.

இருந்தாலும், சேய்க்குத் தாய் முகம் தெரியாத நிலையிலும் அவர்களுடைய நிலைமை அறிந்து அவர்களுக்காக அறிவிக்கப்பட்ட திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம். இந்தத் திட்டம் 1992 ஆம் ஆண்டு அறிமுகமானது. இந்தத் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்திட ஜப்பான் நாட்டுடன் ஒப்பந்தம் செய்து ரூ.22 இலட்சத்தினை புரட்சித் தலைவி அவர்கள் பெற்று, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சேலத்திலே, ஒரு மையத்தின் செயல்பாட்டினை மேம்படுத்துவற்காக புரட்சித் தலைவி அவர்களால் ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம். இப்பொழுது அதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இங்கே உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டுவருவதற்கு அவருக்கு ஒரு லட்சியக் கனவு இருந்திருக்கிறது. புரட்சித் தலைவருக்கு சத்துணவு வருவதற்கு எப்படி லட்சியக் கனவோ, அதேபோல தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வருவதற்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு லட்சியக் கனவு இருந்திருக்கிறது. புரட்சித் தலைவியின் இளமைக் காலத்திலேயே அவருடைய தாய், அன்னை சத்தியா மறைந்து விடுகிறார். அதற்குப் பிறகுதான் புரட்சித் தலைவரின் விருப்பப்படி



புரட்சித் தலைவி அவர்கள் பொது வாழ்வுக்கு வருகிறார். பொது வாழ்வுக்கு வந்த பிறகு, புரட்சித் தலைவிக்கு ஏற்பட்ட வேதனைகள், காயங்கள், இரணங்கள் எல்லாம் கொஞ்ச நஞ்சம் அல்ல. பொது வாழ்விலே அவர். அளவுக்கு யாரும் புண்பட்டதில்லை. அவர் அளவுக்கு யாரும் அவமானப்பட்டது இல்லை. அவர் அளவுக்கு யாரும் காயப் பட்டதில்லை.

தான் பட்ட துன்பங்களை, தான் பட்ட அவமானங்களை, தான் பட்ட காயங்களைச் சொல்லி அழக்கூட, அவருக்கு ஒரு தாய் இல்லை. தனக்குக் கிடைக்காத தாய்ப்பாசம் தமிழ்நாட்டின் எந்த ஆதரவற்ற குழந்தைக்கும் இல்லாமல் போகக்கூடாது என்ற அவருடைய கனவில் உதித்த திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை—நான் இந்த அவையிலே பேசக் கூடாது; கண்ணியமான அவை; இந்தத் திட்டத்தை—கடந்த 5 ஆண்டு காலத்தில் கொச்சைப்படுத்திப் பேசியவர்கள் எத்தனை பேர்? அவமானப்படுத்திப் பேசியவர்கள் எத்தனை பேர்? தொட்டில் குழந்தை என்று சொன்னால் அந்தத் தொட்டில் குழந்தையைக் கேவலமாகப் பேசியவர்கள் வெளியிலே இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-05

ஆனால், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்து, இந்த ஆதரவற்ற பிள்ளைகளுக்கு, தாய் இல்லாத பிள்ளைகளுக்குத் தாயாக இருப்பேன் என்று அறிவித்த திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி). நான் அமைச்சராகப் பொறுப்பு ஏற்ற உடனேயே என்னை அழைத்தார்; அழைத்து, அவர் முதலிலேயே கேட்ட கேள்வி, 1992-லே நாம் கண்டெடுத்த, நான் தாயாக இருந்து வளர்த்த பிள்ளைகளை எல்லாம் கடந்த ஆட்சியாளர்கள் எங்கே வைத்து இருக்கிறார்கள்; கொஞ்சம் கண்டுபிடித்துத் தாருங்கள் என்று கேட்டார்கள்; தேடிக் கண்டுபிடியுங்கள் என்று சொன்னார். நாங்களும் தேடினோம், தேடினோம், தேடினோம். எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்குப் பிறகு, தீவிரமான ஆய்வுக்குப் பிறகு 12 பிள்ளைகளை நாங்கள் தேடிக் கண்டுபிடித்தோம். அந்த 12 பிள்ளைகளைக் கண்டுபிடித்து எங்களுடைய அன்னையாரிடத்திலே ஒப்படைத்தபோது, அந்தப் பிள்ளைகளிடத்தில் அவர் காட்டிய பாசம், பரிவு, இருக்கிறதே, அதை இன்றைக்கு நினைத்தாலும் எனக்குப்

புல்லரிக்கிறது. ஒரு பெற்ற தாயைவிட புரட்சித் தலைவி அன்பு காட்டிய காட்சியை நான் நினைத்துப் பார்க்கிறேன். அந்தப் படம், அடுத்தநாள் பத்திரிகைகளிலே வெளி வந்தது. என்னோடு ஒரு நண்பர் என்னுடைய அறைக்கு வந்து பேசிக் கொண்டிருந்தார். அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அவர் சொன்ன வார்த்தை, அவர் சொல்லவில்லை, அந்த நண்பருக்குத் துணைவியார் சொன்னதாகச் சொன்னார். என்ன வார்த்தை சொன்னார் தெரியுமா? நல்லவேளை, அம்மா கண்டுபிடித்து, இவ்வளவு உயரமாக வளர்த்து இருக்கிறாரே; இல்லையென்றால், 12 பிள்ளைகளும் செத்து அல்லவா போய் இருக்கும் என்று அந்த நண்பருடைய மனைவி சொன்னதாக என்னிடத்திலே வந்து ஆதங்கப்பட்டுச் சொன்னார். அதுதான் உண்மை. இந்தப் பிள்ளைகளை புரட்சித் தலைவி கண்டெடுத்து தந்திருக்காவிட்டால், இந்தப் பிள்ளைகள் செத்துப் போயிருக்கும்; இந்த அழகான முகங்களை நாம் பார்த்து இருக்க முடியுமா? இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம்பற்றி இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சேகரன் அவர்கள் பேசினார். நாங்கள் இதற்கு வலு கொடுத்தோம்; புத்துணர்ச்சி ஊட்டினோம் என்று சொன்னார். ஆனால், அது தவறான கருத்து.

தொட்டில் குழந்தைத் திட்டத்துக்கு மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், கடந்த கால ஆட்சியில், வழங்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் ஆயிரம் ரூபாய். நான் ஆதாரத்தோடு வைத்து இருக்கிறேன். தங்களிடத்திலே தருவதற்குக்கூட தயாராக இருக்கிறேன். வெறும் ஆயிரம் மட்டும், வருடத்திற்கு ஆயிரம் ரூபாய் தொட்டில் குழந்தைத் திட்டத்திற்கு, அதுவும் ஏதோ ஒரு பெயருக்கு அறிவித்து இருக்கிறார்கள். அதிலே கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளைப் பார்த்தால், 1992-93 வருடப்படி கணக்கு எடுத்துப் பார்க்கிறபோது, 1991-லே இருந்து 1996 வரைக்கும் தொட்டிலிலே கொண்டுவந்து, வளர்க்க முடியாதவர்கள், ஆதரவற்றவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ இருக்கிறவர்கள், சமூகம் நம்மைப் பாதிக்குமே என்கிற உணர்வோடு கொண்டு வந்து அரசுத் தொட்டிலிலே 1996 வரைக்கும் போட்டுவிட்டுப் போனவர்கள் எத்தனையோ பேர். ஆனால் 1996-லே இருந்து 2000 வரைக்கும் ஒரு பிள்ளையைக்கூட யாருமே கொண்டுவந்து தொட்டிலிலே போடவில்லை. அவர்களுக்குப் பயம். இந்த அரசாங்கம் வளர்க்குமா அல்லது கொல்லுமா என்கிற அச்சத்திலே கொண்டுவந்து, போட மறுத்துவிட்டார்களோ என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). என்னிடத்திலே கொடுத்து இருக்கிற புள்ளிவிவரப்படி, அந்தக் கணக்குத்தான் வந்திருக்கிறது. எந்தப் பிள்ளையும் வரவில்லை. வெறும் ஆயிரம், ரூபாய் தொட்டில் குழந்தைக்காக அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். ஆனால் வணக்கத்திற்குரிய மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு விழாவிலே பேசிய பேச்சு இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நான் சொல்லவில்லை; முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு. பேசியவர்கள் எல்லாம் ஆண்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் இந்தச் செய்தியைப் படிக்கிறேன். பேசியவர்கள் எல்லாம் ஆண்கள். பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லி, மேடையிலே இருந்த எங்களை எல்லாம் கொஞ்சம் நெளிய வைத்தார்கள். நானே சொல்கிறேன். என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம்கூட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட இந்த இயக்கத்தினர் அனைவருமே பெண்களின் விடுதலைக்காக, பெண்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டவர்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். மிகச் சுலபமாக, பாரதிதாசன், ஆணும் பெண்ணும் சமம்தான் என்பதை உணர்த்தி இருக்கிறார். 'ஏணையை அசைத்தலும் கூடும்; அதை யார் அசைத்தாலும் ஆடும்' என்பது அவருடைய கவிதை வரி. குழந்தை தூங்கும் ஏணையை, அது விழித்துக்கொள்ளும்போது, பெண்கள் அதை அசைத்தாலும் ஆடும்; பெண்கள் மாத்திரமல்ல, அதை ஆண் அசைத்தாலும் ஆடும். ஆண் அசைக்கின்றான் என்பதற்காக ஏணை ஆடாமல் இருந்துவிடாது. ஆனால், ஏணையை அசைப்பது பெண்களுக்குத்தான் உரியது என்று இருந்து விடாமல், ஆண்களும் ஏணையை அசைக்க வேண்டும்; குழந்தையைப் பராமரிக்க வேண்டும்' இது, முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மேடையிலே பேசிய பேச்சின் சுருக்கம். ஆண் ஏணையை அசைத்தாலும் ஆடும் என்று பேசிய முன்னாள் முதல்வர் அவர்கள், மேடை அழகுக்குப் பேசி இருக்கிறாரே தவிர, தொட்டிலிலே கொண்டுவந்து போட்ட குழந்தைகளுக்கு, அந்தத் திட்டத்திற்கு அவர் குறிப்பிட்ட ஆண்டில் பணத்தை ஒதுக்கீடு செய்யவில்லை என்று சொன்னால், தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள், (குறுக்கீடு) தயவுசெய்து நான் பேசி முடித்ததற்குப் பிறகு அவர் பேசலாம். நான் யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு பேசவில்லை. (குறுக்கீடு)

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அமைச்சர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. அவர் பேசி முடித்தவுடனே நான் உங்களைப் பேச அழைக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அடுத்து, 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்'. இந்தப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை மிக அற்புதமான திட்டத்தை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த நாட்டு மக்களுக்கு அறிவித்தார்கள். இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். ஆண் வாரிசு வேண்டுமென்கிற மனப்பான்மையைக் குறைக்கவும், பெண் சிசு வதையைத் தடுக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டினை ஊக்குவிக்கவும், பெண் கல்விக்கு வழி செய்யும்வகையில் சிறிய குடும்பமே சிறந்தது என்கிற முறையிலே, இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தார்கள். பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்தவுடனேயே, நிதிநிலை அறிக்கையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள். 80 ஆயிரம், 40 ஆயிரம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்களே, இது வார்த்தைக்கு மட்டும் தானா; இதை எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். 'நீங்கள், சொன்னதைச் செய்வீர்கள், செய்வதைச் சொல்வீர்கள்' அது உங்களுடைய பாலிசி; ஆனால் எங்கள் இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்வார்; எதை நிறைவேற்ற முடியுமோ அதைத்தான் திட்டங்களாகத் தீட்டிக் காட்டுவார் (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு பெண் குழந்தை பிறந்தவுடன், பெற்றோரில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்தபின், அந்தக் குழந்தைக்குப் பொருந்தும். ஆண் குழந்தை இருக்கக் கூடாது. குழந்தையின் பெயரின் தொடக்கத்திலே 20,650 ரூபாய் வைப்பு நிதியாக, நிதி நிறுவனத்தில் செலுத்தப்படும். செலுத்தப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவினில், இத்தொகை 35,704 ரூபாயாக உயரும். இத்தொகை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 18 ஆயிரம் ரூபாய் மாதந்தோறும் வட்டி கிடைக்கும் திட்டத்தின் கீழும், மீதமுள்ள 17,704-தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழும் வைக்கப்படும். மாதந்தோறும் வட்டி வழங்கும் திட்டத்தில் வைக்கப்படும் 18 ஆயிரம் ரூபாய், தற்போதைய வட்டி விகிதத்தில் மாதம் 150 ரூபாய் வட்டியாகக் கிடைக்கும். இந்தத் தொகை அந்தக் குழந்தைக்கு ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படும்.



ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே இதே முறையைத்தான் பின்பற்றியிருந்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இவர்களெல்லாம் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் என்று சொல்லி, அந்த pass புத்தகம்கூட ஒழுங்கான நடைமுறையிலே வழங்கப்படாமல் இருந்ததை, இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் புத்துணர்ச்சியூட்டி புதுமையான புரட்சிகரமான. திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். 1992-93, 1993-94-ல் 6,886 குழந்தைகளும், 1994-95-ல் 8 ஆயிரம் குழந்தைகளும், 1995-96-ல் 12,019 குழந்தைகளும் ஆக மொத்தம் 26,905 குழந்தைகளும், இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்திற்காக 11,44,30,000 ரூபாய் சிறப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறது. புத்தகம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு, அந்தத் திட்டத்தை மாற்றுவதாகச் சொல்லி, முழுவதுமாக பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்பதையே மாற்றி குழந்தைகள் பெயரிலே நாங்கள் 5 ஆயிரம் தருகிறோம் என்று சொல்லி, திருமணத்திற்கு 20 ஆயிரம் வழங்கப்படும் என்று சொல்லி, 1996-க்குப் பின்னர் இந்தத் திட்டம் மாற்றப்பட்டதால் Pass புத்தகங்கள் எல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவையெல்லாம் அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருக்கிற குறிப்புகள். நான் ஏதோ வேண்டுமென்றே பழி சொல்ல வேண்டுமென்கிற நோக்கத்தோடு இதைச் சொல்வதற்கு வரவில்லை.

அடுத்து, மகளிர் மேம்பாடு Gas Connection தி.மு.க. ஆட்சியில் கொடுத்தார்கள் எரிவாயு தந்தார்கள். சுய உதவிக் குழுக்கள் மூலமாக எரிவாயுக்கள் தேவையை அறிந்து வழங்குவோம் என்று புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆகஸ்ட் 15-ந் தேதி கோட்டையிலே கொடியேற்றுகிறபோது சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவர்கள் தந்த இலவச எரிவாயுவினுடைய தரத்தையும், அவர்கள் ஏற்படுத்தி இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினைகளையும்—ஒரு சிலிண்டர் வழங்கும் இணைப்புக்கு ரூ. 2600, இரண்டாவது சிலிண்டர் வழங்கும் இணைப்புக்கு ரூ. 3500. 36 மாதத்திலே ஒரு சிலிண்டர் என்றால் ரூ. 2600, இரண்டாவது சிலிண்டர் என்றால் ரூ. 3500. இந்த ரூ.3500/-க்கு 36 மாதத்தில் மாதந்தோறும் சம அளவிலே திருப்பிச் செலுத்தக்கூடிய வகையிலே வட்டியோடு திருப்பிக் கொடுக்க வேண்டும். ரூ.3500/-க்கு வட்டி 36 மாதத்திலே கிட்டத்தட்ட ரூ.6,000/- வந்துவிடும். இலவச எரிவாயு தருகிறேன் என்று சொல்லி, கடந்த ஆட்சியாளர்களுடைய பெயரிலே, கடனுதவி பெற்று கொடுக்கப்பட்ட

எரிவாயுவிலே, கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய விதத்திலேகூட தவறான தகவலைச் சொல்லி இதன் மூலமாக வட்டி வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கோட்டையிலே கொடியேற்றுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், பெண்களுடைய பிரச்சினைகளை, அவர்கள் படக்கூடிய துயரங்களைத் தெளிவாகத் தெரிந்த காரணத்தால், இன்றைக்கு திருப்பி வாங்காமலேயே ஆயிரம் ரூபாய் இலவசமாகத் தரப்படும் எரிவாயுவிற்கு என்று அறிவித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-15

இங்கே சுய உதவிக் குழுக்கள் பற்றிச் சொன்னார்கள், மாண்புமிகு உறுப்பினர்கள். கடன் வாங்குகிறபோது பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன என்று சொன்னார்கள். இந்த சுய உதவிக் குழுக்கள் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் என்ன நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டனவோ, அதை நிறைவேற்றாமல் கடந்த மூன்றாண்டுக் காலங்களாக, ஏன் கடந்த நான்காண்டுக்காலங்களாக செயல்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு தேர்தல் வரப்போகிறது என்று தெரிந்ததற்குப் பிறகு, தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதற்காக அதற்கு முன்னுரிமை தருவதாக அந்தச் சுய உதவிக் குழுக்களுக்கு, கடைசி ஒரு வருட காலத்திலே உயிர் கொடுத்திருக்கிறார்கள், அவ்வளவு தான். ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொண்டு நிறுவனங்களின் மூலமாக சுய உதவிக் குழுக்களை ஊக்குவித்து, அவர்களுக்குக் கடன் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்த பிரச்சினை, தையல் மிஷின். மரியாதைக்குரிய சத்தியவாணிமுத்து அம்மையார் பெயரிலே, தையல் மிஷின் வழங்கக்கூடிய திட்டம், மிகவும் அற்புதமான திட்டம். அந்தத் திட்டம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கிறார்கள். மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் நீங்கள் கண்டிருப்பீர்கள். கடந்த மூன்றாண்டு காலங்களாக ஒரு தையல் மிஷின்கூட எந்த ஏழை விதவைக்கோ, கணவனால் கைவிடப்பட்ட பெண்ணுக்கோ, வறுமைக்கோட்டிற்குக்கீழ் பிழைப்பு நடத்தி சாப்பிடவேண்டும் என்று சொல்லக்கூடிய எந்தப் பெண்ணுக்குமே இலவசமாக அந்தத் தையல் எந்திரங்கள் போய்ச் சேரவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நான் கணக்கு



வைத்திருக்கிறேன், இலக்கு வைத்திருக்கிறேன். அந்தத் தையல் மிஷின், பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் புண்படுத்தவில்லை. ஆதாரத்தோடு சொல்கிறேன். சில விஷயங்கள் மட்டும்தான்; காலத்தின் அருமை கருதி. 1990-1991 1991-லேயிருந்து 1996 வரைக்கும் அரசு நிர்ணயம் செய்திருக்கிற அத்தனை தையல் மிஷின்களும் எங்களுடைய அம்மா ஆட்சிக் காலத்திலே ஒழுங்காக, முறையோடு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 1996-2001 வரைக்கும் 8000 மிஷின்கள் ஆர்டர் செய்யப்பட்டு வழங்கப்பட்ட மிஷின்கள் எவ்வளவு தெரியுமா? 2215 மிஷின்கள்தான். 8000 மிஷின்கள் ஆணையிடப்பட்டு, 2215 மிஷின்கள்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று நான் உள்ளே போக விரும்பவில்லை. இது எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கு. வேண்டுமானால் மக்கள் பிரதிநிதிகள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்; அவர்களுக்குத் தெரியும். எந்தப் பெண்ணாவது மனு செய்துவிட்டு, தையல் மிஷின் ஒழுங்காகக் கொடுத்திருக்கிறார்களா? யாரும் எங்களிடத்திலே சொல்லவில்லை. இதெல்லாம் தி.மு.க. சர்க்கார் செய்திருக்கக்கூடிய, மிகப் பெரிய மோசடி நான் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இங்கே பேசினார்கள், ஊனமுற்றோர் மறுவாழ்வு பற்றி. ஊனமுற்றோர் மறுவாழ்வு குறித்து மாண்புமிகு பெரியவர் பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே பல்வேறு நல்ல கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். உறுப்புக் குறைவு என்பது ஒரு குறையே அல்ல. அது ஒரு பழியும் அல்ல; பாவமும் அல்ல. முயற்சிக் குறைவுதான் உண்மையான குறைவு ஆகும்; பழியும் ஆகும்; பாவமும் ஆகும் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். இந்த உண்மையைக் கருத்திலே கொண்டுதான் 1993-ல் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு, ஊனமுற்றோர் துறைக்கு என்று தனியாக ஒரு ஆணையரை நியமித்து, அதன்மூலம் மக்களுக்கு, ஊனமுற்ற நபர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டார். இப்படி உத்தரவிட்டதே தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-20

அடுத்து, சமூகப் பாதுகாப்புத் துறை. நம் நாட்டிலே உள்ள சிறார்கள் பயன்பெறும் வகையில், இளைஞர் நீதி நிர்வாகம் மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு தமிழ்நாட்டிலேயும் அமலாக்கம்

செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு, ஏற்கெனவே, இளைஞர் நீதி நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதில் முதலிடம் வகித்து வருகிறது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் இளைஞர் நீதி நிர்வாகத்தின்கீழ் சிறுவர் இல்லங்களுக்கு வகுக்கப்பட்ட வரன்முறைகளில் இடவசதி, உணவு, உடை, கூடுதல் வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற நன்மைகள் சிறார்களுக்கு அமைத்துத் தரப்பட்டுள்ளன. இதிலே பல்வேறு தரப்பட்ட சிறுவர்கள், அதாவது சமுதாயத்திலே தவறு இழைத்த சிறுவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு நல்ல போதனைகளைச் சொல்லி, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 10 இடங்களிலே கூர்நோக்கு இல்லம், சிறப்பு இல்லம், இளைஞர் இல்லம், பிற்காப்பு நிறுவனம், இளைஞர் நலக் குழுமம், மகளிர் காப்பகம், குறுகிய கால மீட்பு இல்லம், இடைவெளி இல்லம், இளைஞர் வழிகாட்டி நிலையம், சாலையோரச் சிறார்களுக்கான இரவு தங்கும் விடுதிகள் இவற்றையெல்லாம் நிறுவி, இன்றைக்கு நல்லமுறையிலே நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் அதைத்தான் சொன்னார்: சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் ஒருவர் இறந்து விட்டார்; அதுகுறித்து விசாரணை தேவை; கடந்த தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற சம்பவம் என்று சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை ஏற்று, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்று நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 15 அம்சத் திட்டம். இந்த 15 அம்சத் திட்டம், புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சிறப்பாக செயல்படுத்தப்பட்ட திட்டம். இந்தத் திட்டங்களை, பெண்கள் சம்பந்தப்பட்ட இந்தத் திட்டங்களை எல்லாம் அன்னை தெரசா அவர்கள்கூட இங்கே வந்து பாராட்டிவிட்டுப் போய் இருக்கிறார். இந்த 15 அம்சத் திட்டம், இப்போது 18 அம்சமாக உயர்த்தப்பட்டு 18 அம்ச மகளிர், குழந்தைகள் நலன் என்கிற பெயர் சூட்டப்பட்டு சிறப்புடன் செயல்படுத்தப்படும். புரட்சித் தலைவி கொண்டு வந்த காரணத்தால் 15 அம்சத் திட்டத்தை ஒருங்கிணைக்கக்கூடிய துறை, சமூக நலத் துறையாக செயல்பட்டு வந்தது. கல்வித் துறை, சுகாதாரத் துறை, இன்னும் நகர நிர்வாகத் துறை, நகராட்சித் துறை இவையெல்லாம் ஒன்று சேர்த்து 15 அம்சங்கள் உள்ளன. அந்த 15 அம்சங்களும் குறிப்பாக குழந்தைகளுக்காக, பெண்களுக்காக போடப்பட்ட 15 அம்சங்கள். குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறப்பதை 10 சதவிகிதத்திற்கு கீழ் கொண்டுவருதல்; தடுப்பூசி முறைகளால் உயிர்க்கொல்லி நோய்களைத் தவிர்த்தல்; சிசு மரண விகிதத்தினைக்



குறைத்தல்; குழந்தைகளிடம் காணப்படும் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச் சத்துக் குறைபாடுகளைக் குறைத்தல்; நுண்ணிய ஊட்டச் சத்துக் குறைபாடுகளை முழுமையாக நீக்குதல்; அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மகப்பேறு மையங்களை பெண் மற்றும் குழந்தை நட்பு மையங்களாக மாற்றுதல்; அனைவருக்கும் தொடக்கக் கல்வி; பெண்கள் கல்வி என்கிற நிலையை உயர்த்துதல், இப்படி 15 அம்சங்கள் இருந்தன. இப்போது அவற்றை 18 அம்சங்களாக உயர்த்தி குழந்தைகள், பெண்கள் நலனைக் காப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். காலத்தின் அருமை கருதி அறிவிப்புகளுக்கு வருகிறேன்.

'அம்மா என்றால் அன்பு' என்று சொல்கிறோம். நல்ல உடலில்தான் நல்ல இதயம் இருக்க முடியும். 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்கிறது தம்பி' அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம், தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்' என்று பாடினார் புரட்சித் தலைவர். எதிர்கால இந்தியாவின் சிற்பிகள், ஊட்டச் சத்துக் குறைவினால் வாட்டம் அடையக் கூடாது என்பதற்காக பள்ளிக்குச் சென்று படிக்கும் வயதில் பட்டினியால் வீட்டில் முடங்கிக் கிடந்து விடக்கூடாது என்பதற்காக தீட்டப்பட்ட திட்டம் சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டத்தில் இடைக்காலத்திலே ஏற்பட்டுவிட்ட தொய்வினைப் போக்கி, பணிகளை மேம்படுத்தி, உரிய இலக்கினை அடைவதை உறுதி செய்ய 25 கோடியே 19 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் இந்தத் திட்டத்தைச் சீரமைக்கவும், 9180 சத்துணவுக் கூடங்களைப் பழுது நீக்கி சீர் செய்திடவும், இந்த நிதி செலவிடப்படும் என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் ஆகியவற்றின்கீழ் மொத்தம் 71,721 மையங்களில் சுமார் 2,26,000 பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 4389 பேர் முதுகலைப் பட்டதாரிகள், பட்டதாரிகள், ஆசிரியர் பயிற்சி பட்டப் படிப்பு வென்றவர்கள், தொழிற் கல்வி கற்றவர்கள், வழக்கறிஞர்கள் என உள்ளனர். இவர்களைத் தகுதி வாய்ந்த பணியிடங்களில் பணியமர்த்துவது தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது. இவர்களுக்கேற்ற காலி பணியிடங்களைக் கண்டுபிடித்தல், தொடர்புடைய பணி விதிகளைத் தளர்வு செய்தல், இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச் சுமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இதில்

ஒரு முடிவு எடுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள். மேலும், ஒரு புரட்சிகரமான மாறுதலை அம்மா அவர்கள் கொண்டுவர ஆணையிட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 2-25*

இந்த நாட்டின் எதிர்கால சரித்திரமே சின்னஞ்சிறுக் கைகளை நம்பியே உள்ளது. அந்த மழலைகள் ஊட்டச் சத்துக் குறைவால் வாட்டம் அடைந்திடா வண்ணம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களின் மையங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் இணை உணவு கலவையினை மாற்றி, புரதச் சத்து, வளர்ச்சிக்குத் தேவையான சக்தியை அதிகப்படுத்தி, இணை உணவு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உணவு, மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தின் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவின் பரிந்துரைப்படி மேற்கொள்ளப்பட்டது. இந்த இணை உணவில் கடலை பிண்ணாக்கு மாவும் இருக்காது; சோயா மாவும் இருக்காது; (மேசையைத் தட்டும் ஒலி) வெல்லத்திற்குப் பதிலாக சர்க்கரை சேர்க்கப்படும். சக்தி அதிகம் உள்ள தாவர எண்ணையும் தேவையான அளவு சேர்க்கப்படும். இதனால் 100 கிராம் இணை உணவு உண்பதால் கிடைத்து வந்த 380 கிலோ கலோரி சக்தியானது, இனி 439 கிலோ கலோரி என உயர்த்தப்படும். புதிய கலவையில் தயாரிக்கப்பட்ட இணை உணவின் மாதிரி, மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தின் ஆய்வுக் கூடத்தில் பயன்பாட்டுக் கால அளவு பற்றி அறிய சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இதன் முடிவில் இரண்டு மாவட்டங்களில் இரண்டு திட்டப் பகுதிகளில் முதலில் அறிமுகம் செய்யப்பட்டு, பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.

மேலும், கடந்த காலத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பயனாளிகளான குழந்தைகளுக்கும், சிறுவர், சிறுமியருக்கும் முட்டை வழங்கப்பட்டதில் திருப்தியற்ற நிலை காணப்பட்டது. எனவே, இதனைக் கருத்தில்கொண்டு, நான் முதலில் குறிப்பிட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைப்படி, தற்போது வாரம் ஒரு முறை வழங்கப்பட்டுவரும் முட்டைக்குப் பதிலாக, ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்தில் ஒரு நாள் 20 கிராம் உருளைக் கிழங்கு;



மற்றொரு நாள் 20 கிராம் கொண்டைக் கடலை; மூன்றாவது நாள் 20 கிராம் பச்சைப் பயறு ஆகியவை சமைத்து சத்துணவுடன் சேர்த்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த முட்டை மாற்றத்திற்கான காரணங்களை விளக்கியாக வேண்டும். முந்தைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட முட்டை ஒப்பந்தக்காரர்கள் முட்டை விலை குறைவாக உள்ளபோது மட்டும் முட்டை சப்ளை செய்வதும், விலை ஏறினால் சப்ளையை நிறுத்தி விடுவதுமாகச் செய்து வந்தனர். இதுபோன்று பல மாவட்டங்களில் நடந்து, அப்போதைய ஆட்சியாளர்கள் அறிவியல் ரீதியாக ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றனர். முன் அனுபவம் இல்லாதவர்களையும், நிதி ஆதாரம் இல்லாதவர்களையும், முட்டை விலை குறைவு, உயர்வின்போது சப்ளை செய்யத் திறமையற்றவர்களையும் தேர்ந்தெடுத்துள்ளனர். சில காரியங்கள் முடிந்தவுடன் அவர்கள் தங்கள் கடமை முடிந்ததாகக் கருதி, சத்துணவுக் குழந்தைகளை நினைத்துப் பார்க்கத் தவறிய காரணத்தால் வாரம்தோறும் முட்டை வழங்கப்படுவதில் தொடர்ந்து தவறுகள் நடந்தன. எனவே, முட்டை வழங்குவதில் திருப்தியற்ற நிலை காணப்படுவதால், முட்டைக்குப் பதிலாக அதே சத்துள்ள உணவு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் போக்கைக் கட்டுப்படுத்தவும், பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்கும், குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஊக்கமளிக்கவும், புரட்சிகரமான திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். 1997-98 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டு ஒரு குழந்தை மட்டும் இருந்தால் ரூ.3000 வீதமும், இரு பெண் குழந்தைகள் இருந்தால் ரூ.1500 வீதமும் நிதி நிறுவனத்தில் செலுத்தப்பட்டு, அந்தக் குழந்தைகள் வளர்ந்து 20 வயது ஆகும்போது, ஒரு பெண் குழந்தைக்கு ரூ.58,000-ம் இரு பெண் குழந்தைகளுக்கு ரூ.29,000 வீதமும் வழங்கப்பட்டு வந்த திட்டத்தை நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, புரட்சித் தலைவியின் அரசு மாற்றம் செய்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, முந்தைய ஆட்சிக் காலத்தில் தொட்டில் குழந்தைகள் திட்டம் பின்னடைவு ஏற்பட்ட காரணத்தினால், மீண்டும் புத்துயிர் அளிக்க, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய

மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் வரவேற்பு மையங்களும், இம்மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தை ஏற்பு மையங்களும் அமைக்க தொட்டில்கள் அமைத்து அவற்றைப் பராமரிக்க ரூ.12,96,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-30

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின் வளர்ச்சி மற்றும் அதிகாரப் பகிர்வுக்காகச் செயல்பட்டு வருகிறது. கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து, அவர்களுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்கும்வண்ணம் வங்கிகளின் மூலம் கடன் வசதிகளை ஏற்படுத்தும் பணியை தொண்டு நிறுவனங்கள் மூலமாகச் செய்து—இப்போது அவர்கள் ரூபாய் 101 கோடியே 74 இலட்சம் வரை சேமித்து வைத்திருக்கிறார்கள்.

இவர்களை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக இவர்களுக்கு சிறிய தொழில்களுக்காக லட்சக்கணக்கான அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து லட்சம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாக தொழில் முனைவோர் பயிற்சியும், தொழில்கள் குறித்த பயிற்சியும் அளித்து வங்கிகள் மூலம் கடன் வசதி ஏற்படுத்தக்கூடிய திட்டத்துக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் 20 ஆயிரம் மகளிருக்குப் பயிற்சியளிக்க ரூபாய் 1,66,95,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 2001 ஆம் ஆண்டு மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், ஒருங்கிணைப்பு நிறுவனமாக நியமிக்கப்பட்டு இந்நிறுவனம் 'யூனிசெஃப்' நிறுவனத்துடன் கூட்டாக தற்போதைய நிலையை ஆய்வு செய்து மாநில மகளிர் கொள்கையை பெண்களுக்குச் சம உரிமை அளிக்கும் வகையில் வரைவு செய்யவுள்ளது. பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கும் திட்டம் முதல் படியாக முக்கிய முடிவு எடுப்பதில் சட்டப்படிக்கான அல்லது குழுக்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா' (பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா) துன்பம் தீருவது பெண்மையினாலடா சூரப்பிள்ளைகள் தாயென்று போற்றுவோமடா.



ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகள் மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவிகளையும், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் உதவிகளையும் தற்போது வழங்கப்பட்டுவரும் ரூபாய் ஏழாயிரத்திலிருந்து ரூபாய் பத்தாயிரமாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கும் ஏழை விதவை மகள் திருமண நிதி உதவி மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட வயதினை 20 என அறிவித்து, அனைத்துத் திட்டங்களிலும் பயன்பெறுவோர் குறைந்தபட்ச வயது வரம்பு 20 என இருந்ததை பின்னர் 18 வயது என நன்கு பரிசீலனை செய்யாமல் அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையினை மாற்றி 18 வயதிலிருந்து 20 வயதாக உயர்த்திட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்துக்கு ரூபாய் 55,05,50,000 ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

முதியோர் இல்லம் நடத்திட, முதியோர் இல்லத்துக்கு அரசு மானியமாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட்டு வருகிறது. 40 முதியோர்களைக் கொண்ட ஓர் இல்லத்துக்கு ரூபாய் 250 என்றிருந்ததை ரூபாய் 500 ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது செயல்பட்டுவரும் 10 இல்லங்களுக்கும், புதிதாகத் தொடங்கப்படவுள்ள 4 இல்லங்களுக்குமாக ரூபாய் 20 லட்சம் பராமரிப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ரூபாய் 6.50 லட்சம் போக மீதம் ரூபாய் 13.50 லட்சம் தற்போது வழங்கப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் சிறார்களுக்கு, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு சீருடை தைப்பதில் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. இவற்றிலுள்ள துணி வெட்டும் மையங்களில் உள்ள இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூபாய் 6,40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விருதுநகரில் குழந்தைகள் காப்பகத்துக்கு ரூபாய் 14 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 9 மாவட்டங்களில் இயங்கிவரும் 9 மாவட்ட அலுவலகங்களுக்கு கணிப்பொறி வாங்கிட

[திருமதி பா. வளர்மதி] [2001 செப்டம்பர் 6

ரூபாய் 9 லட்சம் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அரசு குழந்தைகள் காப்பகங்களில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் சமையல் பாத்திரங்கள் 1994-ல் வாங்கப்பட்டவை. அதற்குப் பிறகு திரும்ப வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு புதிய சமையல் பாத்திரங்கள் வாங்க ரூபாய் 1,55,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கெல்லாம் தட்டெழுத்துப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. பழுதுபட்ட நிலையிலுள்ள தட்டச்சுப் பொறிகளுக்குப் பதிலாக 46 தட்டச்சுப் பொறிகள் வாங்க ரூபாய் 3,81,000 நிதியினை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோல ஊனமுற்றோர்பால் பரிவும் பாசமும் கொண்ட அம்மா அவர்கள் 1993-ல் ஆணையத்தை உருவாக்கி, இந்தக் கொள்கையை 1994-ல் வெளியிட்டு, அவர்கள் தடையின்றி நடமாட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும், தலைமைச் செயலகத்திலும், ரூபாய் 65 லட்சம் செலவில் சாய்வுத்தளப் பாதை அமைத்திட தற்போது அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மன வளர்ச்சி குன்றியோருக்கு ரூபாய் 12,000 வருமான வரம்பு உள்ளது. இந்த வருமான வரம்பை நீக்கி அனைவரும் பயணம் மேற்கொள்ள ஏதுவாக இதற்காக ரூபாய் 11,82,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பூந்தமல்லியிலே பார்வையற்றோருடைய பள்ளிக்கூடத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூபாய் 33,76,000 ஒதுக்கப்பட்டுள்ளது. அம்மா அவர்கள் இதைக் களிவோடு அறிவித்திருக்கிறார்கள். கடும் ஊனமுற்றோருக்காக 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகள் தொடங்க மதுரையிலே 6 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு இதையும் அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2·35

அதேபோல பெண்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டில் 6 மையங்கள் தொடங்குவதற்கு 15 இலட்ச ரூபாய் நிதியை பெரும் மனமுவந்து ஒதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல அரசு இளைஞர் இல்லத்தைப் பழுது பார்ப்பதற்கு 10 இலட்ச ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதேபோல 330



2001 செப்டம்பர் 6] [திருமதி பா. வளர்மதி]

மாணவர்கள் நலன் கருதி 3,600 சதுர அடி பரப்பில் நீர் வசதியுடன் கூடிய குளியல் மற்றும் கழிப்பிட வசதியுடன் கூடிய துயில் கூடங்கள் கட்ட ரூ.21 இலட்சத்தை அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சையிலே 12 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 9 மற்றும் 10-ஆம் வகுப்பு தொடங்கிட அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல, சமூக நலத் திட்டத்திற்காக 3 ஆணையரக கணினி அச்சு இயந்திரங்கள் வாங்கிட ரூ. 60,000-மும் ஆணையரக கூட்ட அரங்கத்திற்கு ரூ.54 ஆயிரமும், நகல் இயந்திரத்திற்கு ரூ.78 ஆயிரமும் இரும்பு அலமாரிகள் வாங்க ரூ.1 இலட்சத்து 5 ஆயிரமும் வழங்கியிருக்கிறார்கள். தற்போது சீருடை தைக்கும் பணியை 78 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட தையல் கூலி, விலைவாசி உயர்வினாலும், இயந்திரப் பராமரிப்பு, போக்குவரத்து, மின் கட்டணம், வாடகை போன்றவற்றால் அந்தக் கூலி போதாது என்கிற காரணத்தால் 40,000 பெண்களின் பிரச்சினையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையுள்ளத்தோடு பரிசீலித்து இலவசச் சீருடை தைப்பதற்கான தையல் கூலி விகிதத்தை 50 விழுக்காடு உயர்த்தி 2 கோடியே 14 இலட்சத்து 90 ஆயிரத்து 650 ரூபாய் கூடுதலாக நிதியொதுக்கி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த பிரச்சினை, சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டவர்களாக மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிற தொழு நோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு, தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 அரசு இல்லங்களும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் சென்னை மேலப்பாக்கத்திலும் இயங்கி வருகின்றன. இவர்கள் கடந்த ஆட்சியிலே கவனிப்பாரற்றுக் கிடந்தார்கள். இவர்கள் சொன்ன மிக முக்கியமான பிரச்சினையை ஏற்று தொழு நோயாளிகள் இறந்துவிட்டால் அவர்களுக்கு ஈமச் சடங்கு செய்வதற்கு 200 ரூபாய் என்றிருந்ததை 500 ரூபாயாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

இவ்வளவு நேரம் பொறுமையோடு இந்த அவையிலே நீங்கள் எல்லாம் உட்கார்ந்து இருக்கிறீர்கள். ஆனால் பெண்கள் பிரச்சினை என்று சொன்னால் மிகவும் முணுமுணுத்துக் கொண்டேயிருப்பது என்னுடைய செவிகளுக்கு எட்டியது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர், பெண்கள் பிரச்சினை என்பதால் அல்ல, பசி நேரம் என்பதால்தான். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முன்பே தெரிந்திருந்தால் நீங்கள் சத்துணவோடு இந்தக் கொண்டைக்கடலை சத்துணவையும் சேர்த்து வழங்கி இருப்பீர்கள். நேரம் கொஞ்சம் கடந்துவிட்டது. மிகச் சிறப்பாக உரையாற்றி இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே கோடிக்கணக்கான பெண்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை எல்லாம் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், கணவனால் கைவிடப் பட்டவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு பிரச்சினைகளைக் கனிவோடு பரிசீலித்து அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போய் நிச்சயமாக நிறைவேற்றித் தருவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**டாக்டர். க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, பசி நேரம் இயல்பாகவே கோபம் வரக்கூடிய நேரம். அதனால் விளக்கத்தை மட்டும் கேளுங்கள்.



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருப்பதிலே மகிழ்ச்சி. ஆனால் கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றவற்றை எல்லாம் அவர் வேண்டுமென்றே தவறான செய்திகளைத் தரக்கூடாது என்ற அடிப்படையிலே இவற்றை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1995-96-லே 360 கோடி ரூபாயாக இருந்த நிதியை 2000-2001-ல் 581 கோடியாக ஒதுக்கிக் கொடுத்த அரசுதான் கலைஞருடைய அரசு. அதுமட்டுமல்ல ஏதோ சத்துணவு மையங்களையே புறக்கணித்ததைப்போல இங்கே தவறான செய்திகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 5 ஆண்டுகளிலே 18 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவிலே 1406 சத்துணவு மையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல அங்கன்வாடி மையங்களைக்கூட சீரமைப்பதற்காக மொத்தம் இருக்கிற 15139....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒரு விளக்கம் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை; தவறான செய்திகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். 15139 அங்கன்வாடிகளிலே 6250 அங்கன்வாடிகளை 7000 ரூபாய் வீதமாகச் செலவிட வேண்டுமென்று 1-3-2000-லேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதிலே 6250 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, தவறான தகவலைக் கொடுக்கக் கூடாது. அதுமட்டுமல்ல, மற்றொன்றையும் சொன்னார்கள். ஒரு தையல் மெஷின்கூட கொடுக்கவில்லையென்று சொல்லிவிட்டு, அவர்களே ஐந்து ஆண்டுகளில் 2774 தையல் மெஷின்கள் கொடுக்கப்பட்டன என்றும் சொல்லியிருக்கிறார்கள். குறை சொல்ல வேண்டுமென்றால் அவர் சொல்லட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், புள்ளிவிவரங்கள் எங்களிடமும் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2-40

மேலும், அதுமட்டுமல்ல, அன்றே முதலிலே நான் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தேன். அதுகூட, இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தை 1992 ஆம் ஆண்டே கொண்டு வந்ததாக இந்தக் குறிப்பிலே

சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் குறிப்பிலே சொல்லப்பட்ட திட்டம் என்ன என்பதைப் பற்றி கீழே உள்ள திட்டங்களையெல்லாம் விவரித்திருந்தாலும் அதைப் பற்றி விவரிக்கவில்லை. ஏன் என்று அவர்களுக்கும் புரியும், எனக்கும் தெரியும். ஏனென்றால், 1992-லே சொல்கிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள். நீண்ட விளக்கம் வேண்டாம்.

**டாக்டர் க. பொன்முடி:** 49 ஆயிரம் பேர் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்காமல் இருந்தது. கடந்த கால ஆட்சியிலே ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விளக்கங்கள் எல்லாம் வேண்டாம். இன்னொரு வாய்ப்பு வருகிற நேரத்திலே நீங்கள் இந்த விளக்கங்களையெல்லாம் சொல்லலாம். ஏதாவது ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** கடைசிக் கேள்வி. இதிலே இந்தத் திட்டத்திலேகூட குறிப்பாக ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான செலவு 19 கோடி ரூபாய். இப்போது நீங்கள் 22 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். 22 கோடி, 28 கோடி ஒதுக்கியிருக்கிறபோது, இவர்களுக்குக் கிட்டத் தட்ட ஓர் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேருக்குத்தான் கொடுக்க முடியும். ஆனால், கடந்த 4 ஆண்டுகளிலேயே ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பேருக்கு, ஒரு பெண் குழந்தை பெற்றவர்களுக்கும் இரண்டு பெண் குழந்தை பெற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 25 ஆயிரம் பேருக்காவது கொடுக்க வேண்டிய சூழ்நிலை வரும். நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகை, உங்கள் கணக்குப்படி பார்த்தால் கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேருக்குத்தான் வரும். மீதி இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைக் கேட்க நான் விரும்புகிறேன். அதுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவ்வளவுதான். மற்றொன்று பின்னால் வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீண்ட விளக்கம் இருந்தால் இன்னொரு தடவை சொல்லலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார். நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து மூன்று மாத காலத்திலே போடப்பட்டதுதான் இந்த 22 கோடி, 25 கோடி என்கிற கணக்கெல்லாம். ஆனால், ஐந்து ஆண்டு காலத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்? சத்துணவுத் திட்டத்திற்கு நீங்கள் யானைப் பசிக்கு சோளப் பொரி போட்டதைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) 2 இலட்சத்து 26 ஆயிரம் பேர் வேலை செய்யக்கூடிய சத்துணவு மையங்கள், இலட்சக்கணக்கான சத்துணவு மையங்கள் பழுதடைந்து இருக்கின்றன என்பதை நான் சொல்ல வேண்டாம். இந்த மன்றத்திலே பேசி முடித்திருக்கிற, முன் வரிசையிலே உட்கார்ந்திருக்கிற உறுப்பினர்கள் அனைவருக்குமே தெரியும். எந்தச் சத்துணவுக் கூடமாவது ஐந்து ஆண்டு காலங்களிலே பராமரிக்கப்பட்டிருக்கிறதா? நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டிருக்கிறதா? தெளிவாகத் தெரியும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நீங்கள் சொன்ன விளக்கமும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. அமைச்சர் சொன்ன விளக்கமும் அவைக் குறிப்பிலே இருக்கிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், வேலை நடக்கவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (ழ) கோரிக்கை எண் 29—சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. பாரிமோகன்.

**திரு. இ. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.8,24,39,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 21 - மீன்வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21 - மீன்வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மீன்வளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.51,12,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை'. என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 2-45

### (இ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22-கால்நடை வளர்ப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல்ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.



திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிச்சாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,65,14,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோளை ஏற்று, திரு. துரைமுருகன், திரு. பரிதி இளம்வழுதி போன்ற சான்றோர்களுடைய வேண்டுகோளை எல்லாம் ஏற்று, பேரவையின் அனுமதியுடன் பேரவை மீண்டும் பிற்பகல் 5-00 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 2-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

பிற்பகல் 5-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (ச) கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 10-பால் வழங்கு. செயல் திட்டங்கள், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.56,44,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1392, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 112, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள கூட்டு பால் பண்ணையில் பாலில் தண்ணீர் கலப்படம் செய்ய விநியோகம் செய்வதைத் தடுத்து தரமுள்ள பால் சப்ளை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,44,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2183, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,44,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3069, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3375, திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1748, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1859, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2717, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,44,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3185 திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3186, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் 2-வது தொகுதியில் பால்பண்ணை தொடங்க முன்வரும் ஏழை விவசாயிகளுக்கு மானியத்தோடு கடன் வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,44,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2623 டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 770, திரு. க. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1970, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2955, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,44,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 868, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1238, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

@1132 முதல் 1158 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



***திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பால் வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் நான் கலந்து கொள்வதற்குண்டான வாய்ப்பு அளித்தமைக்காக தங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரண எளிய நெசவாளர் குடும்பத்தில் பிறந்த என்னை, என்னுடைய உயிருக்கும் மேலான தலைவர் அண்ணன் கலைஞர் அவர்கள் இந்த அவையினுடைய உறுப்பினராக ஆக்குவதற்காக, திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி திமுக. வேட்பாளராக என்னை அறிவித்த நேரத்தில் ஒரு கருத்தினைச் சொல்லி என்னை பெருமைப்படுத்தினார்கள், 'ஓய்வறியாத உழைப்பாளி, கழகத்தின் எளிய தொண்டன்' என்று. அப்படி அறிவித்து என்னைப் பெருமைப்படுத்திய என் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், முழு மனதோடு அதை ஏற்றுக் கொண்ட திமு. கழகப் பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், திமுக. பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்களுக்கும், சிங்காரச் சென்னையினுடைய பேராற்றல்மிகு மேயர் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை இந்த மாமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமைக்காக திருவல்லிக்கேணி தொகுதியின், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், வாக்கு அளிக்கத் தவறிய பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெற்றிக்கு உழைத்த உயிரினிய கழகத் தோழர்கள், தோழமைக் கட்சித் தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த விவாதத்தில் என்னுடைய உரையை நான் ஆரம்பிக்கின்றேன்.

திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து வருகை தந்துள்ள என்னுடைய குரலோசை அடங்காமல், உங்களுடைய மணியோசையை ஒலித்திட வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் பால்வள நிர்வாகத்தில் எந்தவிதத் தனிக்கையும் நடைபெறவில்லை என்று மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கோவையில் ஒரு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியுள்ளார்கள். தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள பால் பெருக்குத் துறை மானியக் கோரிக்கை எண் 10, கொள்கை விளக்கக் குறிப்பு 2001-2002-ல் பக்கம்

36-ல் 1996-97 இறுதித் தணிக்கை என்ற தலைப்பில் மொத்தமுள்ள 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் 16 ஒன்றியங்களில் இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும் 1997-98 ஆம் ஆண்டில் 17 ஒன்றியங்களில் 14 ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும், 1998-99 ஆம் ஆண்டில் 17 ஒன்றியங்களில் 13 ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும், 1998-99 ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 88 கூட்டுறவு பால் சங்கங்களில் 9,063 சங்கங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும், தி.மு.க. அரசு வெளியிட்ட 2000-2001 கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 24-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இந்த அரசின் ஆதாரத்தையே மேற்கோள் காட்டி அமைச்சரின் குற்றச்சாட்டை மறுப்பதோடு, தலைவர் கலைஞரின் கழக ஆட்சிக் காலத்தில் பால் வளத் துறை நன்றாக நடந்தது என்றும், தணிக்கைகள் நடந்துள்ளன என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-05

அடுத்து, தி.மு.க. ஆட்சியில் பல பால் உற்பத்தியாளர்களுக்கு 50 நாள் வரை பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவையில் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறி உள்ளார்கள். எங்கள் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் தி.மு.க. ஆட்சியில் பால் பட்டுவாடா நிலுவை 28 நாட்கள் மட்டுமே இருந்தது என்று முன்னாள் மாண்புமிகு அமைச்சர் சுந்தரம் அவர்கள், தன்னுடைய அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளார்கள் என்பதை மேற்கோள்காட்டி அமைச்சரின் குற்றச்சாட்டை மறுக்கிறேன். அத்துடன், தலைவர் கலைஞர் ஆட்சியின்மீது பால் உற்பத்தியாளர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்து இருந்தார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 1980-ல் மதுரையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக மாதவரம் பால் பண்ணையில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட ஒரே காரணத்திற்காக, கடந்த உங்களின் அரசால் பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களில் 1990 ஆம் ஆண்டு கழக ஆட்சியின்போது 370 தொழிலாளர்களும் மீண்டும் 1997 கழக ஆட்சிக் காலத்தில் 310 தொழிலாளர்களும் தலைவர் கலைஞர் அவர்களால் கருணையோடு பணியமர்த்தப்பட்டார்கள். இதுதான் தலைவர் கலைஞர் அவர்கள் தொழிலாளர்கள் மீது கொண்டுள்ள அக்கறை என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்துறையில் ஊழியர்கள் அதிகப்படியாக இருப்பதாகவும், ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறித்து பரிசீலிக்கப்படுவதாகவும் கூறியுள்ளார். அப்படி ஊழியர்களை ஆட்குறைப்பு செய்ய வேண்டாம் என்று ஊழியர்களின் நலனைக் கருதி இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். பால் வளத் துறை தொடங்கப்பட்ட 1958 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழகத்தில் எப்போதும் இல்லாத அளவு தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் சராசரி பால் கொள்முதல் 18 இலட்சம் உயர்ந்தது என்பதை தலைவர் கலைஞரின் சாதனையாகக் குறிப்பிட்டு மகிழ்கின்றேன்.

தமிழகத் தாய்மார்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் 391 பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் பெண்களுக்காகவே அமைக்கப்பட்டன. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் நடத்தும் மொத்தம் 34 பாலகங்களில் 8 பாலகங்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அனுப்பப்பட்ட மகளிருக்கு வழங்கப்பட்டன. அந்த மகளிர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடர்ந்து நடத்தி பலன்பெற ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் ஆட்சியில் இத்துறையில் தொலைநோக்குத் திட்டம் 2010 என்ற திட்டத்தின்கீழ் தேசிய பால் வள வாரியத்திடமிருந்து நிதியுதவிப் பெற்று மொரப்பூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல், போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம். அமைத்தல், அம்பத்தூரில் பால் உட்பொருட்கள் உற்பத்தி செய்யும் ஒரு பால் பண்ணை அமைத்தல் ஆகிய இம்மூன்றுத் திட்டங்களைத் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அரசும் இத்திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பால் உற்பத்தியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை அக்டோபர் 1996-ல் கழக ஆட்சி அமைந்தவுடன் பரிவுடன் பரிசீலித்து 7.7 சதவீதம் வரை இதர சத்துள்ள பாலுக்கு மொத்த திடப்பொருள் அடிப்படையில் கொள்முதல் விலையை அறிவித்து பால் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இப்போது, இந்த அரசு அந்த உத்தரவை ரத்து செய்து பால் உற்பத்தியாளர்களை மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. இதை உடனடியாக மாற்றியமைத்து கழக அரசில் பால் உற்பத்தியாளரிடம் பால் கொள்முதல் செய்தது போன்று செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திண்டுக்கல், தருமபுரி, வேலூர் மாவட்டங்களில் வாரம் ஒரு முறை பால் கொள்முதல் விடுமுறை விடுகின்றனர். இதையும் ரத்து செய்து எல்லா நாட்களிலும் பால் கொள்முதல் செய்ய வேண்டுமென்றும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர், பால் விலை உயரும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மக்கள் நலன் கருதி பால் விலையை உயர்த்த வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், என் தொகுதியைப் பற்றி சில பிரச்சினைகள்.

*பிற்பகல் 5-10*

என்னுடைய தொகுதியில் குறிப்பாக 3 குப்பங்கள் உள்ளன. மாட்டாங்குப்பம், அயோத்தி குப்பம், நடுக் குப்பம் என்று 3 குப்பங்கள் உள்ளன. இந்தப் பகுதியில் வாழக்கூடிய அனைத்து தோழர்களும் மீனவப் பெருமக்கள். அவர்களுடைய வாழ்க்கையே தண்ணீரில்தான் இருக்கிறது. இருந்தாலும் குடிக்கும் தண்ணீருக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குறித்த வேளையில் தண்ணீர் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, லாரிகளில் தண்ணீர் வழங்கக்கூடிய பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. லாரிகள் குறுகிய தெருக்களில் வர முடியாத நிலையில் பிரதான தெருக்களில் நின்று லாரிகளில் தண்ணீர் தருகிறார்கள். அது எந்த நேரத்தில் வரும்? நள்ளிரவில் வருமா, காலை வருமா என்று மக்களுக்குத் தெரியாமல் தாய்மார்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நாகோஜிராவ் சந்து, பேயாழ்வார் சந்து, திப்பு தெரு, பேகம் தெரு, சந்தா தெரு, ஈடிப்போ தெரு, வெங்கடேசபுரம் சந்து, பெசன்ட் லேன் போன்ற பகுதிகளில் லாரிகள் வரவே முடியாது. பிரதானச் சாலைகளில்தான் லாரிகளை நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறாக தண்ணீர் வழங்க வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வழங்குகின்றார்கள். அதை எப்படி வழங்க வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி, இந்த நேரத்தில் இந்தத் தெருவிற்கு தண்ணீர் வரும் என்று அறிவித்தால் தாய்மார்கள் பல பணிகளை முடித்துக்கொண்டு தண்ணீர் வரும் நேரத்தில் காத்திருப்பார்கள். எந்த நேரம் வருமென்று தவித்துக்கொண்டு, அவர்கள் குடத்தை வைத்துக்கொண்டு அலைய வேண்டிய அவசியம் இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



அதோடு என்னுடைய பகுதியில் 94-வது வட்டத்தில் தீர்த்தபாலீஸ்வரர் கோயில் நிலம் ஒன்று உள்ளது. அந்தக் கோயில் குடியிருப்பில் சுமார் 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கே குடியேறி உள்ளன. அங்கு குடியேறியுள்ள அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அம்மக்களுக்கு எரியாத வீடுகள் அமைத்துத் தந்தார்கள். எரியாத வீடுகள் அமைத்துத் தந்துவிட்ட அந்த நேரத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் எங்களுடைய தளபதி ஸ்டாலின் அவர்கள் மேயராக வந்தவுடன் அந்த வட்டார நகர மன்ற உறுப்பினர் ஜி. முருகையயன் என்பவர் அவரிடத்தில் அணுகி, அந்த மக்களுக்குச் சாலை வசதி செய்து தந்தார்கள். வடிகால் வசதி செய்து தந்தார்கள். வீதி விளக்குகளை அமைத்துத் தந்தார்கள். வீதிக்கு வந்த விளக்கு அவர்களுடைய வீட்டிற்கு இன்னும் வரவில்லை. என்ன காரணம் என்றால், இரண்டு துறைகள் சம்பந்தப்பட்ட இடமாக அது இருக்கின்றது. அந்த நிலம் அறநிலையத் துறைக்குச் சொந்தமானது. மின் இணைப்புக் கேட்பது மின்சாரத் துறையினிடத்திலே. இதில் ஏற்பட்ட சிக்கலின் காரணமாக அதை முடிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றோம். அறநிலையத் துறையினுடைய தடையின்மைச் சான்றிதழ் கொடுத்தால் அவர்களுக்கு மின் இணைப்பு தந்து விடுகிறோம் என்று மின் துறையினர் சொல்கிறார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அந்த 81 குடும்பங்களுக்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மின் துறை அமைச்சர் அவர்கள் அந்த 81 குடும்பங்களுக்கும் மின் விளக்கு தருவதன் மூலம் அந்தக் குடும்பங்களுக்கு விளக்கேற்றி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே ஏன் இதைச் செய்யவில்லை என்று உங்களுக்கு கேட்கத் தோன்றும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அன்றைய மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காடு வீராசாமி அவர்கள் அறநிலையத் துறை, சட்டத் துறை, மின் துறை அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆலோசித்து ஒரு அரசாணையை வெளியிட்டார்கள். அந்த அரசாணையில் புறம்போக்கு நிலத்தில் வாழ்கின்ற மக்களுக்கு 10 ரூபாய் முத்திரைத் தாளில் உறுதி எடுத்துக்கொண்டு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணியடிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டுவிட்ட காரணத்தால் சொல்கிறேன், பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** முடித்துவிடுகிறேன். எடுத்துக்கொண்டு அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க உத்தரவு போட்டார்கள். அதில் கோயில் நிலம் என்ற ஒரு வரி இல்லாததினால் அது தடைபட்டு விட்டது. எனவே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், தடையின்மைச் சான்றிதழ் வழங்கி மின் துறை அமைச்சர் மின் இணைப்பு தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 91-வது வட்டம் ஆதி ஆந்திர மக்கள் மிக அதிகமாக வாழ்கின்ற இடம். அது தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில் 1977 ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் எம்.எல்.சி. எலமந்தா அவர்கள்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** முயற்சி செய்து முதற்கட்டமாக 136 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டன. மேலும் 151 குடும்பங்கள் நினைவில் வாழும் நாஞ்சிலார் அவர்கள் முயற்சி செய்து பட்டா கொடுக்கும் பணி முடிக்கும் நேரத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டதால் அது நின்றுவிட்டது. இதற்கு இடையில் 1995 ஆம் ஆண்டு உங்களுடைய அரசு இருந்த நேரத்தில் அந்த மக்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அன்று ஆதிதிராவிட நலச் சங்கத் தலைவர் திரு. பக்ரிதாஸ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அரசிடமிருந்து விளக்கம் வந்ததும் ராம் நகரில் வாழும் மக்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்கள். எனவே, நீங்கள் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றிட வேண்டுமென்று தான் கேட்டுக் கொண்டு, அந்த 151 ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுமார் 72 ஆண்டுகளாக புகழுடன் செயல்பட்டுவரும் லேடி வெலிங்டன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எம்.எட். பட்ட மேற்படிப்பு வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள். உங்களுக்குச் சாதகமான பதிலைச் சொல்ல மின் துறை அமைச்சர் துடித்துக் கொண்டிருக்கிறார்.



**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** லேடி வெலிங்டன் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்கு குடிதண்ணீர் மற்றும் போதுமான வகுப்பறை வசதிகள் இன்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். அங்கே போதுமான கழிப்பறை வசதி இல்லை. பிளஸ் 2 வரை படிக்கக்கூடிய மாணவிகள், பெண் குழந்தைகள் கழிப்பறை வசதிகூட இல்லாத நிலையில் இருக்கின்றார்கள். அதையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவுக்கு வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவருக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறையைப் பொறுத்தவரையில் மின் இணைப்பு கொடுப்பதற்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. விண்ணப்பித்தால் உடனடியாக கொடுப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்படும். ஆனால் சென்னை நகரைப் பொறுத்தவரையில் நிலத்தினுடைய மதிப்பு எவ்வளவு கூடுதல் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அறநிலையத் துறை ஒரு விதியை வகுத்திருக்கிறது. குத்தகை பாக்கி மற்றும் அந்த விலை நிர்ணயத் தொகையைச் செலுத்திவிட்டால் அவர்கள் நிச்சயமாக தடையின்மை சான்றிதழ் கொடுப்பார்கள். அதேபோல குடிசை மாற்று வாரியத்திற்கும் அந்தச் சட்டம் பொருந்தும். எனவே, அந்தச் சான்றிதழைப் பெற்றுவிட்டால் நாங்கள் உடனடியாக மின் இணைப்பு வழங்குவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தை பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கானோர் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் வாழ்கின்ற ஏழை மக்கள் மின் இணைப்பு பெறுவதற்கு ஏற்ப தடை ஆணையை நீக்க வேண்டும் என்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், நன்றி சொல்லப் போகிறீர்களா?

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குத்தகைதாரர்கள் வாடகை தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அறநிலையத் துறையைச் சார்ந்தவர்கள் வாடகை பெற மறுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் அதை வாங்காமல் நிறுத்திவிட்ட காரணத்தினால்தான் இன்றைக்கும் அந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், நன்றி சொல்ல வேண்டுமா?

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் சார்பாக நான் நன்றி சொல்கிறேன். திரு. உசேன் அவர்கள் சார்பாக மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தணிக்கையைப் பற்றி, ஏற்கெனவே ஏதோ கோவையில் அறிக்கை கொடுத்ததாகக் கூறினார். இப்போது உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பைப் பாருங்கள். பக்கம் 37-ல் 1993-94-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை என்று இருக்கிறது. அதை முழுமையாகப் படித்துப் பாருங்கள். எந்த அளவுக்கு தணிக்கை நடந்துள்ளது, எந்த அளவுக்கு தணிக்கை நடக்காமல் உள்ளது என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு முந்தைய ஆட்சிக் காலத்தில் தணிக்கைக்கு எடுத்துள்ளார்கள் என்பதை ஒரு கணம் நீங்கள் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்



மேலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட நபர்களை 1990-லே, 1997-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வேலைக்கு எடுத்ததாகக் கூறினார். 18 (1) செட்டில்மெண்ட் இருக்கும்போது, கோர்ட்டிலே கேஸ் நடந்து அந்தக் காலத்தில்தான் வேலைக்கு எடுத்தார்கள். வேலைக்கு ஆட்கள் அதிகமாக உள்ளார்கள் என்று ஏன் கூறினேன் என்றால், ஒவ்வொரு துறையிலும் அதிகமாக ஆட்கள் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆவின் நிறுவனத்திலும் ஆட்கள் அதிகமாக உள்ளார்கள். அதற்காக 6 கோடி சொச்ச ரூபாய் அரசால் மானியமாக கொடுக்கப்படும் என்று உங்கள் ஆட்சிக் காலத்தில் கூறப்பட்டது. அந்த மானியம் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 77 கொழுப்புச் சத்து, இதர சத்துகள்பற்றி கூறினார்கள். ஏற்கெனவே உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 29-5-2000-லே ஒரு ஜீ.ஓ. போடப்பட்டுள்ளது. அந்த ஜீ.ஓ.விலே கொள்முதல் விலையானாலும் சரி, விற்பனை விலையானாலும் சரி, அந்தந்த ஒன்றியங்கள், அந்தந்த சொசைட்டிகள்தான் அந்த விலையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. அப்படி 29-5-2000-ல் போடப்பட்ட ஜீ.ஓ.-வின்படிதான் இப்போது உள்ளதேயொழிய—அந்த விலையைத் தனி அலுவலர்களாக, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், 17 ஒன்றியங்களில் உள்ளவர்கள், அவர்கள்தான் அந்த விலையை நிர்ணயம் செய்யவேண்டுமேயொழிய—இணையம் செய்யக்கூடாது என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

அதேபோல, மகளிர் சொசைட்டிகள் பற்றிக் கூறினீர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தங்களது பதிலுரையில் விளக்கமாகச் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** சரி, மற்ற விவரங்களை எனது பதிலுரையில் விளக்கமாகக் கூறுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு.

***திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-ல் கிளைக் கழக அமைப்பாளராக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி கழகத்தின் சாதாரணத் தொண்டனாக இருந்த என்னை, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளராகவும், நான்கு முறை ஈரோடு நகரத்தினுடைய நகரச் செயலாளராகவும் ஆக்கி, தந்தை பெரியார் பிறந்த மண்ணில், பேரறிஞர் அண்ணா வளர்ந்த மண்ணில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பெரியார் மாவட்டம் என்று பெயரிடப்பட்டு, புரட்சித் தலைவியினுடைய சோதனையான நேரங்களில் எல்லாம், புரட்சித் தலைவியின் கோட்டையாக விளங்கிய பெரியார் மாவட்டம், ஈரோடு சட்டமன்றத் தொகுதியினுடைய வேட்பாளராக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து, சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சுழன்று எனது வெற்றிக்காக ஈரோடு தொகுதியில் அதிக இடங்களிலே பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டு, சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி சரித்திரம் படைத்த இந்தியத் திருநாட்டின் இமயம், எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி அவருடைய பொற்பாதங்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு அம்மா அவர்களின் வேண்டுகோளையேற்று, என்னை எதிர்த்து ஒரு அமைச்சர் போட்டியிட்ட நேரத்திலும்கூட, அமைச்சரோடு நான் போட்டியிட்ட நேரத்திலும்கூட, என்னை சுமார் 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்த, ஈரோடு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்காகப் பணியாற்றிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியினுடைய நிர்வாகிகளுக்கும், கழகத்தினுடைய நிர்வாகிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

புரட்சித் தலைவர் அவர்களுடைய பொற்கால ஆட்சி அமைப்போம் என்று புனிதப் பயணத்தை மேற்கொண்டு தமிழக மக்களுக்கு மிகவும் அற்புதமான நிதிநிலை அறிக்கையை உருவாக்கி சமர்ப்பித்த இதயதெய்வம் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, ஒரு பிரச்சினை குறித்து நான் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு அனுமதியோடு நியாயமான முறையில்



நடந்து வரும் லாட்டரி திட்டத்திற்கு மாறாக, ஏழைத் தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்கும் வகையில், கள்ளத்தனமாக இரு நம்பர் லாட்டரி என்ற பெயரில், ஒரு நம்பர் லாட்டரியைக் கொண்டு வந்து, அப்பாவி ஏழைக் குடும்பங்களை நசுக்கும் கொடுமையான செயலை அம்மாவின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த பால் வள மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1920 ஆம் ஆண்டு முதன் முதலில் பால் வள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், 1927 ஆம் ஆண்டில் மாநிலத்தில் முதன்முதலில் கூட்டுறவுப் பால் பண்ணை, சென்னை நகரத்தில் அமைக்கப்பட்டது. நியூசிலாந்து நாட்டு உதவியுடன், 1963ஆம் ஆண்டில், மாதவரத்தில் தினசரி 50,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தக்கூடிய, நவீன பால் பதப்படுத்தப்படும் ஆலை அமைக்கப்பட்டது.

பிற்பகல் 5-25

தமிழ்நாட்டில் 1-2-1981 முதல், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், முன்னாள் தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இரண்டாம் பால் பெருக்குத் திட்ட முடிவில், 8.40 இலட்சம் விவசாயப் பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், 5,329 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தற்பொழுது 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் அமைக்கப்பட்ட 7,358 கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 22.74 இலட்சம் உற்பத்தியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்தச் சூழ்நிலையில், பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்தச் சூழ்நிலையில், இந்தப் பால் இணையத்தில் ரூ. 86.88 கோடி நஷ்டம் என்று சொல்லியும், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கான இழப்பு ரூ. 157.56 கோடியும், ஆக மொத்த இழப்பு ரூ. 244.44 கோடி என்றும் கூறப்பட்டுள்ளது. ஆக, இவ்வளவு பெரிய இழப்பிற்கான காரணம், கடந்த ஆட்சியில் பால் வளத்தில் கவனம் செலுத்தாமல், நிர்வாகச் சீர்கேடு செய்து விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பால் பண்ணைகளெல்லாம் தனியார் மயமாக்கப்பட்டு, சென்னையிலேகூட ஏராளமான பால் பண்ணைகள் மூடப்பட்டிருப்பதாக, பால் பூத்துகள் மூடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு ஆளானதற்குக் காரணம் நிர்வாகச் சீர்கேடுதான் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, பால் வள மானியக் கோரிக்கையை முடித்துக்கொண்டு (மேசையைத்தட்டும் ஒலி) சபாநாயகர் அமர்ந்து இருந்தால்கூட பரவாயில்லை. துணைத் தலைவர் அடிக்கடி மணி அடித்துக்கொண்டே இருப்பார் ** (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, என்னுடைய தொகுதிக்கு வந்து விடுகிறேன். தயவு செய்து மணி அடித்துவிடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னதை நீக்கிவிடவும்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மன்னிக்கவும், தெரியாமல் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் நன்றாக நிமிர்ந்து நின்று பேசுங்கள். மைக்கை நன்றாக மேலே தூக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** ஈரோடு தொகுதிக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஈரோடு நகரப் பகுதியில் ஜன நெருக்கடி அதிகமாக இருப்பதால், புறநகர்ப் பகுதிகளை இணைக்கும் ரிங் ரோடு என்ற புறவழிச் சாலை திட்டம் ரூ. 100 கோடி திட்டம் வகுக்கப்பட்டு, அது அம்மா அவர்களின் கவனத்தில் உள்ளது. அதற்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டில் மூன்று நீதிமன்றங்கள் தனித்தனியாக செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. இதனால், பொதுமக்களும், வழக்கறிஞர்களும், காவல் துறையினரும் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1994-95 ஆம் ஆண்டு 4 கோடியே 25 இலட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் அவர்கள், ஐந்தாண்டு காலம் அமைச்சரோடு துணையாக இருந்தார்கள். ஏன் நிறைவேற்றப்படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இந்தத் திட்டம் நிறைவேறுகின்ற நேரத்தில் தானும் பங்குகொள்ள வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர அம்மா ஆட்சியில் திட்டமிடப்பட்டது. அதற்குப் பிறகு கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. அம்மா அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, இந்த நீதிமன்றத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

ஈரோடு நகர பொது மக்கள் நீண்ட கால கோரிக்கையான அதிநவீன மின் மயானம் அமைக்கும் திட்டம், மின் கட்டண உயர்வால் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஒரு யூனிட்டுக்கு ரூ. 3.50 பைசா என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டண உயர்வால் பல பகுதிகளில் மின் மயானங்கள் செயல்படாமல் உள்ளன. குறிப்பாக, கோவையில் ஒரு தனியார் மின் மயானம் இருக்கிறது. ஆங்கு 3 பிரேதங்கள் வந்தால்தான் செயல்படுத்த முடியும்; இல்லையென்றால், நாளை வாருங்கள் என்று திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க மின் மயானங்களுக்கு மின் கட்டணச் சலுகை வழங்க வேண்டுமென்றும், யூனிட் ஒன்றுக்கு ரூ. 1 அளவுக்கு நிர்ணயித்து, இந்த நவீன மின் மயானங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு அம்மா அவர்களின் கனிவானப் பார்வைக்கு இந்தத் திட்டத்தை வைக்கிறேன்.

அதேபோல, சுமார் 5 இலட்சம் ஜனத்தொகை கொண்ட ஈரோடு மக்களின் ஒரே பொழுதுபோக்கு அம்சமான தமிழ்நாட்டிலேயே மிகவும் இயற்கையான அமைப்பில் உள்ள ஈரோடு வ.உ. சிதம்பரனார் பூங்காவை நல்ல முறையில் நவீனப்படுத்தி தமிழக சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் சிறப்புக் கவனம் எடுத்து, அதற்கு அருகில் தாராளமாக உள்ள காலியிடத்தில் தமிழ்நாடு ஓட்டல் அமைத்து, சுற்றுலாத் தலமாக அறிவிக்க அம்மா அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஈரோட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவில் காவேரி ஓடினாலும் குடிவரும் மக்களின் வரவு அதிகமாக உள்ளதால் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) 5 கோடி ரூபாயில் 5 மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கான திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அம்மாவை அன்போடு வேண்டுகின்றேன்.

*பிற்பகல் 5-30*

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு நகரத்தையும் நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிப்பாளையம் நகரத்தையும் இணைக்கும் பாலம் மிகவும் சிறியதாக இருப்பதாலும், இரு நகரங்களுக்கும் தினசரி வர்த்தகத் தொடர்பு அதிகமாக இருப்பதாலும் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாலும், கடந்த 41 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட குறுகிய பாலத்திற்கு அருகிலே மேலும் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்து, கேரளா முதல் நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், சென்னை வரை செல்ல இது முக்கிய வழிப்பாதையாக இருப்பதால், அம்மா அவர்கள் இதற்கு மேலும் புதிய பாலத்தை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தொகுதிக்கும் இது இணைப்பாக இருப்பதனால் அவரும் இதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டில் நீர் மின் உற்பத்திக்காக 150 கோடி ரூபாய் செலவில் இரண்டு நீர் மின் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு மின்சார அமைச்சரவர்கள்கூட வந்து பார்த்துவிட்டு போய் இருக்கிறார்கள். அதை அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு மாவட்டம் தொடர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின்மீது பாசம் நிறைந்த மாவட்டமாக விளங்குகிறது. (மணியடிக்கப்பெற்றது) அம்மா அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தின்மீது தனிப் பற்று உள்ளது. ஆகவே, பல இலட்சம் மக்கள் வாழும் ஈரோடு தொகுதியில் தனியார் கல்லூரிகள் மட்டுமே உள்ளன. ஆகவே, அம்மா அவர்கள் அரசு கலைக் கல்லூரி ஒன்று அறிவித்து ஏழை மாணவர்களின் வாழ்க்கையில் ஒளிவிளக்கேற்றிட அம்மாவின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும், ஈரோடு நகரில் போக்குவரத்து நெரிசலை சீர்படுத்துவதற்காக, நான்கு முக்கிய இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைத்துத் தர அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட அனைத்து வளர்ச்சிப் பணிகளும் நடைபெற்றாலும், சிகரம் வைத்தாற்போல இத்தனை வளர்ச்சிக்கும் காரணமாக உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் ஒரு பல்கலைக்கழகத்தை ஈரோடு மாவட்டத்திற்கு அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதன் மூலமாக என்னுடைய கன்னிப் பேச்சினைத் தொடங்குவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாரம்பரியமிக்க இந்தப் பேரவையில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய மக்கள் தலைவர் ஐயா, ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, எங்கள் தலைவர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கு எனது நன்றியினை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், எனது வெற்றிக்காக எங்கள் தொகுதியில் பிரச்சாரம் செய்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மதசார்பற்ற முற்போக்கு ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் அனைத்து தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, என்னைத் தேர்ந்தெடுத்த சிவகாசி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கரிசல் மண்ணின் மைந்தன் இப்பேரவையின் தலைவராக பொறுப்பேற்றிருப்பதைக் கண்டு சிவகாசி சட்டமன்றத் தொகுதி மக்கள் பெருமைகொள்வதை இந்தத் தருணத்திலே சுட்டிக்காட்ட விரும்புவதோடு அத்தகைய பெருமைக்கு அடிகோலிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமப்புறங்களில் விவசாய மக்களுக்கும், ஏழையெளியவர்களுக்கும் பால் வியாபாரம் அவர்களது அடிப்படை பொருளாதார நிலைமைக்கு ஒரு துணைத் தொழிலாகத் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. விவசாயத்தில் நஷ்டம் ஏற்படும் கால கட்டங்களில் எல்லாம் கிராமப்புறங்களில் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையினை நடத்துவதற்கு பால் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றது. இவ்வாறு கிராமப்புற மக்களுக்கு ஒரு கூடுதல் வருமான ஆதாரமாக விளங்கி

வரும் இந்தத் தொழிலை மேலும் வளர்ப்பதற்கும், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தரமான உயரின கறவை மாடுகள் வளர்த்து, அவற்றிற்கு சிறந்த முறையில் பராமரிப்பு, மருத்துவ வசதி மற்றும் கால்நடை தீவனம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இத்தகைய அம்சங்களைக் கருத்தில் கொண்டு கால்நடைகளின் தரத்தை உயர்த்தும் பணிகளுக்கும், சிறந்த கால்நடை மருத்துவப் பணிகளுக்கும் புதிய ஊக்கமும், ஆக்கமும், அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டுள்ளதை வரவேற்கின்றேன். பால் உற்பத்தியைப் பெருக்குவதில் உயரின கறவை மாடுகள் வளர்ப்பு மற்றும் அவற்றின். பராமரிப்பு ஆகியவற்றில் கிராமப்புற மக்களிடையே இன்னும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய உயரின கறவை மாடுகளை வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதிக அளவில் கடன் வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த அரசினை கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-35*

பால் உற்பத்தியைப் பெருக்குவதில், கால்நடைகளுக்குப் போதிய அளவில் தீவனம் கிடைப்பது மிகவும் இன்றியமையாதது. அதற்காக, தொன்றுதொட்டு இருந்துவரும் மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாக்கவும், அவை தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைத் தடுத்து நிறுத்தவும் அரசு முடிவு செய்துள்ளதை வரவேற்கிறேன்.

கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்கிட, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொருத்தமான நிலங்களை, மேய்ச்சல் நிலங்களாக மேம்படுத்த அரசு உத்தேசித்து இருப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

கிராமப்புற மக்களின் பண்ணை வருமானத்தைப் பெருக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் தம்பதிகளுக்கு கால்நடை பராமரிப்பு முறைகளில் பயிற்சி அளித்து, அவர்கள் மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க வகை செய்கின்ற டென்மார்க் நாட்டு நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டத்தினை, அடுத்த ஐந்தாண்டுகளில் மேலும் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதை வரவேற்பதுடன், இவ்விரிவாக்கத் திட்டம் பால் உற்பத்திப் பெருக்கத்தில் பெரும் பலனை அளிப்பதுடன், அதன் மூலம் கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சியிலே ஒரு



ஏற்றத்தினை உருவாக்கும் என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

கால்நடை மருத்துவ வசதியை அனைத்து கிராம, ஊராட்சிப் பகுதிகளுக்கும் நீட்டிக்க அரசு திட்டமிட்டுள்ளதையும் வரவேற்கிறேன். தீவனச் செலவு, மருத்துவச் செலவு போன்றவை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக பாலின் கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை. மேற்படி செலவினங்களில் ஏற்பட்ட உயர்வைக் கணக்கில் கொண்டு, பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தருவதுடன் அத்தொகையினை நிலுவையில்லாமல் உடனடியாக பட்டுவாடா செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து, அந்த மக்களின் வயிற்றில் பால்வார்க்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் அவசியத்தைப் பொறுத்தவரையில், கடந்த 1999-2000ஆம் ஆண்டிற்கு இலக்கு எண்ணிக்கையாக 387 நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும்கூட, 325 சங்கங்கள்தான் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, 2000-2001 ஆம் ஆண்டில் இலக்கு எண்ணாக 275 நிர்ணயிக்கப்பட்ட போதிலும்கூட, 163 சங்கங்கள்தான் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கடந்த 2 ஆண்டுகளில் திட்டமிட்ட அளவில் இலக்கினை அடையவில்லை என்பதனை, கொள்கை விளக்கக் குறிப்பேடு நன்கு புலப்படுத்துகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கருத்தில்கொண்டு, வருகின்ற ஆண்டுகளில் அத்தகைய சங்கங்கள் அமைப்பதில் அதிகமான இலக்கினை நிர்ணயித்து, அத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து வளர்ச்சியை உருவாக்க வேண்டுமென்று இத்தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தேசிய பால்வள வாரியத்தின் நிதியுதவி பெறப்பட்டு, 24 மாவட்டங்களில் செயல்படுகின்ற பால் பெருக்குத் திட்டத்தினை விருதுநகர் மாவட்டம் உட்பட மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில், சென்னை போன்ற பெரிய நகரங்களில் இயங்கும் தானியங்கி பால் வழங்கும் மையங்களைப்போல, தமிழகத்தின் பிற நகர்ப் பகுதிகளுக்கும் அவற்றை விரிவுபடுத்த வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள அனைத்துத் தொடா வண்டி நிலையங்களிலும, பேருந்து நிலையங்களிலும், ஆவின் பால் மற்றும ஆவின பால உப பொருள்கள் சில்லறை விற்பனை மையங்களை ஏறபடுதத வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சா அவாகளைக கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரையிலே, சில கோரிக்கைகளை முன்வைக்க இருக்கிறேன். சிவகாசி நகரம், தென் தமிழகத்தில, வளா்நது வருகிற ஒரு தொழில் நகரம். அத்தகைய தொழில் நகரத்தினுடைய குடிநீர் தேவை, அதன் அருகிலுள்ள வெம்பக்கோட்டை அணையிலிருந்து பெறப்பட்டு வருகிறது. அந்த அணையின் கொள்ளளவு தறசமயம் 298 மில்லியன் Cubic Feet ஆக இருக்கிறது. அந்தக் கொள்ளளவை, 900 மில்லியன் Cubic Feet ஆக உயர்த்தி, அந்த சிவகாசி நகர் மக்களுக்கு, நிரந்த குடிநீர் வசதியைச் செய்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீவில்லிப்புத்தூா் சட்டமன்றத் தொகுதி அடங்கிய விருதுநகர் மாவட்டத்தின் மேற்குப் பகுதி, விவசாயப் பெருங்குடி (மணியடிக்கப்பெற்றது) மக்களுடைய நீண்டகால கோரிக்கையான பேயனாறு-அழகனாறு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அத்தகைய திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், அதனால் நிலத்தடி நீர் உயர்ந்து, குடிநீர் வசதிக்கும் அந்தப் பகுதியிலே ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்பதற்காக அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-40

எனது தொகுதியில் உள்ள குளங்கள் பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமலும் அதற்குரிய பாசன வரத்துக் கால்வாய்களும் தூர் வாரப்படாமலும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தூர் வாரவேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன். வைப்பாற்றின் குறுக்கே செவல்பட்டி அருகே ஒரு பாலம் அமைத்துத் தா வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். சிவகாசி நகரம் வளர்ந்து வருகின்ற தொழில் நகரமாக இருப்பதால் அங்கு போக்குவரத்து வசதிக்காக புறவழிச் சாலை ஒன்றும் இரண்டு இடங்களிலே இரயில்வே மேம்பாலமும் கட்டித்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில்



மாவட்ட நீதிமன்றம், மாவட்டத் தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்தாலும்கூட பல ஆண்டுகளாக அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடத்தினை கட்டித் தர வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன். பாபநாசம் அணையின் கீழிருந்து சிவகாசி சட்டமன்றத் தொகுதி உட்பட விருதுநகர் மாவட்டத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டம் நிலுவையில் உள்ளது. ரூ.925 கோடி திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக சிவகாசி சட்டமன்றத் தொகுதி உட்பட விருதுநகர் மாவட்டம் முழுவதற்கும் குடிதண்ணீர் வசதியை நிரந்தரமாக செய்துத் தர முடியும் என்பதனை இந்தத் தருணத்திலே சுட்டிக்காட்டுவதோடு அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். பம்பை அச்சங்கோயில் வைப்பாறு இணைப்புத் திட்டத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றினால் விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் சுமார் 1 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறுவதோடு சுமார் 55 இலட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வு காண வாய்ப்பு உள்ளது என்பதையும் இந்தத் தருணத்திலே சுட்டிக்காட்டி அந்தத் திட்டத்தினையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு எந்தவித குறுக்கீடும் இல்லாமல் பேச அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

சாதாரண தொண்டனாக இருந்த என்னை தூத்துக்குடி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து என்னை வடக்கு மாவட்டச் செயலாளராக நியமித்து, பின், விளாத்திகுளம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கிய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது கன்னிப் பேச்சை இந்த அவையிலே தொடங்குகின்றேன் அம்மா.

[திரு. என்.கே. பெருமாள்] [2001 செப்டம்பர் 6

மிட்டாதாரர்களும், மிராசுதார்களும் மட்டுமே அரசியலில் பெரும் பதவிக்கும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் வர இயலும் என்கிற வரலாற்றுக்கே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி என்னைப் போன்ற சாதாரண அடிப்படைத் தொண்டனுக்கும் உயர் பதவி வழங்கிய அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

தென்னக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள மாபெரும் சட்டமன்றமான தமிழக சட்டமன்றத்தில் கருத்துகளை எடுத்து வைத்து மக்கள் பணி ஆற்றிட வாய்ப்பு தந்த எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதங்களைத் தொட்டு, நன்றி தெரிவிக்க வார்த்தைகள் இல்லாமல் என் இதயப்பூர்வமான உணர்வுகளையே காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சை இந்த அவையிலே தொடங்குகின்றேன் அம்மா.

நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயிகளுக்காக இந்த பட்ஜெட்டில் விவசாயிகள் பலன் பெறும் வகையில் 20 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டமும், மகளிர் தொழில் முனைவோர் திட்டமும், பெண் குழந்தைகளைக் காத்திட deposit திட்டமும் கொண்டு வந்திருக்கிறீர்கள் அம்மா.

மேலும் கிராமப்புற மாணவ மாணவியர் தொழில் கல்லூரிகளில் இட் ஒதுக்கீடு 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்வு அளித்தது, கிராமப்புற மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும் அம்மா.

ஆசிரியர் பயிற்சிக்கு ஒற்றைச் சாளரமுறை, ஆசிரியர் இடமாற்றத்திற்கு கலந்து ஆலோசித்தல் முறை கொண்டு வந்தது முறைகேடுகளுக்கு இடமில்லாமல் ஆக்கிவிட்டது அம்மா.

தேயிலையை நேரடிக் கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்வதன்மூலம் நீலகிரி மாவட்ட விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோல, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியில் சாதனை மலர்கள் மலர்ந்து சரித்திர சாதனை படைத்து வருகிறது.



2001 செப்டம்பர் 6] [திரு. என்.கே. பெருமாள்]

*பிற்பகல் 5.45*

பால்வளம், பால்வள மேம்பாட்டிற்காக 37 கோடி ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு நிலுவையில் இருந்த பால் பணம் பட்டுவாடா பற்றி பரிசீலனை செய்து அம்மா அவர்கள் ஆட்சியில் 30 கோடி ரூபாய் உடன் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இவ்வாறு பால் பெருக்குத் துறைகளில் புதிய நவீன புரட்சிக்கு வித்திட்டுள்ளீர்கள். அதற்காக இதய தெய்வம் அம்மா அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து விவசாயத் துறை. அம்மா ஆட்சிக் காலத்தில் 1991-96-ல் வேளாண்மைத் துறையில் வளர்ச்சி சதவீதம் 4.33 சதவீதம். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1996-2001-ல் 2.66 சதவீதம். எனவே, அம்மா ஆட்சிக் காலத்தில்தான் வேளாண்மைத் துறையில் தமிழகத்திலே வெற்றிக்கொடி பறந்தது. தமிழகத்தின் ஜீவநாடியே விவசாயம். தமிழகத்தின் பொருளாதாரமே வேளாண்மையைச் சார்ந்தது என்பதை உணர்ந்தவர்கள் எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள். வேளாண்மையின் மூலமே வறுமையையும் பசிப்பிணியையும் போக்க இயலும் என்ற அறிவியல் பூர்வமான யதார்த்த சிந்தனைக்குச் சொந்தக்காரர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த நாடு இன்று உணர்ந்து கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நான்காம் தமிழான அறிவியல் தமிழை அறிமுகம் செய்து வைத்த அம்மா அவர்கள் இன்று வேளாண்மைத் துறையிலும் வேளாண்மை அறிவியல் துறையை முதன்முதலாக தமிழர்தம் வாழ்வின் செழுமைக்கு, உயர்வுக்கு உருவாக்கி உள்ளார்கள்.

நகரப் பொருளாதார வளர்ச்சியில் மட்டுமே நாட்டம் கொண்ட கடந்த கால அரசைப் போல அல்லாமல், இந்தியாவின் இதயம் கிராமங்கள் என்பதால், இதய தெய்வம், தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 43 சதவீதம் நிலங்களில் மட்டுமே தமிழகத்தில் வேளாண்மை செய்யப்பட்டு வந்த நிலையைக் கண்டு இத்துறையில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி, உண்மையான புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தந்தார்கள். முத்தமிழைப்போல் தரிசு நிலங்களை மூன்றாகப் பிரித்து, முத்தான முன்னேற்றப் பாதையில் தமிழகத்தை வழி நடத்திச் சென்றிடும் வள்ளலின் வாரிசாம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[திரு. என்.கே. பெருமாள்] [2001 செப்டம்பர் 6

25 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டு முகவர் அமைப்பைத் தொடங்கி வைத்துள்ளார்கள்.

காடு செழித்தால்தான் நாடு வளரும், மழை பொழியும், மாசுகள் நீங்கும் என்ற அறிவியல் உலகம் கூறும் அரிய கருத்துக்களின் அடிப்படையில் நாடு போற்றிடும் நல்ல திட்டமாக காடு வளர்ப்புத் திட்டம், இதய தெய்வம் அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், டென்மார்க் தேசத்து நிதி உதவியுடன் கால்நடை வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நில மேம்பாட்டுத் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், நீர்க்கசிவுக் குட்டைகள் அமைத்திடும் திட்டம் என்று விவசாயிகளின் நலனில் பெரும் அக்கறையுடனும், கவனத்துடனும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்துள்ள திட்டங்கள் மாற்றாரும் போற்றக்கூடியவை.

அம்மா, எனது தொகுதியான விளாத்திகுளம் தொகுதி முழுவதும் பயன்பெறும் வகையில் இரண்டாவது சீவலப்பேரி pipe line திட்டத்தைச் செயல்படுத்திட அம்மா அவர்களின் மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியை பின்தங்கிய தொகுதியாக அறிவித்து புதிய ஊரக மற்றும் மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைத்திட அம்மாவின் மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகள் 372 கிலோமீட்டரில் 94 கிலோமீட்டர் சாலையைப் பழுது பார்க்க வேண்டியுள்ளது. ஆகவே, விளாத்திகுளம் தொகுதிக்கு சாலை வசதி மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திட அம்மாவிடம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி-இராமேஸ்வரம் ரோட்டில் விளாத்திகுளத்திற்கு மேற்கே தாழ்வான பாலம் உள்ளது. அங்கு மழை நேரங்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுவதால், அம்மா அவர்களின் ஆசியுடன் மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அம்மா அவர்களின் மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையாத மக்கள் நிறைந்த விளாத்திகுளம் தொகுதியில் அம்மா அவர்களின் ஆசியோடு



2001 செப்டம்பர் 6] [திரு. என்.கே. பெருமாள்]

கலைக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத்தர அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எனது கோரிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியில் வைப்பாற்றில் கடல்நீர் உள்ளே வருவதால் நிலத்தடி நீர் உப்பாக உள்ளது. ஆகவே, வைப்பாற்றில் ஒரு தடுப்புச் சுவரும் மற்றும் இரு முக்கிய வளைவுகளில் இரு தடுப்புச் சுவர்களும் கசிவுநீர்க் குட்டைகளும் அமைத்திட அம்மாவைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியில் விவசாயிகளின் உயிர்மூச்சாக விளங்கும் மிளகாய் வத்தலுக்கு அரசே விலை நிர்ணயம் செய்திடவும், விளாத்திகுளத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு குளிரூட்டும் வசதி செய்து தரவும் அம்மா அவர்களைப் பணிந்து வேண்டி எனது வேண்டுகோளை சமர்ப்பிக்கிறேன்.

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அடுத்தபடியாக புகழ்பெற்ற விளாத்திகுளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்திடவும், பழுதடைந்துள்ள இக்கோவிலின் தேரை பழுது நீக்கிடவும் அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள விளாத்திகுளம் மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, அதிக படுக்கை வசதிகள், E.C.G. Scan வசதி, Ambulance வசதி மற்றும் தேவையான டாக்டர்களை நியமிக்கவும் அம்மாவைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து. புதிய வழித்தடங்களையும், புதிய பேருந்துகளையும் விளாத்திகுளம் தொகுதிக்கு வழங்கிட அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது கன்னிப் பேச்சு. மேலும் ஒரு நிமிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பனைத் தொழிலாளர்களுக்கு இலவச insurance வசதி, தொகுப்பு வீடுகள் மற்றும் பனைப் பொருள்களை அரசு அதிக அளவில் கொள்முதல் செய்திடவும் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என்.கே. பெருமாள்] [2001 செப்டம்பர் 6

*பிற்பகல் 5-50*

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள வேம்பார் துறைமுகம் வரி இல்லாத துறைமுகமாக அமைத்திடவும், மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் அதிக அளவில் விளாத்திகுளம் தொகுதிக்கு ஒதுக்கீடு செய்திடவும் அம்மா அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள குறுக்குச் சாலை கோட்டூர் சாலையின் நீளம் 43 கி.மீ. இச்சாலையில் முள்ளூர் பிள்ளையார் நத்தம் வரை சுமார் 13 கி.மீ., 21 பாலங்கள் பழுதுபார்க்கப்பட்டு புதிய பாலங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியிலே கட்டப்பட்டன. இதனால் இப்பகுதி மக்களுக்குத் தங்குதடையின்றி பேருந்து வசதி உள்ளதால் அம்மா அவர்களை இப்பகுதி மக்கள் இன்றும் நன்றி உணர்வோடு நினைத்துப் பாராட்டுகிறார்கள். ஆனால் முள்ளூர் முதல் கொல்லம்பரம்பு வரை சுமார் 4 கி.மீ. 2 பர்லாங் சாலை இடைப்பகுதியில் புதிய சாலை அமைக்க வேண்டியுள்ளது. இச்சாலை அமைத்தால் சந்திரகிரி, கொல்லம்பரம்பு, முள்ளூர் உட்பட 16 கிராமங்கள் சாலை வசதியால் முக்கிய நகரங்களுடன் இணைக்கப்படுவதுடன் தூத்துக்குடி, கோவில்பட்டி போன்ற முக்கிய நகரங்களுக்கு 50 கி.மீ தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய அவலநிலை நீங்கும் அம்மா.

அம்மா, மேலும் ஆற்றாங்கரை-வேடப்பட்டி சாலை சுமார் 4 கி.மீ. தூரம் உள்ளது. இச்சாலை அமைத்தால் கரிசல்குளம், பொம்மையாபுரம், குமாரபுரம் ஆற்றங்கரை உட்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் சாத்தூர், சிவகாசி போன்ற தொழில் நகரங்களுடன் இணைக்கப்படுவதுடன், தொழில் தேடிச் செல்கின்ற ஏழை எளிய மக்கள் சுமார் 50 கி.மீ. தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை மாறுவதுடன் இச்சாலை அமைக்கப்படுவதன் மூலம் புகழ்பெற்ற அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோயிலும் இச்சாலை வசதியால் இணைக்கப்படுகிறது. ஆகவே, அம்மா அவர்கள் இச்சாலையை கிராமப்புற நெடுஞ்சாலைத் துறை மூலமோ, நபார்டு வங்கி உதவி மூலமோ நிறைவேற்றிட அம்மாவின் மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்து, மீண்டும் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் நன்றியை உரித்தாக்கி, வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என் நன்றியை உரித்தாக்கி, எனக்கு வாக்களித்த விளாத்திகுளம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2001 செப்டம்பர் 6 ]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. செல்வராஜ்.

**திரு. ஆ. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு வணக்கங்கள் பல. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களையும், ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்றத் தலைவர் டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களின் வழி வந்த குடிசைவாசியான என்னை, கோட்டை வாசலிலே ஏற்றிய எனது அன்புத் தெய்வம், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர், இருமபு மனிதர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமைப் புரட்சியை மீண்டும் கொணர்ந்த டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இப்புவிதன்னில் மானிடனாய் பிறக்க வைத்த, கருப்பொருளான எனது தாய், தந்தையரை வணங்கி பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்றத் தலைவர், துணைத் தலைவர் அவர்களையும் வணங்கி, எனக்கு வாக்களித்த அச்சரப்பாக்கம் வாக்காளப் பெருமக்களையும் வணங்கி, இந்தப் பேரவையிலே கண்ணியமான முறையிலே என் கன்னிப் பேச்சைத் தொடங்கி உள்ளார்த்தமான கருத்துகளைக் கூற விழைகிறேன், பால்பெருக்குத் துறை மானியத்தின்மீது பேச விழைகிறேன்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஏழைகள் முதல் கோடீஸ்வரன் வரை அனைவரும் விரும்பிப் பருகுவது அறுசுவை உணவான பால். இன்று mineral water ஒரு லிட்டர் விலையைவிட பால் உற்பத்தியாளர்களுக்குக் பால் விலை மிகக் குறைவாக உள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். பால் உற்பத்தி செய்யும் ஏழைகளிடம் குறைந்த விலைக்கு அதாவது 6 ரூபாய்க்கு வாங்கி, பால் பூத்திலே அதிக விலைக்கு 7 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் வெண்ணெய் எடுத்து அதுவும் விற்பனை செய்யப்படுகிறது. எனவே பால் உற்பத்தி செய்து அதையே நம்பி வாழும் ஏழைகளுக்கு வாழ்வு கிடைக்க பால் விலையைக் கூடுதலாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தி தேவையான அளவுக்குமேல் உள்ளது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பால் வாங்க மறுக்கிறார்கள். இதனால் பால் விற்பனை செய்ய முடியாமல் பால் உற்பத்தி செய்யும் ஏழைகள் மற்றும் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். எனவே, பாலிலிருந்து பால் பவுடர், வெண்ணெய், நெய், பால் கோவா ஆகியவை நவீன முறையிலே தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

செய்து வருவாயைப் பெருக்கலாம். இதனால் ஏழை எளிய மக்கள் குறிப்பாக கிராமப்புறத்துப் பெண்கள் தங்கள் குடும்ப வருமானத்தைப் பெருக்க வாய்ப்பாக இருக்கும்.

பால் உற்பத்தி உள்ள எல்லா கிராமங்களிலும் பால உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் காலம் தாழ்த்தாமல் தொடங்கப்பட வேண்டும்.

பால் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் மிகவும் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வாரா வாரம் பால பணத்தை பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 5-55

மாதவரம் பால் பண்ணையை இன்னும் சீரமைக்கவும், அதன் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்திலும், சேலம் மாவட்டம் எடப்பாடியிலும், வேலூர் மாவட்டம் திருப்பத்தூரிலும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும்படி கேட்டுக்கொளகிறேன்.

உயர் ரக கறவை மாடுகள் கிராமப்புற தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழைப் பெண்களுக்கு மானிய விலையில் கொடுத்துதவ வேண்டுகிறேன். தமிழ்நாடு முழுவதும் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடப்பு ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

கறவை மாடுகள் வளர்க்கும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் கால்நடைத் தீவனம் கொடுக்க வேண்டுகிறேன்.

பால் உற்பத்தியே விவசாயிகள் மற்றும் ஏழைகளின் வயிற்றில் பால் வார்ப்பதாகும். எனவே, பால் உற்பத்தியை இன்னும் பெருக்க அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என் தொகுதிப் பிரச்சினை. நமது நாட்டிலே மிக முக்கியமான தொழிலாக உள்ள விவசாயத் தொழிலுக்கு உறுதுணையாக நிற்பது கால்நடைகள்தான் என்பது மாமன்ற உறுப்பினர்கள் தெளிவாக அறிந்த ஒன்று. கால்நடைத் துறையினைச் சீர்நோக்கும்போது, கிராமங்களிலே வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பல விவசாயிகள் கால்நடைகள் இன்றி அவதியுறும் சூழ்நிலை மாறிட விவசாயிகளுக்கு உழவு மாடுகள் மற்றும் கறவை மாடுகள் வங்கிகள் மூலம் வட்டியில்லாக்



கடனுதவியுடன் வழங்கிடும் திட்டத்தினைச் செயல்படுத்திட இந்த அரசினை வேண்டுகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் நடத்தப்படும் பெரும்பாலான மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர்கள் போதுமான அளவில் இல்லை. எனவே, போதுமான அளவிற்கு போதுமான உதவி மருத்துவர்களை நியமிக்க வேண்டும். அச்சரப்பாக்கம், கால்நடை உதவி மருத்துவர்களை நியமிக்க வேண்டும். சூனாம்பேடு, கப்பிவாக்கம், எல்.என்டத்தூர் ஆகிய கால்நடை மருந்தகங்களில் விடுபட்டுள்ள கால்நடை உதவி மருத்துவர், ஆய்வாளர் பணியிடத்தை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும்.

அச்சரபாக்கம் கால்நடை மருந்தகத்தில் தினமும் 80க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சை பெற வருவதால் இதனை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருந்தகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பார்வை கிளை நிலையங்களில் விடுப்பட்டுள்ள கால்நடை ஆய்வாளர்களை உடனடியாக பணிநியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு ஆத்தூர், எலப்பாக்கம் பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் புதிதாக அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றத்தினாலும், பருவமழை பொழிவதாலும் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கினைத் தடுத்து மழை நீரைத் தேக்கிட ஏரிகள், குளங்கள், குடிநீர் குட்டைகளை ஆழப்படுத்திடவும், பெரும்பான்மையான ஏரிகளில் அடைத்துக் கொண்டிருக்கும் பலை ஒணான் என்கிற கடலாத்திச் செடியினையும் அகற்றி கால்நடைகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட நடவடிக்கை மேற்கொள்வதுடன் அரசு மானிய விலையில் கால்நடைகளுக்குத் தீவனங்கள் வழங்கிடவும் இந்த அரசிடம் விண்ணப்பம் செய்கிறேன்.

எனது தொகுதியில் சூனாம்பேடு, எலப்பாக்கம், அனந்தமங்கலம் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியமைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு வரும் கல்வியாண்டில் தொழுப்பேடு, எல். என்டத்தூர், மொறப்பாக்கம் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், புத்திரன்கோட்டை, வெளியம்பாக்கம், காட்டுக்கரனை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், வில்லைவாக்கம் ஆரம்பப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திட வேண்டும் எனவும் அச்சரப்பாக்கத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் அடங்கியுள்ள

அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் உள்ள மாணவ, மாணவிகளுக்கு கழிப்பிட வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாது, சத்துணவு உண்ணும் மாணவ, மாணவிகள் வெயிலிலும், மழையிலும் உட்கார்ந்து உணவு உண்ணும் அவல நிலை உள்ளது. அவர்களுக்கு ஒரு கொட்டகை அமைத்து, அந்தக் கொட்டகையிலே அவர்கள் உணவு உண்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவ கிராமங்களிலுள்ள சீர்கெட்டுள்ளச் சாலைகளைச் செப்பனிட இந்த நிதி ஆண்டில் போதிய நிதி ஒதுக்கி சாலை வசதியினை மேம்படுத்துவதுடன், மீனவ கிராமங்களில் குளிர்பதக் கிடங்குகள் அமைத்து மீனவர்கள் மீன்களைக் கெடாமல் வைத்திருந்து விற்பனை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இடைக்கழிநாடு பேரூராட்சியில் அடங்கிய ஆலம்பரக்குப்பத்தில் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன், அக்கிராமத்தில் அமைந்துள்ள நவாப்கோட்டையினைச் சீரமைத்து கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதியதொரு சுற்றுலாத்தலம் அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்துவரும் இலங்கை இராணுவத்தினரிடமிருந்து தமிழக மீனவர்களைக் காக்க கச்சத் தீவை மீட்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

எனது தொகுதியில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் சுற்றுலாத்தலத்திற்கு ரூ.15 இலட்சம் நிதி வழங்கியதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-00

அந்தநேரம் கடந்த காலங்களில் வேடந்தாங்கல் பகுதியைச் சுற்றியுள்ள பாமர மக்களை துன்பத்திற்கு ஆளாக்கி வந்த வனத் துறை காவலாளியத்துடன் நடந்துகொள்ள சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றம் மூலம் கேட்க விழைகின்றேன். மேலும் தண்டரைபேட்டை அருகில் கிளியாற்றில் தரைப்பாலம் அமைத்துத் தந்தால் பறவைகள் சரணாலயம், வேடந்தாங்கல் செல்வதற்கும் மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்குச் செல்ல வசதியாக இருக்கும்.



தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் இருப்புப் பாதை வசதியிருந்தும் எந்தத் தொழிற்சாலைகளும் இல்லாத மிகவும் பின்தங்கிய தொகுதியாகிய அச்சரப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்து வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்படி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் எலப்பாக்கம், சூனாம்பேடு ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் அடிக்கடி சாலை விபத்துகள் நடைபெறுவதால் விபத்துக்குள்ளானவர்கள் சிகிச்சைக்காக செங்கற்பட்டு அல்லது திண்டிவனம் செல்ல நேரிடும்போது பாதிக்கப்பட்டவர்கள் வீண் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். உயிர் இழப்புகள் அதிகமாகின்றன. இந்நிலையை மாற்ற எனது தொகுதியில் அடங்கியுள்ள அச்சரப்பாக்கம் அல்லது மேல்மருவத்தூரில் ஒரு 24 மணி நேர அவசர சிகிச்சை விபத்து நிவாரண மருத்துவமனையை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்.எச்.45-க்கு மாற்றுச் சாலையாக திண்டிவனம், ஆனந்தமங்கலம், ஓரத்தி, எலப்பாக்கம் செல்லும் என்பத்தூர், உத்திரமேரூர் சாலையைத் தரம் உயர்த்தி அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தொழுப்பேடு முதல் ஒரத்திசாலையில் எடையாளம் சந்திப்பில் மேம்பாலம் கட்டுவதற்கும், சிறுதாமூர் கிராமத்தில் இரு பகுதிகளையும் இணைக்க தரைப்பாலம் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அச்சரப்பாக்கத்தில் நடைபெறும் வாரச் சந்தையினை—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆ. செல்வராஜ்:** அச்சரப்பாக்கத்தில் நடைபெறும் வாரச் சந்தையினை தரம் உயர்த்திட காய்கறிகளை சேமிக்க குளிர் பதனக் கிடங்கு அமைத்துத் தருவதுடன் விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி வழங்கியுள்ள முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், இச்சலுகையினை நிலவள வங்கிக்கும் விரிவுபடுத்தி மேலும் பல ஏழை எளிய விவசாயிகளின் துயர் துடைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சோத்துப்பாக்கம் பகுதியில் 50 ஆண்டுகளுக்கு மேல் நரிக்குறவர்கள் வசித்து வருகின்றனர். சுமார் 35 குடும்பங்கள் வசித்து வருகின்றன அவர்கள் வாழ்விற்கு வளம் சேர்க்கும் வகையில் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கி நரிக்குறவர் நகரம் ஒன்று அமைத்துத் தரும்படி இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட ஏழை மாணவ மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தினை அறிவித்தமைக்கும், விடுதி மாணவர்களுக்கு ரூ. 225-ஐ ரூ. 300-ஆக உயர்த்தியமைக்கும் எங்கள் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதிதிராவிடர் நலத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கை நாளை வருகிறது. அதிலே பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. ஆ. செல்வராஜ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைச் சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. கோதண்டராமன்.

***திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு வணக்கம். சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, வழக்கறிஞர் தொழிலை செய்து கொண்டிருந்த என்னை முகையூர் ஒன்றியக் கழகச் செயலாளராக நியமனம் செய்து, 13 ஆண்டுகள் ஒன்றியச் செயலாளராகப் பணியாற்றிய என்னை, முகையூர் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, முகையூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்த நம்பிக்கை நட்சத்திரம், கழகப் பொதுச் செயலாளர் எங்கள் இதய தெய்வம், கழகக் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எனக்கு வாக்களித்த என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்காக, என் வெற்றிக்காக உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பால் வள மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே".

என்று அன்று பாரதியார் பாடினார். அதற்கேற்ப எண்ணற்றத் தொல்லைகள், தனக்கு இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் துச்சமென மதித்து எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற அண்ணாவின் தத்துவத்தின்படி, எதிரிகளின் ஏளனச் சிரிப்பை சோகக் கதையாக மாற்றி, ஏசுவோர் ஏசினாலும், தூற்றுவோர் தூற்றினாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாது, தமிழகமெங்கும் பவனி வந்து, தமிழகம் நிலைத்து நிற்க, அன்னை பராசக்தியாகவும், நீதியை நிலை நிறுத்த நீதி தேவதையாகவும், மக்களின் துயர் துடைக்க ஆதி பராசக்தியாகவும் அவதரித்து வெற்றி தேடித் தந்த எங்களின் அன்புத் தாய் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு எனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

*பிற்பகல் 6-05*

அம்மா அவர்களின் 100 நாள் ஆட்சியில் ஏழை விவசாயிகள், மகளிர், மாணவர்கள், ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர், தொழிலாளர்கள், மீனவர்கள், ஆசிரியர்கள், காவலர்கள் ஆகியோர்களது நலனுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் அம்மா.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும், மக்களுக்காக நன்மை செய்து கொண்டிருந்தார்கள். ஆட்சி அதிகாரம் இல்லாதபோதும், விவசாயிகளின் காவிரி நீர்ப் பிரச்சினைக்காகவும், மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் குறைக்கவும், மக்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் ரேஷன் அளவு குறைந்தபோதும் போராட்டங்களை நடத்தி மக்களுக்குச் சேவை செய்தார்.

தேயிலை விவசாயிகளுக்காகக் குரல் கொடுத்து, ஆட்சிப் பொறுப்பேற்றதும், தேயிலைக்குக் கூடுதல் விலை உயர்த்திக் கொடுத்து செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆனால், ஆட்சி அதிகாரம் போன பிறகு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகச் செயல்படாமல் வேண்டுமென்றே எதற்காகப் போராட்டம் நடத்துகிறார்கள்? நமக்குரிய காவிரித் தண்ணீரைப் பெற்றுத் தரவா? அல்லது மாநில சுயாட்சியைப் பெற்றுத் தரவா?

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் நிலை நிறுத்தப்பட்ட சத்துணவுத் திட்டமும், மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட ஊட்டச்சத்துத் திட்டமும், கடந்த கால ஆட்சியின் செயல்பாட்டால் சீரழிந்துள்ளது. ஏற்கெனவே குழந்தைகள் சத்துணவு, ஊட்டச் சத்துணவு ஆகியவற்றில 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளைச் சேர்க்கும்போது ஒரு கிராமத்தில் உள்ள அத்தனைக் குழந்தைகளையும் சேர்த்து வந்தார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியில் 50 குழந்தைகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள குழந்தைகள் என்ன பாவம் செய்தார்கள்?

பள்ளி சத்துணவு மையத்தில் ஏற்படும் பொறுப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர் ஆகிய காலி இடங்களுக்குப் பணியாளர்களை நியமனம் செய்யாமல், குழந்தைகள் சத்துணவு அமைப்பாளர், ஊட்டச்சத்துப் பணியாளர் ஆகியோரை மாற்றி, அந்த இடங்களை நிரப்பி வந்தார்கள். இதனால் கிராமங்களில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் சேர வாய்ப்பில்லை. சில மையங்களுக்குக் கூடுதல் பொறுப்பு கொடுப்பதால், சத்துணவுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரித்துள்ளது. எனவே, தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் மீண்டும் பழைய முறையை அமல்படுத்தி, குழந்தைகளைச் சேர்த்திடவும், காலி இடங்களுக்கான பணியாளர்களை நியமித்திடவும் வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுப் பணியாளர்களுக்குப் பதவி நிரந்தரம் செய்திடவும், பதவி உயர்வு செய்து தரவும், ஊதியம் உயர்த்திடவும், ஓய்வு பெறும் பணியாளருக்கு ஓய்வூதியம் கிடைத்திடவும் கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டார ஊட்டச்சத்து அலுவலர், சத்துணவு மேற்பார்வையாளராகப் பணிபுரியும் பெண்கள் தங்கள் சொந்த மாவட்டத்தைவிட்டுப் பல நூறு மைல்களுக்கு அப்பால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பால் வளத்தைப்பற்றிப் பேசுங்கள். சத்துணவைப்பற்றி ஏன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ஜி. கோதண்டராமன்:** பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து, ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து



வருபவர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்குப் பணிமாற்றம் பெறமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். பணிமாற்றம் பெறமுடியாதவாறு நீதிமன்றத்தில் உள்ள தடையாணை கடந்த மே மாதத்தோடு முடிவடைந்து விட்டது. ஆகையால் அம்மா அவர்கள் இதன்மீது நடவடிக்கை எடுத்து பணிமாற்றம் கிடைத்திட அருள்கூர்ந்து ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய உலகத்தில் மக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களில் பால் ஒரு முக்கியமான சத்துள்ள உணவாகும். கிராமப்புறங்களில் பால் வியாபாரம் மரபு வழி துணைத் தொழிலாக் உள்ளது கிராமப்புறங்களில் பெண்கள் கறவை மாடுகளைப் பராமரித்து வளர்த்து குடும்பத்தின் வருமானத்தைப் பெருக்கி வருகிறார்கள். கிராமத்தில் கால்நடைகளை அதிக அளவில் வளர்ப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கால்நடை வளர்ப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பது பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

இன்றைய காலகட்டத்தில் கால்நடைகளை எவ்வாறு வளர்க்கிறோமோ அவ்வாறே பாதுகாத்தால்தான் எதிர்காலத்தில் பால் வளம் தொடர்ந்து செழிப்புடன் இருக்கும். நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கூறும்போது தினந்தோறும் தமிழ்நாட்டிலிருந்து லாரிகளில் கறவை பசு மாடுகளும், கறவை எருமை மாடுகளும் கேரள மாநிலத்திற்குச் செல்கின்றன என்றார்கள். எனவே, அதைத் தடுத்து நிறுத்தினால்தான் கால்நடைகளைப் பராமரித்து, எதிர்காலத்தில் பால் வளத்தைப் பெருக்கிட முடியும். எனவே, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கை எடுத்து அதைத் தடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதிப் பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். பாழாய்ப்போனதை பசு வயிற்றில் போடுங்கள் என்பார்கள். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. கோதண்டராமன்:** என்னுடைய முகையூர் தொகுதி பொருளாதாரத்திலும், வாழ்க்கைத் தரத்திலும் மிகவும் பின் தங்கிய பகுதியாகும். விவசாயத்தைப் பெரிதும் நம்பியுள்ள மக்கள் பருவமழை பொய்த்துவிட்டதால் பகுதி நேர விவசாயம் பார்க்கிறார்கள். என்

தொகுதியில் நெசவுத் தொழில் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் தற்போது பாதிக்கப்பட்டு உள்ளார்கள். எனவே, என் தொகுதி மக்கள் பெங்களூர், சென்னை, மும்பை போன்ற நகரங்களுக்குக் கட்டட வேலைக்குச் சென்று கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் தொழிற்சாலைகள் தொடங்கிட ஆவன செய்ய க்கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதி மாணவர்கள் கல்லூரியில் படிக்க திருவண்ணாமலை, விழுப்புரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே என் தொகுதியில் அரசு கலைக் கல்லூரியை நிறுவிட அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

பிற்பகல் 6-10

மணலூர்பேட்டை' பகுதியில் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அரசு விடுதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே மணலூர் பேட்டையில் (மணியடிக்கப்பெற்றது) அரசு மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க அம்மா அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. கோதண்டராமன்:** என் பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் அலுவலக உதவியாளர்கள், இரவுக் காவலர்கள் ஆகிய பணிகள் காலியாக உள்ளன. அவற்றையும் நிரப்பித் தர வேண்டுகிறேன்.

பெண்ணை ஆற்றிலிருந்து என் கிராமமான கொடுங்கால் கிராமத்தின் வழியாக பம்பை வாய்க்கால் என்ற ஒரு கிளை வாய்க்கால் செல்கிறது. அதனால் என் கிராமத்திற்கு ஒன்றும் பயன் இல்லை. எனவே 1967 ஆம் ஆண்டு முதல் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் ஒரு கால்வாய் வெட்டி கொடுங்கால், ஆயாந்தூர், சென்னகுளம், அன்னியூர், அனந்தபுரம் வரை விவசாயிகளுக்குத் தண்ணீர் செல்ல வழிவகை செய்திட அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த நம் ஆட்சிக் காலத்தில் சர்வே செய்து திட்டம் தயாரித்து அப்படியே நிலுவையில் உள்ளது அம்மா.

கொடுக்கப்பட்டு கிராமத்திற்கும் வசந்தகிருஷ்ணாபுரம் கிராமத்திற்கும் இடையில் ஓடும் துறிஞ்சல் ஆற்றில் ஒரு பாலம்



கட்டித் தர வேண்டுகிறேன், அம்மா. இதனால் நாவந்தாங்கல், ஆதிச்சனூர், அரசங்குப்பம், மதுராம்பட்டு ஆகிய கிராம மக்கள் பயன்பெறுவார்கள். கொடுங்கால்-வீரசோழபுரம் சாலையின் குறுக்கில் உள்ள பம்பை ஓடையில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டுகிறேன், அம்மா. என் தொகுதியில் உள்ள சாலைகள் அனைத்தும் குண்டும் குழியுமாக உள்ளன. எனவே சாலைகளைச் சீரமைக்க கூடுதல் நிதி ஒதுக்கித் தாருங்கள் என கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் காணை ஒன்றியத்தில் உள்ள கிராமங்கள் நீர்ப்பாசன வசதி பெறும்பொருட்டு நிலுவையிலுள்ள நத்தன் கால்வாய் வெட்டும் திட்டத்தைத் துரிதப்படுத்த அருள்கூர்ந்து ஆவன செய்ய வேண்டுகிறேன், அம்மா.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பெண்ணை ஆற்றில் ஆழ்கிணறு குழாய் அமைத்து டி. தேவனூர், நாயனூர், அரசங்குப்பம், வசந்தகிருஷ்ணாபுரம், புலிக்கல், வீரப்பாண்டி, கல்லந்தல், அருணாபுரம், ஒட்டம்பட்டு, வி. புதுப்பாளையம், கண்டாச்சிபுரம் ஆகிய குடிநீர் இல்லாத கிராமங்களுக்கும், கழுமரம், சொரையப்பட்டு, கொழுந்திராம்பட்டு, நெடுங்கம்பட்டு, டி. அத்திப்பாக்கம், சடைக்கட்டு ஆகிய கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஆவன செய்ய அம்மா அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அரகண்டநல்லூர் காவல் நிலைய காவலர்கள் குடியிருக்கும் வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீரமைக்க வேண்டுகிறேன். மணலூர்பேட்டை காவலர்களுக்கு வீடு கட்டும் இடம் கையகப்படுத்தி பல ஆண்டுகளாக குடியிருப்பு கட்டாமல் உள்ளது. வீடு கட்ட ஆவன செய்ய வேண்டுகிறேன், அம்மா.

அரகண்டநல்லூரிலிருந்து திருக்கோவிலூர் செல்லும் தரைப்பாலம் பழுதடைந்து பல ஆண்டுகள் ஆகின்றன. மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் மேற்படி தரைப்பாலத்தைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன், அம்மா.

அரசு போக்குவரத்துக் கழகம், திருக்கோவிலூர் கிளை பணிமனை கட்டுவதற்கு மணம்பூண்டியில் இடம் வாங்கி பல ஆண்டுகளாக பணிமனை கட்டப்படாமல் உள்ளது. எனவே அம்மா அவர்கள் பணிமனை கட்டித்தர வேண்டுகிறேன். என் தொகுதியில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போதிய மருத்துவர்கள், பணியாளர்கள் இல்லாமல் சிரமமாக உள்ளது. அவற்றை நிரப்பவும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையைச் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். இப்போது பசு வயிற்றிலேதான் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜி. கோதண்டராமன்:** மணலூர்பேட்டை, விளந்தை, கள்ளக்குறிச்சி போன்ற இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார கட்டடங்கள் பழுதடைந்தும், இடவசதி குறைவாகவும் உள்ளது. மேற்படி குறைகளை நிவர்த்தி செய்திட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதி மாணவர்களும், பொதுமக்களும் போதிய பேருந்து வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அம்மா அவர்கள் என் தொகுதிக்கு கூடுதலாக மூன்று பேருந்துகளை ஒதுக்கித் தரவேண்டுகிறேன்.

இன்னும் இரண்டே இரண்டு பாயிண்ட்கள்தான். அதுவும் கோர்ட் விஷயங்கள்தான். திருக்கோவிலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆரம்பித்து சுமார் 110 ஆண்டுகளாகின்ற பழமை கொண்டதாகும். மேல்முறையீட்டு வழக்குகள் நிறைய விழுப்புரம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன அம்மா. எனவே திருக்கோவிலூருக்கு ஒரு சார்பு நீதிமன்றம் வேண்டும் என்ற எங்களது நெடுநாளைய கோரிக்கையை ஏற்று விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தால் சென்ற ஆண்டு proposal அனுப்பப்பட்டு நிதி இல்லை என்று நிலுவையில் உள்ளது. சார்பு நீதிமன்றம் நடத்த போதிய கட்டட வசதியும் எங்களிடத்திலே இருக்கிறது அம்மா. ஆகவே கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் தயவுசெய்து திருக்கோவிலூருக்கு ஒரு சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள். மாண்புமிகு கோதண்டராமன், நன்றி கூறி உரையை முடித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு நேரம் பேசுவீர்கள்?

**திரு. ஜி. கோதண்டராமன்:** வழக்கறிஞர்கள் நல நிதிக்காக Advocate Welfare Fund என்ற ஒரு நிதியை Welfare Stamp விற்பனை மூலம் கிடைக்கும் தொகையிலிருந்து வழக்கறிஞர்கள் நலனுக்காகப் பயன்படுத்தி வருகிறார்கள் அம்மா. அது போதவில்லை. கேரள அரசாங்கம் வழக்கறிஞர்கள் நலனுக்காக Contribution ஆக தொகை ஒதுக்கி, அதன்மூலம் வழக்கறிஞர்கள் பயன் பெறுவது போன்று தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் நம் வழக்கறிஞர்களுக்கும் நிதி ஒதுக்கி பயன்பெற ஆவன செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த



வாய்ப்பையளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

*பிற்பகல் 6-15*

•**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் பெருக்குத் துறை கோரிக்கை எண் 10-ல் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துகளை உங்கள் முன்னாலே நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே ஒரு லிட்டர் பாலின் விலையும், ஒரு லிட்டர் தண்ணீருடைய விலையும் சமமாகத்தான் இருக்கிறது. இப்போது சாதாரணமாக குழாயிலே வருகிற தண்ணீரை யாரும் குடிப்பதில்லை. எல்லோரும் பாட்டில் தண்ணீரைத்தான் குடிக்கிறார்கள். ஆகவே 1 லிட்டர் பாலினுடைய விலையும் 1 லிட்டர் தண்ணீருடைய விலையும் ஓரளவிற்கு சரிசமமாகத்தான் இருக்கிறது. தயவுசெய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களே நிறைய இழப்பீட்டிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற இந்தப் பால் வளம், வளம் குன்றி இருந்தாலும்கூட பால் விலையை நீங்கள் ஏற்றிவிடாதீர்கள் என்று நான் உங்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பாலினுடைய விலை ஒரு காலத்திலே அதனுடைய அளவிற்கு ஏற்றாற்போலே இருந்தது. ஆனால் இன்றைக்கு பாலினுடைய விலை, அதிலே இருக்கிற கொழுப்புச் சத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. தேசிய பால் வள வாரியத்தின் நிதியுதவி பெற்று பால் பெருக்குத் திட்டம் நடைபெறுவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அதிலே குறிப்பாக அந்தத் தேசிய பால் வள வாரியத்தின் நிதியுதவியுடன் நீங்கள் நடத்துகின்ற அந்தப் பால் பெருக்குத் திட்டம் சென்னையிலே கூட இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறபோது கே.ஏ.கே. அவர்கள் பால் வளத் துறையினுடைய அமைச்சராக இருந்தார். அப்போதே அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ப. இராஜரெத்தினம் தலைமை)*

சென்னை மாநகரத்திலே கொசுக்களினுடைய தொல்லை அதிகமாக இருக்கிற காரணத்தினாலே சென்னையிலே யாரும் கறவை மாடுகளாக இருந்தாலும் சரி, வீட்டிலே வளர்க்கின்ற மாடாக இருந்தாலும் சரி,

வெளியிலே இருக்கிற மாடாக இருந்தாலும் சரி சென்னை நகரத்திற்கு வெளியிலேதான் கொண்டு போய் அவர்கள் கறக்க வேண்டும். அந்த மாடுகளை வைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்களே அப்படிப்பட்ட அந்தத் திட்டம் இன்றைக்கு இருக்கிறதா இல்லையா என்பதை முதலாவதாக நான் உங்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 22.74 இலட்சம். உற்பத்தியாகின்ற பாலினுடைய அளவு நாள் ஒன்றுக்கு 21.48 இலட்சம் லிட்டர். சராசரி ஒரு உறுப்பினருக்கு 1 லிட்டர்கூட உற்பத்தியாகவில்லை என்பதை இந்த நேரத்திலே நாம் கணிக்க வேண்டும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல சங்கங்கள் அமைப்பதற்கு குறியீடு 275. 31-3-2001 வரை அமைக்கப்பட்டுள்ள குறியீடு 163. இந்தப் பால்வளத்திலே எனக்கு முன்னாலே பேசிய திருவல்லிக்கேணியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்னால் இருந்த ஆட்சியிலே ஆவின்பால் வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்கள் பல நூற்றுக்கணக்கான பேர்களை அவர்கள் பணியமர்த்தினார்கள் என்று சொன்னார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அதிலே எவ்வளவு குழப்பங்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை அவர் பார்க்கத் தவறிவிட்டாரோ என்று நான் நினைக்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் 20-5-1998 'மாலைமுரசு' நாளிதழில் பார்த்தசாரதி, துளசிபதி, ராஜசேகரன் ஆகியோர் வயது மூப்பு அடைந்துவிட்டதால் பணி செய்ய தகுதி இழந்துவிட்டார்கள் என்று முதல்வர் கூறியிருக்கிறார். பார்த்தசாரதி வயது மூப்படையவில்லை. அவருக்கு வயது ஆகிவிட்டது என்று இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார். அவர்கள் 3 பேருக்கும் வயதாகிவிட்டது. அதனால் அவர்கள் வேலை செய்கின்ற தகுதியை இழந்து விட்டார்கள் என்கிறார். ஆனால் பார்த்தசாரதி வயது மூப்படையவில்லை. 1980-ல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட 1,070 பேரில் அவரும் ஒருவர். அவரது பெயர் ஐ.டி. 31-ன்கீழ் 8.5-ல் உள்ளது. அவருக்கு 10-11-1998-ல் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் தொழிலாளர் உதவி ஆணையர்-2 அவர்களால் தொழில் தீர்ப்பாணையத்தின் தீர்ப்பின்படி வேலை வழங்க உத்தரவிடப்பட்டது. அதன்படி, ஆவின் மார்க்கெட்டிங் பிரிவில் இன்றைக்கும் அவர் பணி செய்து கொண்டு வருகிறார் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.



பிற்பகல் 6-20

அதேபோல் துளசிபதி வயது மூப்பு அடையவில்லை. துளசிபதிக்கு நிர்வாகம் ஐ.டி. 31/85 தொழில் தீர்ப்பாய தீர்ப்பின்படி வேலை கொடுத்து, சோழிங்கநல்லூரில் 3-வது பண்ணையில் வேலை செய்கிறார், துளசிபதி. பி. ராஜசேகரன் என்பவர் யூனியன் கொடுத்த லிஸ்ட்டில் உள்ள நபர். அவருக்கு வேலை கொடுக்க வேண்டும். ஆனால் பி. ராஜசேகரனுக்குப் பதிலாக ஏ. ராஜசேகரனுக்கு வேலை கொடுத்துவிட்டார்கள். அந்த ஏ. ராஜசேகரனுக்கு வேலை கொடுத்த காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) பி. ராஜசேகரனுடைய வழக்கு இன்றைய தினம் வரையிலும் கோர்ட்டிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை திருவல்லிக்கேணி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதிலேயும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய அருகிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் அன்றைக்கு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள், இந்த 11 பேரை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று. அதற்கு முன்னாள் முதல்வர் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள். தகுதி இழந்த 11 பேருக்கும் மீண்டும் வேலையில்லை. யார் தகுதி இழந்தவர்கள்? இவர் சொல்கிறார், தகுதி இழந்த 11 பேருக்கு வேலையில்லை. இவர் தகுதி இழந்ததாகச் சொன்ன அத்தனை பேரும் இன்றைக்கு வேலையிலே இருக்கிறார்கள் என்பதுதான் குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) வாய் சாதுர்யம் இருக்கின்ற காரணத்தினாலே வாழ்கின்றார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) 11 பேர் பட்டியல். அதிலே இவரை ரொம்ப கிண்டல் பண்ணியிருக்கிறார். நான்கு பரமார்த்த குரு சீடர்கள் குண்டு ஊசியில் பனை மரத்தைத் தூக்கிக்கொண்டு போகிற மாதிரி ஒரு கதையை, உண்மைக்கு மாறான தகவலை இவர் அவைக்குக் கொடுக்கிறார் நான் இன்றைக்குக் கேட்கிறேன். உண்மைக்கு மாறான தகவலை கொடுத்தது முன்னாள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இரகுமான்கானா, மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களா என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, அடுத்து சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய இந்த பால் வளம். இதில் நிறைய குழப்பங்கள் எல்லாம் இருக்கின்றன. 'நாங்கள் அப்பீலுக்குப் போக மாட்டோம், அந்த அப்பீலுக்குப் போகிற தரம் குறைந்த மனத்திற்கு நாங்கள் எல்லாம் சொந்தக்காரர்கள் இல்லை. ஆகவே, அப்பீல் என்ற எண்ணம் எங்களுக்கு வராது. என்று சொன்னவர்கள் இன்றைக்கு எத்தனை அப்பீலுக்குப் போய்க்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பாலிலிருந்து குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டிகள், டெட்ரா பாக்கெட், பால், மாவின் மாம்பழச் சாறு, நறுமணப் பால், ஐஸ் கிரீம், யோகர்ட், பால் கோவா இவை போன்ற, மற்ற பொருள்களெல்லாம் அதிலிருந்து எடுக்கிறோம். அதேமாதிரி ஸ்வீட் மைசூர் பாக்கு - போன நீபாவளிக்குத்தான் நான் ஆவின் பால் மைசூர் பாக்கு எப்படி இருக்குமென்று பார்த்தேன். உண்மையிலேயே நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், அதுபோன்ற கடைகளை நாம் ஏன் அதிகமாக உருவாக்கிக் கொடுக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன். இதுபோன்ற நெய், பால், பாலாடைக் கட்டி, மைசூர் பாக்கு, குலோப் ஜாம் இன்னும் என்னென்னமோ சர்க்கரை கலந்த பால் பவுடர் நிறைய items ஆவினில் உருவாகின்றன. இதில் நீங்கள் நிறைய கடைகளைத் தோற்றுவிப்பீர்கள் என்று சொன்னால், தரம் வாய்ந்த பொருள்களை நிச்சயமாக விலை கூடுதலாக இருந்தாலும் தரத்திற்காக மக்கள் வாங்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிற காரணத்தினாலே இதை நீங்கள் அதிகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதேபோல, பாலகங்கள். 34 பாலகங்களில் 7 தான் மகளிருக்கு கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு மிகப் பெரிய போர்க்கால நடவடிக்கை போல மகளிருக்கு மிக அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்து வருகின்ற இந்தக் கால கட்டத்தில், 34 பாலகங்களில் 7 மகளிருக்கு கொடுத்திருப்பது மிகக் குறைந்தபட்சமாக இருக்கிறது. ஆகவே, அதனை நீங்கள் அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



நாம் ஆவின் மூலமாக ஐஸ்கிரீம் விற்றால் அதற்கு 25 சதவீதம் கமிஷன் கொடுக்கிறோம். நெய் மற்ற பொருள்களை விற்றால் அதற்கு 6 சதவிகிதம் கமிஷன் கொடுக்கிறோம். சில பொருள்களுக்கு 4 சதவிகிதம் கமிஷன் கொடுக்கிறோம். இந்த கமிஷனை கொஞ்சம்கூட நீங்கள் உயர்த்திப் பாருங்கள், இன்னும் அதிகமான அளவிற்கு அந்தத் தனிப்பட்டவர்களுடைய முயற்சி அதிகமாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த பால் வளத்திலே இழப்பு ரூ. 86.88 கோடி. மாவட்ட ஒன்றிய இழப்பு ரூ. 157.56 கோடி. மொத்தம் ரூ.244.44 கோடி, இதிலேயும் ஆதிதிராவிடர் பிற்படுத்தப்பட்டோருக்கு கறவை மாடுகளை கடன்களிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். சில வட்டியில்லாமல் என்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே பாராட்டுக்குரியதுதான். அதிலேயும் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு, நான்கு மாத கறவைக் கன்றிலிருந்து 34 மாதம் வரையில் வளரக்கூடிய அளவுக்கு அந்தக் கன்றுக்கு வேண்டிய உணவும் மற்ற வசதிகளையும் செய்து கொடுப்பதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

பிற்பகல் 6-25

நீண்ட நெடிய காலமாக பால் வளத் துறை நல்ல நிலையில் இருந்தது, மற்ற மாநிலத்திலிருக்கிறவர்களுடைய நுழைவால் இன்றைக்கு ஆவின் பால் நலிந்து வருகின்ற அந்தச் சூழ்நிலையைத் தடுப்பதற்கு நாம் முயற்சி எடுக்கவேண்டும். சென்ற ஆட்சியிலேதான் ஆந்திராவிலிருந்து குபுகுபுகுபு என்று எல்லாம் வந்து இறங்கிவிட்டார்கள். கோமாதா, குலமாதா என்னென்வோ மாதா வந்திறங்கியிருக்கிறார்கள். அத்தனையும் நாம் சந்திக்கவேண்டும். அப்படிச் சந்திக்கிறபோது, அவர்களைவிட, விலையையும், தரத்தையும் சிறப்பாக்கி அவர்களைச் சந்திப்பதற்கு தமிழகத்திலிருக்கிற ஆவின் பால் தயார் என்கிற நிலையை நாம் தோற்றுவித்தாகவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் நான் கூறி விடைபெறலாம் என்று ஆசைப்படுகிறேன். நிறையபேர் வேலையிலிருந்து எடுக்கப்பட்டு மறுபடியும் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பவர்களிலே 34 பேருக்கு கடந்த பல ஆண்டுகளாக ஆயிரம் ரூபாய்தான் சம்பளம் வழங்கப்படுகிறது. மற்றவர்கள் அத்தனைபேரும் அன்றைய முதலமைச்சர் கேட்டுக்கொண்ட அந்த

கண்டிஷனுக்கு,—என்ன கண்டிஷன் என்றால் 'கோர்ட்டுக்கு போகமாட்டேன், கோர்ட் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன், கோர்ட் என்ன சொன்னாலும் அதற்காக உங்களிடம் நான் விவகாரம் பண்ணமாட்டேன், நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன், நீங்கள் உட்காரு என்றால் உட்காருகிறேன், எழுந்திரி என்றால் எழுந்துகொள்கிறேன்', அப்படியென்று சொல்லி, agreement போட்டுக்கொடுத்தவர்களுக்கு இன்றைக்கு 4500 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். 'அந்தக் கையெழுத்தைப் போடுவதற்கு நான் தயாராக இல்லை, அந்தக் கையெழுத்தை நான் போடமாட்டேன், கோர்ட்டிலே இருக்கிற வழக்கின்மீது நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவாக இருந்தாலும் அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுத்தான் நான் இருப்பேன்' என்று சொன்ன அந்தத் தன்மானச் சிங்கங்களாக இருக்கிற அந்த 34 தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டு பல ஆண்டுகளாக 1000 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருப்பது என்று சொல்வது, தொழிலாளர்களுக்குள்ளேயே இந்த வேற்றுமையை வளர்ப்பது, நிச்சயமாக ஏற்புடையதாக இருக்காது. கருணையுள்ளம் கொண்ட தமிழக முதல்வர், புரட்சித் தலைவியின் ஆட்சியில் நீங்கள் பால் வளத் துறை அமைச்சராக இருக்கிறீர்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கு பால் வார்த்து நல்லதொரு எதிர்காலத்தை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும். அவர்கள் வாழ்விலும் பால் வளம் பெருக வேண்டும். இந்த ஆட்சியிலும் பால் வளம் பெருக வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.கே.டி. நடராஜன்.

***திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனை கோடி துன்பங்கள் வந்தாலும், எத்தனை கோடி சோதனைகள் வந்தாலும், துன்பங்கள் அத்தனையையும் தூள்தூளாக்கி, சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கிய தன்னிகரற்ற தானைத் தலைவியே, தங்கத் தலைவியே, எங்கள் புரட்சித் தலைவியே, 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும்' என்ற சான்றோர்கள் வாக்கை தங்களுடைய வாழ்க்கையாக்கி, என்னைப்போன்ற கடைக்கோடித் தொண்டனை கழகத்தில் இரண்டுமுறை ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றிடச் செய்து, சட்டமன்றத் தேர்தலில், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தி, தமிழகத்தில் மீண்டும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியை உருவாக்கியே தீருவேன் என்று சபதம் செய்து,



தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப் பிரயாணம் செய்து, எதிரிகளை தேர்தல் களத்தில் ஓடஓட விரட்டியடித்து, என்னை வெற்றி பெறச் செய்த அன்னையே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா வீற்றிருந்த இந்த மாமன்றத்திலே, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வீற்றிருந்த இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தாயே, எனது கோடான கோடி நன்றியினை தங்கள் பொற்பாதங்களில் வைத்து வணங்குகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி மகுடத்தில் முதல் கல்லாம் திண்டுக்கல்லாம், அந்தத் திண்டுக்கல் மாவட்டத்தில் வீற்றிருக்கிற ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், கழகத்தின் வெற்றிக்காக அரும்பாடுபட்டு இரவு பகல் பாராது உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், கழகத்தின் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன்பிறப்புகளுக்கும், மதசார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து நண்பர்களுக்கும் என் நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்கி மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவுத் திட்டத்தில், பால் பெருக்குத் துறை மானியக் கோரிக்கையில் என் கன்னிப் பேச்சைத் தொடர்கின்றேன்.

பிற்பகல் 6-30

கிராமப்புறங்களில் பால் வியாபாரம் மரபு வழி துணைத் தொழிலாக உள்ளது. கிராமப்புறங்களில் விவசாயிகளின் குடும்பங்களில் குடும்பத்தினுடைய வருவாயைப் பெருக்குவதில் பெண்களின் உழைப்பு பெரும் பங்கு வகிக்கின்றது. கிராமப் பகுதிகளில் பண்ணை வருமானத்தைப் பெருக்கவும், பால் உற்பத்தியை அதிகரிக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் தம்பதிகளுக்கு கால்நடைப் பராமரிப்பு முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, இவர்கள் மூலமாக விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் "கால்நடை வளர்ச்சித் திட்டம்" தற்போது 49 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு, எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 3.36 கோடி செலவில் விரிவுபடுத்த உள்ளதை மனமார வரவேற்கின்றோம் தாயே!

சென்னை மாதவரம் பால்பண்ணையின் பால் மற்றும் பாலின் மூலம் செய்யப்படுகின்ற பொருட்களின் தரம் நன்றாக உள்ளதா என்று அறிவதற்கு, தரக் கட்டுப்பாடு ஆய்வகத்திற்கு ரூபாய் 69.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது கண்டு மகிழ்ச்சி அடைந்தோம் தாயே!

தமிழகத்தில் தோட்டக் கலையையும், உணவுப் பொருட்கள் பதப்படுத்தும் தொழில்களையும் மேம்படுத்தும் வகையில் "வேளாண் வணிகத் துறை" என்னும் புதியதொரு துறையை ஏற்படுத்தியது விவசாயிகளின் மத்தியில் புதிய சக்தி பிறந்திருக்கிறது தாயே!

தமிழகத்தில் வருங்காலங்களில் வறுமை என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் போக "தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தை" விரிவுபடுத்தியுள்ளீர்கள் தாயே!

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற மூதாதையரின் சொல்லுக்கிணங்க ஆட்சிக்கு வந்த 15 நாட்களில் தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வாங்கிய கடனுக்குண்டான வட்டியையும், அபராத வட்டியினையும் தள்ளுபடி செய்து, இமாலய சாதனை புரிந்து, விவசாயிகளின் மத்தியில் நமது கழக அரசிற்குப் பெருமதிப்பும், மரியாதையும் ஏற்படுத்திக் கொடுத்து இருக்கின்றீர்கள் தாயே!

இதுமட்டுமா, தமிழகத்தில் கல்வி வளர வேண்டும் என்ற நோக்கோடு பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், பள்ளி ஆசிரியர்கள் பணி இடமாறுதலில் கவுன்சிலிங் முறை, தமிழகத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் முறையில் தமிழகம் உலக அரங்கில் இந்தியத் திருநாட்டிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் விளையாட்டுத் துறையில் ஒலிம்பிக் மற்றும் உலக விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வெல்லும் தமிழ்நாட்டைச் சார்ந்த வீரர்களுக்கு முறையே 1 கோடி, 50 இலட்சம், 25 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை வழங்குவது மற்றும் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு 18 கோடி ரூபாய், குறிப்பாக மகளிர் மேம்பாடு, மகளிர் சுயநிதி உதவிக்குழு, ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த கல்வி பயிலும் மாணவிகளுக்கு அரசு மூலம் சைக்கிள் இலவசம், பெண் சிசுக்கொலைத் தடுப்புச் சட்டம் போன்ற திட்டங்களால் தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயிகளும், ஏழைத் தொழிலாளர்களும் இந்த நிதிநிலை அறிக்கையில்



நன்மை அடைகிறார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னதுபோல், "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்" என்ற பழமொழியை நிரூபணம் செய்யும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு செயல்பட்டு வருகின்றது என்பது திண்ணமே.

கருணை உள்ளம் கொண்ட தாயே, எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் சில கோரிக்கைகளை தங்கள்முன் சமர்ப்பிக்கின்றேன். தாங்கள் கனிவோடு ஏற்று, என்னுடைய தொகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று தங்கள் பாதம் தொட்டு பணிந்து வேண்டுகிறேன், தாயே!

திண்டுக்கல் மாவட்டத்தில் ஏழு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. பழனி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், திண்டுக்கல், நத்தம், நிலக்கோட்டை, ஆத்தூர் ஆகிய தொகுதிகள் ஆகும். எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியைத் தவிர மற்ற ஆறு தொகுதிகளும் தனி தாலுக்காவாக உள்ளன. ஆத்தூர் தொகுதி மட்டும் பல காலமாகவே திண்டுக்கல் தாலுக்காவாகவே இருந்து வருகிறது.

கருணை உள்ளம் கொண்ட காவியத் தலைவியே, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த பொதுமக்கள் அனைவரும் நாற்பது கிலோமீட்டர் தூரம் பேருந்துகளில் பிரயாணம் செய்து தாலுக்கா அலுவலக வேலைகளைச் செய்து வருவது மிகவும் கஷ்டமாக உள்ளது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன் தாயே!

தானைத் தலைவி அவர்களே, கனிவுடன் பரிசீலனை செய்து "செம்பட்டி" என்ற ஊரை மையமாகக் கொண்டு ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியை ஆத்தூர் தாலுக்காவாக அறிவித்து எனது தொகுதி மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்திடும்படி தங்களைப் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்கு தொடர்ச்சி மலைத்தொடர் பகுதிகள் அடங்கிய தொகுதி ஆகும். மலைப் பகுதியில் காபி, மிளகு தோட்ட விவசாயிகளும், தொழிலாளர்களும் விலை வீழ்ச்சியின் காரணமாக மிகவும் நலிவடைந்த நிலையை அடைந்துள்ளார்கள் தாயே!

நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காட்டுவளம் இருந்தால்தான் மழை நன்றாகப் பெய்யும் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. மலைப் பகுதிகளில் வாழ்கின்ற விவசாயிகள், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குன்றிப்போய், குளரிப்போய் உள்ளதால், கந்துவட்டிக்கும், கடப்பாரை வட்டிக்கும், நாள் வட்டிக்கும், நிமிட வட்டிக்கும் என்று வாங்கி, தோட்டப் பராமரிப்பிற்குச் செலவழித்து, நஷ்டப்பட்டு கடைசியில் கடன் கட்டுவதற்கும், வட்டி கட்டுவதற்கும் வழியின்றி காட்டுவனத்தில் சொநத நிலங்களில் உள்ள மரங்களை வெட்டி வாழ்க்கை நடத்துகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது தாயே! இந்த நிலை மாறி, காபி தோட்ட விவசாயிகளும், தொழிலாளர்களும் தலை நிமிர்ந்து நடப்பதற்கு, காபிக்கும், மிளகுக்கும் நல்ல விலை கிடைப்பதற்கு போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மலைத் தோட்ட நிலங்களுக்கு ஒரு ஏக்கரை இரண்டரை ஏக்கர் என்ற கணக்கில் "ஸ்டாண்டர்டு" ஏக்கர் என்பதை ரத்து செய்து, விவசாய வருமான வரியையும் ரத்து செய்து, ஊட்டியில் தேயிலை தோட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் வகையில நடவடிக்கை எடுத்து புதுத் தெம்மையும், திராணியையும் ஏற்படுத்தித் தந்ததைப்போல, செத்துகொண்டிருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள காபி விவசாயிகளின், தொழிலாளர்களின் வாழ்விலும் மறுமலர்ச்சியை உருவாக்கித்தர கருணை உள்ளம் கொண்ட காவியத் தலைவியே, போர்க்கால நடவடிக்கை எடுத்து தந்து உதவிடும்படி தங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 6-35*

தமிழகத்தில் பொள்ளாச்சிக்கு அடுத்தாற்போல் எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அய்யம்பாளையத்தில் தென்னை அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. அந்தப் பகுதி விவசாயிகள் தென்னை மரத்தை நம்பியே வாழ்கின்றனர். மூன்று ஆண்டுகளாக தென்னை மரங்களில் குருத்து வண்டு தாக்குதல், தேங்காயில் சிலந்திப் பூச்சி தாக்குதல்களால் பெரிய அளவில் விவசாயிகள் பாதிக்கப்பட்டு பருவமழை தவறிய காரணத்தாலும், நீர்த் தட்டுப்பாட்டாலும், தேங்காய் விளைச்சலும் குறைவு, தேங்காய் விலையும் குறைவு என்று மிகவும் வேதனைப்பட்டு வெந்து கொண்டிருக்கின்றார்கள்.



"தென்னையைப் பெத்தா இளநீரு
பிள்ளையைப் பெத்தா கண்ணீரு"

என்று கவியரசு கண்ணதாசன் எழுதிய பாடல் எல்லாம் உண்மைக்கு மாறாகி தென்னையை உருவாக்கிவிட்டு கண்ணீர் விடுகின்ற விவசாயிகள் பலர். ஆறுகோடி தமிழ் மக்களையும் தங்கள் பிள்ளைகளாகக் கருதி மக்களின் தொண்டனாய், மக்களின் தோழனாய், என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னதுபோல் இருந்து மக்களின் துயரைத் . தீர்க்கின்றீர்கள். அதைப்போல தென்னை விவசாயம் வளர்வதற்கும், தென்னை விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதற்கும் கொப்பரைத் தேங்காய்க்கு 4 சதவிகிதம் அரசு விதித்துள்ள வரியை ரத்து செய்து, தென்னை மரத்தையே நம்பி வாழ்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தென்னையை விட்டு விட்டு பாலுக்கு வாருங்கள்.

**திரு. பி.கே.டி. நடராஜன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாலுக்கு வாருங்கள்.

**திரு. பி.கே.டி. நடராஜன்:** பாலைப் பற்றிச் சொல்லிவிட்டேன். தொகுதியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரம் ஆகின்றது.

**திரு. பி.கே.டி. நடராஜன்:** அய்யம்பாளையம், தென்னை விவசாயிகளைக் காப்பாற்றிட வேண்டுகிறேன் தாயே. எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் சின்னாளப்பட்டி என்ற ஊரில் நெசவுத் தொழிலாளர்கள் அதிகம் வாழ்கின்றனர். சின்னாளப்பட்டியைச் சுற்றிலும் உள்ள கிராமங்களில் உள்ளவர்களும் கைத்தறி நெசவை நம்பித்தான் வாழ்கிறார்கள். தற்சமயம் கைத்தறி நெசவுத் தொழில் மிகவும் நலிவுற்று, மோசமடைந்து நெசவாளர்கள் எல்லாம் ஊரைவிட்டே வெளியேறிய வண்ணம் உள்ளார்கள்.

"சின்னாளப்பட்டி சேலையைக் கட்டி
வந்தாளடி ஒரு சிட்டு"

என்று சினிமா பாடல்களில் எல்லாம் பெயர்போன சின்னாளப்பட்டு நெசவாளர்கள் வருந்திக்கொண்டிருக்கிறார்கள் தாயே.

கருணை உள்ளம் கொண்ட தாயே, மீனவர்களுக்கு 4,000 வீடு கட்டித் தருவதைப்போல் நெசவாளர்களுக்கு எங்கள் தொகுதியில் அரசு மூலம் வீடு கட்டிக் கொடுத்து நெசவாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்திட வேண்டுமாய் தங்களைப் பணிவுடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தாயே, எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அய்யர்பாளையத்திலிருந்து தாண்டிக்குடி செல்லும் சாலையில் மருதாநதி ஆற்றின் குறுக்கே சுதந்திரம் வாங்கிய காலத்திற்கு முன்னரே பாலம் கட்டப்பட்டு தற்சமயம் பாலம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மழைக் காலங்களில் என்.பி.ஆர். அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ-மாணவிகள் ஒரு மாத காலத்திற்கு பாலத்தை கடந்து செல்ல முடியாமல் அவர்களின் படிப்புக்கு குந்தமாக உள்ளது. மேலும், அந்த ஒரு மாத காலத்திற்கு வண்டி, வாகனங்கள் செல்லமுடியாமல் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு விடுகிறது. வெள்ளம் வருகின்ற காலங்களில் பல உயிர்கள் சேதம் அடைகின்ற காரணத்தினால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாக்கப்படுகின்றார்கள். தேர்தல் நேரத்தில் முந்தைய ஆட்சியாளர்கள் தேர்தலுக்காக மக்களை ஏமாற்றுவதற்கு பாலம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நடத்திவிட்டுச் சென்றுவிட்டார்கள், தாயே. தாங்கள் மனமுவந்து கருணைகாட்டி அந்தப் பகுதி மக்களின் உயிருக்கெல்லாம் உத்திரவாதம் கொடுத்து காப்பாற்றிட வேண்டுமாய் தங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மலைப் பகுதியில், ஆடலூர், பன்றிமலை, சோலைக்காடு என்ற கிராமங்கள் உள்ளன. அந்தப் பகுதியில் மட்டும் சுமார் 10,000 பேர் குடியிருந்து வருகின்றார்கள். அந்த ஊரைச் சார்ந்த பொதுமக்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே.டி. நடராஜன்:** ஒரு நிமிடம் நன்றி சொல்லிவிடுகிறேன். தாண்டிக்குடி கிராமத்தில் காவல் நிலையம் உள்ளது. அந்தக் காவல் நிலையத்தை கன்னிவாடி கிராமத்திற்கு மாறுதல் செய்ய உத்தரவிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பல்லாண்டு வாழ்ந்து, பல கோடி நன்மைகளை தமிழக மக்களுக்கு வழங்கிட (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன். நான்கு நிமிடங்களிலே பேசி முடியுங்கள். நன்றாகப் பேசுவீர்கள். இருந்தாலும், அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். 7 மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டும்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் பெருக்கு மானியக் கோரிக்கையிலே விவாதிப்பதற்கான வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைக்கு தமிழகத்தில் பால் உற்பத்தி, பால் கூட்டுறவுச் சங்கங்கள், ஆவின் பால் நிலையங்கள் உட்பட இவை சந்தித்துக் கொண்டிருக்கக்கூடிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று முதலிலே உங்களை பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், இன்றைக்கு கிராமப்புறங்களில் விவசாயம் என்பது பொய்த்துவிட்ட நிலையில் வேலைவாய்ப்புகள் என்பது குறைந்து வரக் கூடிய நிலையிலே, பால் உற்பத்தி என்பதுதான் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஓரளவு பணப் புழக்கம் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாகவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய தொழிலாகவும் மாறி இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் பால் உற்பத்தியை பாதுகாக்க வேண்டிய அவசியம் இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

தமிழகத்தை பொறுத்தவரையில் 10 ஆயிரத்து 41 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், ஒரு மாநில இணையமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதிலே 26 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து 21 இலட்சம் லிட்டர் பால் ஒரு நாளைக்கு கொள்முதல் நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட துறை இப்பொழுது அழியக்கூடிய அபாயத்தை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு மோசமான நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6-40

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை மத்தியிலே ஆளக்கூடிய பாரதிய ஜனதா கட்சி-திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை என்பது அந்நிய நாடுகளிலிருந்து பால் பொருட்களை இறக்குமதி செய்யலாம் என்று அனுமதி வழங்கப்பட்டதனுடைய விளைவினால் இந்தத் துறை இப்பொழுது

பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை 810 இலட்சம் டன் பால் உற்பத்தியாகக்கூடிய இந்த நாட்டிலே கடந்த ஆண்டில் மட்டும் மத்தியில் பி.ஜே.பி. அரசு 96 கோடி ரூபாய் பாலை, பால் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறது. அதைப்போன்று, கடந்த ஆண்டு 40,000 டன் பால் பவுடர் என்பது பஞ்சாப் மாநிலத்திலே இறக்குமதி செய்யப்பட்டதினுடைய விளைவாக அந்த மாநிலம் உட்பட, ஹரியானா, உத்தரபிரதேசம் உட்பட பல்வேறு மாநிலங்களிலே பால் உற்பத்தி என்பது பாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கணக்கில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களை மத்திய அரசு கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் ஆலோசனைப்படி தனி நபர்கள், தனி நிறுவனங்கள் 10,000 லிட்டர் ஒரு நாளைக்கு பால் வாங்கலாம் என்ற விதியைக் கடந்த கால ஆட்சியிலே தளர்த்தியதினுடைய விளைவு இன்றைக்கு சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய ஆவின் உட்பட தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய ஆவின் நிறுவனங்கள் அழியக்கூடிய அபாய நிலையை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட சுட்டிக்காட்டினார்கள். அங்கே இருக்கக்கூடிய ஊழியர்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு ஆவின் நிர்வாகம் பல்வேறு சிக்கல்களை சந்தித்துக்கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அங்கே இருக்ககூடிய நிருவாகச் சீர்கேடு.

நான்கூட சமீபத்திலே கேள்விப்பட்டேன். ஆவின் பால் பாக்கெட் அடைப்பதற்கான பாலிதீன் கவர்கள் வாங்கியதிலே சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு நிறுவனம் கூட ஒரு கிலோவை 56 ரூபாய்க்கு தருவதற்குத் தயாராக இருந்தும்கூட, கடந்த காலத்திலே 74 ரூபாய்க்கு அந்த பாலிதீன் பாக்கெட் வாங்கியதாக ஒரு புகார் வந்திருக்கிறது. இதுபோன்ற பல்வேறு நிருவாகச் சீர்கேடுகள் களையப்பட்டால்தான் மாநிலத்திலே இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் பாதுகாப்பதற்கு நம்மால் முடியும்.



இன்றைக்கு ஆவின் பால் நிலையங்கள் சம்பந்தமான விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும்போது, இங்கே நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளுக்குக்கூட ஆவின் பால் வாங்கப்படாமல் தனியார் நிறுவனங்களிடமிருந்து பால் வாங்கப்பட்டதாக ஒரு தகவல் இருக்கிறது. ஒருவேளை அந்தத் தகவல் தவறாக இருந்தால் திருத்திக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தனியார் நிறுவனங்களிடமிருந்துதான் பால் வாங்கப்பட்டதாக ஒரு தகவல் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருந்தால் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்படக்கூடிய பால் ஆவின் பாலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னை, ஆவினிலே இருக்ககூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்கூட வேலைவாய்ப்பு வழங்கியிருப்பது சம்பந்தமாகச் சுட்டிக்காட்டினார். அந்த வேலைவாய்ப்புகள் வழங்கியிருப்பது தொழிலாளர் தீர்ப்பாணையத்தின் தீர்ப்பின்படிதான். அந்த ஆணை வழங்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, கருணை அடிப்படையிலே எந்த வேலையையும் கொடுக்கவில்லை. இதே தீர்ப்பாயம் 480 நாட்கள் பணியாற்றிய மதுரை, ஆவின் தொழிலாளர்களுக்கு பணி வழங்கப்பட வேண்டுமென்ற உத்தரவு வழங்கப்பட்டிருந்தாலும் இன்று வரை அந்த ஆவின் தொழிலாளர்களுக்கு பணி வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் தொழிலாளர்களுக்கும், ஆவின் அலுவலர்களுக்கும் வழங்கப்படக்கூடிய விடுமுறை வித்தியாசமான சூழ்நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது. இதிலே பாரபட்சம் என்பது காட்டப்படக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஆவினிலே பணியாற்றக்கூடிய சி.எல். தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்றும், அதேபோன்று கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கக்கூடிய 3 சதவீத பஞ்சப்படியும், 2 சதவீத பஞ்சப்படியும் உடனடியாக வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்திலே ஆவின் பால் நிலையங்களுக்கு 126 டேங்கர் லாரிகளிலே ;பால் வாங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் தற்போது 64 லாரிகள்தான் ஓடிக்கொண்டிருப்பதாகத் தகவல் சொல்லப்படுகிறது. நிருவாகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் இந்தத் தனியார் டேங்கர் மூலமாகப் பால் விநியோகம் செய்வதிலே பல இலட்சக்கணக்கான ரூபாய் கடந்த காலத்திலே மோசடி செய்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மோசடிகள் நடைபெற்றிருந்தால் அவற்றை விசாரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தணிக்கை சம்பந்தமான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1996-லிருந்து 2001-ஆம் ஆண்டு வரை இருக்கக்கூடிய 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் ஒரு மாநில அமைப்பிலும் தணிக்கை என்பது முறையாக நடத்தப்பட்டிருக்கிறதா என்றால் நடத்தப்படவில்லை என்பதுதான் உண்மையாக இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கை விளக்கக் குறிப்பிலும் இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தணிக்கை நடைபெறாத காரணத்தினாலே இன்றைக்குப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அழியக்கூடிய அபாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. உடனடியாக தணிக்கை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது, தவறுகளிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு தமிழகத்திலே புதிதாக பொறுப்பேற்று இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி.

பிற்பகல் 6-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை மானியத்தின் மீது இம்மாமன்றத்தில் எனது கன்னி உரையை ஆற்றுகின்ற நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய தமிழக மக்களின் நல்வாழ்விற்காக அயராது செயலாற்றி வரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம்



அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1972 அக்டோபர் 10ஆம் நாள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் இயக்கத்தைக் கண்டபோது கிளைக் கழக அமைப்பாளராக,
ஒன்றியக் கழக அவைத் தலைவராக அயராது உழைத்த என்னை
ஆறரை கோடி தமிழ் சமுதாயத்தின் ஆராதனைக்குரிய அன்புத்
தெய்வம் எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள் தனது அன்பால்,
நல் ஆதரவால் ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்ட கழக அவைத்
தலைவர், 1996 ஆம் ஆண்டு சட்டமன்ற வேட்பாளர், மாவட்ட கழகச்
செயலாளர் என்று படிப்படியாக உயர்த்தியதோடு அல்லாமல் கொங்கு
சீமையின் கடைக்கோடி ஊரான சாமராயபட்டி என்னும் குக்கிராமத்தில்
சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எளிய தொண்டனான
என்னை தமிழகத்தின் பால்வளத் துறை அமைச்சராக ஆக்கி பல்வேறு
கால கட்டங்களில் நீண்ட நெடுங்காலமாக 'அமைச்சர் தொகுதி' என்ற
பாரம்பரிய பெருமையைப் பெற்றிருந்த உடுமலை மண்ணிற்கு மீண்டும்
அந்தப் பெருமையை வழங்கிய அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில்
கோடான கோடி நன்றி மலர்களை காணிக்கை ஆக்கி (மேசையைத்
தட்டும் ஒலி) வெற்றிக்காக அயராது உழைத்த கழக உடன்
பிறப்புகளுக்கும், அனைத்துத் தோழமைக் கட்சி நண்பர்களுக்கும்
உடுமலை தொகுதியின் சரித்திரத்தில் இதுவரை இல்லாத வகையில்,
கோவை தெற்கு மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளிலேயே அதிக
வாக்குகள் என்ற முறையில் சுமார் 40,000 வாக்குகள் வித்தியாசத்தில்
பெரு வெற்றியை தேடித்தந்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது
இதய நன்றியை காணிக்கை ஆக்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

2001ஆம் ஆண்டு பெண்கள் உரிமை ஆண்டாக
கொண்டாடப்படுகின்ற இத்தருணத்தில் தமிழகத்தை அனைத்துத்
துறைகளிலும் சிறந்த மாநிலமாக ஆக்குவதற்காகவும், பெண்கள்,
மாணவர்கள், அடித்தளத்து மக்கள், ஆதரவற்ற குழந்தைகளின் துயர்
துடைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள்
தாயுள்ளத்துடன் சாலப் பரிந்து நலத் திட்டங்கள் பல தீட்டி
முன்னேற்றப் பாதையில் நடைபோட வழிவகுத்து வருகிறார்கள்.
இவ்வேளையில், புனிதப் பொருளான பால், மனித வாழ்க்கை முழுவதும்
தொடர்புடையதாகவும், விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில்

பால் உற்பத்தி ஒரு பிரதானத் தொழிலாகவும் மாறிவருகிறது. கிராமப்புற மகளிரின் பங்கு, பால் உற்பத்தித் தொழிலில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. கிராமப்புற பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய வருடம் முழுவதும் வருவாய் ஈட்டக்கூடிய பால் உற்பத்தியை அதிகப்படுத்தவும் அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு நல்ல விலையும், வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான பாலை வழங்கவும் இந்த நல்லரசு முன்னிலும் சிறந்த நடவடிக்கைகளைப் போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்வழிகாட்டுதலின் பேரில் எடுக்க உள்ளது. 'மிக்க பொருள்வளம் உடையதாய் எல்லோரும் விரும்பத்தக்கதாய், மிகுதியாக விளைபொருள் தருவதே நாடு' என்ற வள்ளுவரின் வாக்குப்படி நம் தமிழ்நாடு பால்வளத் துறையில் உயர்வு காண உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் 13 இலட்சம் முதல் 16.98 இலட்சம் லிட்டர் பால் மாநிலம் முழுவதும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. பால் உற்பத்தியாளர்களிடம் பாகுபாடின்றி, தரமான பால் முழுவதையும் நியாயமான விலையில் கொள்முதல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டதன் விளைவாக, நமது அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த 100 நாட்களிலேயே பால் கொள்முதல் நாளொன்றுக்கு 18,29,115 லிட்டரை எட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் கொள்முதல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 19.16 இலட்சம் லிட்டராக இருந்தது. தற்போது 21.48 இலட்சமாக, 2.32 இலட்சம் லிட்டர் பால் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய அளவுக்கு நம்முடைய அரசு செயல்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் கடந்த ஐந்தாண்டுகளில் முதல் ஆண்டில் நாளொன்றுக்கு 7.93 இலட்சம் லிட்டர் விற்பனை செய்யப்பட்ட பால், கடந்த ஆண்டு 7.22 இலட்சம் லிட்டராக குறைந்து, தனியார் விற்பனையை அதிகரிக்க வழிகோலியது. மேலும் கடந்த ஐந்தாண்டுகளில் பால் விற்பனை அளவினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மொத்தத்தில் 8.95 சதவிகிதம் குறைந்துள்ளது. இதனை மாற்றியமைத்து தற்போதைய அரசு பொறுப்பேற்ற 100 நாட்களிலேயே



சென்னையில் பால் விற்பனை நாளொன்றுக்கு 7.61 இலட்சம் லிட்டரை எட்டியுள்ளது. அதாவது, நாளொன்றுக்கு சராசரியாக 39,000 லிட்டர் என்ற அளவிற்குக் கூடுதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இது கடந்த காலத்தைவிட 5.4 விழுக்காடு உயர்வாகும். தற்போதைய சந்தை நிலவரத்தைக் கணக்கிடும்போது, இது ஒரு குறிப்பிடத்தக்க விற்பனை உயர்வு ஆகும். இதன்மூலம் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதி மக்களுக்குத் தரமான பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 6-50

தமிழ்நாட்டிலுள்ள ஊரகப் பகுதிகளில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால் ஊற்றும் விவசாயிகள் கூடுதல் கொள்முதல் விலை பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு, இவ்வரசு 1991 முதல் 1996 வரை ஒவ்வொரு ஆண்டும் பால் கொள்முதல் விலையைக் கூட்டி நிர்ணயித்து வழங்கிவந்தது. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டு முறை மட்டுமே பால் கொள்முதல் விலையை உயர்த்தி அதன் பயனை உரிய காலத்தில் பால் ஊற்றுபவர்கள் அடைய முந்தைய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழ்நாட்டில் அண்டை மாநிலங்களைக் காட்டிலும், மிகவும் குறைவான விலையில் பால் விற்கப்படுகிறது. லிட்டர் ஒன்றுக்கு ரூ.10.50 விலையுள்ள சமன்படுத்திய பால் தனியார்களால் சென்னையில் ரூ.13.00-க்கு விற்கப்படுகிறது. அதேபோல ஆந்திராவில் ரூ.13.00-க்கும், கேரளாவில் ரூ.13.00-க்கும், கர்நாடகாவில் ரூ.11.00-லிருந்து, ரூ.12.00 வரையிலும் விற்கப்படுகிறது.

இந்நிலையில் ஏப்ரல் 2001-ல் ரூ.28 கோடியை வழிவகை முன்பணமாக வழங்கி, அதனை 17 சதவிகித வட்டியுடன் இரண்டாண்டுகளில் திரும்பச் செலுத்த முந்தைய அரசு ஆணையிட்டது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகின்ற இவ்வரசு, ஏற்கெனவே நலிவுற்ற ஒன்றியங்களில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்பினைக் கருத்தில்கொண்டும், ஊரகப் பகுதியில் உள்ள வறிய பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கவேண்டிய பால் பாக்கிப் பணத்தைக் கருத்தில் கொண்டும், ரூ.36.98 கோடி மானியமாக இவ்வாண்டு ஒதுக்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) இதில் முந்தைய அரசு வழிவகை முன்பணமாக வழங்கிய ரூ.28.00 கோடியை மானியமாக மாற்றம் செய்ய அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், முன்பணத்திற்கான வட்டி ரூ.1.17 கோடியைத் தள்ளுபடி செய்யவும் அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இங்கே பேசும்போது தொலைநோக்குத் திட்டத்தைப் பற்றிக் கூறினார்கள். கடந்த கால ஆட்சியிலே திட்டத்தைப்பற்றிக் கூறும்போது, தொலைநோக்குத் திட்டத்திற்கு முழு வடிவம் தரப்பட்டுள்ளது. 1999-லேயே மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், இந்த ஆட்சியில்தான் திட்டத்திற்கான முன்மொழிவு தேசிய பால் வள வாரியத்திற்கு அனுப்ப முழு முயற்சி எடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உரிய நேரத்தில் நல்லதொரு ஆணையினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு இலட்சோபலட்சம் பால் உற்பத்தியாளர்கள் சார்பில் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

கடந்த பல ஆண்டுகளாக அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், சென்னையிலுள்ள இணையமும் பல்வேறு காரணங்களால் நஷ்டம் அடைந்து வந்துள்ளன. மேலும், பால் பொருட்கள் தக்க விற்பனை விலையை எதிர்நோக்கி தேக்க நிலையை அடைந்துள்ளது. இதனால், பால் உற்பத்தி செய்ய ஏழையெளிய விவசாயிகளுக்குப் பால் பாக்கியை, சங்கங்களின் நிதி நிலைமையைப் பொறுத்து, வகைப்படுத்தி, நலிவுற்ற சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு பொறுப்பேற்றது முதல் ஏறத்தாழ ரூ.128.00 கோடி பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. தற்போது இணையத்திலிருந்து ஒன்றியங்களுக்குப் பால் பண பட்டுவாடா மூன்று வாரங்களுக்கு குறைவாக இருக்கும்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றிய பிரதானச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.68.00 கோடியை விரைவில் வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் தருணத்தில் நான் கூறிக்கொள்வது, 3,038 சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், நாளது தேதி வரை பால் பணம் பெற்றுள்ளனர். எஞ்சியுள்ள சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



பிற்பகல் 6-55

நட்டத்தில் இயங்கும் இணையங்கள் ஒன்றியங்களுக்கு 'கூட்டுறவுகளுக்கு உதவி' என்ற திட்டத்தின்கீழ் ஒரு புனரமைப்புத் திட்டத்தை மத்திய அரசு, மாநில அரசின் உதவியோடு உருவாக்கியுள்ளது. இப்புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஈரோடு மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்றியங்களில் ரூ.13 கோடி செலவில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. இச்செலவினை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் தலைமையில் இயங்கும் நமது மாநில அரசு, மைய அரசுக்கு சமமாக ஏற்று இத் திட்டத்திற்கான நிதி ரூ.6.5 கோடி ஒதுக்கீடு செய்துவிட்டது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமின்றி, கடந்த 100 நாட்களில் நிர்வாகத்தினைச் சீரமைத்து நட்டத்தைக் குறைக்கும் அனைத்து நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அகில இந்திய அளவில் பால் தொழிலில் ஏற்பட்டுள்ள அறைகூவல்களை எதிர்கொண்டு பால் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி தமிழகத்தில் பால் பெருக்குத் திட்டங்களுக்கு நிதி உதவி பெறத் திட்டங்கள் தீட்டுப்பட்டுள்ளன. உலக அளவில் வாணிபத்தினைப் பெருக்கவும், வெளிநாட்டு பால் பொருட்களுடன் நமது பால் பொருட்களும் விற்பனையில் சமமாக பங்கு பெற்று, ஏலங்களை வெல்லவும், தற்பொழுது பால் பண்ணைத் தொழிலில் கண்ணோட்டம்-2010-ன் கீழ் 'தொலை நோக்குத் திட்டம்-2005' என்ற புதிய திட்டத்தினை தேசிய பால் வள வாரியத்தின் உதவியுடன் இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ரூ.46 கோடியும் தருமபுரி, திருச்சி, மதுரை, சேலம், வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஒன்றியங்களுக்கு ரூ.72 கோடியும் ஆகக் கோரப்பட்டுள்ள நிதியுதவி ரூ.118 கோடியாகும். ஆறு ஒன்றியங்களின் திட்ட வரைவுகள் தேசிய பால் வள வாரியத்தின் ஆய்வில் உள்ளன என்பதனையும், இணையத்தின் திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் பொருட்கள் விற்பனையில் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சமச்சீரான ஆடுகளம் அமைத்து, அனைத்து பங்கேற்போரும் விற்பனைக்கான வாய்ப்பை சம அளவில் பெறும் நோக்கோடு 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு வெண்ணெய் மற்றும் நெய் ஆகியவற்றின் மீதான

விற்பனை வரியை 11 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைத்துள்ளது. UHT டெட்ரா பாலிற்கான 16 சதவிகித விற்பனை வரி முழுவதையும் தள்ளுபடி செய்துள்ளது. இதனால், ஆண்டொன்றுக்கு ரூ. 1.50 கோடி சேமிப்பாகக் கிடைக்கிறது என்பதனையும், இதனால் பிற மாநிலங்களில் நமது பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க இயலும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழக பால் உற்பத்தியாளர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையத்தால் தயாரிக்கப்படும் பால் பொருட்கள் சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இணையத்தின் பால் பொருட்கள் விற்பனைப் பிரிவு மூலம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆட்சியில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக சுமார் ரூ. 2.32 கோடி விற்பனை செய்யப்பட்டு வந்த பால் பொருட்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற பின்னர், மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் விளைவாகப் பால் பொருட்களின் விற்பனை அதிகரித்து ஆகஸ்ட் 2001-ல் ரூ. 3.15 கோடி என்ற சாதனை அளவை எட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், புதிய விற்பனை நிலையங்கள் நகரத்தின் மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் அமைப்பதற்கும் புதிய விற்பனையாளர்கள் நியமனம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கு யோகர்ட் வழங்க மேற்கண்ட நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருத்திய வரவு-செலவுத் திட்டம் 2001-2002-ல் உள்கட்டமைப்பு வசதிகள் தலைப்பில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் வகையில் 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட அலுமினியம் பால் கொள்கலன்களை சங்கங்களுக்கு வழங்கும் வகையில் ரூ. 30 இலட்சம் மற்றும் பாலின் தரத்தைச் சோதனை செய்வதற்கான மின்னணு பால் பரிசோதனைக் கருவிகளை பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் வகையில் ரூ. 30 இலட்சம், ஆக மொத்தம் ரூ. 60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டிற்கான பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கேன்கள், திரவ நைட்ரஜன் குடுவைகள், கிட்டி மற்றும் கன்று வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மானியத் தொகையாக ரூ. 9.32 இலட்சம் மாநில அரசு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-00

ஒன்பதாவது மற்றும் பத்தாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியன ஒருங்கிணைந்து வளமான எருமை மற்றும் பசு இன மேம்பாட்டிற்காக ரூ. 100.20 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடன் ஒரு திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான கருத்துரு மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

திட்ட ஒப்புதல் பெற்றபின் மாநில அளவில் திட்ட அமலாக்கும் நிறுவனம் ஒன்றினை அமைத்து இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ரூ. 32.23 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்தில் படிப்படியாக தமிழகத்திலுள்ள அனைத்து எருமை மற்றும் பசு இனங்களைச் செயற்கை முறை கருவூட்டல் மூலம் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாமன்ற உறுப்பினர்கள் கவனமாகவும் ஆழ்ந்தும் மானியக் கோரிக்கையினை கவனித்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைக் கூறினார்கள். உற்பத்தி விலையைக் கூட்ட வேண்டுமென்று ஒரு மாண்புமிகு உறுப்பினர் கூறினார். விற்பனை விலையை ஏற்றக்கூடாது என்று இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் கூறினார். இங்கு மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் நீங்களே முடிவு செய்துகொள்ள வேண்டும். இப்போது, இந்த ஆவின் நிர்வாகமானது 31-3-2001-லே முறையாகக் கணக்கு வழக்குகள் காட்டவில்லை என்று இந்த மன்றத்திலே வைத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்திருப்பீர்கள். இந்தச் சூழ்நிலையிலேயே 244 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை உங்களுடைய குறிப்பிற்கு கூறிக்கொள்கின்றேன்.

மேலும், இங்கு கூறும்போது ஏற்கெனவே வேலைக்கு ஆட்களை எடுத்து, அதிலே சில குறைபாடுகள் இருந்ததைக் கூறினார்கள். அதிலே 34 பேர்களை திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டும். நியாயமான, நேர்மையானவர்களுக்கு வழி கிடைக்கவில்லை. (குறுக்கீடு) அதுதான் வேலையிலே இருக்கிறார்கள். இருக்கிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வருகிறது. ஆனால் மற்றவர்கள் 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நேரத்திலே 1980ஆம் ஆண்டு உள்ளிருப்பு போராட்டம் நடத்தியதன் காரணமாக, வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் எல்லோரும் இன்றைக்கு அவர்கள் சொன்ன சட்டத்திட்டத்திற்கு ஒத்துப்போன காரணத்தினாலே 4500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். குறிப்பிட்ட 34 பேர் அங்கே பணி செய்து கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகாலமாக அவர்கள் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதை இந்த அரசு கருணையோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கை கனிவுடன் பரிசிலிக்கப்படும் என்று கூறிக்கொண்டு மேலும் பல்வேறு கருத்துகள் குறித்து, இந்த மாமன்றத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் அனைத்துமே நியாயமான முறையிலே நிவர்த்தி செய்து தரப்படும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பேரவை உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே வெட்டுப் பிரேரணைகள் மூலம் பல அரிய செய்திகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்காகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைமீது பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், இந்தத் துறை மேலும் வளர்ந்து அமைதிப் பூங்காவாம் தமிழகக் கிராமங்களில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய பால் உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரிய பெரிய கருத்துகளை தெரிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப

எண்ணியர் திண்ணியர் ஆகப்பெறின்"



என்ற குறளுக்கேற்ப வினைத் திட்பம் உடையவர்கள் தாம் எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் எண்ணியபடியே எய்துவார்கள் என்ற வாக்குப்படி செயல்திறன் மிக்கவரும் நம்மையெல்லாம் நல்வழியில் நடத்திச் செல்பவருமான மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த மேலான கருத்துகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று சீரும் சிறப்புமாகச் செயல்படுத்தப்படும் என கனிவுடன் தெரிந்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துகளை கவனத்திலே கொண்டு இத்துறை மேலும் சிறப்பாகச் செயல்பட தக்க மேல்நடவடிக்கைகள் அனைத்தும் தவறாமல் மேற்கொள்ளப்படுமென உறுதியளித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு பால்வளத் துறை மானியக் கோரிக்கையினை இம்மாமன்றத்தின் வாயிலாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

*பிற்பகல் 7-05*

### (எ) பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10- பால் வழங்கு செயல் திட்டங்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 56,44,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-9-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

61. 1999ஆம் ஆண்டு வரன்முறைப்படுத்த விண்ணப்பம், மதிப்பீடு மற்றும் வசூலிப்பதற்கான (சென்னை பெருநகர்ப் பகுதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 31-8-2001 ஆம் நாளிட்ட 369ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

62. 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் முடிந்த காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

63. 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் முடிந்த காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

64. 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் முடிந்த காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

73. 1999-2000ஆம் ஆண்டுக்கான 'கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

74. மானியக் கோரிக்கை எண் 29—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

75. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

76. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை குறித்த மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

77. மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

78. மீனவளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

79. மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

80. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

81. மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய் கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ்)

82. மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (ஆங்கிலம்)



# இணைப்பு I

*(52ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 29

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2001-2002

### அத்தியாயம் - 1

**முன்னுரை**

கோரிக்கை எண் 29-ன்கீழ் 2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.824,39,14,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு அந்நாட்டின் மனித வள மேம்பாட்டைப் பொறுத்தே அமைகிறது. ஒரு நாட்டின் சமுதாய மேம்பாடு பெண்களைப் பொறுத்தே அமைகிறது. பெண்ணைவிட பெரும் சக்தி ஏதுமில்லை என்பதனால்தான் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்றார் வான்புகழ் வள்ளுவர்.

'வன்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண்ணழகே' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். 'மகளிரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால் மாநிலத்தில் போரில்லை, சாக்காடில்லை' என்று கவிஞர் பாடினார். மகளிர் அரசியலை மட்டுமல்ல, அரசாட்சியே செய்து கொண்டிருக்கும் காலம் இது. பெண்ணுரிமையும், பெண்டிர் நலமும் பேச்சளவில், ஏட்டளவில் மட்டுமின்றி, நடைமுறையிலும் செயல்படுத்தப்பட்டாக வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பெண்களைப் போலவே வருங்கால சமுதாயத்திற்கு வளமிக்க தூண்களாகத் திகழ வேண்டியவர்கள் குழந்தைகள். சமுதாய நாற்றங்காலின் இளம் பயிர்களான இவர்கள் வளமாகவும், நலமாகவும் வளர வேண்டியது மிகவும் அவசியம். எனவே, சமுதாயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் பெண்களும் குழந்தைகளுமே ஆவர். பெண்களில் அன்பும் ஆதரவும் அதிகம் தேவைப்படுபவர்கள் கருவுற்ற தாய்மார்கள்,

பாலூட்டும் தாய்மார்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பெண்கள், ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள் ஆவர்.

குழந்தைகளில், 6 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தனிக் கவனமும் முழுமையான ஆதரவும் தேவை. அத்தோடு, வளரும் இளம் பருவத்தில் உள்ள இளம் பெண்கள் உள்ளத்தாலும், உடலாலும் சிறந்து விளங்க வேண்டியது மிகவும் அவசியம். இதனை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெண்கள், குழந்தைகள் ஆகிய இரு பிரிவினரையும் தம் இரு கண்களாக எண்ணி அவர்கள் முன்னேற்றத்திற்கு பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள். இத்தகைய திட்டங்களைச் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நல மேம்பாட்டிற்காகவும் ஏழை எளிய மக்கள் மற்றும் முதியோர் துயர் துடைக்கவும் எண்ணற்ற பணிகள் பல்வேறு முக்கிய துறைகள் மற்றும் திட்டங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள் கீழ்க்காணும் பரந்த இனங்களின்கீழ் அடங்கும். அவை:—

1. மகளிருக்கான பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்
2. குழந்தைகள் நலத் திட்டங்கள்
3. சத்துணவுத் திட்டங்கள்
4. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டங்கள்
5. இடர்பாடான சூழ்நிலையில் உள்ள மகளிர் மற்றும் சிறார்களுக்கானத் திட்டங்கள்
6. முதியோர்க்கானத் திட்டங்கள்

இவற்றைச் செயல்படுத்தும் இயக்ககங்கள்/நிறுவனங்களின் நோக்கங்கள், ஆற்றும் பணிகள், பயனாளிகள் விவரம் மற்றும் 2001-2002ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரங்கள் ஆகியவை பற்றி பல்வேறு தலைப்புகளின்கீழ் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.



## அத்தியாயம் - 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

*2.1.* குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் அவர்களது நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள அரசு, அவர்களது வளர்ச்சிக்கும், ஊட்டச் சத்திற்கும் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பெண் குழந்தைகளின் சுகாதாரத்தைப் பேணிக் காத்திடவும், பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிடவும், ஆண்-பெண் வேறுபாட்டினைக் குறைக்கவும், வளர் இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தவும், பெண்களின் ஆரோக்கியமான உடல்நலத்தைப் பேணுவதற்கும் அரசு கொள்கைகளை உருவாக்கி, முனைப்புடன் செயல்படும்.

### 2.2 பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

குடும்ப கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளிக்கவும், பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் போக்கை கட்டுப்படுத்துவதற்காகவும், "புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்" என்னும் புரட்சிகரமானதொரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்.

1997-98-ல் இத்திட்டம் திருத்தம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஆண் குழந்தை இல்லாத ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தை உள்ள 40 வயதிற்குட்பட்ட தாய் கருத்தடை சிகிச்சை செய்து கொண்டால் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலம், ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ.3000-ம் இரு பெண் குழந்தைகள் இருந்தால் தலா ரூ.1500-ம் 5 ஆண்டு நிரந்தர வைப்புத் தொகை ரசீதாக அக்குழந்தைகள் பெயரில் வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் வரை ஐந்தாண்டுக்கு ஒரு முறை கட்டாயமாக இந்த ரசீதைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் அப்பெண் குழந்தை 20 வயது ஆகும்போது வழங்கப்படும். ரூ.1500/- முதலீட்டிற்கு ரூ.29,000/- மற்றும் ரூ.3000/- முதலீட்டிற்கு ரூ.58,000/- அளவில் கிடைக்கும். இத்திட்டம் "அன்னை சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" என அறியப்படுகிறது.

தற்பொழுது இத்திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு அதிக நிதிப் பயன் கிட்டும் வகையில் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே

இருந்து வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில் பெற்றோர் எவரேனும் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தால், அரசு, அக்குழந்தையின் பெயரில் தொடக்க வைப்பீடாக ரூ.20,750-செலுத்தும். இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டி அப்பெண் குழந்தை பள்ளிக் கல்வி முடிக்கும் வரை திங்கள் ஒன்றுக்கு குறைந்தது ரூ.150/- வழங்கப்படும். 20 ஆண்டுகளுக்குப் பிறகு திரண்ட பயனாக ரூ.40,000/- வழங்கப்படும். அப்பெண் தொடர்ந்து மேற்கல்வி பயிலவோ அல்லது அதன் திருமணச் செலவிற்கோ இத்தொகை உதவும். இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தால், அரசு, பெண் குழந்தைகள் ஒவ்வொன்றின் பெயரிலும் ரூ.15,150/-ஐ தொடக்க வைப்பீடாக செலுத்தும். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.150/- வழங்கப்படுவதோடு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு திரண்ட பயனாக அவர்கள் ஒவ்வொருவரும் ரூ.40,000/-பெறுவர். இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.22.7075 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.3. தொட்டில் குழந்தைத் திட்டம்**

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் நடைபெற்று வரும் கொடிய செயலான பெண் சிசுவதையைத் தடுக்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டில் தமிழக அரசால் "தொட்டில் குழந்தைத் திட்டம்" எனும் தன்னிகரில்லாத திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி சமூகச் சூழ்நிலை காரணங்களினால் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் வண்ணம் முக்கிய இடங்களான மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், குழந்தைகள் இல்லம் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டன. சேலத்தில் ஒரு வரவேற்பு மையம் தொடங்கப்பட்டது. தற்பொழுது, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ.12.96 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய வரவேற்பு மையங்கள் செயல்படும் வகையில் சீரமைக்கப்பட்டு இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். மேலும், சேலத்தில் தற்பொழுது உள்ள மையம் மேம்படுத்தப்படும். பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பெண் சிசுக்களைப் பெறும் வகையில் அம்மையங்களின் வசதிகள் மேம்படுத்தப்படும். மாவட்ட சமூக நல அலுவலகங்களிலும்



தொட்டில்கள் வைக்கப்படும். தொட்டில் மையங்களில் பெறப்படும் குழந்தைகள் வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்படும். பெண் சிசுவதை செய்யும் கொடுஞ்செயலுக்கு எதிராக மாநில அரசு பரந்த அளவில் பிரச்சாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும். இதற்காக இந்த நிதியாண்டில் ரூ.12.96 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.4 குழந்தைகளின் நலனுக்காக 18 அம்சத் திட்டம்**

குழந்தைகளின் நலன் மற்றும் பராமரிப்பினைக் கருத்தில் கொண்டு அரசு 1993ஆம் ஆண்டு "டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தினை" ஆரம்பித்து செயலாக்கியது. குழந்தைகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்திட இத்திட்டத்தில் குழந்தைகளின் சுகாதாரம், ஊட்டச் சத்து, கல்வி, சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

"குழந்தைகள் உயிர் வாழ்தல்" என்ற நிலையிலிருந்து, "ஆரம்பக்கால குழந்தைகள் பராமரிப்பு, உயிர் வாழ்தல் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்" ஆகிய அம்சங்களுடன் இத்திட்டம் நடவடிக்கையாக, ஏற்கெனவே உள்ள அம்சங்களுடன் புதியதாக மூன்று அம்சங்கள் தெரிவு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2010ஆம் ஆண்டுவரையிலான காலத்திற்கு இலக்குகளும் அதற்கான செயல் திட்டங்களும் நிர்ணயிக்கப்பட்டு அரசின் பல்வேறு துறைகள் மூலமாக அதாவது சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், கல்வி, சமூக நலம், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறைகள் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

*புதிய மூன்று அம்சங்கள் பின்வருமாறு:—*

- *வளரிளம் பெண்களுக்கான பணிகள்*
- *ஆரம்ப நிலையிலிருந்தே குழந்தைகளின் கவனிப்பு, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், பெற்றோர்களின் பொறுப்பும்*
- *சுய உதவிக் குழுக்கள்—சமுதாயப் பங்கேற்பு*

**2.5 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் 1-7-1982 முதல் ஊரகப் பகுதியிலுள்ள குழந்தைகள் நல மைய[illegible] 2 வயது [illegible] 5 வயதிற்குட்பட்ட முன்பருவக் கல்வி பயில[illegible] குழந்தைகளுக்கும் [illegible]

[2001 செப்டம்பர் 6

முதல் 9 வயது முடிய உள்ள ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15-9-1982 முதல் இத்திட்டம் நகர்ப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது. மேலும், இத்திட்டம் 15-9-1984 முதல் 10 வயது முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 15-1-1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோர்களும் 7-12-1995 முதல் தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயனடையும் கருவுற்றத் தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் உள்ள சத்துணவு மையங்களின் எண்ணிக்கை மற்றும் பயனடைந்தோர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு: -

**1. குழந்தை நலச் சத்துணவு மையங்கள்**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | | தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர். | மொத்தம் |
| | | | 6 முதல் 24 மாதம் வரை | 2 வயது முதல் 5 வயது வரை | | |
| 1. | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | 10446 (அங்கன்வாடி மையங்கள்) | 164430 | 297702 | 127598 (தாய்மார்) | 589730 |
| 2. | உலக வங்கி உதவியுடன் நடைபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-3 | 19500 (சமுதாய ஊட்டச்சத்து மையங்கள் மற்றும் குழந்தைகள் நல மையங்கள்) | 311843 | 533421 | 75875 (மு.ஓ.ஊ) 296326 (தாய்மார்) | 1217465 |
| 3. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகராட்சிப் பகுதி) | 718 குழந்தை நல மையங்கள் | .. | 29457 | 4114 (மு.ஓ.ஊ) | 33571 |
| | மொத்தம் | 30664 | 476273 | 860580 | 503913 | 1840766 |



2001 செப்டம்பர் 6]

**2. பள்ளிச் சத்துணவு மையங்கள்**

| வ. எண் | விவரங்கள் | மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (ஊரகப் பகுதி) | 38970 | 5983813 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 2087 | 476410 |
| | மொத்தம் | 41057 | 6460223 |

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பொருளாதார நிலை காரணமாகப் பின்தங்கிய குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்கி உடல் நலம் மற்றும் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தவும், மனம் மற்றும் உடல் ரீதியான திறனை வளர்க்கவும், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்து இடையில் பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதும் ஆகும்.

நகராட்சிகளில் செயல்படும் 78 குழந்தைகள் நல மையங்கள் நீங்கலாக அனைத்து குழந்தை நல மையங்களும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-3-ன்கீழ் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

சத்துணவு மையத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படுகிறது. நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு 23 பைசா வீதம் காய்கறி (11.5 பைசா) தாளிதம், உப்பு உட்பட 4.5 பைசா), எரிபொருள் (7 பைசா) மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தைச் சீர்படுத்தி அதன் தரத்தை மேம்படுத்த செவ்வனே வடிவமைத்து திருத்தியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்தும் வகையில், அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களைப் பழுதுபார்க்க ரூ.2519.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 6

சத்துணவு மையங்களுக்குத் தேவையான புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்கும் பொருட்டு ரூ.1 கோடி ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் உணவு விகிதம் பின்வருமாறு.—

| வ. எண். | உணவுப் பொருட்கள் | வயது | | | | கருவுற்ற தாய்மார்கள்/ ஒய்வூதியம் பெறும் முதியோர்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | 2-5 | 5-9 | 10-15 | | |
| | | | 1 முதல் 5 ஆம் வகுப்பு | 6 முதல் 8 ஆம் வகுப்பு | 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | |
| | | | | | | (அளவு கிராமில்) |
| 1. | அரிசி | 80 | 100 | 100 | 120 | 200 |
| 2. | பருப்பு | 10 | 15 | 15 | 15 | 15 |
| 3. | எண்ணெய் | 2 | 1 | 1 | 1 | 1 |
| 4. | காய்கறி, தாளிதம், உப்பு உட்பட மற்றும் எரிபொருள் | 23 பை | 23 பை | 23 பை | 23 பை | 23 பை |

## 2.6. ஆரம்பக் கல்விக்கு உதவும் தேசிய சத்துணவுத் திட்டம்

ஆரம்பக் கல்விக்கு உதவும் தேசிய சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 15-8-1995 முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் இலவச அரிசி ஒரு கல்வி ஆண்டில் 10 மாதத்திற்கு அளித்து வருகிறது.

## 2.7. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்:

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1975 ஆம் ஆண்டு கீழ்குறிப்பிட்டுள்ள விரிவான நோக்கங்களுக்காக தொடங்கப்பட்டது:—

1. 0-6 வயது குழந்தைகளின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.



2001 செப்டம்பர் 6]

2. குழந்தைகளின் மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி, சமுதாய உணர்வு ஆகியவற்றிற்கான அடித்தளம் அமைத்தல்.

3. குழந்தை இறப்பு, நோய்வாய்ப்படுதல், ஊட்டச் சத்து பற்றாக்குறை மற்றும் குழந்தைகள் பள்ளியில் இருந்து இடையில் விலகுதல் போன்றவற்றைக் குறைத்தல்.

4. குழந்தைகள் முன்னேற்றத்திற்காகச் செயல்படுகின்ற பல்வேறு துறைகளுடன் இணைந்து திட்டமிடுதல், செயல்படுதல்.

5. குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துத் தேவைகளைப் பராமரிக்க ஏதுவாக ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் தாய்மார்கள் அறியச் செய்தல்.

தமிழ்நாட்டில் சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டையில் சோதனை முறையில் தொடங்கப்பட்ட திட்டம், தற்பொழுது 113 திட்டங்களாக விரிவாக்கப்பட்டுள்ளது. அதில் 67 திட்டங்கள் கிராமப்புறங்களிலும், 44 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டங்கள் மலைவாழ் பகுதியிலும் உள்ளன. இத்திட்டம் 10,446 மையங்களைக் கொண்டு 113 திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கியப் பயனாளிகள் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 15 முதல் 45 வயதிற்குட்பட்ட மகளிரும் ஆவர்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் குழந்தைகளின் வளர்ச்சி நிலையினைக் கண்காணித்தல், இணை உணவு வழங்குதல், நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகள், மருத்துவப் பரிந்துரைகள், ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, முறைசாரா முன்பருவக் கல்வி ஆகிய பணிகள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றன.

இந்த வழக்கமான பணிகளுடன், வளரிளம் பெண்கள் மேம்பாட்டிற்கான பணிகள், சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்கும் பணிகள், சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு சிறுகடன் அளித்தல் ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு நகர்ப்புறத் திட்டமும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 துணை மருத்துவ செவிலியர்கள் உதவியுடன்

[2001 செப்டம்பர் 6

செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமம் மற்றும் மலைப்புற திட்டப் பகுதிகளில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலருடன் 4 மேற்பார்வையாளர்களும், ஒரு நடமாடும் குழு பயிற்றுநரும் உள்ளனர். இப்பயிற்றுநர் திட்டப் பகுதிகளில் பயிற்சிப் பணிகளையும் மற்றும் தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார். இத்திட்டப் பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவர்கள் மற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மருத்துவப் பணிகளை மேற்கொள்கின்றனர். மத்திய அரசின் அளவுகோளுக்கிணங்க ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் ஒரு அங்கன்வாடிப் பணியாளரும், ஒரு உதவியாளரும் உள்ளனர். ஒவ்வொரு திட்டப் பகுதிகளிலும் சுமார் 60 முதல் 130 வரையிலான அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் 1000 முதல் 1500 வரை மக்கட்தொகையைக் கொண்டது.

இத்திட்டம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் திட்டமாகும். மாநில திட்ட அலுவலகம், மாவட்டம் மற்றும் திட்ட அளவில் பணிபுரியும் பணியாளர்கள் ஊதியம் உள்பட அனைத்துச் செலவினங்களும் மத்திய அரசு நிதியின் மூலம் ஈடுகட்டப்படுகிறது. இணை உணவு தொடர்பான செலவினம் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தை மேம்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

* அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்குதல்.

* அங்கன்வாடி மையங்களுக்கு முன்பருவக் கல்விக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்.

* வளர் இளம் பெண்களுக்கான திட்டத்தின்கீழ் இரத்த சோகையினைக் கட்டுப்படுத்த இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குவது. குடல் புழு நீக்கும் மாத்திரைகள் வழங்குவது, ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல், குழந்தை பராமரிப்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பயிற்சி அளிப்பது போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.



2001 செப்டம்பர் 6]

சமுதாய பங்கேற்பினை மேம்படுத்த, தொடர்பு முகாம்கள், கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுவதுடன் தேசிய நாட்களான குழந்தைகள் தினம், தேசிய ஊட்டச் சத்து வார விழா போன்றவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

பாரதப் பிரதமரின் கிராமோதய யோஜனா திட்டத்தின் மூலம் 2 முதல் 3 வயது வரை (24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை) உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு 69 கிராமப்புற ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களில் உள்ள 6594 அங்கன்வாடி மையங்களில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பணியாற்றும் அடிப்படை ஊழியர்களின் செயல்திறனை ஊக்குவிக்க அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மாநில அளவில் 26 விருதுகளும் தேசிய அளவில் ஒரு விருதும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 2001-2002 ஆம் நிதி ஆண்டில் ரூ. 6090.11 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.8. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம்:

**முன்னுரை:—**

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் ஊட்டச் சத்து திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவி அளித்து வருகிறது. இதில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் முக்கியமான திட்டமாகும். தமிழகத்தின் 24 மாவட்டங்களில் உள்ள 318 வட்டாரங்களில் நடைபெற்று வந்த இத்திட்டம் 31-12-1997-ல் முடிவடைந்தது.

அதனைத் தொடர்ந்து, இத்திட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS pattern) அடிப்படையில் 1-1-1998 முதல் அதே வட்டாரங்களில் தொடர்ந்து செயல்பட மைய அரசு அனுமதி அளித்தது. அதன் பின்னர், மைய அரசு உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டத்தை தமிழ்நாட்டில் ஐந்தாண்டுகளுக்கு செப்டம்பர் 2004 வரை செயல்படுத்த அனுமதியளித்துள்ளது. அதன்படி தற்போது இத்திட்டம் 25 மாவட்டங்களிலுள்ள 318 வட்டாரங்களில் 19500 மையங்களில் செயல்படுத்தப்பட்டு, இணை உணவு 0-36 மாதக் குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**2. திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்:**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்-II-ல் அடைந்த பயன்களைத் தொகுத்து தேவை ஏற்படும் புதிய பகுதிகளில் தனிக் கவனம் செலுத்தும் நோக்கத்தோடு, உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டத்தின் குறிக்கோள்கள் வகுக்கப்பட்டுள்ளன. முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:

* 0-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து சுகாதாரம் மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்தி குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச் சத்து குறைப்பாட்டைத் தடுத்து, குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினை குடும்பத்தினர் அளவில் மேம்படுத்துவது.
* பெண்களிடையே குறிப்பாக கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம்பெண்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.
* மகளிரும் வளர்இளம் பெண்களும் தங்களின் சொந்த நலனையும் குடும்பத்தாரின் சுகாதார ஊட்டச் சத்து பற்றிய பிரச்சினைகளையும் சிறந்த முறையில் பேணிக்காத்திட அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அதிகாரம் அளித்தல்.

**3. திட்டப் பணிகள்**

(அ) எடை எடுத்து வளர்ச்சி நிலையை உயர்த்துதல்

(ஆ) தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவளித்தல்

(இ) குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன்பருவக் கல்வியளித்தல்

(ஈ) ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வியளித்தல்

(உ) சுகாதாரப் பணியாளர்கள் மூலம் (கிராம நல செவிலியர்/ மருத்துவ அலுவலர்) சுகாதாரப் பணிகளைச் செய்தல்

(ஊ) மேல் மருவத்துவ சிகிச்சைக்குப் பரிந்துரைத்தல்





**4. திட்டத்தின் பயனாளிகள்**

(அ) 0-3 வயது குழந்தைகள்

(ஆ) 3-6 வயது குழந்தைகள்

(இ) கருவுற்ற தாய்மார்கள்

(ஈ) பாலூட்டும் தாய்மார்கள்

(உ) வளர் இளம் பெண்கள்

(ஊ) சமுதாயக் குழுக்கள்
சமுதாயத் தலைவர்கள்

**5. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகள்:**

இந்தப் புதிய திட்டத்தில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டத்தின் மூலம் ஏற்பட்ட பயன்களை தக்க வைத்துக்கொள்வதோடு வளர் இளம் பெண்களுக்கான சுகாதார மற்றும் ஊட்டச் சத்து பணிகள், தாய்சேய் நலம் சம்பந்தமாக பல்துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் ஒரே மாதிரியான பணிகளை ஒருமுகப்படுத்துதல், திட்டத்தின் பணிபுரிவோர்களின் தேவையறிந்து பயிற்சியளிப்பது, மகளிர் அதிகார பகிர்வுக்கான செயல்கள், கிராம அளவிலான மேம்பாட்டுக் குழு மற்றும் முழுமையான தர மேலாண்மை போன்ற புதிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குழந்தையின் ஆரம்பக் கால வளர்ச்சி, ஆரம்பக் கால கல்வி மற்றும் மகளிர் அதிகாரப் பகிர்வு செயல்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. தகவல், கல்வி தொடர்புப் பணிகள் (IEC) மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பு மூலம் குறிப்பிட்ட பகுதி மற்றும் பயனாளிகளைக் கருத்தில் கொண்டு புதிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டு பணிகள் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் தகவல் தொடர்பு சாதனங்களைத் தயாரிப்பது, தகவல் தொடர்பு நிகழ்ச்சிகளை நடத்துவது மற்றும் தகவல் தொடர்பு பற்றிய திறமையை மேலோங்கச் செய்வதற்கான பயிற்சிகள் அளிப்பது போன்றவை அடங்கும். தகவல், கல்வி, தொடர்புப் பணிகளின் நோக்கமானது, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, திட்டப் பணிகளை அவர்களே முன்வந்து கேட்டுப் பெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்குதல், மேலும் தனி மனிதன், குடும்பம் மற்றும் சமுதாயத்தில், எதிர்பார்க்கும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துதல் போன்றவை ஆகும். களப் பணியாளர்களின் அறிவாற்றலை மேம்படுத்த மாத இதழ் (Monthly Newsletter) வெளியிடப்படுகிறது.

[2001 செப்டம்பர் 6

159 வட்டார அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.5 இலட்சம் செலவிட கட்ட மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதில் 130 வட்டார அலுவலகங்கள் கட்டும் பணியை மாவட்ட ஆட்சியாளர்களிடம் கடந்த நிதி ஆண்டின்போது ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 29 வட்டார அலுவலகங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10,000 குழந்தை நல மையங்களைப் பழுதுபார்க்க மையம் ஒன்றுக்கு ரூ.7,000/- வீதம் ரூ.700 இலட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடம் இப்பணிகள் கடந்த 2000-01 நிதி ஆண்டின்போது ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேற்பார்வையாளர்கள் தங்கள் பணிகளை எளிதில் சென்று பார்வையிடும் பொருட்டு இரு சக்கர மோட்டார் வாகனம் வாங்க, வட்டி இல்லாக் கடனாக ஒருவருக்கு ரூபாய் 15,000/-வீதம் 290 மேற்பார்வையாளர்களுக்கு இவ்வாண்டு வழங்கப்பட உள்ளது.

சிறப்பான முறையில் பணி செய்யும் மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த ஆண்டு மொதம் ரூ.3 இலட்சம் மதிப்பில் ஊக்கப் பரிசுத் தொகை வழங்கப்பட உள்ளது.

தேனி, திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய 5 புதிய மாவட்டங்களில் மாவட்ட ஊட்டச் சத்து திட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.48 இலட்சம் மதிப்புள்ள கணினி மற்றும் நகல் இயந்திரம் வழங்கப்பட உள்ளது. ரூ.36.87 இலட்சம் மதிப்புள்ள தாய் - சேய் நல எடை அட்டைகள், ரூ.65.40 இலட்சம் மதிப்புள்ள பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ரூ.34.25 இலட்சம் மதிப்புள்ள குழந்தைகள் எடைக் கருவிகள் ரூ.48.75 இலட்சம் மதிப்புள்ள மருந்து வைக்கும் பெட்டிகள் மற்றும் ரூ.97.50 இலட்சம் மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள் ஆகியன மையங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

**தரம் உயர சுதந்திர கருத்து வெளிப்பாடு (FREQI)**

தரம் உயர சுதந்திர கருத்து வெளிப்பாடு என்னும் உத்தி, அனுபவங்களைக் பகிர்ந்துகொள்ளவும், புதிய கருத்துக்களைப் பெறவும் ஒரு மேடையாக அமையும் தமிழ்நாட்டில் புதிய செயல்திட்டமாக ஒரு



2001 செப்டம்பர் 6]

மாதிரி மையத்தைத் தேர்ந்தெடுத்து அதில் தரம் உயர சுதந்திர கருத்து வெளிப்பாடு கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது மாநில, வட்டார, தொகுதி அளவில் மாதிரி மையங்களில் வைத்து நடைபெறும். இதில் நடுவராக ஓர் உயர் அலுவலர் இருந்து கூட்டத்தை நடத்தி, பணியின் தரத்தை உயர்த்த தேவையான ஆக்கபூர்வமான ஊக்கம் அளித்து புதிய உத்திகளைத் தடையில்லாமல் வெளிக்கொணரவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் ஆவன செய்வார். இக்கூட்டங்களில் பங்கு பெறும் ஒவ்வொருவரும், தங்கள் பகுதியில் புதிய உத்திகளைக் கையாண்டு தாங்களாகவே இத்தகைய மாதிரி மையங்களை உருவாக்க வேண்டும் என்பதே இதன் எதிர்பார்ப்பாகும்.

**வளர் இளம் பெண்களுக்கான திட்டம்**

"குடும்ப வாழ்க்கைக் கல்வி" என்ற தலைப்பில் தொகுதி அளவிலான (Sector Level) இரண்டு நாள் பணியரங்கம் 318 வட்டாரங்களிலுள்ள 1272 தொகுதிகளிலும் ரூ.25 இலட்சம் செலவில் நடத்தப்பட உள்ளது. இதனால் 30500 வளர் இளம் பெண்கள் பயனடைவர்.

சரியான திருமண வயது, இரத்த சோகை தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையை சரி செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய கருத்துக்களை மையமாகக் கொண்டு வளர் இளம் பெண்களுக்கு இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சி இரண்டு கட்டங்களாக ரூ.50 இலட்சம் செலவில் 9707 கிராமங்களில் நடைபெற உள்ளது. இப்புத்தாக்கப் பயிற்சிகள் மூலமாக, சுத்தம் மற்றும் சுகாதார பழக்கவழக்கங்கள், புரதச் சத்து, இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள், வைட்டமின் ஏ. துத்தநாகம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். வளர் இளம் பருவத்தில் எடை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வளர் இளம் பெண்களுக்கு உணர்த்தப்படும்.

வளர் இளம் பெண்கள் தாங்களாகவே தங்களது எடையை கண்காணித்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுவதோடு அவர்களின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்த ஆண்டுக்கு 100 இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகளும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வயிற்றுப்பூச்சி நீக்கும் மாத்திரைகளும் வழங்கப்பட உள்ளது.

## திட்ட மதிப்பீடு

இத்திட்டத்தினை 1998-99 முதல் 2003-2004 வரை ஐந்து வருடங்களுக்குச் செயல்படுத்த ரூபாய் 86.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் உதிஸா பயிற்சி திட்டத்தின்படி தமிழ்நாட்டில் 1-4-1999 முதல் ஐந்து வருடங்களுக்குப் பயிற்சியளிக்க ரூ.25.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.9 அரசு குழந்தைகள் காப்பகங்கள்

தமிழக அரசு, சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக மொத்தம் 5500 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 25 அரசு குழந்தைகள் காப்பகங்களை நடத்தி வருகிறது.

இக்காப்பகங்களில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் பின்வருமாறு:—

* பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்
* குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கும் குறைவாகப் பெறும் குடும்பத்தைச் சார்ந்த தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட நிலையிலுள்ள குழந்தைகள், கணவனோ அல்லது மனைவியோ நீண்ட நாள் கைதியாக இருப்பின் மனைவியால் அல்லது கணவனால் முடியாத நிலையில் உள்ள குழந்தைகள், கணவனாலோ அல்லது மனைவியாலோ கைவிடப்பட்ட குழந்தைகள்
* தொழுநோய் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

"சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகங்கள்" என அழைக்கப்படும் அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு அரசு கீழ்க்கண்ட வசதிகளை அளித்து வருகிறது:—

ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200 வீதம் அனைத்து 25 அரசு குழந்தைகள்காப்பகங்களிலும் உணவிற்குச் செலவிடப்படுகிறது. காப்பகத்திலேயே 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் வெளிப்பள்ளிகளுக்கு அனுப்பபடுகின்றனர். இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.



அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் கல்வி பயிலத் தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்படுகிறது. அரசு குழந்தைகள் காப்பகங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலும் வெளிப்பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் முறையே ரூ.300 மற்றும் ரூ.400 மதிப்பில் இரண்டு ஜதை சீருடைகள் வாங்கி வழங்கப்படுகின்றன. அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.150 வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு தலா ரூ.250 வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகின்றது.

அரசு குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ.50 மதிப்புள்ள காலணிகள் வழங்கப்படுகின்றன.

10 அரசு குழந்தைகள் காப்பகங்களில் யோகா மற்றும் தற்காப்புக் கலை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500 வீதமும் மருத்துவச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குழந்தைகளுக்குத் தரமான நிறுவன பாதுகாப்பு வழங்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காப்பகங்களை அவ்வப்போது ஆய்வுசெய்தல் மற்றும் கண்காணித்தல் மூலம் ஆதரவற்றக் குழந்தைகளுக்கு சிறந்த சேவை அளிக்கப்படுகிறது. இக்காப்பகங்கள் சிறப்பாக செயல்படுவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

இக்காப்பகங்கள் நல்ல நிர்வாக அமைப்புடன் இயங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட 7 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு ஏற்படுத்தியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. மாவட்ட ஆட்சித் தலைவர் | - | தலைவர் |
| 2. மாவட்ட கல்வி அதிகாரி | - | உறுப்பினர் |
| 3. பகுதி நேர மருத்துவ அலுவலர் | - | உறுப்பினர் |
| 4. மாவட்ட சமூக நல அலுவலர் | - | உறுப்பினர் |
| 5. மாநில சமூக நல வாரிய உறுப்பினர் | - | அலுவல் சாரா உறுப்பினர் |
| 6. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் சமூகப் பணியில் முன்னனியில் உள்ள இரண்டு சமூக சேவகர்கள் | .. | அலுவல் சாரா உறுப்பினர்கள். |

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி காப்பகங்களின் முன்னேற்றத்தினையும் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் காப்பகங்களில் குழந்தைகள் சேர்க்கை ஆகியவை குறித்து கண்காணிக்கும். காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு இக்குழு உதவும்.

அன்றாட வாழ்க்கையினைத் தொடர்வதற்குத் தேவையான வெளி உலகத் தொடர்புக்கு வாய்ப்பு நல்கும் பொருட்டும், குழந்தைகளை ஒரே மாதிரியான சூழ்நிலையில் வாழும் தினசரி வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்தவும், அவர்கள் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு ஆண்டிற்கொருமுறை சுற்றுலா அழைத்து செல்லப்படுகின்றனர். 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.473.21 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 11 அரசு குழந்தைகள் காப்பகங்களில் புதிய பாத்திரங்கள் வாங்கி வழங்குவதற்கான ரூ.155 இலட்சம் ஒதுக்கீடும் அடங்கும். மேலும், விருதுநகர் அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க 2001-2002-ல் ரூ.14.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.10 குழந்தைகள் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

வளர்ந்து வரும் நகர சூழ்நிலை மற்றும் தொழில்மயமாதல் போன்ற காரணங்களினால் ஆதரவற்ற நிலைக்கு குழந்தைகள் தள்ளப்படுகின்றனர். இதனால் இளம் சிறார்கள் தவறிழைக்கும் நிலை பெருகி வருகின்றது. பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் நலனுக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குப் பராமரிப்பு மானியமாக 80 சதவீதம் அரசு வழங்குகிறது. மீதமுள்ள 20 சதவீதத்தை நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது. இம்மானியம் தொடர் செலவினமாக உணவு, உடை, போன்றவற்றிற்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.250 வீதம் வழங்கப்படுகிறது.





181 நிறுவனங்களில் உள்ள 14377 குழந்தைகள் பயன்பெறும் வகையில், 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11 தத்து எடுத்தல்

தத்து எடுத்தல், அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அறவணைப்பும் கிடைக்கவும் அவர்களிடமுள்ள செயல் திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் தத்து திட்டம் ஒரு முக்கியமான வாயிலாக உள்ளது. மேலும் குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும், இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலை வளர்க்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும் தத்தெடுத்தல் உதவுகிறது. அத்துடன் இக்குழந்தைகள் சமுதாய மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தத்தெடுத்தல் ஒரு கருவியாக உள்ளது.

உள்நாட்டில் தத்து கொடுக்க 15 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோவை, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, ஓசூர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. உரிமம் பெற்ற 15 நிறுவனங்களில் 8 நிறுவனங்களுக்கு வெளிநாட்டில் தத்து கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு ஒரு தத்து நிறுவனம் செயல்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கி தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. இதற்காக, ஒட்டும் மற்றும் ஒட்டாத தன்மையுள்ள சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு மாவட்ட சமூக நல அலுவலர்கள் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தத்து திட்டத்திற்கென மாவட்ட சமூக நல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். புதியதாக உரிமம் பெற்ற நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 15 தத்து நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நிறுவனங்கள் தத்து கொடுத்தலைச் சட்டப் பூர்வமாக்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

**2.12 கருணை இல்லங்கள்**

தமிழகத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் தற்போது 42 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. கருணை இல்லங்களுக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் அரசு மானியமாக சமூக நல மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வரும் கருணை இல்லங்களில் 1353 குழந்தைகளுக்கு உணவு மற்றும் நிர்வாகச் செலவிற்காக ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.467 அளிக்கப்படுகிறது. படுக்கை செலவின வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.20 வழங்கப்படுகிறது. சீருடையைப் பொருத்தமட்டில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலமாகவும் பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலமாகவும் இக்கருணை இல்லங்களுக்கு வழங்கப்படுகிறது.

2001-2002 ஆம் நிதியாண்டிற்கு ரூ.78.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.13 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சீருடைகளைத் தைத்து கல்வித் துறைக்கு வழங்கும் பொறுப்பினை சமூக நல ஆணையரகம் மேற்கொண்டு வருகிறது. சீருடைகள் தைக்கும் பணி சமூக நல ஆணையரகத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மூலம் செய்யப்படுகிறது. சீருடைகளுக்குத் தேவையான துணி வகைகளை கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு துணிநூல் கழகம் மூலம் கொள்முதல் செய்து வழங்கும் பொறுப்பினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஏற்றுள்ளது. சமூக நலத் துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் 78 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு கல்வித் துறைக்கு





ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2000-2001ஆம் ஆண்டில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு 58 இலட்சம் ஜதை சீருடைகள் தைக்கப்பட்டுள்ளன. துணிகளின் தரம் மற்றும் சீருடைகளின் அளவினை மாவட்ட அளவில் ஆய்வு செய்ய கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழு குறைந்தபட்சம் 10 விழுக்காடு பள்ளிகளைச் சோதனை மேற்கொள்ள வேண்டும். மேலும் துணி வழங்கும் நிறுவனங்கள் துணியின் ஒவ்வொரு மீட்டரிலும் "தமிழ்நாடு அரசு இலவச சீருடைத் திட்டம்" என்னும் முத்திரையினைப் பதிவு செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டு அதன்படி செயல்படுத்தப்படுகிறது.

**2.14 ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்.**

ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு குறைவாக பெறும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின் மூலம் பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு இலவச பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன.

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகம் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ. 50 |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ. 125 |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ. 175 |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ. 300 |
| +1 மற்றும் +2 வகுப்பு | ரூ. 600 |

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 குழந்தைகள் பயனடைகின்றனர்.

2001-2002 நிதியாண்டிற்கு ரூ.16.69 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 6

## 2.15 வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள், பெரும்பாலும் அக்குழந்தைகளுக்குப் பின் பிறந்துள்ள மழலையர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவதாலும் அல்லது சமூக விரோத செயல்பாடுகளில் ஈடுபடுவதாலும் பள்ளிக்குச் செல்வது என்பது இயலாததாகிறது. அரசு இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 212 குழந்தைகள் காப்பகங்களுக்கு, காப்பகம் ஒன்றிற்கு ரூ.25,410 வீதம் தொடர் செலவினங்களுக்காக மானியம் வழங்கி வருகிறது.

2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.53.87 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரசு அலுவலகங்கள்/பல்கலைக்கழகங்கள்/ கல்வி நிறுவனங்கள்/ அரசு சார்ந்த நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பெண்களின் நலனுக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் புதிதாக குழந்தைகள் காப்பகங்கள் நடத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 2.16 மகளிர் நலத் திட்டங்கள்

மகளிருக்கு அதிகாரம் வழங்கும் பல செயல் திட்டங்களை வகுத்து 1994 ஆம் ஆண்டு இந்த அரசால் "தொலைநோக்கு 2000" என அறிவிக்கப்பட்டது. பெண்களை சமுதாயத்தின் முக்கிய அங்கமாகக் கொணர்ந்து அவர்களது முன்னேற்றத்திற்கு பல திட்டங்களை உருவாக்கி சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு காண்பதே இத்திட்டத்தின் அடிப்படையான நோக்கமாகும். இதனைக் கருத்திற்கொண்டு பெண்கள் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு பல செயல்முறைத் திட்டங்களை வகுத்துள்ளது. இவற்றின் மூலம் பெண்களுக்குப் பயிற்சி, வேலைவாய்ப்பு, வருமானம் ஈட்டுதல், நல்வாழ்வு பேணுதல், சேவை புரிதல், ஆண், பெண் மத்தியில் பரிவுணர்வை வளர்த்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பெண்கள் சுதந்திரமாகவும் தன்னம்பிக்கையோடும் தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வழிகாணப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 6]

## 2.17 திருமண நிதியுதவித் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

| | திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் |
|---|---|---|---|
| 1 | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம். | ரூ.10,000 (காசோலை அல்லது கேட்புவரைவோலை) | மணப்பெண் 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினராக இருந்தால் 5-வது வகுப்பு படித்திருந்தால் போதுமானது. ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது வரம்பு 18 மற்றும் அதற்கு மேல். ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணிற்கு மட்டும் நிதியுதவி வழங்கப்படும். |
| 2. | ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டம். | ரூ.7,000 (காசோலை அல்லது கேட்பு வரைவோலை) | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப் பெண்ணின் வயது 18-30-க்குள் இருக்க வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். |
| 3. | அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம். | ரூ.7,000 (காசோலை அல்லது கேட்பு வரைவோலை) | ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். |

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் |
|---|---|---|
| 4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண திட்டம் | ரூ.10,000 (ரூ.7,000 தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ.3,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை) | வருமான வரம்பு இல்லை. மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். |
| 5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம் | (அ) ரூ.20,000 (ரூ.10,000 தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ.10,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை) | (அ) பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடியினர், முற்பட்ட வகுப்பு அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை திருமணம் செய்தல். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். |
| | (ஆ) ரூ.10,000 (ரூ.7,000 தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ.3,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை) | வருமான வரம்பு இல்லை. (ஆ) முற்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை திருமணம் செய்தல். வருமான வரம்பு இல்லை. |

தற்போது பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் வழங்கும் தொகையானது ரூ.7,000/-லிருந்து ரூ.10,000/- வரையும், குறைந்தபட்ச வயது வரம்பு 18 லிருந்து 20 வரையும் உள்ளது. தற்போதுள்ள நிபந்தனைகளை ஒரே சீராக்கும் நோக்குடன் அனைத்து திருமண உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் நிதி உதவியினை ரூ.10,000/- என உயர்த்தி வழங்கப்படும். அதே நேரத்தில் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடராகவோ/பழங்குடி வகுப்பினராகவோ இருந்தால் உதவித்தொகையான ரூ.20,000/- தொடர்ந்து அளிக்கப்படும். அரசால் திருமணத்திற்கென ஊக்குவிக்கப்படும் 20 வயதே அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களுக்கும் அளவுகோலாக இருக்கும்.



2001-2002 ஆம் ஆண்டிற்கு திருமண நிதியுதவித் திட்டங்களுக்கென ரூ.5,505.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.18. தேசிய மகப்பேறு நிதியுதவித் திட்டம்

பெண்கள் கருவுற்ற காலங்களில், ஓய்வாக இருப்பதும், அதிக வேலை செய்யாமல் இருப்பதும், அவர்கள் கருவில் சுமக்கும் குழந்தையின் நலனுக்காக மட்டுமின்றி, அவர்களின் உடல்நலம் மற்றும் பேறுகாலத்திற்கும் மிகவும் அவசியமாகிறது. எனினும், இச்சமூகத்தில் நிலவி வரும் பழக்க வழக்கம் காரணமாக குடும்பங்களில் பெண்களின் நலனுக்கு குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது. மேலும், பல குடும்பங்களில் பெண்கள் வறுமையின் காரணமாக அவர்களின் பேறுகாலநாள்வரை ஓய்வின்றி உழைப்பதும், பொருளீட்டுவதும் அவசியமாகி வருகின்றது. இப்பெண்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்கள் பேறுகாலத்தின்போது ஓய்வெடுக்க ஏதுவாகவும் அவர்கள் வேலைக்குச் செல்லாதிருக்கும் காலங்களில் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடுகட்டவும், மத்திய அரசு ரூ.500/- வீதம் இரண்டு பேறுகாலத்திற்கு வழங்குகிறது. மத்திய அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரிடையாக உதவித் தொகையினை அனுப்புகிறது. பயனாளிகளுக்கு பண அஞ்சல்விடை மூலம் பணம் அனுப்பி வைக்கப்படுகிறது.

## 2.19 சேவை இல்லங்கள்

விதவைகள் ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்களுக்கு நிறுவனப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. அத்தகைய பாதுகாப்பு அளித்திடவும், பெண்கள் மீண்டும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவவும் அரசு சேவை இல்லங்களை உருவாக்கியுள்ளது. இத்துறையின் மூலம் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய 6 இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. இச்சேவையில்லங்கள் பெண்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆகியவற்றை அளித்து வருகிறது. பெண்களுடன் அவர்களது குழந்தைகளும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுவதுடன், அக்குழந்தைகளுக்கும் கல்வி வசதி செய்து தரப்படுகிறது.

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப்பாடங்களை கொண்ட மேல்நிலை வகுப்புகளும் தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடத்தில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பெரியவர்களுக்கு உணவுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு

தலா ரூ.300 வீதமும் சிறியவர்களுக்கு தலா ரூ.200 வீதமும் வழங்கப்படுகிறது. பெரியவர்களுக்கு ரூ.400 மதிப்பில் சீருடை வழங்கப்படுகிறது. இச்சேவையில்ல சிறுவர்களுக்கு ஆண்டிற்கொரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சீருடை வழங்கப்படுகிறது. மற்றும் இவ்வில்லங்களில் பயிலும் மாணவிகளுக்கு தேவையான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவையில்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பாடங்களில் பயிற்சி வழங்கும் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. ஆண்டொன்றிற்கு 65 மகளிர்க்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சிக்குப் பின் அவர்கள் அரசு தொழில் நுட்ப தேர்வு எழுத தகுதியுடையவராகின்றனர். செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு. ஆய்வக தொழில் நுட்பப் பயிற்சி போன்றவை திருநெல்வேலி, கடலூர், சேலம், காரைக்குடி மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றது. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு முடித்த சேவையில்ல மாணவிகளுக்கு நவீன தொழில் நுட்பத்தில் ஈடுபாடு கொள்ளும் வகையில் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

செயலகப் பிரிவு வகுப்புகளுக்காக புதிய தட்டச்சு பொறிகள் வாங்க 2001-2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.3.81 இலட்சமும் 2001-2002ஆம் நிதியாண்டிற்கென மொத்தமாக ரூ.203.71 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.20 தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானிய உதவி

தன்னார்வ தொண்டு நிறுவனங்களான காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும், சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திரிலும், அரசு நிதி உதவியுடன் இரண்டு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. உள்ளுறைவோருக்கு பயிற்சி உதவித் தொகையும், ஆசிரியர்களுக்கு சம்பளமும் மானியமாக வழங்கப்படுகிறது.





2. சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களுக்காக ஸ்திரி சேவா மந்திரால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து தொழிற் பயிற்சி மற்றும் செயலக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

3. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு நிலையில் குறுகியகால பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.

2001-2002 ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ.9.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.21 பணிபுரியும் மகளிர் விடுதிகள்

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடவசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடங்களிலோ அல்லது அருகாமையிலோ தங்குவதற்கு தக்கவாறு இடவசதியினை நாட வேண்டியுள்ளது. எனவே இப்பெண்களுக்கு உதவும் வகையில் சென்னையில் 2, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி, ஒசூர் ஆகிய இடங்களில் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகளை அரசு நடத்தி வருகிறது. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்ச வரம்பு ரூ.10,000/- ஆக உயர்த்தப்பட உள்ளது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோர்களால் சரிசமமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதர பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

2001-2002ஆம் நிதியாண்டில் ரூ.29.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.22 பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிர்க்கான விடுதிக் கட்டடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75 சதவீதம் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் அல்லது ரூ.35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை

[2001 செப்டம்பர் 6

மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இதே பணிக்காக எந்த அரசிடமிருந்தும் எந்த வகையிலும் உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இதுவரை 64 பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. பணிபுரியும் மகளிர் விடுதிகள் இல்லாத மாவட்டங்களில், அங்குள்ள தொண்டு சாரா நிறுவனங்களின் துணையுடன் விடுதிகள் ஏற்படுத்திட அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளும்.

## 2.23 மகளிர் மன்றங்கள்

மகளிர் மன்றங்கள் முதன்முதலில் 1961-ல் தொடங்கப்பட்ட கிராமப்புற பெண்களை கொண்ட குழுக்களாகும். மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு திட்டங்களை அவரவர் பகுதிகளில் பரப்புவதற்கு இக்குழுக்கள் கருவியாக இருந்தன. மக்கள் பங்கு தேவைப்படும் இதர கிராம அளவிலான பிரச்சனைகளில் இக்குழு தன்னுடைய செயல்களை சிறிது சிறிதாக விரிவுபடுத்திக்கொண்டது. கிராம மகளிர் குழுவாக பணியாற்றும்போது அவர்களது தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்வு பன்மடங்காக பெருகுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. ஒவ்வொரு மகளிர் மன்றத்திலும் சுமார் 25 முதல் 30 வரையிலான உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு ஒன்றியத்திலும் மகளிர் மன்ற கன்வீனர் தொகையாக ரூ.10800, பயிற்சி முகாமிற்கு ரூ.1200, சமூகக் கல்விக்கு ரூ.300, மகளிர் சுற்றுலாவிற்கு ரூ.440, குழந்தைகள் கண்காட்சிக்கு ரூ.200 என மொத்தம் ரூ.13000 ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிறது. உணவு பதப்படுத்துதல், குழந்தை வளர்ப்பு, சுகாதாரம், சுற்றுப்புறச் சுத்தம் மற்றும் ஊட்டச்சத்து போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மகளிர் மன்றங்கள் நல்ல முறையில் செயல்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் 75 மகளிர் மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ரூ.2000 வீதம் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

2001-2002ஆம் நிதியாண்டில் ரூ.51.24 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 6]

## 2.24 வழிகாட்டி மையங்கள்

வழிகாட்டி மையங்கள் மாவட்ட சமூகநல அலுவலகங்களில் செயல்பட்டு வருகின்றன. வழிகாட்டி நிலைய அலுவலர் மகளிரின் தேவைக்கேற்ப குறிப்பாக விதவை, கணவனால் கைவிடப்பட்ட மகளிர் மற்றும் ஆதரவற்ற பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற மகளிர்கள் சுயமாக தொழில் நடத்திட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் சிறு தொழில் நடத்த வங்கிக் கடன் பெற்றுத் தருதல் மற்றும் இவர்களுக்குச் சேரவேண்டிய ஆயுள் காப்பீட்டுத் தொகை, வருங்கால வைப்புநிதி ஆகியவற்றை சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுத் தருவதுடன் இவர்களின் குழந்தைகளை அரசு ஆதரவற்ற இல்லங்களில் சேர்ப்பதற்கும் மற்றும் குழந்தைகள் காப்பகங்களில் சேர்ப்பதற்கும் உதவிபுரிந்து வருகின்றார். இம்மையங்கள் 20 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.59.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.25 இலவச தையல் இயந்திரம் வழங்குதல்

வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் சுயவேலைவாய்ப்பினை பெருக்கும் நோக்கத்துடன் அவர்கள் சமூகத்தில் நற்பாங்கான வாழ்க்கையினை தொடரவும் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

"சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்" என்ற பெயரில் செயல்படும் இத்திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்க ரூ.101.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.26 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மானியம்

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காக உண்மையிலேயே செயல்படும் தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றன. குழந்தைகளின் விளையாட்டு சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை வாங்குவதற்கு ஒவ்வொரு தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கும் ரூ.5000 மானியமாக

வழங்கப்படுகிறது. 200 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் கீழ் பயன்பெறுகின்றன. இதற்கென 2001-2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.27 குடும்ப ஆலோசனை மையம்

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் ஒன்று உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணை கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கம் ஆகியவற்றை நீக்கவும், எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது. தற்போது 6 குடும்ப ஆலோசனை மையங்கள், நாமக்கல், கரூர், ஈரோடு, விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. 2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.5.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.28 பெண்களுக்கான பொருளாதார முன்னேற்ற திட்டங்கள்

மகளிருக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலமாக மகளிருக்கான அதிகாரப் பகிர்வு, சமூகப் பொருளாதார ரீதியாக உறுதி செய்யப்படுகிறது. மகளிர் சமுதாயத்தின் உயர்வினை கூட்டுறவு முறையில் எய்துவதற்கும், இதன் வாயிலாக குறிப்பாக மகளிர், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளின் நிர்வாகத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அரசின் மேற்கண்ட நோக்கத்தைச் செயல்படுத்தும் வகையில் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மகளிர் மட்டுமே அங்கத்தினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். இந்த வகையில் 130 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூகநல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமூகநலத் துறை செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைப் பணிகளை மேற்கொள்ளவும் ஈடுபடுத்தப்படுகின்றன.



| வ. என் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 78 | 40089 |
| 2 | இணை உணவு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 25 | 1631 |
| 3 | எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 18 | 1006 |
| 4 | இதர சங்கங்கள் | 9 | 1210 |
| | மொத்தம் | **130** | **43936** |

78 தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் சீருடை தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு 2000-2001 ஆம் ஆண்டில் 58 இலட்சம் ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 12,92,510 சீருடைகளும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு 2,57,542 சீருடைகளும் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு 78,290 சீருடைகளும் மேற்கண்ட சங்கங்களின் அங்கத்தினர்கள் மூலம் தைத்து வழங்கப்பட்டுள்ளன.

8 மாவட்டங்களுக்கு 8 துணி வெட்டும் புதிய இயந்திரங்கள் வாங்க 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.6.40 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

25 இணை உணவு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், 113 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களிலும், 102 உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களிலும் உள்ள 6 மாதம் முதல் 2 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் தேவையான அமிலேசு செயல்பாட்டுடன் கூடிய உயிர்ச்சத்துக்கள் சேர்க்கப்பட்ட இணை உணவினை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன. இச்சங்கங்களால் உறுப்பினர்களுக்கு ரூ.76.47 இலட்சம் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 6

எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அலுவலகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளை தயாரிக்கும் பணி மேற்கொள்வதன் மூலம் சங்க அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

2001-2002 ஆம் ஆண்டிற்கு அனைத்து மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக செலவிற்காக ரூ.93.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு, 46 பயிற்சி மையங்களையும் 5 உற்பத்தி நிலையங்களையும் செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 980 மகளிர் பல்வேறு வகையான தொழிற்கல்வியினை பெற்று பயனடைகிறார்கள்.

இதற்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.129.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலைவாழ் மகளிர் பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் இரண்டும், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக, 4 தையற் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 65 மலைவாழ் மகளிர் பயிற்சி பெற்று பயனடைகிறார்கள்.

இதற்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.7.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.29 முதியோர் இல்லங்கள்

முதியோர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் வளர்ந்து வருவதால் வயது முதிர்ந்த காலத்தில் அவர்களைப் பராமரிக்கும் பொருட்டு தொண்டு நிறுவனங்கள் மூலம் முதியோர் இல்லங்கள் அரசு மானிய உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது 6 முதியோர் இல்லங்கள் அரசு மானிய உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 40 முதியோர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

நபர் ஒன்றுக்கு ரூ.250 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டு வந்தது. இம்மானியத் தொகை ஒரு நபருக்கு ரூ.500 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. 2001-2002ல் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேலும் 4 புதிய முதியோர் இல்லங்கள் தொடங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.



2001 செப்டம்பர் 6]

இதற்காக இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.30 அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை விரிவுபடுத்தி புனர்வாழ்வு அளித்திட தமிழ்நாடு அரசு பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களை கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது:

| வ. எண். | அரசு மறுவாழ்வு இல்லம் | |
|---|---|---|
| 1. | பரனூர் .. | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. | உளுந்தூர்பேட்டை .. | விழுப்புரம் மாவட்டம் |
| 3. | பர்கூர் .. | தர்மபுரி மாவட்டம் |
| 4. | புதுக்கோட்டை .. | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | விண்ணப்பள்ளி .. | ஈரோடு மாவட்டம் |
| 6. | மனையேறிப்பட்டி .. | தஞ்சாவூர் மாவட்டம் |
| 7. | யா.புதுப்பட்டி .. | மதுரை மாவட்டம் |
| 8. | மல்லவாடி .. | திருவண்ணாமலை மாவட்டம் |
| 9. | செல்லியம்பட்டி .. | தர்மபுரி மாவட்டம் |
| 10. | தேவியாக்குறிச்சி .. | சேலம் மாவட்டம் |

ஒவ்வொரு அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறியவர்கள் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாக வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின் இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் கணவனோ அல்லது மனைவியோ எவரேனும் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் இல்லத்தில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இல்லங்களில் தங்கும் இல்லவாசிகள் முழுமையாக குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கீன நடவடிக்கை காரணமாகவோ இல்லத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதியும், வெவ்வேறு தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. திரைப்படம், தொலைக்காட்சி, நூலகம், விளையாட்டு போன்ற பொழுதுபோக்கு வசதிகளும் அளிக்கப்படுகின்றன. இல்லத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.15/- மதிப்பீட்டிலும் அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.10/- மதிப்பீட்டிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களில் சிறப்பு உணவு கூடுதலாக ரூ.5/- மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு ஜதை உடைகளுடன் பொங்கல் அன்று இலவச வேட்டி, சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் முழுமையான மருத்துவ வசதிகளுடன் மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவினம் மேற்கொள்ள நிதி வழங்கப்படுகிறது:—

| | | |
|---|---|---|
| 1. | செயற்கை காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) (ஆண்டொன்றுக்கு) | ரூ.1000/- |
| 2 | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு (ஆண்டொன்றுக்கு) | ரூ.2000/- |
| 3 | பற்பொடி மற்றும் பல்துலக்கும் பிரஷ் வழங்குவதற்கு (ஆண்டொன்றுக்கு) | ரூ.2000/- |
| 4 | ஈமச்சடங்கிற்கு (ஒரு நபருக்கு) | ரூ.200/- |
| 5 | விளையாட்டுச் சாதனங்கள் வாங்கிட (ஆண்டொன்றுக்கு) | ரூ.1200/- |
| 6 | இசைக்கருவிகள் வாங்கிட (ஆண்டொன்றுக்கு) | ரூ.400/- |

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கிட ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உடல் தகுதியுள்ள இல்லவாசிகளுக்கு பாய், துணி நெய்தல், தையல், காலணிகள் உற்பத்திப்



பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவர்களின் உடல் உழைப்பிற்கு ஏற்றவாறு போதுமான கூலி வழங்கப்படுகிறது. பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் விசைத்தறி ஒன்று இயங்கி வருகிறது.

2001-2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.434.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.31 டானிடா திட்டம்

டானிடா மூலம் பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் முதற்கட்டம் மற்றும் 2ஆம் கட்டத்தின்கீழ் நில மேம்பாடு, கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண் பொறியியல் ஆகிய திட்டங்களை நல்ல ஆரோக்கிய உடலமைப்பு கொண்ட இல்லவாசிகளின் மூலம் மேற்கொண்டு அவர்களுக்கு தகுந்த கூலிகளும், காப்பு நிதிகளும் வழங்கி செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## 2.32 அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்

1954ஆம் ஆண்டு மார்ச் முதல் நாள் முதல் மேல்பாக்கம் அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லம் 950 என்று நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் (ஆண்கள் 770 + பெண்கள் 180) ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு பிச்சை தடுப்புச் சட்டம் 1945-ன்கீழ், சென்னை மாநகரில் பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்து நீதிமன்றங்கள் மூலமாக அவர்களைத் தண்டித்து, மேல்பாக்கம் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் பாதுகாப்புடன் ஓர் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான தண்டனைக் காலம் வரை அவர்கள் பராமரிக்கப்படுகின்றனர். தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டம் மற்றும் தையல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும் இல்லத்திலுள்ள ஆண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு சட்டைகள் மற்றும் இரண்டு கால் சட்டைகளும், பெண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு சேலைகள் மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. மேலும் பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, டம்ளர், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன.

அவர்களுக்கு முறைப்படியான மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் சொந்த ஊருக்குச் செல்வதற்கு ரெயில்வே வாரண்ட் மற்றும் பேருந்துக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வில்லத்திற்கு 2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.41.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.33 சமூக நல ஆணையரகம் மற்றும் மாவட்ட சமூகநல அலுவலகங்களை மேம்படுத்துதல்**

சமூகநல ஆணையரகத்தை மேம்படுத்தும் வகையில் 2001-2002 ஆம் நிதியாண்டில் 3 கணிப்பொறி அச்சு இயந்திரம், ஒரு நகல் எடுக்கும் இயந்திரம், மாநாட்டுக் கூடத்திற்கு ஒரு குளிர்சாதன இயந்திரம், 10 சாய்வு நிலை அடுக்கு அலமாரி ஆகியன வாங்குவதற்கு அரசு ரூ.3.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

20 மாவட்ட சமூகநல அலுவலகங்கள் ஏற்கெனவே கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 9 மாவட்ட சமூகநல அலுவலகங்களை கணிப்பொறி மயமாக்கும் வகையில், 9 கணிப்பொறி இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு ரூ.9.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.34 தமிழ்நாடு சமூக நல வாரியம், சென்னை**

தமிழ்நாடு சமூக நல வாரியம் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில் 1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

1. சமூக நல தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்து உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.

3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம் மாநில அரசிடமிருந்தும், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்தும் நிதியுதவி பெற்று தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், மகளிர் மற்றும் ஊனமுற்றோரின் நலனுக்காகவும்





(ம) மேம்பாட்டிற்காகவும் பணியாற்றுகிறது. நிதியுதவி 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் நிதி உதவிகூட வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் மூலம் 511 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1011 தொண்டு மையங்களுக்கு ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரை ரூ.393.42 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.68.91 இலட்சம் 418 தன்னார்வ அலகுகளைக் கொண்ட 381 தொண்டு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

போதை மருந்து பயன்படுத்துதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்கும் வகையில் தொண்டு நிறுவனங்களுக்கும் அரசு துறையினருக்கும் ஒருங்கிணைப்பை தமிழ்நாடு சமூக நல வாரியம் ஏற்படுத்தி வருகிறது.

எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்க பகல் நேர தங்கும் இல்லங்கள் அமைக்கவும், வாரியத்தால் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.35 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

பெண்களின் நலன்களைப் பாதுகாக்கவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ல் தொடங்கப்பட்டது. ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரை தலைவியாகவும் 9 உறுப்பினர்களையும் கொண்டு இவ்வாணையம் இயங்குகிறது. தற்போதுள்ள நிலையைக் கருத்திற்கொண்டு மகளிர் உரிமைகளைப் பாதுகாத்தல், மற்றும் மேம்படுத்துதல் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது. 2001-2002ஆம் ஆண்டுக்கு ரூ.1.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இவ்வாணையம் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. காவல் துறை அலுவலர்கள், சட்ட நடுவர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் ஏனைய பிரிவினர்களுக்கு ஆண், பெண் பண்பு உணர்வு குறித்த பயிற்சி முகாம்கள் நடத்துதல், இதற்காக 2001-2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.3.45 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு சட்ட அறிவு விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் நடத்துதல். இதற்காக 2001-2002-க்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. கிராமப்புற மகளிருக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த கருத்தரங்கு மற்றும் பயிலரங்குகள் நடத்தப்பட்டன.

4. கோட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் சார் ஆட்சியர்களுக்கு வரதட்சணை கொடுமையால் இறக்கும் பெண்களின் பிரேத விசாரணை குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் காவல்துறையினரின் உதவியுடன் நடத்தப்பட்டது.

அனைத்து மாவட்ட சமூகநல அலுவலர்களையும் வரதட்சணை ஒழிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவல் சாரா 5 நபர்களை வரதட்சணை ஒழிப்புக் குழு உறுப்பினர்களாக நியமித்துள்ளது. இக்குழு காலமுறையில் கூடி வரதட்சணை கொடுமைக்கு ஆளாகும் பெண்களிடம் மனுக்களைப் பெற்று அம்மனுக்கள்மீது காவல்துறை உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## அத்தியாயம்-3

### தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

3.1 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் வளர்ச்சி மற்றும் அதிகார பகிர்வுக்காகவும் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறுவப்பட்டது.

### 3.2 மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முதன் முறையாக சோதனை அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவன நிதியுதவியுடன் மகளிர் மேம்பாட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு முதல் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலும் 1993 ஆம் ஆண்டு மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலும் விரிவுபடுத்தபட்டது. 1995-1996 ஆம் ஆண்டிற்குள் இத்திட்டம் மிகவும் சிறப்பாகவும் பயனுள்ள வகையிலும் செயல்படுத்தப்பட்டதால் இத்திட்டத்தினை எதிர்கால வளர்ச்சித் திட்டங்களின் முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டம்





பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் மற்றும் மாநகராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம் என்று அழைக்கப்படும், இத்திட்டத்தின்கீழ் அரசு தரப்பில் இந்த நிறுவனமும், தொண்டு நிறுவனங்களும் மற்றும் வங்கிகளும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இத்திட்டம் தன்னார்வ தொண்டு நிறுவன ஆதரவுடன் உருவாக்கப்பட்டு பேணி வளர்க்கப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்கள் வலையமைப்பின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மேலும் வளர்ச்சியடையவும் பலம் பெறவும் திட்டமிடப்பட்டு இந்த ஆண்டு முதற்கொண்டு கிராமப்புற குடியிருப்புகளிலும் நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் அதிக அளவில் செயல்படுத்திட ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து, 2001 ஆம் ஆண்டு ஜூன் வரை, கிராமப்புறங்களில் 73540 சுய உதவிக்குழுக்களில் 12,73,874 உறுப்பினர்களும், நகர்ப்புறங்களில் 12443 சுய உதவிக்குழுக்களில் 2,09,858 உறுப்பினர்களும் ஆக மொத்தம் 85,983 சுய உதவிக்குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 14.83 இலட்சமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 1**

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்ட சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி**

| விவரங்கள் | 30-6-2001 அன்றைய தேதியில் உள்ளபடி |
|---|---|
| சுய உதவி குழுக்களின் எண்ணிக்கை | 85,983 |
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 14,83,732 |
| குழு சேமிப்பு (ரூ. கோடியில்) | 101.74 |

கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்காக மகளிர் திட்டமும், ஊரக வளர்ச்சித் துறையின் பொன் விழா கிராமப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதே போன்று நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களைப் பொறுத்த வரையில் மகளிர் மேம்பாட்டு திட்டமும் பொன்விழா நகர்ப்புற சுயவேலை

வாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் வசதியும் அதிகரித்துள்ளது. மகளிர் திட்ட வரைமுறைப்படி, வணிக வங்கிகளில் மட்டும் அல்லாது, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் சுயஉதவிக் குழுக்கள் கணக்குகள் தொடர்கடன் பெற்று வருகின்றன.

சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தங்களின் பலம் மற்றும் பலவீனங்களையும் மற்றும் குடும்பத்தின் நிதி ஆதாரம் அவற்றை சமாளிக்கும் திறமை ஆகியவற்றை நன்கு அறிவார்கள். வங்கிக்கடன் பெறுவதும் அடைத்தலும் மகளிருடைய பொறுப்பாகும். ஆகையால் எந்தத் தொழில்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும், பெறும் கடனின் அளவையும் குழு உறுப்பினர்களின் முடிவுக்கு விடுவது உசிதமாக இருக்கும். திட்ட அலுவலகங்களும், தொண்டு நிறுவனங்களும் குழுக்களுக்கு ஆலோசகர்களாகவும் வழிநடத்துனர்களாகவும் மட்டுமே செயல்பட்டு, இறுதி முடிவுகள் எடுப்பது குழுக்களிடமே விட்டுவிடப்படுகிறது.

சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வசதி பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. 30-06-2001 வரையிலான காலத்தில் 2,87,364 உறுப்பினர்கள், வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், கால்நடை வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத்தொழில் மற்றும் இதர சிறிய தொழில்களுக்கென ரூ.13,229.49 இலட்சம் வங்கிகளில் கடன் வசதி பெற்று தரப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டில் அரசு மகளிர் தொலைநோக்கு திட்டம் 2000 என்ற மகளிர் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் திட்டத்தினை வெளியிட்டது. இத்திட்டம் சுயஉதவிக் குழுக்களின் மூலமாக மகளிர் சமூக, பொருளாதார, மக்களாட்சி நெறிமுறைகளில் பங்கு ஏற்கவும் சேமிப்பு மற்றும் நிதி வசதிகள் மூலமாக சுயஉதவி முயற்சிகளை பெருக்குவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைக்கப்பெற்றிருந்தது. மகளிர் தொலைநோக்கு திட்டம் 2000-ஐ முனைப்புடன் நிறைவேற்றுவதே 2001-2002ஆம் ஆண்டின் குறிக்கோளாகும்.

தொலைநோக்கு திட்டம் 2000-ன்படி, சுயஉதவிக் குழுக்களின் மூலமாக மகளிர் அதிகாரப் பகிர்வு அடைவதையே முதல் நோக்கமாகக் கருதப்படும். மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள கிராம மற்றும் நகர்ப்புற ஏழை எளிய பெண்களை சுயஉதவி குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்கள் மேம்பாட்டிற்கென தேவையான பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும். இப்பெண்களுக்கு, பல்வேறு திட்டங்களின்கீழ் பயிற்சி வழங்கப்படும். அவர்களுக்குக் கடன் வசதிகள் வங்கிகள் மூலம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். மகளிர்





மேம்பாட்டு திட்டத்தினை மத்திய அரசு திட்டமான பொன்விழா கிராம வளர்ச்சித் திட்டத்துடனும் (எஸ்.ஜி.எஸ்.ஓய்) மற்றும் நகர்புற வளர்ச்சித் திட்டத்துடனும் (எஸ்.ஜே.எஸ்.ஆர்.ஓய்) இணைத்து, தகுதியான ஏழைப் பெண்கள் பலர் பயனடைய 2001-2002-ல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மகளிர் திட்டத்தினை 2001-2002ஆம் ஆண்டில் செயல்படுத்த தற்போது ரூ.22.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2001-2002ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:—

* விரைவாகவும், தங்குதடையின்றியும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 30 மாவட்டங்களிலும், நகர்புற பகுதிகள் உள்ளடக்கிய எல்லா குடியிருப்புப் பகுதிகளிலும் செயல்படுத்துதல்.
* சிறந்த பயிற்சி கையேடுகளை அளிப்பதன் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தினை உயர்த்துதல்.
* தகுதியுடைய சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனைத்து திட்டங்களின் கீழும் குழுக்களின் தேவை அடிப்படையில் நிதி உதவி ஏற்படுத்தித் தருதல்.
* சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்கி, போதிய பயிற்சி அளித்தல் மற்றும் நிதி வசதி ஏற்படுத்தித் தருதல்.
* சுயஉதவிக் குழுக்கள் அரசுத் திட்டங்களின் பயனை ஒருங்கே பெற்றிடும் வகையில் பல்வேறு அரசுத் துறைகள், முக்கியமாக ஊராட்சிகள் மற்றும் இதர துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல்.
* தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் தொழில் பயிற்சித் திட்டங்கள் மூலமாக சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு, அவர்களது திறமையை வளர்த்தல் மற்றும் அதிக ஈடுபாடு கொள்ளச் செய்தல்.

சுயஉதவிக் குழுக்கள் அதிகரித்துள்ளதற்கு ஏற்ப, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் திறமையை வளர்ப்பதும், ஆதரவு அளிப்பதும் இன்றியமையாததாகும். மகளிர் திட்டச் செயல்பாட்டின் தரத்தினை நிலைப்படுத்தவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் திறமையை வளர்க்கவும் அரசு ஆதரவு அளிக்கும். ஒரு நூதனக் கருத்தாக அரசு ஆதரவுடன் ஒரு முகமையினை ஏற்படுத்தி, அதன் மூலம் தொண்டு மனப்பான்மையை ஊக்குவித்து அதன் மூலம் தொண்டாற்ற வாய்ப்பு அளிக்கப்படும். இதனடிப்படையில் தன்னார்வத்

[2001 செப்டம்பர் 6

தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொண்டர்களின் ஆதார மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் சுகாதாரம், கல்வி, பயிற்சி, சட்டங்களை அமல்படுத்துதல், அனாதை காப்பகங்கள் மற்றும் பெண்களின் பிரச்சினைகள் போன்ற செயல்பாடுகளில் பொருள்உதவி வழங்கும் மற்றும் சேவையில் ஈடுபடுகின்ற தன்னார்வ தொண்டர்களை உற்சாகமளித்து வழிகாட்டும் மையமாகச் செயல்படும். இந்த மையத்தின் ஆரம்பக்கட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 2001-2002ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன:—

1. ஒருங்கிணைப்பது, தொண்டினை வளர்ப்பது, தொண்டர்களை சேர்த்தல்;

2. தொண்டர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு அளித்தல்;

3. புள்ளி விவர களஞ்சியம், ஆராய்ச்சித் தொகுப்புகள் மற்றும் தகவல் தயாரித்தல்;

4. தொண்டு நிறுவனங்களுக்கான ஆலோசனை மற்றும் அறிவுரை சேவைகள் வழங்குதல்.

இதற்கென விதிமுறைகள் வகுக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975-ன்படி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொண்டர்களின் ஆதார மையத்தை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**3.3. சமுதாய ஆதார மையம்/மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் 30 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம், தொழிற்பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி மையம் மாவட்ட அளவிலோ மாநில அளவிலோ இயங்கவில்லை. அதிக எண்ணிக்கையில் இவ்விரு பயிற்சிகளையும் அளிப்பது இன்றியமையாதது ஆகும். எனவே மாவட்டங்களில் பயிற்சி மற்றும் விற்பனை மையம் இணையதள வசதியுடன் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் ரூபாய் 15 இலட்சம் செலவில் ஆறு மையங்கள் தொடங்கப்படும்.

**3.4. மகளிர் மனமகிழ் மையங்கள்**

ஊட்டச்சத்து, உடல்நலம், கல்வி ஆகியவற்றின் அவசியத்தினை உணர்ந்ததுபோல கூலித் தொழிலைச் சார்ந்திருக்கும் ஏழை மகளிரின் அலுப்புத் தீர்ந்து புத்துணர்ச்சி பெற்றிட இவர்களுக்கென மனமகிழ் மையங்கள் அவசியம். இதுவரை 250 மனமகிழ் மையங்கள்



2001 செப்டம்பர் 6]

ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001-2002-ம் ஆண்டில் இதற்கென ரூ. 1.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**3.5. 5 இலட்சம் மகளிருக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்த தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல்**

5 இலட்சம் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்க தொழில் முனைவோர் திறனை வளர்க்கும் ஒரு புதிய பயிற்சித் திட்டத்தினை அரசு வகுத்துள்ளது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், ஒருங்கிணைப்பு முகவராக செயல்பட்டு இத்திட்ட செயலாக்கத்தை வடிவமைத்து கண்காணிக்கும் ஊரக வளர்ச்சி இயக்குநரகம், வேளாண்மை இயக்குநரகம், தொழில் மற்றும் வணிக இயக்குநரகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியம், ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், பழங்குடியினர் நல இயக்குநரகம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரகம் குடிசை மாற்று வாரியம், மற்றும் பட்டுப்பூச்சி வளர்ப்பு இயக்குநரகம், போன்ற பல அரசுத் துறைகளுக்கும் இந்த இலக்குகள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. மேலும் குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று சிறிய தொழிற் கூடங்களை அமைப்பதற்கு பெண்களுக்குப் பயிற்சிகள் மற்றும் திறனை வளர்க்கும் திட்டங்களும் செயல்படுத்தப்படும். 2001-2002ஆம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தனது இலக்கான 20,000 பெண்களுக்கு ரூபாய் 166.95 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க உள்ளது.

**3.6. பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு ஆண்டு 2001**

2001ஆம் ஆண்டு மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வளர்ச்சி நீரோட்டத்தில் பெண்களின் உரிய நிலையை வெளிப்படுத்தும் வகையில் 2001ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து மாதாந்திர நிகழ்ச்சி நிரல் வரையப்பட்டு தொடர் நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகளை நடத்தி சரியான நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஓர் ஒருங்கிணைப்பு நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் யூனிசெப் (UNICEF) நிறுவனத்துடன் கூட்டாக மகளிரின் தற்போதைய நிலையை ஆய்வு செய்து 'மாநில மகளிர் கொள்கை'யை பெண்களுக்குச் சம உரிமை அளிக்கும் வகையில் வரைவு செய்ய உள்ளது.

**3.7. அனைத்து குழுக்களிலும் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம்**

பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கும் திட்ட முதல்படியாக முக்கிய முடிவு எடுப்பதில் பெண்களின் ஈடுபாடு கண்டிப்பாகத் தேவையெனக் கருதி, சட்டப்படிக்கான மற்றும் சட்டப்படிக்கல்லாத குழுக்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 3.8. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு அளித்தல்

விறகு அடுப்பின் மூலம் சமையல் செய்யும் பெண்களின் சிரமத்தைப் போக்கவும் சிரமமான நாட்களில் விறகு சேகரிக்கும் இன்னலிலிருந்து அவர்கள் விடுபடவும் உடல் ஆரோக்கியக் கேட்டினைக் குறைத்து உடல்நலம் காக்கவும் காடுகள் அழிக்கப்படுவதைத் தவிர்க்கவும், அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதன்படி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழும் இதர திருமண உதவித் திட்டத்தின் கீழும் நிதி உதவி பெறத் தகுதி இல்லாது போகும் புதிதாக திருமணம் ஆன சுய உதவிக்குழு உறுப்பினர் அல்லது சுய உதவிக் குழு உறுப்பினரின் மக்கள் ஆகியோருக்கு முதல் முறையாக சமையல் எரிவாயு இணைப்புப் பெற ஏதுவாக ரூ.1000/- முன்பணத் தொகை வழங்கப்படும். 2001-2002ஆம் நிதி ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் 5000 பேர் பயனடைவர். தமிழ்நாட்டில் மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இதற்கு ஒருங்கிணைப்பு முகவராக இருக்கும்.

## அத்தியாயம்-4

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

### 4.1. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம்

ஊனமுற்றோருக்கான நல்வாழ்விற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாநில அரசால் கடந்த 1992-93-ல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. ஊனமுற்றோருக்கான சட்டம் 1995ன்படி அரசு ஆணை (நிலை) எண் 50, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 16-4-1999ல் தனி ஆணையர் ஒருவரை நியமித்து, ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம் என இயங்கி வருகிறது.

### 4.2. ஊனமுற்றோருக்கான சட்டம் 1995-ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோருக்கு சமவாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்தினரோடு இணைந்து அவர்கள் முழுவதுமாக பங்கு பெறும் வகையிலும் ஊனமுற்றோருக்கான சட்டம் 1995ல் இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில், இச்சட்டம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்கக இயக்குநரை மாநில ஆணையராக நியமித்து அவர் தலைமையின்கீழ் இத்திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.





### 4.3. மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை

தேசிய மக்கள் தொகை மாதிரி கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மொத்த மக்கட்தொகையில் 1.9 சதவிகிதத்தினர் ஊனமுற்றவர்கள், 1991ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கட்தொகையின் 1.9 சதவிகிதம் என்பது 10,61,320 பேர் என கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், கடந்த 2000-மாவது ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஊனமுற்றோரின் தொகை கணக்கெடுக்கப்பட்டு அதன் விவரம் எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.4. ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின் மூலம் அவர்களுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் மானியம் பெறாத சிறப்புப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண். | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள். | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் — மானியம் பெறும் பள்ளிகள். | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் — மானியம் பெறாத பள்ளிகள். | நகராட்சிப் பள்ளிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 3 | .. | 25 |
| 2 | பேச்சுத்திறன் குறைந்து செவித்திறன் இழந்தோர் பள்ளி | 10 | 19 | 30 | 2 | 63 |
| | முன்பருவப் பள்ளி | 2 | - | - | - | - |
| 3 | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 12 | 58 | .. | 71 |
| 4 | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 12 | 33 | .. | 46 |
| 5 | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | - | 1 | .. | .. | 1 |
| | மொத்தம் .. | 25 | 55 | 124 | 2 | 206 |

[2001 செப்டம்பர் 6

**அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:**

| பார்வையற் றோருக்கானது. | பேச்சுத்திறன் மற்றும் செவித் திறன் குறைந் தோருக்கானது. | கடுமையான கை,கால் ஊனமுற்றோ ருக்கானது. | மன வளர்ச்சி குன்றி யோருக்கானது. |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | கடலூர் | மதுரை | சென்னை |
| கடலூர் | தருமபுரி | | |
| மதுரை | ஈரோடு | | |
| நாகர்கோவில் | காஞ்சிபுரம் | | |
| பூவிருந்தவல்லி | தாம்பரம் | | |
| புதுக்கோட்டை | உதகமண்டலம் | | |
| சேலம் | புதுக்கோட்டை | | |
| சிவகங்கை | சேலம் | | |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | | |
| திருச்சிராப்பள்ளி | விருதுநகர் | | |
| தருமபுரி | | | |

சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:

(அ) இலவச சிறப்புக் கல்வி, உணவு மற்றும் உறைவிடம்

(ஆ) ஒவ்வோர் ஆண்டிற்கும் இரண்டு இணை இலவச சீருடை

இந்த சிறப்புப் பள்ளிகளில் பயிலும் அனைத்து ஊனமுற்ற மாணவர்களும் இந்த வசதிகளைப் பெற்று வருகிறார்கள்.

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன் பருவப் பள்ளிகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும், அத்துடன் வேலூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி,



2001 செப்டம்பர் 6]

சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம்பெறும் பள்ளிகளிலும் இணைந்து இயங்கி வருவதுடன், இராமநாதபுரத்தில் அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலும் கோயம்புத்தூரில் உள்ள அரசு பார்வையற்றோருக்கான பள்ளியிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மதுரையிலுள்ள கடும் உடல் ஊனமுற்றோருக்கான அரசுப் பள்ளி தற்போது ஆரம்பப் பள்ளியாக இயங்கி வருகிறது. இப் பள்ளியிலிருந்து வெளிவரும் ஊனமுற்ற மாணவர்கள் தங்கள் மேற்படிப்பினைத் தொடர, வேறு உடல் ஊனமுற்றோருக்கான அரசுப் பள்ளி எதுவும் தற்போது இல்லை. இத்தகைய மாணவர்களின் சிரம நிலையினைக் கருத்தில் கொண்டு, அரசு இப் பள்ளியின் நிலையினை ரூ.6.94 இலட்சம் செலவில் 8ஆம் வகுப்பு வரை இவ்வாண்டு முதல் உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. பூவிருந்தவல்லியிலுள்ள நூறாண்டு பழமைவாய்ந்த அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளியை ரூ.33.76 இலட்சங்கள் மதிப்பீட்டில் 2001-2002ஆம் ஆண்டில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படவுள்ளது.

## 4.5. ஊனமுற்றோருக்கான கல்வி உதவித்தொகை

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்கு படிப்பிற்கான பொருள்கள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்திட கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(அ) 1-5ஆம் வகுப்பு வரை ரூ.25 (மாதம் ஒன்றுக்கு)

(ஆ) 6-8ஆம் வகுப்பு வரை ரூ.75 (மாதம் ஒன்றுக்கு)

(இ) 9-12ஆம் வகுப்பு வரை ரூ.110 (மாதம் ஒன்றுக்கு)

(ஈ) பட்டப்படிப்பு ரூ.150 (மாதம் ஒன்றுக்கு)

(உ) தொழில் மற்றும் முதுநிலை
பட்ட மேற்படிப்பு ரூ.195 (மாதம் ஒன்றுக்கு)

2001-2002-ல் இதற்கென ரூ.92.45 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4.6. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகள் எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு

ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.30 வீதம் உதவித் தொகையை இத் துறை வழங்கி வருகிறது. இதன் மூலம் பயனடையும் 200 பார்வையற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:-

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.

2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.

3. பார்வையற்றோருக்கான லிட்டில் பிளவர் கான்வென்ட் மேல்நிலைப் பள்ளி, சென்னை மற்றும்

4. பார்வையற்றோருக்கான செயின்ட் லூயிஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

இத் திட்டத்திற்கென 2001-2002ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.7. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளி வளாகத்தில் இயங்கிவரும் மண்டல பிரெய்லி அச்சகத்தில் இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டு இந்த இரண்டு அலகுகளும் கடந்த 4-8-2001 முதல் இயங்கி வருகின்றன.

2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.12.66 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.8. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பல்வேறு வகையான ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டியிருப்பதால், ஆசிரியர்களுக்கு அதற்கு ஏற்ற வகையில், சிறப்பு ஆசிரியர் பயிற்சி தேவைப்படுகிறது. இப்பயிற்சிக்கான கால அளவு 10 மாதங்கள்.

### (அ) பார்வையற்றோருக்கு

பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மண்டலப் பயிற்சி மையத்தில் பார்வையற்றோருக்கான கல்வி கற்பிக்க பயிற்சி வகுப்புகள்





நடத்தப்படுகின்றன. இதில் மாநில அரசால் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.400 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

### (ஆ) செவித்திறன் குறையுடையோருக்கு

செவித்திறன் குறைந்தோருக்கு கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி சென்னை-6-ல் உள்ள லிட்டில் பிளவர் காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 50 பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சியின்போது மாத உதவித் தொகையாக ரூ.400 வழங்கப்பட்டு வருகிறது. இவற்றில் மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 10 ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

### (இ) மனவளர்ச்சி குன்றியோருக்கு

மன வளர்ச்சி குன்றியோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி, சென்னையிலுள்ள பால விஹார் மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளியில் நடைபெறுகிறது. பயிற்சி பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 25 ஆகும். மாத உதவித் தொகை ரூ.400 ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

## 4.9. ஊனமுற்றோருக்கான பயிற்சி

கிண்டியிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 16 மாணவர்கள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.100 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசுத் தொழிற் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 30 பார்வையற்றோருக்குக் கீழ்க்கண்ட பிரிவுகளில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டுக் காலம்)

2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டுக் காலம்)

3. மின்கம்பி சுற்றுவோர்கள் (6 மாதங்கள்)

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக உணவு மற்றும் உறைவிடம் அளிக்கப்படுகிறது. மேலும் இவர்களுக்கு இரண்டு ஜதை சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

### 4.10. நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி தொழிற் கூடம், கிண்டி

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் தற்போது கிண்டி தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் ஆகியவை இந்த உற்பத்திக் கூடத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.54.35 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.11. பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு, சாக்கு கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் இவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருட்கள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பயனடைந்து வருகிறார்கள். இதற்கென 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.6.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.12. பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதோரை சிறப்புத் தொழில் பழகுநராக அமர்த்துதல்

பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையத்திலும், சென்னை கிண்டியில் இயங்கும் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்ற பார்வையற்றவர்கள் மற்றும் காது கேளாதவர்கள் அரசு மற்றும் அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில் சிறப்புத் தொழில் பழகுநராக மாதம் ரூ.500 வீதம் உதவித் தொகையுடன் சிறப்புத் தொழில் பயிற்சியில் அமர்த்தப்படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஓராண்டு முடிந்தபின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில் காலியிடம் எழும்போது



நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 25 நபர்கள் பயனடைகிறார்கள. 2001-2002-ல் இதற்கென ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.13. ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில், மூன்று சதவிகித இடத்தை ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று சதவிகிதத்தில் ஒரு சதவிகிதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவிகிதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவிகிதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் பணியிடத்தினைப் பொறுத்தவரையில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.14. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படுகிறது.

(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.300 மாதம் ஒன்றிற்கு |
| 2. | புதுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேர்ச்சி/ பட்டப்படிப்பிற்கு கீழ் | ரூ.250 மாதம் ஒன்றிற்கு |
| 3. | பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் | ரூ.200 மாதம் ஒன்றிற்கு |

(ஆ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்த அளவு, ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் 1200 பார்வையற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர். 2001-2002-ல் இதற்கென ரூ.29.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 6

### 4.15. சுய வேலை வாய்ப்பு

ஊனமுற்றோருக்கு உதவும் பொருட்டு, அவர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்காக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ளவும், பெட்டிக்கடை அமைத்துக் கொள்ளவும் இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ.2000 அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. பெட்டிக்கடைகளுக்கு மட்டும் ரூ.5000 மானியமாக வழங்கப்படுகிறது. 2001-2002-ல் இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 1000 பேர் பயனடையும் வண்ணம் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்கான சுய வேலைவாய்ப்புக்கு மேலும் உந்துதல் அளிக்கும்பொருட்டு, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெறப்படும் கடன்களுக்கு அரசு உத்திரவாதம் அளிக்கத் தீர்மானித்துள்ளது.

### 4.16. ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்

ஒவ்வோர் ஆண்டும் ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலிக் கருவிகள், கருப்புக் கண்ணாடிகள், மடக்குக் குச்சிகள், பிரெய்லி கை கடிகாரங்கள், சூரிய ஒளியினால் சக்தி பெறும் பேட்டரிகள் வழங்கப்படுகின்றன. 2001-2002-ல் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயனடைவோரின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

| வ.எண். | உபகரணங்களின் விவரம் | 2001-2002-ஆம் ஆண்டில் பயன் பெற உள்ளோர் | 2001-2002 ஆண்டுக் கான நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூன்று சக்கர வண்டிகள் | 2000 | |
| 2 | சக்கர நாற்காலிகள் | 150 | |
| 3 | காதொலிக் கருவிகள் | 1500 | |
| 4 | கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக் குச்சிகள் | 1500 | 72.00 |
| 5 | சோலார் பாட்டரிகள் | 1500 | |
| 6 | பிரெய்லி கை கடிகாரங்கள் | 1000 | |
| | மொத்தம் | 7650 | 72.00 |



2001 செப்டம்பர் 6]

### 4.17. பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள்

பார்வையற்றவரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வை உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.3000 மற்றும்
3. ரூ.7000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்

ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின் மூலம் 100 தம்பதிகள் பயனடைவார்கள். இத்திட்டத்திற்காக 2001-2002-ல் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.18. ஒரு கை அல்லது ஒரு கால் இல்லாதவரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள்

இத்திட்டத்தின் கீழ், ஒரு கை அல்லது ஒரு கால் இல்லாதவரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:—

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.2000 மற்றும்
3. ரூ.5000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்

2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 145 தம்பதிகள் பயனடைவார்கள்.

இந்த ஆண்டிலிருந்து இதுவரை ரூ.7000/- ஆக வழங்கப்பட்ட சலுகைத் தொகையை ரூ.10,000/- ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2001-2002-ஆம் ஆண்டிற்கு ரூ.10.15 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.19. காது கேளாத, வாய் பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கான சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:—

1. பாராட்டுச் சான்றிதழ்.
2. திருமணச் செலவிற்கென ரொக்கத் தொகை ரூ.2000 மற்றும்
3. ரூ. 5000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்

[2001 செப்டம்பர் 6

2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 145 தம்பதிகள் பயனடைவார்கள்.

இந்த ஆண்டிலிருந்து இதுவரை ரூ.7000/- ஆக வழங்கப்பட்ட சலுகைத் தொகையை ரூ.10,000/- ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.10.15 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.20. உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்**

பார்வையற்றவர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலை செய்யும் இடங்களுக்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கால் ஊனமுற்றவரும், விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் இலவசமாக ஆண்டுக்கு ஒரு முறை பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலவசப் பயணச் சலுகை திட்டத்தின்கீழ் தற்போது பயனடைந்து வரும் ஊனமுற்றவர்களில் மனவளர்ச்சி குன்றியவர்கள் மட்டும் சுமார் 700 பேர் உள்ளனர். இத்திட்டத்தில் பயனடைவதற்கு, தற்போது நடைமுறையில் உள்ள ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.12,000 என்று உள்ளதனால் மனவளர்ச்சி குன்றிய பலருக்கு இச்சலுகை கிட்டாமல் போய்விடுகிறது. எனவே, மனவளர்ச்சி குன்றியவர்களைப் பொருத்தமட்டில், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை அரசு விலக்கிக் கொள்ளக் கருதியுள்ளது. இதனால் அனைத்து மன வளர்ச்சி குன்றியோரும் பயனடைவர். இவ்வாண்டில் இதற்கென ரூ.11.82 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு மொத்தம் ரூ.61.82 இலட்சங்கள் 2001-2002-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**4.21. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

கடுமையான ஊனமுற்றோர்களுக்கு மாதம் ரூ.150 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர்கள்/



2001 செப்டம்பர் 6]

பாதுகாவலர்களுடைய வருட வருமானம் ரூ.15,000/-க்குள் இருக்க வேண்டும் இத்திட்டத்தின் கீழ் 7,400 நபர்கள் பயனடைகிறார்கள். 2001-2002ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.115.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.22. மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்**

14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும் வண்ணம் ஆண்டுதோறும் தலா ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 நிறுவனங்களுக்கு (மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ.15.00 இலட்சம் 2001-2002-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.23. சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப் படிப்பு முடித்த பத்து உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொருவருக்கும் ரூ.3,000/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2001-2002-ல் ரூ.0.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.24. செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை**

கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசுப் பள்ளிகளில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை மையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த மையத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. இது தற்போது மதுரை மாவட்ட மறுவாழ்வு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**4.25. மாநில விருதுகள்**

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு

கீழ்க்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும், அனைத்துலக ஊனமுற்றோர் தினத்தன்றும் வழங்கப்படுகின்றன.

ஊனமுற்றோருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக சிறந்த மாவட்ட ஆட்சியர் விருதும், அதிக அளவில் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்கியமைக்காக சிறந்த தொழிலதிபர் விருதும், சிறப்பாக பணி செய்தமைக்காக சிறந்த ஊனமுற்ற பணியாளர் விருதும், ஊனமுற்றவர்களுக்கு சிறந்த முறையில் கல்வி மற்றும் பயிற்சி அளித்தமைக்காக சிறந்த ஆசிரியர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை செய்தமைக்கான சமூகப் பணியாளர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தமைக்காக சிறந்த மருத்துவர் விருதும், ஊனமுற்றோர், மகளிர் மற்றும் குழந்தைகள் நலனிற்காக சிறப்பாக சேவை செய்தமைக்காக சிறந்த நிறுவனங்கள் விருதும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாத மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

## 4.26. மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

மைய அரசின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று பலவகைப்பட்ட ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. சுமார் 2,000 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள். இத்திட்டத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.33.94 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தின் 28 மாவட்டங்களிலும் இதைப் போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும், உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.230.70 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.27. அனைத்து விதமான ஊனங்களையும் அடையாளம் காணும் விரிவான மருத்துவ முகாம்கள்

இளம்பிள்ளைவாதத் தடுப்புத் திட்டம் மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட பிறகு இளம்பிள்ளைவாத நோயினால்





பாதிக்கப்பட்டவர்களை மட்டும் உள்ளடக்காமல் வாய் பேசாத, காது கேளாத, பார்வையற்ற, மனவளர்ச்சி குன்றிய மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட அனைத்து வகை ஊனமுற்றவர்களும் பயன்பெறும் வகையில் விரிவான மருத்துவ முகாம்கள் தற்போது நடைமுறையில் உள்ளன.

2001-2002-ல் காஞ்சிபுரம் மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றிற்கு 2 வட்டாரங்கள் வீதம் 56 வட்டாரங்கள் பயனடையும்.

2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.44.55 இலட்சங்கள் இதற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4.28. தடையில்லா சுற்றுச் சூழல்

ஊனமுற்றோருக்கு தடையற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்காக, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மற்றும் தலைமைச் செயலகத்திலும், ரூ.65.00 இலட்சத்தில் சாய் தளங்கள் கட்ட இந்த அரசு உத்தேசித்துள்ளது. மற்ற அலுவலகங்களுக்கும் இந்தத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

## 4.29. மத்திய அரசின் நிதியுதவியுடன் ஊனமுற்றோருக்காகச் செயல்படுத்தப்படும் திட்டம்

(1) உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான முன்னோடி திட்டம், செங்கல்பட்டில் நிறுவப்பட்டது.

இத்திட்டம் மாவட்டத்திலுள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வேண்டிய மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக 1984 ஆம் ஆண்டு முதல் ஒரு முன்மாதிரித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(2). ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (NPRPD)

இத்திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு, மாவட்ட மறுவாழ்வு மையம், ரூ.25.00 இலட்சம் செலவில் மாநில வள ஆதார மையமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்தில், மூன்று மாவட்டங்களில் ஊனமுற்றோருக்கு விரிவான மறுவாழ்வு சேவைகள் வழங்கப்படும். இம்மாநிலத்திலுள்ள மாவட்ட, வட்டார, ஊராட்சி அளவில் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு சேவை வழங்கப்படும்.

[2001 செப்டம்பர் 6

**4.30. மத்திய அரசின் திட்டம் (Central Sector Scheme) கிராமின் புனர்வாஸ் யோஜனா (கிராமப் புனர்வாழ்வுத் திட்டம்)**

ஊனத்தைத் தடுத்தல், ஆரம்ப நிலையிலேயே ஊனத்தைக் கண்டறிதல், ஊனமுற்றோருக்கு உதவிகள் மற்றும் உபகரணம் வழங்குதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரும் மத்திய திட்டப் பிரிவான இந்த கிராமின் புனர்வாஸ் யோஜனா திட்டம் (கிராமப் புனர்வாழ்வுத் திட்டம்) . இம்மாநிலத்தில் வேலூர், காஞ்சிபுரம், சேலம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

## அத்தியாயம்- 5

### சமூகப் பாதுகாப்பு

5.1. ஆதரவற்ற, கைவிடப்பட்ட புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வு பல மாற்றங்களுக்குள்ளாகின. இதற்கென முதல் சீர்திருத்த இல்லம் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு என்ற இடத்தில் 1887-ல் தொடங்கப்பட்டது.

பல்வேறு சமூக மாற்றங்களினால், தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920 மாற்றி அமைக்கப்பட்டு 2-10-1987 முதல் இளைஞர் நீதிச் சட்டம், 1986 (மத்திய சட்டம்) அமலாக்கம் செய்யப்பட்டது. தற்பொழுது மைய அரசு 2000ஆம் வருடத்தில் இளைஞர் நீதி (கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தினை இயற்றியுள்ளது. இந்த புதிய சட்டத்தின்கீழ் விதிமுறைகள் ஏற்படுத்திடும் பணியினை தமிழக அரசு தொடக்கியுள்ளது. சிறுமியர், பெண்களுக்கான 1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்புத் துறைக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

இத்துறை, புறக்கணிக்கப்பட்ட, கைவிடப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்கள், மகளிர் மற்றும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் போதிய கவனிப்பிற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை நடத்தி வருகிறது.

*(அ) கூர்நோக்கு இல்லங்கள்*

இடர்ப்பாடான சூழலில் உள்ள சிறார்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான செயலில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும் சிறார்களைப் பராமரிக்க 19 கூர்நோக்கு இல்லங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன:—



2001 செப்டம்பர் 6]

| | | |
|---|---|---|
| 1. | அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர், காரைக்குடி, ஈரோடு, திருநெல்வேலி, சேலம், தருமபுரி, வேலூர்). | 11 |
| 2. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், விருதுநகர், தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் திருவள்ளூர்) | 8 |
| | மொத்தம் | 19 |

தவறிழைத்த சிறார்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மூலமாகவும் புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறார்கள் நலக்குழுமம் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். அரசு சாரா அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்கள் பராமரிப்பு மானியமாக அரசு மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூ. 200 வீதம் வழங்குகிறது.

*(ஆ) இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள்*

23 இளைஞர் இல்லங்கள் மற்றும் 2 சிறப்பு இல்லங்களில் முறையே இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதி மன்றங்களின் மூலம் அனுமதிக்கப்படும் சிறார்களுக்கு பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறப்பு இல்லங்கள் (செங்கல்பட்டு (சிறுவர்), சென்னை (சிறுமியர்) | 2 |
| 2 | அரசினர் இளைஞர் இல்லங்கள் (சிறுவர் 7) சென்னை, இராணிப்பேட்டை, கடலூர், தஞ்சாவூர் பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர் தட்டப்பாறை, சென்னை (சிறுமியர் 1) | 8 |
| 3 | தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இளைஞர் இல்லங்கள் திண்டுக்கல் கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை, மதுரை மற்றும் சென்னையில் 9) | 15 |
| | மொத்தம் | 25 |

செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்திலுள்ள இரண்டு துயிற்கூடக் கட்டடங்கள் பாழடைந்த நிலையில் உள்ளன. அதனால் காற்றோட்ட வசதி மற்றும் சுகாதார வசதியுடன்கூடிய துயிற்கூடங்கள் மாணவர்களுக்காக கட்டப்பட வேண்டியது அவசியம். 3,600 சதுர அடி பரப்பில் தண்ணீர் வசதியுடன் கூடிய குளியல் மற்றும் கழிப்பிட வசதியுடன் ரூ.21.50 இலட்சம் செலவில் மேற்கண்ட இல்லத்தில் துயிற் கூட கட்டடங்கள் 2001-2002ஆம் ஆண்டில் கட்டப்பட உள்ளன.

சென்னை, கெல்லீசில் உள்ள பெண்கள் இளைஞர் இல்லத்தின் அனுமதிக்கப்பட்ட 250 சிறுமியர்களுக்கான இடத்தில் 520 பெண் சிறுமிகள் உள்ளனர். எனவே, 100 பெண் சிறுமிகள் தங்கக் கூடிய பெண்களுக்கான இளைஞர் இல்லம் ஒன்று ரூ.4.05 இலட்சம் செலவில் ஒரு புகழ்பெற்ற தன்னார்வத்தொண்டு நிறுவனம் மூலம் 2001-2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளன. ரூ.15.00 இலட்சம் செலவில் வகுப்பறைகள் பழுதுபார்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நலக்குழுமம் மூலம் அனுப்பப்படும் மனநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமியரைப் பாதுகாத்து, கவனிக்க சென்னை பாலவிகார் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஓர் இளைஞர் இல்லம் இயங்கி வருகிறது. அரசு சாரா நிறுவனங்களினால் பராமரிக்கப்படும் இளைஞர் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.200/- என பராமரிப்புத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

### (இ) பிற்காப்பு இல்லங்கள்

தமிழ்நாடு அரசு பிற்காப்பு நிறுவனங்களையும் அமைத்துள்ளது. இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து விடேகும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு பிற்காப்பு நலத்திட்டங்கள் இந்த நிறுவனங்களில் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து வெளியேறும் சிறார்களின் நேர்மையான தொழில்முறை சார்ந்த மற்றும் பயனுள்ள வாழ்க்கை நடத்திடவும் இப்பிற்காப்பு இல்லங்கள் உதவுகின்றன. இத்துறையின் கட்டுப்பாட்டில் 3 பிற்காப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மாணவர் பிற்காப்பு இல்லம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரை. | 2 |
| 2 | அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லம் (வேலூர்) | 1 |

மேலும் இல்லவாசிகளின் அடிப்படை வசதிகளை வழங்குவதுடன் பின்வரும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன:—





1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்பொருட்டு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

2. மின்சாரம் தடைபடாமல் இருப்பதற்காக அனைத்து இல்லங்களுக்கும் மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. இளைஞர்/சிறப்பு இல்லவாசிகளுக்கு உள்ளாடைகள் வழங்கப்பட்டுள்ளன.

### (ஈ) இளைஞர் நலக் குழுமங்கள்

புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற சிறார்களின் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 17 இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு இளைஞர் நலக் குழுமமும் அலுவல் சர்பற்ற ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களைக் கொண்டு (மகளிர் உறுப்பினர் ஒருவர் உட்பட) கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன. கூர்நோக்கு இல்லங்களின் வளாகத்திலேயே இளைஞர் நலக் குழுமங்கள் செயல்படுகின்றன. திருவள்ளூரில் ஓர் இளைஞர் நலக் குழுமம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. சென்னை
2. செங்கல்பட்டு
3. வேலூர்
4. விழுப்புரம்
5. தர்மபுரி
6. சேலம்
7. ஈரோடு
8. திருச்சி
9. தஞ்சாவூர்
10. மதுரை
11. திருநெல்வேலி
12. கோயம்புத்தூர்
13. மயிலாடுதுறை
14. விருதுநகர்
15. திண்டுக்கல்
16. தூத்துக்குடி
17. காரைக்குடி

[2001 செப்டம்பர் 6

### (உ) இளைஞர் நீதிமன்றங்கள்

சென்னை மாநகரில் 12-வது பெருநகர நீதிமன்றம், தவறிழைத்த சிறார்களின் வழக்குகளை விசாரிக்கிறது. மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர்/உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர்/ குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் ஆகியோர் வழக்குகளை விசாரிக்கின்றனர்.

## 5.2. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில் பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்கப்படுகிறது. ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர், பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் சேரவும் அனுமதிக்கப்படுகின்றனர். 6 மகளிர் காப்பகங்கள் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| சென்னை | | 2 |
| மதுரை | | 1 |
| திருச்சி | | 1 |
| சேலம் | | 1 |
| கோயம்புத்தூர் | | 1 |
| மொத்தம் | .. | 6 |

### (அ) மீட்புப் புகலிடங்கள்

இத்துறை மேற்குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு 6 மீட்புப் புகலிடங்களை நிறுவிப் பராமரித்து வருகிறது. மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள பாதுகாப்பு இல்லங்களுடன் 5 மீட்புப் புகலிடங்கள் இணைந்துள்ளன. வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் 1 மீட்புப் புகலிடம் இணைந்து செயல்பட்டு வருகிறது.

### (ஆ) மணமாகாத தாய்மார்கள் இல்லம்

மணமாகாத கர்ப்பிணிகளுக்கென சென்னையில் அரசினர் மகளிர் காப்பகத்தில் அரசு சார்பில் ஓர் இல்லமும், தூத்துக்குடி, அடைக்கலாபுரத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஓர் இல்லமும் இயங்குகின்றன. இந்த நிறுவனங்கள் தாமாக முன்வந்து



2001 செப்டம்பர் 6]

சேரும் மணமாகாத கர்ப்பிணிகளைத் தங்க வைத்து அவர்களுக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் அளிப்பதுடன், முன் பேறுகாலக் கவனிப்பும் வழங்கப்படுகிறது.

### (இ) குறுகிய கால இல்லம்

திக்கற்ற மகளிருக்கென சென்னை மயிலாப்பூரில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் அபய நிலையம் என்ற இல்லம் இயங்கி வருகிறது. மேற்குறிப்பிட்ட இல்லத்தை நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்புத் தொகையாக ஒரு பெண் இல்லவாசிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 200/- வீதம் வழங்கப்படுகிறது.

### (ஈ) இடைவழி இல்லங்கள்

1999-2000 ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்குப் புகலிடம், கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் விதத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. உளுந்தூர்ப்பேட்டை
2. விராலிமலை
3. நாமக்கல்

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள இளம் சிறுமியர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் முகத்தான் பயனுள்ள மறுவாழ்வு வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறுமியரின் சுயமரியாதையை மேம்படுத்துவதற்கும் இத்திட்டம் உதவுகிறது. ஒவ்வொரு இடைவழி இல்லமும் 25 பெண்களை வைத்துப் பராமரிக்கப்பட அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் ரூ. 0.77 இலட்சம் வீதமாக மொத்தம் ரூ. 2.33 இலட்சம் ஆண்டு மானியமாக வழங்கப்படுகிறது.

## 5.3. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் சிறார்களின் ஆளுமை, நோக்கம் மற்றும் நடத்தை ஆகியவற்றை அறிவியல் பூர்வமாக ஆய்ந்து அறிக்கைகள் வழங்க தோற்றுவிக்கப்பட்டவையாகும். சிறார்களின் சமூக மற்றும் பொருளாதார அடிப்படைகளையும் பயிற்சிபெற்ற சோதனை அலுவலர்கள் மற்றும் உளவியலாளர்கள் ஆய்வு செய்கின்றனர். இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்கள் சிறார்கள் குறித்த அறிக்கையினை இளைஞர் வழிகாட்டி நிலையங்களில் இருந்து பெறுகின்றனர்.

[2001 செப்டம்பர் 6

சென்னை, மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் 6 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

கூர்நோக்கு இல்லங்கள், இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களின் இல்லவாசிகளின் உளவியல் பூர்வமான பிரச்சினைகள் குறித்து இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் ஆய்ந்து அறிக்கைகள் வழங்குகின்றன.

**5.4. கல்விப் பயிற்சி**

அனைத்து அரசு இளைஞர்/சிறப்பு இல்லங்களிலும் 8 ஆம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை பெண்கள் சிறப்பு இல்லத்தில் 10 ஆம் வகுப்புவரை கல்வியுடன், கணிப்பொறிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் மேல் வகுப்புகளிலுள்ள மாணவர்களின் நெரிசலைத் தவிர்க்கவும், தூரத்தைக் கருதியும் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளைக் கொண்ட உயர்நிலைக் கல்விப் பிரிவு ரூ. 12.30 இலட்சம் செலவில் தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது.

மேலும் இல்லவாசிகள் வெளியில் உள்ள மேல்நிலைப்பள்ளி, கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில் கல்லூரியில் சேர்த்து பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மருத்துவப் பட்டப் படிப்பு | 4 |
| பொறியியல் பட்டப் படிப்பு | 4 |
| இளங்கலை பட்டப் படிப்பு | 3 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 38 |
| தொழில்நுட்பக் கல்வி | 1 |

மேற்படி இல்லங்களில் பயிற்சிபெறும் இல்லவாசிகளின் உயர் கல்விக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதற்காகவும் மற்றும் அவர்களின் எதிர்கால வாழ்க்கையை வளமாக்கும் நோக்கத்துடனும் இவ்வரசால், பொறியியல் கல்லூரிகளில் 5 இடங்கள் பொறியியல் பட்டப் படிப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 6]

**5.5. இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி**

சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பின்குறிப்பிட்ட தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சிபெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்கள் மூலம் தச்சு, புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, தையல் மற்றும் பூ வேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக் கருவிப் பயிற்சி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமாரப் பணி மற்றும் உலோகப் பணி, இவை மட்டுமின்றி பின்வரும் குறுகியகால தொழிற் பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன:

மெழுகுவர்த்தி தயாரிப்பு

காகிதப் பொம்மை தயாரிப்பு

மின்விசை மாவு ஆலை

தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு

வீட்டு மின் அலகுப் பணி

தண்ணீர்க் குழாய் பழுதுபார்ப்பு

திரை அச்சு

பனியன் தயாரிப்பு

சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லத்தில் உள்ள தையற் தொழிற்கூடங்களும், செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்தில் நெசவு தொழிற் கூடமும் தஞ்சாவூர், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லங்களில் தச்சு தொழிற்கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் மின் பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மகளிர் காப்பகங்கள், பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூ வேலை, பாய் நெசவு மற்றும் நெசவு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் சலவைத் தொழில் சார்ந்த பயிற்சி வழங்கப்படுகிறது.

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும் இல்லவாசிகளுக்கு

மனையியல் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. பெண்கள் இளைஞர்/சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்று, வெளியே பணிபுரியும் முன்னாள் இல்லவாசிகள் தங்குவதற்காக, பிற்காப்பு தங்கும் விடுதி ஒன்று சென்னை அரசினர் பெண்கள் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் இயங்கி வருகிறது. 10 முன்னாள் இல்லவாசிகள் இத்திட்டம் மூலம் பயன் பெறுகிறார்கள்.

சென்னை இராயபுரம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் இளைஞர் இல்லங்களில் இருசக்கர வாகனங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பயிற்சிக்கூடம் இயங்கி வருகிறது. இம்மூன்று பயிற்சிக் கூடங்களிலும் 30 இல்லவாசிகள் பயிற்சி பெறுகின்றனர்.

தஞ்சாவூர் மற்றும் இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் இயங்கும் ஹாலோ பிளாக் சிமெண்ட் செங்கற்கள் தயாரிக்கும் பிரிவு மற்றும் சென்னை அரசினர் பெண்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் பெண்களுக்கான சுகாதாரத் துண்டுகள் தயாரிக்கும் பிரிவிலும் இல்லவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 5.6. தொழிற் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு ஊக்கத்தொகை

கல்வி மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் நிறுவனங்களில் உள்ள சிறார்களின் மனப்போக்கு கூர்ந்து கவனிக்கப்படுகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் இல்லங்களில் தொழிற் பயிற்சிபெறும் இல்லவாசிகளுக்குப் பின்வருமாறு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1 | முழுத்திறன் பெற்ற இல்லவாசிகளுக்கு | ரூ.70 மாதம் தோறும் |
| 2 | பாதி திறன் பெற்ற இல்லவாசிகளுக்கு | ரூ.50 மாதம் தோறும் |

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத்தொகை இல்லவாசிகளின் கைச்செலவுக் கணக்கில் மாதம்தோறும் சேமிக்கப்படுகிறது.

## 5.7. வெளியேறும் இல்லவாசிகளுக்கான தொழிற்பயிற்சிகள்

காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் புத்தகம் கட்டுதல், கருமாரப்பணி மற்றும் வேளாண்மைத் தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



தொழிற்பிரிவுகளில் பணிபுரியும் இல்லவாசிகளுக்கு ஊக்கத்தொகை (முழுத் திறன் பெற்றோருக்கு ரூ.70-ம் பாதி திறன் பெற்றோருக்கு ரூ.50-ம்) வழங்கப்படுகிறது. அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேகும் இல்லவாசிகளுக்கு விரிவான பயிற்சிகள் வழங்கும் விதத்தில் திட்டம் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தொழிற்பயிற்சி மறுவாழ்வு மையம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள இம்மையத்தில் தானியங்கி இயந்திரங்கள் பழுதுபார்த்தல், பொது இயந்திரங்கள் பழுதுபார்த்தல், மின் இணைப்பு, மின்கம்பி சுருள் சுற்றுதல், குழாய்ப் பணிகள், குளிர்சாதனம் பழுதுபார்த்தல், காற்றுப்பதனம் பழுதுபார்த்தல், டிடிபி. (கணினி) ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் உள்ளடக்கிகள், தோல் பொருட்கள் மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தொழிற்பயிற்சி மறுவாழ்வு மையத்தில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கு தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, இம்மையத்தில் பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்கள் சான்றிதழைப் பெற்று, வேலைவாய்ப்பகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் இதுவரை 32 மாணவர்கள் பயிற்சி முடித்து பயன் அடைந்துள்ளனர்.

## 5.8. மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்குக் கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில் இத்துறையின் முன்னாள் இல்லவாசிகளுக்கு துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

2. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ.3,000/-மும் திருமண நாள் செலவாக ரூ.2,000/-மும் வழங்கப்படுகிறது. இதுவரை 16 பெண் இல்லவாசிகள் பயன் பெற்றுள்ளனர்.

3. மகளிர் காப்பகங்களிலிருந்து விடுபடும் பெண்கள் மற்றும் சிறுமியருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகப் பாதுகாப்பு இல்லவாசிகளின் நல நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒருவருக்கு ரூ.5,000/- வரை நிதி உதவி அளித்து, கறவை மாடுகள், சிறு கடைகள், தையற் கடை போன்றவை வைத்து சொந்தமாகத் தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 151 பெண்கள் நிதி உதவி பெற்றுள்ளனர்.

4. அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சிபெற்று விடுபடும் இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது.

| வ. எண் | தொழிற் பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1 | தச்சு | 5 | 2,000 |
| 2 | நெசவு | 2 | 1,000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 3 | 1,000 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6 | தையல் | 10 | 2,500 |
| 7 | பூத்தையல் | 2 | 1,000 |
| 8 | உலோக வேலை | 4 | 1,000 |
| 9 | பாய் நெசவு | 4 | 1,000 |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய்ப் பணிகள் | 2 | 1,000 |
| 11 | மின் பற்றவைப்பு | 2 | 1,000 |
| 12 | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு | 2 | 2,000 |



2001-2002 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ.35,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.9. குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் சிறார்கள் அவர்களது குடும்பச் சூழலில் வளரும் விதமாக அவர்களின் கல்விக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம் சிறார்களைக் கண்டறிந்து அவர்கள் பெற்றோர் வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. 100 சிறார்கள் இதன் மூலம் பயன்பெறுகின்றனர். இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், தாமாகவே பயிலும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

### 5.10. சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்

பிச்சையெடுக்கும் சிறார்களைக் கண்டறிந்து, அவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் ஆலோசனை வழங்கி, சிறார்கள் பள்ளிக்குச் செல்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசின் மானிய உதவியுடன் சென்னை செனாய் நகரில் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது.

### 5.11. சிறப்பு பராமரிப்பு மையங்கள்

இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு அன்பும் அரவணைப்பும் அளிக்கும் வகையில் 2 சிறப்பு பராமரிப்பு மையங்கள் (சிறுமியர் 1, சிறுவர் 1) நடைபெற்று வருகின்றன. சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் ஒரு மையமும், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் ஒரு மையமும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் ரூ.1.20 இலட்சம் செலவில் 100 சிறார்கள் பயன்பெறுகிறார்கள்.

### 5.12. துன்புறும் சூழலில் உள்ள சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்

மாநிலத்தின் இளைஞர் நீதி நிர்வாகத்தின் முக்கிய குறிக்கோள்களில் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் அவர்களை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும் ஒன்றாகும். குழந்தைகள்

துன்புறுத்தப்படுவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (தமிழ்நாடு கிளை) வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்த வழக்குகள் விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தற்காலிகப் பாதுகாப்பு மற்றும் புகலிடம் அளிப்பதுடன், குழந்தையின் பெற்றோருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

**5.13. மாநில அரசின் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடங்கள் திட்டம்**

சாலைகளில் வாழும் சிறார்கள் மற்றும் நடைபாதைகளில் வசிக்கும் சிறார்களுக்கு இரவுப் புகலிடங்கள் அளிக்கும் விதமாக ஒரு திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் 16 புகலிடங்களை நடத்தி வருகின்றன. 50 சிறார்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு புகலிடத்திற்கும் ஒரு வேளை உணவு, முறைசாராக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஆகிய செலவினங்களுக்காக ஆண்டொன்றிற்கு ரூ.65,500/- மானியம் வழங்கப்படுகிறது. கீழ்க்கண்ட இடங்களில் புகலிடங்கள் இயங்கி வருகின்றன:

| | |
|---|---|
| சென்னை | 5 |
| மதுரை | 4 |
| சேலம் | 1 |
| விழுப்புரம் | 1 |
| வேலூர் | 1 |
| திருநெல்வேலி | 1 |
| திண்டுக்கல் | 1 |
| திருச்சி | 1 |
| இராமநாதபுரம் | 1 |
| மொத்தம் | [illegible] |

சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் இப்புகலிடங்கள் பாதுகாப்பாக அமைந்துள்ளன. இப்புகலிடங்களில் தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக் கல்வி வழங்கப்படுகிறது. 800 சிறார்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்.



**5.14. ஒருங்கிணைந்த சாலையோரச் சிறார்களின் நலத் திட்டம்**

இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகார ஒப்பளிப்புத் துறை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு முழுமையான திட்டமாக ஒருங்கிணைந்த சாலையோரச் சிறார்களின் நலத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த நிதியுதவி வழங்குகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கருத்துருக்கள் மாநில அரசால் நிதியுதவி அளிக்க பரிந்துரைக்கப்படுகின்றன. ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு, அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு மானியம் ரூ.15 இலட்சம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 8 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தினைச் செயல்படுத்துகின்றன.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, சமூகப் பாதுகாப்புத் துறை நகரக் குழு ஒன்றினை அமைத்து அதற்கான திட்ட வரைவினை வெளியிட்டுள்ளது. இத்திட்ட வரைவு சாலையோரச் சிறார்களின் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளை ஒருங்கிணைத்து கூட்டமைத்துச் செயல்பட ஒரு வழிகாட்டுதலை ஏற்படுத்தித் தருகிறது. நம் நாட்டிலேயே இவ்வாறான அமைப்பு இது முதலாவதாகும்.

**5.15. போதை மருந்தினைத் தவறாகப் பயன்படுத்துதலைத் தடுக்கும் திட்டம்**

கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்த, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மைய அரசின் நிதி உதவி பெறுகின்றன:

| வ. எண் (1) | பயிற்சித் திட்டங்கள் பெயர் (2) | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| அ | போதை மருந்து விழிப்புணர்வு, ஆலோசனை மற்றும் உதவி மையம் | 3 |
| ஆ | போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் மறுவாழ்வளித்தல் | 25 |
| இ | போதை தடுப்பு முகாம் | 1 |
| | மொத்தம் .. | 29 |

[2001 செப்டம்பர் 6

## 5.16. குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம்

தொலைபேசி உதவித் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு உதவி புரிவதற்காகப் பரந்த அளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் '1098' என்ற சுலபமான எண் கொண்ட 'குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. துன்புறும் சூழலில் உள்ள குழந்தையோ அல்லது குழந்தையின் துன்புறும் சூழலைக் காணநேரிடும் நபரோ, '1098' என்ற தொலைபேசி எண்ணுக்கு கட்டணம் இன்றி தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒருங்கிணைந்த கூட்டு இணையம் மூலம் தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டு உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநரால் மத்திய அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் திட்ட முனைப்புத் துறையாக சமூகப் பாதுகாப்புத் துறை உள்ளது. இத்திட்டத்தினை மேற்பார்வை செய்ய குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்ட அறிவுரைக் குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவில் யூனிசெப், தன்னார்வத் தொண்டு நிறுவனம், மத்திய அரசின் தகவல் துறை, இரயில்வே, தொலைபேசித் துறை மற்றும் மாநில அரசின் சமூக நலத் துறை, குழந்தைகள் நலப் பிரிவு மற்றும் காவல் துறை ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டத்தின் தலைவராக சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் இருந்து வருகின்றார்.

இதுவரை கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவ உதவி | 105 |
| 2 | புகலிட உதவி | 677 |
| 3 | துன்பத்திலிருந்து பாதுகாத்தல் | 86 |
| 4 | காணாமல்போன சிறார்கள் | 279 |
| 5 | குடும்பத்துடன் சேர்த்தல் | 267 |
| 6 | இறப்பு தொடர்பாக | 1 |
| 7 | உணர்வுபூர்வமான ஆலோசனை | 63 |
| 8 | தகவல் மற்றும் முறையிடுதல் | 391 |
| 9 | தொலைபேசி உதவி குறித்து | 8311 |
| 10 | விளையாட்டு அழைப்பு | 673 |



2001 செப்டம்பர் 6]

## 5.17. காணாமல்போன சிறார்களுக்கான தகவல் மையம்

தொழில் மிக வளர்ச்சியடைந்ததின் விளைவாகப் பல்வேறு வகைகளிலும் மற்றும் தன்மைகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் சிறார்களேயாவர். எனவே, காணாமற்போன சிறுவர்கள் தகவல் குறித்த உயர் தொழில்நுட்ப தகவல் மையம் தொடங்கும் நோக்குடன் தமிழக அரசினால் சோதனை அடிப்படையில் மேற்படி மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

## 5.18. திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்) கண்காணிப்பதுடன், நிறுவனங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவையின் தரம் குறையாமல் இருக்குமாறு மேற்பார்வையிடுவதும் இப்பிரிவின் நோக்கமாகும்.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துவதோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோரச் சிறார்களுக்கான நலத் திட்டங்கள் போன்ற பணிகளையும் இப்பிரிவு கவனித்து வருகின்றது.

[2001 செப்டம்பர் 6

## அத்தியாயம் - 6

## முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

*6.1.* இத்திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சீரிய திட்டமாகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:

1. முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல் செயல்படுத்தப்படுகின்றது)
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (1-11-1974 முதல்)
3. ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் (1-6-1975 முதல்)
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் (15-3-1981 முதல்)
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25-4-1986 முதல்)

இத்திட்டத்தில் அனைத்து இனங்களின்கீழ் பயனாளிகளுக்கு மாதம் ரூ.200/- வழங்கப்பட்டு வருகின்றது.

### 6.2. முதியோர் ஓய்வூதியத் திட்டம்

### (அ) முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம்

இத்திட்டம் பிழைப்புதவி இல்லாமலும் ஆதரிப்பவர்கள் யாரும் இல்லாமலும் உள்ள அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அறிமுகப்படுத்தப்பட்டு 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கண்பார்வையற்றோர், தொழு நோய், மனநோய், பாரிச வாயு மற்றும் அவயவம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித்தொகை பெற குறைந்தபட்ச வயது 60 ஆகும். இதர ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயது 65 ஆகும். இத்திட்டத்தின்கீழ் 30-6-2001 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 4,66,362.

முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டத்தின்கீழ் 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த மாதத் தொகை ரூ.200/-ல் மைய அரசின் பங்களிப்பாக மாதம் ரூ.75/- வழங்கப்படுகிறது.



2001 செப்டம்பர் 6]

### (ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

உடல் ஊனம் 50 சதவீதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவதற்குரிய குறைந்தபட்ச வயது வரம்பு 45 ஆகும்.

அரசாணை (நிலை) எண் 964 சமூக நலத் துறை, நாள் 19-12-1980-ல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஏற்படுத்தி, ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கு வயது வரம்பின்றி ஓய்வூதியம் அங்கீகாரம் செய்யவும், அரசுக் கடித எண் ஜி2/16369/82-7, நாள் 27-7-1982-ன்படி தொழுநோயாளிகள் பயன்பெறும் வகையிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 30-6-2001 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 42,654.

### (இ) ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வயது வரம்பு ஏதும் இல்லை. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் திருமணமாகி கணவனை இழந்து விதவையான, மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடையத் தகுதி பெற்றவர்கள் ஆவர். முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 30-6-2001 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 4,61,661.

### (ஈ) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய குறைந்தபட்ச வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை

[2001 செப்டம்பர் 6

(சாதாரணம்) திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 30-6-2001 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 89,911.

**(உ) கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்**

இத்திட்டம் கணவனால் கைவிடப்பட்ட, நீதிமன்றத்தில் விவாகரத்து சான்று பெற்ற, தகுதிவாய்ந்த, ஆதரவற்ற 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்/மனைவிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் 30-6-2001 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 71,612.

**6.3. பிற உதவிகள்**

**(1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்**

மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும், ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகை அன்று வழங்கப்படுகிறது.

**(2) முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல்**

அரசு ஆணை எண் 771, சமூக நலத் துறை, நாள் 6-10-1980-ன்படி முதியோர் உதவிபெறும் பயனாளிகளுக்கு 1-11-1980 முதல், வாரத்திற்கு தலா ஒரு கிலோ இலவச அரிசி வழங்க உத்தரவிடப்பட்டது.

பின்னர், அரசாணை எண் 394, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5-9-1991-ன்படி முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்துப் பயனாளிகளும் 15-9-1991 முதல் கீழ்க்கண்ட அளவுகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்:

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு வாரம் ஒருமுறை தலா 1 கிலோ உயர் ரக இலவச அரிசி வழங்கப்படும்.



2001 செப்டம்பர் 6]

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு வாரம் ஒருமுறை தலா 1/2 கிலோ உயர் ரக இலவச அரிசி வழங்கப்படும்.

அரசாணை எண் 288, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 26-9-1997-ன்படி வாரம் ஒருமுறை அரிசி வழங்கும் முறை திருத்தப்பட்டு இதற்குப் பதிலாக மாதம் ஒருமுறை அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் இரண்டு கிலோ உயர் ரக இலவச அரிசியும், சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் நான்கு கிலோ உயர் ரக இலவச அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் மொத்தம் 11,32,200 பேர் பயனடைகின்றனர்.

**தொகுப்புரை**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொன்னான ஆட்சியின் 100 நாள் சாதனைகள் பற்றி, அவர்கள் கூறிய கருத்துகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத் திட்டங்கள் உருவாக்கி செயலாக்கவும், வறுமைக் கோட்டுக்குக்கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தினை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்" என்று கூறியுள்ளார்கள். அதன்படி தமிழகத்தில் வறுமையில் வாடும் குழந்தைகள், மகளிர், ஊனமுற்றோர், முதியோர் ஆகிய நலிந்த பிரிவினருக்கு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் நேசக் கரம் நீட்டி உதவிகள் செய்வோம். அவர்களின் தேவை அறிந்து நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவர்களை நலம் பெறச் செய்வோம். அப்பொழுதுதான் அவர்கள் வாழ்வில் வளம் காண முடியும். அதனால் நாடும் நலம் பெறும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையை நமது இலட்சியமாகக் கொண்டு தொடர்ந்து செயலாற்றுவோம்.

நாம் அனைவரும் உறுதியோடும், கட்டுப்பாட்டோடும், கடமை உணர்வோடும், கருத்தொருமித்தும் செயல்பட்டால் வளமிக்க வருங்காலத்திற்கு நல்ல அடித்தளமாக அமைந்து, வறுமையில் வாடும் அனைத்துப் பிரிவினரும் முன்னேற்றம் அடைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று நாம் உறுதியாக நம்புவோம். இக்கனவுகள் நனவாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நாம் அல்லும் பகலும் அயராது உழைத்திட உறுதி கொள்வோம்.

[2001 செப்டம்பர் 6

## இணைப்பு - II

*(60-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

கோரிக்கை எண் 21 - மீனளம்

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2001-2002**

**முன்னுரை**

இந்தியாவின் மொத்த கடற்கரையின் நீளத்தில் தமிழகக் கடற்கரையின் நீளம் 15 விழுக்காடாகும். தமிழகக் கடற்கரை கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் 1,076 கி.மீ. நீளம் உடையதாகும். 13 கடலோர மாவட்டங்களில் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் முடிய உள்ள 591 கடலோரக் கிராமங்களில் சுமார் 6.8 லட்சம் மீனவர்கள் தமிழகக் கடற்கரையினை உள்ளடக்கிய 41,412 ச.கி.மீ. பரப்பளவுடைய கடல் நில தொடர் பகுதியில் மீன்பிடித்து வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் மொத்த மீன் ஏற்றுமதியில் 10 விழுக்காடு தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகிறது. தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் கடல்பொருளின் மதிப்பு ரூ.1,450 கோடியாகும். இத்தொகை அகில இந்திய கடல்பொருள் ஏற்றுமதியில் 28.5 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாட்டின் மீன் வளத் துறை 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மீன் வளத்தை அதிகரித்தல் மற்றும் பாதுகாத்தல், அத்துடன் மீன் வளத்தையே வாழ்க்கையின் முக்கிய ஆதாரமாகக் கொண்ட மீனவ மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்துதல் ஆகிய இரு முக்கிய நோக்கங்களுடன் மீன் வளத் துறை செயல்பட்டு வருகின்றது.

**மீன் வளத் துறையின் கொள்கை**

மாநிலத்தின் கொள்கையானது மீன் வளத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் மற்றும் மீனவச் சமுதாயத்தின் நலனை நோக்கமாகக் கொண்டுள்ளது. மீன் வளத் துறையின் நோக்கங்கள் பின்வருமாறு:

1. சுற்றுச் சூழலுக்கு உகந்த வளம் குன்றா தொழில்நுட்பங்களின் மூலம் மீன் உற்பத்தியை உயர்த்துதல்



2001 செப்டம்பர் 6]

2. மீன் வளத்தினைச் சார்ந்த தொழில் அமைப்புகளை சர்வதேசச் சந்தையில் ஏற்றுக்கொள்ளச் செய்தல்
3. தரம் பராமரித்தலை மீனவ மக்களை மேற்கொள்ளச் செய்தல்
4. மீன் வளத்தின் மூலம் அந்நியச் செலாவணியினை அதிகரித்தல்
5. வேலைவாய்ப்புகளை அளித்தல்
6. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துதல்.
7. மீனவ மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதன் மூலம் மீனவச் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடுதல்

மீன் வளத் துறை கொள்கை மற்றும் செயல்படுத்தும் திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

**கடல் மீன் வளம்**

**1.1. கடல் மீன் வளக் கொள்கை**

தற்போது 591 கடல் மீன்பிடிக் கிராமங்களில் சுமார் 6.80 இலட்சம் கடல் மீனவர்கள் உள்ளனர். இவர்களில் 2.7 இலட்சம் மீனவர்கள் முழுநேர தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது சுமார் 8,000 மீன்பிடி விசைப் படகுகளும் மற்றும் சுமார் 41,700 பாரம்பரிய மீன்பிடிப் படகுகளும் கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. அண்மைக் கடல் பகுதியில் மீன் வளம் அதிக அளவில் பிடிக்கப்படுகிறது. நமது கடல் மீன்வளக் கொள்கையானது கடற்கரைப் பகுதிகளில் மீன் வளத்தைப் பாதுகாத்து அவற்றை நிலைநிறுத்தக்கூடிய அளவில் மீன்பிடி செய்வது என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**1.2. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்**

மீனவர்கள் பயன்படுத்தும் தற்போதுள்ள கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களில் நீண்டதூரம் கடலில் மீன்பிடிக்கச் செல்ல ஏதுவாக அவற்றை இயந்திரமயமாக்க உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. 1987-88-ஆம் ஆண்டு முதல் இத்திட்டச் செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் சம விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்களின் விலையில் உட்பொருத்தும் இயந்திரத்திற்கு 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.12,000/- வரையிலும், வெளிப்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு அதிகபட்சமாக மானியம் ரூ.10,000/- வரையிலும் வழங்கப்படுகிறது.

இயந்திரத்தின் விலையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினை பயன்படுத்தும் மீனவர்கள் தமது பங்காக செலுத்த வேண்டும். 1987-88 முதல் 2000-2001 வரை 13,925 இயந்திரங்கள் பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின்கீழ் பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடி வலை வாங்கிக்கொள்ள நபர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.6,000/- வழங்கப்படுகிறது. இதுவரை 2,866 மீனவர்களுக்கு மீன்பிடிச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பாரம்பரிய மீனவர்களுக்கு 1,500 இயந்திரங்களும் மற்றும் 908 வலைகளும் ரூ.234.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1.3. தமிழ்நாடு மீனவர்களுக்கு நிவாரணம்**

மோசமான வானிலை நேரங்களில் இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக் கலன்களும், மீனவர்களும், விசைப் படகு இயக்குபவர்களும் கடல் எல்லைப் பகுதிகளுக்குச் செல்லும் சமயங்களில் இலங்கை அரசால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற சமயங்களில் கடல் மீனவர்களின் குடும்பங்கள் அல்லல்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு 1998-99-ல் மீனவர் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு ஒரு திட்டத்தினை அரசு தொடங்கியது. மீனவக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் மீனவர்கள் வீடு திரும்பும் வரையிலும் வழங்கப்படுகிறது. இதுவரை 56 மீனவக் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்து உள்ளனர். 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.4. பாக் ஜலசந்தி பகுதியில் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து**

நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் (இராமேஸ்வரம் பகுதி உட்பட) மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாக் ஜலசந்தி கடல் பகுதியில் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் மீன்பிடித் தொழில் செய்யும்போது சில தருணங்களில் படகின் இயந்திரகோளாறு, மோசமான வானிலை போன்ற காரணங்களினால் கடலில் திசைமாறி சர்வதேசக் கடல் எல்லையைக் கடந்து இலங்கைக் கடல் பகுதிக்குச் செல்ல நேரிடும்போது இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகிட நேரிடுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் அனைத்தும் மத்திய அரசின் மூலமாக இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி இறக்க நேரிடும் தமிழக





மீனவர்கள் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படுகிறது. 31-3-2001 முடிய உள்ள காலங்களில் 20 மீனவர் குடும்பங்களுக்கு இவ்வாறான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**1.5. வழிகாட்டும் விளக்குடன் கூடிய மிதவைகளை நிறுவுதல்**

கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது கண்ணுக்குத் தெரியாத அயல்நாட்டு கடல் எல்லைக் கோட்டை தெரியாமல் கடந்துவிடும் நம் மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் சுட்டுத் தள்ளப்படும் நிகழ்வுகள், அதிகரித்துக் கொண்டே வருகின்றன. நம் மீனவர்கள் நம்முடைய மீன்பிடி கடல் மண்டலப் பகுதியிலேயே மீன்பிடிக்க இயலும் வகையில், ஒவ்வொரு நான்கு கடல் மைல் தொலைவுக்கு ஒன்று வீதம், கடலில் பகலும் இரவும் கடல் எல்லை தெரியும் வகையில் வழிகாட்டும் விளக்குடன் கூடிய மிதவைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1.6. தமிழகத்தில் கைதாகும் அயல்நாட்டு மீனவர்களை தாயகத்திற்கு திரும்ப அனுப்புதல் குறித்து**

தமிழகக் கடற்பகுதியில் கைதாகும் அயல்நாட்டு மீனவர்களை விரைவில் விடுதலை செய்திடும் நடவடிக்கைகளை விரைவுபடுத்திட மாநில அளவிலான நிலைக் குழு ஒன்று அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறையின் செயலாளர் தலைவராக உள்ளார். இக்குழுவின் தலைவர் இந்திய கடலோர பாதுகாவல் படை, சுங்கத் துறை, புலனாய்வுப் பிரிவு போன்ற பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து தமிழகத்தில் கைதாகும் அயல்நாட்டு மீனவர்களை விரைவில் விடுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். 31-3-2001 முடிய தமிழகத்தில் பல்வேறு சிறைகளில் 37 இலங்கை மீனவர்கள் தங்களது விடுதலைக்காக மத்திய அரசின் ஆணையை எதிர்நோக்கி காவலில் உள்ளனர்.

**2. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**2.1. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தள வசதிகள்**

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் உள்ள 362 மீன்பிடி தளங்களிலிருந்து இயந்திரப் படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடுத்தப்பட்டு

வருகின்றன. மோசமான வானிலை உள்ள நேரங்களில் படகுகளை நங்கூரம் இடவும், பாதுகாப்பாக வைத்திடவும், பிடித்த மீன்களை கரை சேர்த்திடவும், டீசல் பிடித்துக் கொண்டு வருவதற்கு மட்டுமின்றி பிடிக்கப்பட்ட மீன்களைக் கெடாமல் பாதுகாப்பான முறையில் நுகர்வோர் பயன்படுத்த ஏதுவாக அவ்வவ்விடங்களுக்குக் கொண்டு செல்லத் தேவையான அடிப்படை வசதிகளுடன்கூடிய படகு தங்குதளங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைப்பது அவசியமாகிறது. இவ்வசதிகள் எதிர்காலத்தில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பராமரிக்கப்படும்.

**2.2. இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம்**

இராமேஸ்வரத்தில் மீன்பிடி துறைமுகம் மொத்தம் ரூ.53.86 கோடியில் கட்டிட திருத்திய மதிப்பீட்டினை மாநில அரசு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படும்:

(1) அலைதடுப்புச் சுவர் மற்றும் படகு தளம் கட்டுதல்

(2) ஏலக்கூடம்

(3) சாய்வான வழுக்குப் பாதை

(4) சாலை அமைத்தல்

(5) தூர் வாருதல் மற்றும் மண்மேடுகளை அகற்றுதல்

(6) குடிநீர்/மின்சாரம்/கழிவுநீர்/அலுவலகக் கட்டடம் மற்றும் உணவகம் போன்ற வசதிகள்.

**2.3. பழையாறு மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல்—இரண்டாவது கட்டம்**

ரூ.10.60 கோடியில் பழையாறு மீன்பிடி துறைமுக மேம்பாடு இரண்டாம் கட்டப் பணிக்கான கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்குண்டான மதிப்பீடுகளை மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படும்:

(1) தூர் வாருதல் மற்றும் மண்மேடுகளை அகற்றுதல்

(2) இரண்டு இறங்கு தளங்கள்

(3) பாதுகாப்புச்சுவர்



(4) போக்குவரத்து மற்றும் தளமிடுதல்

(5) ஏலக்கூடம்

(6) கூடுதல் வசதிகள்

(7) அடித்தள மண் பரிசோதனை முதலியன

**2.4. மீன் இறங்கு தளங்கள் கட்டுதல்**

மத்திய அரசு தமிழ்நாட்டில் 10 இடங்களில் உள் அமைப்பு வசதிகளுடன் கூடிய மொத்தம் ரூ.13.23 கோடி செலவில் 10 மீன் இறங்கு தளங்கள் அமைத்திட ஒப்புதல் வழங்கியுள்ளது. கீழ்க்காணும் 10 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் புன்னக்காயலில் மட்டும் பணி நடைபெற்று வருகின்றது. மற்ற இடங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்தபின் பணி மேற்கொள்ளப்படும்.

(1) வீரபாண்டியபட்டினம்

(2) புன்னக்காயல்

(3) பழவேற்காடு

(4) நாகப்பட்டினம்

(5) சேதுபாவாசத்திரம்

(6) ஆற்காட்டுத்துறை

(7) முடசலோடை

(8) ஜெகதாபட்டினம்

(9) மண்டபம்

(10) சோழியக்குடி

மீன் இறங்கு தளங்களில் கீழ்க்காணும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும்:

(1) ஏலக்கூடம்

(2) 2 மீன் இறங்கு தளங்கள்

(3) ஒரு கழிவறை தொகுப்பு

(4) வெளிப்புற குடிநீர் வசதி

(5) மின்வசதி/விளக்குகள் அமைத்தல்

(6) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி

(7) உட்புறச்சாலைகள் அமைத்தல்

(8) ஆர்.சி.சி. இறங்கு தளம்/கரையோர சுவர் அமைத்தல்

### 3. உள்நாட்டு மீன்வளம்

அறிவியல் ரீதியில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறுபாசனக் குளங்கள், கிராம குளம், குட்டைகள் ஆகிய உள்நாட்டு நீர்நிலைகளைப் பயன்படுத்தி அறிவியல்முறை நீர்த்தேக்க மீன்வளப் பராமரிப்பு மற்றும் தரமான மீன்குஞ்சு உற்பத்தி செய்வது உள்நாட்டு மீன்வள கொள்கையின் முக்கிய நோக்கமாகும். பெரும் நீர்த்தேக்கத்தில் மீன் உற்பத்தியினை தமிழ்நாடு மீன் துறை (45 நீர்த்தேக்கங்கள்) மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (8 நீர்த்தேக்கங்கள்) மேற்கொண்டு வருகின்றன. துறை மூலம் 32,000 எக்டேர் நீர்ப்பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்களில் பெருங்கெண்டை மீன்குஞ்சுகளை இருப்பு செய்து உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு நடத்தி வருகின்றனர். மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் கூட்டு இன மீன்வளர்ப்பு தொழில் நுட்பத்தைக் கொண்டு ஊரக குளம், குட்டைகளில் சுமார் 5,000 எக்டேரில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.1. மீன்குஞ்சு உற்பத்தி

உள்நாட்டு மீன் உற்பத்தி அதிகரிக்க தரமான உயர் இன பெருங்கெண்டை மீன் இனங்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை ஆகியவை மிகவும் இன்றியமையாதவையாகும். மீன் துறை, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி மையங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 500 இலட்சம் விரலளவு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதனைத் தவிர மாநிலத்தில் 84 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் தனியார் துறையில் அமைக்கப்பட்டு ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு 600 இலட்சம் விரலளவு



மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தனியார் துறையில் தரமான மீன்குஞ்சு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் துறை தனியாருக்கு மானிய உதவியை வழங்கி வருகிறது.

### 3.2. தமிழ்நாடு ஊராட்சி குத்தகை மற்றும் உரிமம் வழங்கும் விதிகள், 1999

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வருவாயை அதிகரித்திடவும், அறிவியல் ரீதியில் மீன்வளர்ப்பதை ஊக்குவிக்கவும் 1999-ல் அரசு மீன்பிடி குத்தகையை 5 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மூலம் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் குளங்களுக்கு அடிப்படை குத்தகை விலையை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சம்பந்தப்பட்ட மீன் துறை ஆய்வாளரைக் கலந்தாலோசித்து நிர்ணயிக்கவும் ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் மீன் துறை மீன்வளர்ப்பின் தொழில்நுட்ப ஆலோசனைகளை குத்தகைதாரர்களுக்கு வழங்கி கூடுதல் வருவாயை ஈட்டிட முடியும்.

### 3.3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

2000-2001ஆம் ஆண்டு அரசு கீழ்க்காணும் பணிகளுக்கென ரூ.28.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது:

1) மணிமுத்தாறில் ரூ.10.50 இலட்சம் செலவில் ஒரு சினைப் பொரிப்பகம் கட்டுதலும் மற்றும் ரூ.6.20 இலட்சத்தில் மஞ்சளாறு மீன்பண்ணையில் இரண்டு நாற்றங்கால்கள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

2) பிளவக்கல் மற்றும் இதர பெரிய நீர்த்தேக்கங்களுக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் 43 கண்ணாடி நாரிழையிலான பரிசல்களும் மற்றும் இரண்டு 10 குதிரை திறன் கொண்ட மோட்டார்களும் வாங்கப்பட்டுள்ளன.

3) கொடைக்கானல் ஏரியில் இயக்க ரூ.2.00 இலட்சம் செலவில் 18 அடி கண்ணாடி நாரிழையிலான படகு ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

4) ரூ.6.30 இலட்சத்தில் சிற்றார் அணை-2, பேச்சிப்பாறை, பாபநாசம் போன்ற இடங்களில் பழுதடைந்துள்ள பணிகளைப் பழுது பார்த்திடவும் மற்றும் பராமரிப்புக்கும் செலவிடப்படும்.

**4. ஆராய்ச்சி**

இரண்டு நிலையங்கள் ஒவ்வொன்றும் ஒரு மீன் துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுமத்தால் ஜூன் 1998-ல் அனுமதிக்கப்பட்ட 16 வகை ஆய்வுத் திட்டங்களில் மொத்தம் 34 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம், செயல்முறை சார்ந்த ஆய்வு மூலம் மீன் துறை வளர்ச்சியடைய உதவுவதாகும். மீன்வளத் துறையானது மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும்.

**5. மீனவர் பயிற்சி**

தற்சமயம் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் மீனவ பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் மீனவரின் மகன்களுக்கு நவீன மீன்பிடி முறைகள், மீன்பிடி விசைப் படகுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் 10 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர மேற்கண்ட இடங்களில் சிறுதர கம்மியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

நவம்பர் மற்றும் டிசம்பர்த் திங்களில் இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மீனவ மாணவர்களுக்கு பிரதி மாதமும் ரூ.200 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இது தவிர உணவுப்படியாக நாளொன்றுக்கு ரூ.2.50 வீதம் மாதம் ஒன்றுக்கு 10 நாட்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

**6. மீன்வள விரிவாக்கம்**

தற்போது 7 இடங்களில் மீன்வள விரிவாக்கப் பிரிவு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 'மீனவச் சமுதாயம் பயனுற அவர்களுக்கான தகவல்களை மக்கள் தொடர்புச் சாதனங்களான அகில இந்திய வானொலி நிலையம் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக அறிவிக்கப்படுகிறது. கைப்பிரதிகள், துண்டுப் பிரசுரங்கள், திட்ட விளக்கக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாகப் பலவகையான அறிவியல்ரீதியான



தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பற்றியும் அரசு மற்றும் இதர நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் குறித்தும் மீனவர்களுக்குத் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. மேலும் 2000-2001ஆம் ஆண்டில் 41 வானொலிப் பேச்சுக்களும், 13 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

2001-2002ஆம் ஆண்டு பயிற்சி மற்றும் விரிவாக்கம் என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசு ரூ.56.44 இலட்சத்திற்கு தனது 80 விழுக்காடு மத்திய பங்காக தமிழ்நாடு அரசுக்கு மீன் வளர்ப்போருக்குப் பயிற்சி, மீன் வளர்ப்போர் பயிற்சியாளர்களுக்கு 3 பயிற்சி நிலையம் கட்டுதல், விரிவாக்கம் பற்றிய 2 பிரதிகள் வெளியீடு, கருத்தரங்கு நடத்துதல் மற்றும் நீலாங்கரையில் ஒரு விழிப்புணர்ச்சி நிலையம் ஏற்படுத்திட ஒப்புதல் அளித்து மேலும் ரூ.20.00 இலட்சம் முதல் தவணையாக விடுவித்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூ.70.55 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு அளிப்பதற்கும் முதல் தவணையாக ரூ.20.00 இலட்சத்தை வழங்குவதற்கும் அரசு பரிசீலித்து வருகிறது.

**7. உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்**

தற்போது தமிழ்நாட்டில் 5 உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. உவர்நீர் மீன் வளர்ப்பு, கடல் நீர் மீன் வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள விரும்பும் மீன் வளர்ப்போருக்கு அவற்றைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி அளிக்கும் பொறுப்புக்கள் இம்முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நீர்வாழ் உயிரினக் குழுமத்தின் உத்தரவின்படி அரசு ஒரு மாநிலக் குழு மற்றும் மாவட்டக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆட்சியர், மாவட்டக் குழுவிற்குத் தலைவராகவும், உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தலைமை நிர்வாக அலுவலர் அதன் உறுப்பினர்-செயலாளராகவும் இருக்கிறார்கள். தலைமை நிர்வாக அலுவலர்கள் இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, உரிய பரிந்துரைகளுடன் மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பி வைப்பார்கள். 972 விண்ணப்பங்கள் உவர்நீர் இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன. மாநிலக் குழுவானது 184 இறால் பண்ணைகளுக்கு அனுமதி அளிக்க பரிந்துரை செய்துள்ளது. இதுவரை 87 இறால் வளர்ப்போர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

[2001 செப்டம்பர் 6

## 8. வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி உதவியோடு மீன்வளத் துறை வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தினை 2001-2002ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும். மீன்வள அறிவியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள ஆசிய நீர் உயிரின வளர்ப்பு கூட்டமைப்பு மையம் மற்றும் தென்கிழக்கு ஆசிய மீன் வளர்ச்சி மையம் மற்றும் தாய்லாந்து நாட்டிலுள்ள ஆசிய தொழில் நுட்ப மையம் ஆகியவை மூலம் இங்குள்ள பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல் என்பது ஒரு முக்கியமான திட்டம். இத்திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டு 37 பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் கணினி பொறிகள் பெற்று துறையின் பல்வேறு பகுதிகளை கணினிமூலம் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை மொத்தம் ரூ.22.34 இலட்சம் ஆகும். மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் மீதமுள்ள தொகை ரூ.20.00 இலட்சத்தில் பி.சி.ஆர். மீன்/இறால் நோய் நிர்ணய தடுப்பு ஆய்வுக் கூடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 9. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2000-2001 ஆம் ஆண்டு கீழ்க்காணும் திட்டங்கள் பகுதி-2 திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன:—

| வ. எண். (1) | திட்டங்கள் பெயர் (2) | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| (1) | திருமங்கலம் மற்றும் விழுப்புரம் தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தின்கீழ் மீன்குஞ்சு வளர்ப்பிற்கு 60 மிதவைக் கூடுகள் வாங்குதல். | 4.06 |
| (2) | கண்ணாடி நாரிழையிலான 20 பரிசல்கள் வாங்குதல். | 2.40 |
| (3) | மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2000 அலுமினியப் பாத்திரங்கள் வழங்குதல் | 3.00 |
| (4) | பேச்சியம்மன் படித்துறை, மதுரையில் தற்போதுள்ள பனிக்கட்டி நிலையத்தில் ஒரு அலுவலகம் கட்டுதல். | 6.00 |
| | மொத்தம் .. | **15.46** |



2001 செப்டம்பர் 6]

## 10. மீனவர் நலன்

தமிழ்நாட்டில் மீனவர் நலன் மீன் துறையின் திருத்திய கோட்பாடாகக் கொண்டு நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் மீனவர் நல மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகின்றது:—

1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்
2. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. குழு காப்புறுதித் திட்டம்
4. உயர்வேக டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வையைத் திரும்ப அளித்தல்

### 1) மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

கடந்த 5 ஆண்டு காலத்தில் ஆண்டொன்றுக்கு 4,000 வீடுகள் வீதம் அரசு மொத்தம் 20,000 வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டதில், இதுவரை 15,558 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2001-2002ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 2) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

மீன்பிடிப்பு என்பது கடலில் நடைபெறும் ஒரு தொழில் என்பதாலும் பருவகாலத்தில் பாதிக்கப்படும் என்பதாலும் மத்திய அரசு 1992 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் மீனவர்களுக்கு உதவிடும் பொருட்டு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் பங்கேற்க முன் வந்தது. இத்திட்டத்தில் மீனவ கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள மீனவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.45/- வீதம் 8 மாதங்கள் செலுத்த வேண்டும். அவ்வாறு வசூலிக்கப்படும் ரூ.360/- வுடன் மத்திய மற்றும் மாநில அரசுகள் தலா ரூ.360/- வீதம் ரூ.1080/- வழங்கும். இத்தொகையினை மீன்பிடிப்பு இல்லாத 4 மாதங்களுக்கு மாதம் ரூ.270/- வீதம் மீனவர்களுக்கு வழங்கப்படும். 2000-2001 ஆம் ஆண்டு 1.86 இலட்சம் மீனவர்களுக்கு ரூ.1325.67 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்திட வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.11.01 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 6

மேலும் 2000-2001 ஆம் ஆண்டு மத்திய அரசு இத்திட்டத்தினைத் திருத்தியமைத்துச் செயல்படுத்திட ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி நடப்பாண்டில் ஒரு மீனவர் மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் 8 மாதம் மொத்தம் ரூ.400/- செலுத்த வேண்டும். அவ்வாறு வசூலிக்கப்படும் ரூ.400 உடன் மாநில அரசின் பங்காக ரூ.500-ம் மத்திய அரசின் பங்காக ரூ.300-ம் சேர்த்து மொத்தம் ரூ.1200-ஐ மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 வீதம் 4 மாதங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

**(3) மீனவர் குழு காப்புறுதித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் மாநில மற்றும் மத்திய அரசு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள மீனவர் ஒவ்வொருவருக்கும் ரூ.12 வீதம் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டுத் தொகையாக புதுடெல்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு 1-7-1991 முதல் செலுத்தி வருகின்றது. இந்த காப்பீட்டுத் தொகை 9-12-2000 வரை செலுத்தப்பட்டது.

மீனவர் மரணமடைந்தாலோ அல்லது முழு ஊனம் அடைந்தாலோ மீனவர் குடும்பத்திற்கு ரூ.35,000 காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது. நிரந்தர பகுதி ஊனம் அடைந்தால் மீனவர்களுக்கு ரூ.17,500 காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது.

2000-2001 ஆம் ஆண்டு காப்பீட்டுத் தொகையினை ரூ.12-லிருந்து ரூ.14/- ஆக உயர்த்தி அரசு 10-12-2000 முதல் 9-12-2001 முடிய புதுடெல்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு 2,97,657 மீனவர்களுக்கு ரூ.17.86 இலட்சம் செலுத்தியுள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்டு வந்த காப்புறுதி நிவாரணத் தொகை ரூ.35,000-லிருந்து ரூ.50,000ஆக உயர்த்தப்பட்டு மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. நிரந்தர பகுதி ஊனம் அடைந்தால் மீனவர்களுக்கு ரூ.17,500 லிருந்து ரூ.25,000ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை நடப்பு ஆண்டில் செயல்படுத்திட ரூ.21.00 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர மாநில அரசு தனியாக கூடுதல் காப்புறுதி நிவாரணம் ரூ.15,000 வழங்க ஏதுவாக இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டொன்றுக்கு ஒரு மீனவருக்கு ரூ.4 வீதம் காப்புறுதித் தொகையினை மாநில அரசே செலுத்துகின்றது. மீனவர் மரணம் அடைந்தாலோ அல்லது நிரந்தர முழு ஊனம் அடைந்தாலோ ரூ.15,000-மும், பகுதி ஊனம் அடைந்தால் ரூ.7,500-ம் காப்புறுதி நிவாரணமாக



2001 செப்டம்பர் 6]

வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டு 2,97,657 மீனவர்களுக்கு ஆண்டுச் சந்தா ஒரு மீனவருக்கு ரூ.4 வீதம் மொத்தம் ரூ.11.91 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி மீனவ மகளிரையும் இத்திட்டத்தில் சேர்த்திட 14-12-2000 அன்று ஒரு மீனவ மகளிருக்கு பிரிமியத் தொகை ஆண்டுக்கு ரூ.3.95 வீதம் 66,027 மீனவ மகளிருக்கு சந்தாத் தொகையினைச் செலுத்த ரூ.2.61 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தினால் மீனவ மகளிர் விபத்தில் இறக்க நேரிட்டால் காப்புறுதியாக ரூ.15,000-மும் பகுதி ஊனம் அடைந்தால் ரூ.7,500-மும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.14.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(4) உயர்வேக டீசல் எரிபெண்ணெய் மீதான மைய ஆயத்தீர்வையைத் திரும்ப பெறுதல்**

மீன்பிடி விசைப்படகுகளின் நடைமுறை செலவினைக் குறைக்கவும், கடல் மீன்பிடி விசைப்படகு இயக்குபவரின் துயரத்தினை நீக்கவும் அரசு எரிபெண்ணெய் மீதான ஆயத்தீர்வையைத் திரும்ப அளிக்கிறது. மாநில அரசு ஒரு லிட்டருக்கு 17 பைசா வீதமும், மத்திய அரசு 28 பைசா வீதமும் ஆக மொத்தம் ஒரு லிட்டருக்கு 45 பைசா வீதம் எரிபெண்ணெய்க்கு மானியம் வழங்கப்படுகிறது. 1999-2000ஆம் ஆண்டிற்கு எரிபெண்ணெய் மீதான ஆயத்தீர்வையை மீனவர்களுக்குத் திரும்ப அளிக்க ஏதுவாக அரசு 27-11-2000-ல் ரூ.250.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்தொகையில் ரூ.159.13 இலட்சம் 2035 மீன்பிடி விசைப்படகுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை அரசின் கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது. இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று நடப்பு நிதியாண்டிலும் செயல்படுத்தப்படும்.

**11. மீன்வள கூட்டுறவு**

இதுவரை தமிழகத்தில் 3,37,598 உறுப்பினர்கள் அடங்கிய 705 கடல் மீனவர்/ மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும் 59,486 உறுப்பினர்களைச் கொண்ட 289 உள்நாட்டு மீனவர்களும் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 655 உறுப்பினர்கள் கொண்ட 10 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் செயல்பட்டு வருகின்றன. 679 உறுப்பினர்கள்

அடங்கிய ஒரு மாநில மீனவ கூட்டுறவு இணையமும், 2,848 உறுப்பினர்கள் அடங்கிய 17 இதர வகை மீனவ கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இம்மாநிலத்தில் வாழும் மீனவ மற்றும் மீனவ மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்காக உழைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

**12. (அ) தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்)**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ் 19-10-1992-ல் பதிவு செய்யப்பட்டு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தற்பொழுது 553 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட கூட்டுறவு இணையங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பாரம்பரிய மீனவர்களின் சமூக மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் ஆரம்ப கட்டமாக பகுதி-1 திட்டம் ரூ.1,699.00 இலட்சம் முதலீட்டில் நாகப்பட்டினம், காஞ்சிபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து கடலோர மாவட்டங்களில் 78 மீனவக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1,361 இலட்சம் மதிப்புள்ள 2,108 மீன்பிடி சாதனங்களான கட்டுமரம், வள்ளம், வலை மற்றும் உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 4,234 மீனவர்களுக்கு 25 விழுக்காடு மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மீன் விற்பனைக்காக இதுவரை 13 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 98 இரு சக்கர வாகனங்கள் வாங்கிட 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தித் திட்டத்தினைச் செயல்படுத்தும் மீனவக் கிராமங்களில் மீனவ பிரதிநிதிகளுக்கு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி மற்றும் உட்/வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் பராமரிப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்களுக்கு இணைய நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடு ஏற்படுத்திடவும், திட்டம் குறித்து அறிந்திடவும் மீனவக் கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.



மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கள் பயனடைந்திட தாங்களாகவே மீன் விற்பனை மற்றும் இயந்திர உதிரி பாகங்கள் விற்பனை போன்ற சுயதொழில் செய்திட இதுவரை ரூ.15.80 இலட்சம் வட்டியில்லா மூலதனக் கடனாக 23 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் பகுதி-இரண்டு**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டத் திட்டம் 01-04-1998 முதல் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 100 மீனவக் கிராமங்களில் ரூ.4,506 இலட்சம் திட்ட மதிப்பில் ஐந்தாண்டுகளில் இடுபொருட்கள் வழங்கிட அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டிற்காக ரூ.801.62 இலட்சம் அரசு அனுமதித்ததின்பேரில் இதுவரை 59 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 1,308 மீனவர்களுக்கு ரூ.573.95 இலட்சம் மதிப்பில் 562 மீன்பிடி சாதனங்களான கட்டுமரம், வள்ளம், பிளைவுட் வள்ளம், வலை மற்றும் வெளிப்பொருத்தும்/உட்பொருத்தும் இயந்திரங்கள் 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன் பெற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மீன் விற்பனை மற்றும் இயந்திர உதிரி பாகங்கள் விற்பனை போன்ற வியாபார நோக்கத்திற்காக வட்டியில்லா மூலதனக் கடன்களும், மீனவ பயனாளிகள் இணைய நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டிடவும் மீன்துறையின் நலவாழ்வுத் திட்டங்களை அறிந்திடவும் அவ்வப்போது மீனவ கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் பயனாளிகளுக்கும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி மற்றும் பிற மாநிலங்களில் மீன்வளம், கூட்டுறவுச் சங்கம் செயல்பாடு குறித்து களப்பயிற்சியும் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் மேலாளர்களுக்கும் கூட்டுறவு மேலாளர்களுக்கும் கூட்டுறவுப் பயிற்சியும் இணையத்தின் வாயிலாக அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது.

**(இ) குளிர்பதனப் பெட்டிகள்**

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு டாப்கோபெட் மூலமாக ரூ.59.69 இலட்சம் மதிப்புள்ள 100 லிட்டர் கொள்ளளவு உள்ள 1,233 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.3600 மதிப்பீட்டிலும்

(ii) லிட்டர் கொள்ளளவு உள்ள 765 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.2,000 மதிப்பீட்டில் மொத்தம் 1998 குளிர்பதனப் பெட்டிகள் 75 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் ஆண்டிற்கான ரூ.954 இலட்சத்தில் மீன்பிடி இடுபொருட்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள ரூ.804.00 இலட்சத்தில் சுமார் 2,500 மீனவர்கள் பயனடையும் வகையில் 826 மீன்பிடி இடுபொருட்களை 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 13. 2001-2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

2001-2002 ஆம் ஆண்டு ரூ.103.18 இலட்சத்திற்கு கீழ்க்காணும் 8 புதிய திட்டங்களை பகுதி-2 திட்டத்தில் செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது:—

2001-2002-ல் மதிப்பீடு
(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | வருவாய் (3) | மூலதனம் (4) | கடன் (5) | மொத்தம் (6) |
|---|---|---|---|---|---|
| (1) | மீன்வளத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் வரும் உள்நாட்டு மீன் துறை நீர்நிலைகளுக்கு 75 மிதவைக் கூடுகள் வாங்குதல். | 4.10 | — | — | 4.10 |
| (2) | பாலாறு-பொறந்தலாறின் தற்போதுள்ள மீன்பண்ணைகளை நிலை உயர்த்துதல் | — | 14.00 | — | 14.00 |
| (3) | திருவள்ளூர் மாவட்டம், சுண்ணாம்புக்குளம், பெரியகுப்பம் ஆகிய இடங்களில் முதன்மை வாய்க்கால் மற்றும் படகு நிறுத்தும் வசதிகளைச் செய்து கொடுத்தல். | — | 5.88 | — | 5.88 |
| (4) | விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இரண்டு மீன் சினைப் பண்ணைகளை வலுப்படுத்தி மேம்படுத்துதல். | — | 25.00 | — | 25.00 |
| (5) | தேனாம்பேட்டை தலைமை அலுவலகத்தில் உள்ள மீன்வளத் துறை இயக்ககத்திற்காக ஆழ்துளைக் கிணறு அமைத்தல். | 1.50 | — | — | 1.50 |
| (6) | மீன் துறையின் படகுகளைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும். | 5.00 | — | — | 5.00 |
| (7) | கடலில் மீன்பிடிக்கச் செல்பவர்களுக்கு மீன்வள ஆதாரம் குறித்த தகவல் அளித்தல் - தகவல் அளிக்கும் ஏற்பாட்டு முறையை வலுப்படுத்துதல். | 5.20 | — | — | 5.20 |
| (8) | கடலோர மீனவர்களுக்கு கடல் பாதுகாப்புச் சாதனங்கள். | 42.50 | — | — | 42.50 |
| | மொத்தம் .. | 58.30 | 44.88 | — | 103.18 |



## 14. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டில் கம்பெனிச் சட்டத்தின்கீழ் அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.500.00 இலட்சம். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

### நடவடிக்கைகள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :—

(அ) கிழக்குக் கடற்கரைப் பகுதியில் விசாகப்பட்டினத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் இரண்டு மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது.

(ஆ) நீர்த்தேக்கங்களில் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து வர்த்தக ரீதியாக மீன்பிடித்தல்.

(இ) நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்வதற்கும் மீன்வளர்ப்போர்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டும் தூண்டுதல் முறை அடிப்படையில் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்தல்.

[2001 செப்டம்பர் 6

(ஈ) சென்னை, மண்டபம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள பனிக்கட்டி நிலையங்கள், குளிர்பதன நிலையங்கள் மற்றும் பதப்படுத்தும் நிலையங்கள் நிர்வகித்தல்.

(உ) மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்து மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்குதல்.

(ஊ) சென்னை மாநகரம் மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தரமான மீன்களை சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்குதல்.

(எ) இராயபுரத்தில் உள்ள வலை பின்னும் நிலையத்தை நிர்வகித்தலும், மீனவர்களுக்குத் தரமான மீன்பிடி வலைகள் வழங்குதலும்.

(ஏ) சென்னை அருகில் உள்ள நீலாங்கரையில் இறால் குஞ்சு பொரிப்பகத்தில் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்து இறால் வளர்ப்போர்களுக்கு விற்பனை செய்தல்.

(ஐ) முத்து வளர்ப்பு நிலையம் மற்றும் முத்துச்சிப்பி பொரிப்பகத்தை நிர்வகித்தல்.

(ஒ) இராமநாதபுரம் மாவட்டம், காரங்காட்டில் உள்ள மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி நிலையத்தை நிர்வகித்தல்.

(ஓ) மீனவர்களுக்கு மானிய விலையில் படகுகளுக்கு உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரம் வழங்கல்.

(ஔ) அலங்கார மீன்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்தல்.

**1. கடல் மீன்வளம்**

**ஆழ்கடல் மீன்பிடிப்பு**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு இரண்டு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. இந்த மீன்பிடி நாவாய்கள் மூலம் 2000-2001ஆம் ஆண்டு 22 மெட்ரிக் டன் இறால்களும், 118 மெட்ரிக் டன் மீன்களும் பிடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய் ரூ.121.42 இலட்சம் ஆகும்.



2001 செப்டம்பர் 6]

**2. உள்நாட்டு மீன்வளம்**

**(அ) நீர்த்தேக்கங்கள்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1/3 (மூன்றில் ஒரு பங்கு) என்ற முறையில் உள்ளூர் மீனவர்களைப் பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது:—

1. சாத்தனூர் அணை
2. பவானிசாகர்
3. அமராவதி
4. ஆழியாறு
5. திருமூர்த்தி
6. உப்பாறு
7. பாலாறு-பொறந்தலாறு
8. பெரும்பள்ளம்.

மேற்கண்ட நீர்த்தேக்கங்களிலிருந்து 2000-2001ஆம் ஆண்டு 344 மெட்ரிக் டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.135.50 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட நீர்த்தேக்கங்களில், பவானிசாகர், உப்பாறு மற்றும் பாலாறு-பொறந்தலாறு ஆகிய நீர்த்தேக்கங்கள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

**(ஆ) மீன்குஞ்சு உற்பத்தி**

இக்கழகம் சாத்தனூர் அணையில் ஒரு மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்தையும் அமராவதி, ஆழியாறு, திருமூர்த்தி, உப்பாறு மற்றும் பாலாறு-பொறந்தலாறு ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களுக்கு வழங்கப்பட்டு அங்கு இருப்பு செய்யப்படுகின்றன. மேலும், மீன் துறை மற்றும் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கும் மற்றும் தனி நபர்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. 2000-2001ஆம் ஆண்டு 178.00 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**3. மீன் பதப்படுத்துதல்**

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் ஐந்து பனிக்கட்டி/மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. 2000-2001ஆம் ஆண்டு ரூ.16.05 இலட்சம் குத்தகை தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

**4. டீசல் விற்பனை நிலையங்கள்**

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி, பழையாறு உட்பட 17 இடங்களிலுள்ள மீன்பிடி துறைமுகங்களில் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 2000-2001ஆம் ஆண்டு 33,577 கிலோ மீட்டர் டீசல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.85.53 இலட்சம் தரகுத் தொகை ஈட்டப்பட்டுள்ளது.

**5. மீன் விற்பனை**

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சில்லறை விற்பனை அங்காடிகள் மூலமாக மீன்கள் மற்றும் பொரித்த மீன்களை விற்பனை செய்து வருகிறது. 2000-2001ஆம் ஆண்டு 540 மெட்ரிக் டன் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ.230.28 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளன.

**6. மீன் வலை பின்னும் நிலையம்**

இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன்வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 மெட்ரிக் டன் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2000-2001ஆம் ஆண்டு 33 மெட்ரிக் டன் நைலான் மற்றும் எச்.டி.ப்பி.இ. வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.81.02 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**7. தூத்துக்குடி உலர் மீன் கிடங்கு**

மீன் ஏற்றுமதியாளர்களுக்கு உதவிடும் வகையில் தூத்துக்குடியில் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தால் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2000-2001ஆம் ஆண்டு ரூ.1.55 இலட்சம் வாடகை வருமானமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.



**8. செயற்கை முத்து மற்றும் முத்துச் சிப்பி உற்பத்தி செய்தல்**

மண்டபத்தில் உள்ள முத்து வளர்ப்புப் பணி மற்றும் முத்துச்சிப்பி பொரிப்பகத்தைத் தனியாருக்கு ரூ.3.41 இலட்சத்திற்கு குத்தகைக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9. இறால் பண்ணை, காரங்காடு**

இராமநாதபுரம் மாவட்டம் காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. 2000-2001ஆம் ஆண்டு 1.99 மெட்ரிக் டன் இறால்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட வகையில் ரூ.3.07 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**10. படகுகளுக்கு உள் பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்குவது**

இக்கழகம் படகுகளுக்கு உள் மற்றும் வெளியே பொருத்தக்கூடிய இயந்திரங்களை மானிய விலையில் மீன் துறை அலுவலர்களால் பரிந்துரை செய்யப்பட்ட மீனவர்களுக்கு உள்ளேபொருத்தும் இயந்திரத்திற்கு அதிகபட்ச மானியம் ரூ.12,000-ம் வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு அதிகபட்ச மானியம் ரூ.10,000-ம் வழங்கப்படுகிறது. 2000-2001ஆம் ஆண்டு 292 வெளியே பொருத்தும்/உள்ளே பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு ரூ.4.91 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**11. வண்ண மீன்கள் உற்பத்தி மற்றும் விற்பனை**

தமிழ்நாடு அரசின் நிதி உதவியின்கீழ் மீன்வளர்ச்சிக் கழகம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும் ஆழியார் நகரில் வண்ண மீன் விற்பனையுடன் கூடிய மீன்காட்சியகம் ஒன்றினை நிறுவி பராமரித்து வருகிறது. சென்னையில் வண்ண மீன் விற்பனை நிலையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ரூ.18.10 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பான ரூ.56.80 இலட்சம் 2000-2001ஆம் ஆண்டில் ரூ.6.00 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 6

# இணைப்பு III

*([illegible]) ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2001-2002**

**பாகம் - 1**

**முன்னுரை:**

கிராமத்து மக்களின் துணை வருவாயை அதிகரிப்பதில் கால்நடை முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பிடத்திற்கு அருகிலேயே முழுநேரம் மற்றும் பகுதிநேரத் தொழிலாகவும், நிரந்தர வருவாயை அளிப்பதும், மனிதவள ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் முக்கிய சிறப்பாகும். பால், முட்டை, மற்றும் இறைச்சி ஆகிய விலங்கின புரதச்சத்தின் மூலம், துணை ஊட்டச் சத்தினைப் பெருக்குவதாக, கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்பாடுகள் அமையும். கால்நடை பராமரிப்பு, கிராம வேலைவாய்ப்புத் துறைகளில் ஒன்றாகவும், மகளிர் பெருமளவில் பங்கு கொள்ளும் துறையாகவும் இருக்கும். கால்நடை வளர்ப்பு, ஏழை கிராம மக்களுக்கு மாற்றுத் தொழிலாகவும், தொடர்ந்து வருவாய் அளிப்பதாகவும் இருக்கும். குறிப்பாக, வேளாண் தொழில் இல்லாத காலங்களில் குறுகிய காலத்தில் கிராமப் பொருளாதாரத்தில் உயர்ச்சியினை உண்டாக்கும்.

கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவம் அளிப்பதும், கால்நடைகளின் தரத்தை உயர்த்துதலும் கால்நடை பராமரிப்புத் துறையின் முக்கிய நோக்கமாகும். கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வந்தபோதிலும், கலப்பின கருத்தரிப்புத் திட்டத்தின் மூலமும், மற்ற தொடர்புடைய திட்டங்களின் மூலமாகவும், பால் உற்பத்தி தொடர்ந்து அதிகமாகிக் கொண்டே வருகின்றது. இதனால், உபயோகமற்ற கால்நடைகள்



2001 செப்டம்பர் 6]

அழியவும், கலப்பினங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் உதவும். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஒரு கால்நடை ஒரு நாளில் கறந்த சராசரி பாலின் அளவு பின்வருமாறு:—

| இனம் | 1990-1991 | 2000-2001 | 1990-91-ஐ விட உயர்வு | 1990-91 உயர்வு |
|---|---|---|---|---|
| | (கிலோவில்) | | (கிலோவில்) | சதவீதம் |
| (அ) பசுவினம்: | | | | |
| 1. நாட்டினம் | 2.388 | 2.700 | 0.312 | 13.07 |
| 2. கலப்பினம் | 4.857 | 6.000 | 1.143 | 23.53 |
| (ஆ) எருமையினம் | 3.223 | 4.100 | 0.877 | 27.21 |

(1 லிட்டர்=1.028 கிலோ கிராம்)

1990-91 ஆம் ஆண்டில் 33.75 இலட்சம் டன்களாக இருந்த பால் உற்பத்தி மதிப்பீடு, 2000-2001 ஆம் ஆண்டில் 48.99 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. இதேபோல் 1990-91 ஆம் ஆண்டில் 2,551 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி மதிப்பீடு, 2000-2001 ஆம் ஆண்டில் 3,929 மில்லியனாக அதிகரித்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டின் கணக்குப்படி ஒருவருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவு, 166 கிராம் என கணக்கிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆண்டு கணக்குப்படி 216 கிராமாக உயர்ந்துள்ளது. இதுபோன்றே ஒருவருக்கு ஒரு வருடத்திற்குக் கிடைக்கும் முட்டை எண்ணிக்கை 46 லிருந்து 64 ஆக உயர்ந்துள்ளது. கலப்பின கருத்தரிப்பின் மூலமும், நோய்களைக் கட்டுப்படுத்துவதின் மூலமும் ஒருநாளைக்கு ஒருவருக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரை அளவுப்படி 220 கிராம் பாலும், ஒரு வருடத்திற்கு 183 முட்டைகளும் கிடைக்கும். தமிழ்நாட்டில் அதிகமாக கறிக்கோழி, முட்டைக்கோழி உற்பத்தி செய்யப்படுவதால், கோழிக்கறியும், முட்டைகளும் பாராட்டத்தக்க அளவில் மக்களுக்குக் கிடைக்கின்றன.

கால்நடைகளைச் சார்ந்த தொழிலில், தோல் முக்கியமான மூலப்பொருள் ஆகும். தோல் அந்நிய செலாவணியை அதிகம் ஈட்ட வல்லது. 1997-1998-ல் ரூ.10,835.08 மில்லியன் மதிப்புள்ள தோல், தோல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அது 2000-2001ஆம் ஆண்டில் ரூ.26,150.10 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது.

[2001 செப்டம்பர் 6

### பாகம் - 2

## கால்நடை மற்றும் கோழியின அபிவிருத்தி

**கால்நடை எண்ணிக்கை:**

தமிழ்நாட்டின் மொத்த கால்நடைகள் எண்ணிக்கை 26.15 மில்லியன் ஆகும். இது நாட்டின் மொத்த 470.86 மில்லியன் கால்நடைகளில் 5.55 சதவீத பங்கு ஆகும். 16-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பின்படி (1997-ல்) தமிழகத்தில், கால்நடைகளின் இனவாரியான எண்ணிக்கை விவரங்களும், அதன் விழுக்காடு பங்கும் கீழே தரப்பட்டுள்ளன:

| வரிசை எண் (1) | இனம் (2) | எண்ணிக்கை (3) | மொத்த எண்ணிக்கையில் விழுக்காடு (4) |
|---|---|---|---|
| 1 | மாட்டினம் | 9362637 | 35.80 |
| 2 | எருமையினம் | 2716774 | 10.39 |
| 3 | செம்மறியாடுகள் | 5373601 | 20.55 |
| 4 | வெள்ளாடுகள் | 6324873 | 24.18 |
| 5 | குதிரைகள் மற்றும் மட்டக் குதிரைகள் | 9024 | 0.03 |
| 6 | பன்றிகள் | 622406 | 2.38 |
| 7 | கழுதைகள் | 40357 | 0.15 |
| 8 | நாய்கள் | 1703497 | 6.52 |
| | மொத்த கால்நடைகள் | 26153169 | 100 |
| | மொத்த கோழியினங்கள் | 27166254 | — |

தேசிய கால்நடை கொள்கையின் வரையறைகளைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் கால்நடை கொள்கை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டு கால்நடை கொள்கையின் சிறப்பு அம்சம் வருமாறு:



2001 செப்டம்பர் 6]

* கால்நடை உடல்நலம் பேணும் வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்.
* செயற்கைமுறை கருவூட்டல் பணியைத் தீவிரப்படுத்துதல்.
* கிராமப்புறங்களில் வாழும் பெண்களைப் புறக்கடை கோழி வளர்ப்பில் ஊக்குவித்தல்.
* மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துதல்.
* கால்நடை மருத்துவப் பணிகளைத் தனியார் மற்றும் வணிகமயமாக்குதல்.
* இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்கு சுகாதாரமான இறைச்சி வழங்குதல்.

**தீவனம் மற்றும் பசுந்தீவனம்:**

கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனம் உலர் தீவனம், அடர் தீவனம் மற்றும் பசுந்தீவனங்களில் உலர் தீவனம், பெரும்பங்கு வகிக்கிறது. 15 முதல் 20 விழுக்காடு மட்டுமே கால்நடைகளுக்கு அடர் தீவனம் தற்சமயம் வழங்கப்படுகிறது. பசுந்தீவனம் பெரும்பாலும் கறவை மாடுகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

மாநிலத்தில் பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவகாலங்கள் மற்றும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன. பொதுவாக, கறவை மாடுகளுக்கு ஒரு நாளைக்கு 15 கிலோ பசுந்தீவனம் தேவைப்படுகிறது. இதில் 30 சதவீதம் பயிறு வகை பசுந்தீவனம் ஆகும். மாநிலத்தின் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க அதிக பரப்பளவில் நீண்டகால பசுந்தீவன வகையைச் சார்ந்த நேப்பியர், உயர்ரக கோ-1, கோ-3, பாரா மற்றும் கினி புல்வகைகள் பயிரிடப்படுகின்றன. மேலும், ஊடுபயிராகக் காராமணி பயிறுவகை, ஸ்டைலோ, கோ-3 புல்வகைகளைத் தென்னை மற்றும் மாந்தோப்புகளில் பயிரிடவும் ஊக்குவிக்கப்படுகின்றன.

மாநிலத்தில், மேய்ச்சல் நிலப் பரப்பளவு 1.23 இலட்சம் ஹெக்டேர் ஆகும். சாகுபடி செய்யப்படாத பயனற்ற நிலங்கள் மற்றும் நிரந்தர மேய்ச்சல் நிலங்கள் இதில் அடங்கும். மேய்ச்சல் நிலப் பகுதி, பிற துறைகளால் பல்வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு குறைந்து வருகின்ற நிலையை மாற்றிட, மேய்ச்சல் நிலத்தை மாறுதல் செய்யக்கூடாது என்று அரசு முடிவு செய்துள்ளது. அவ்வாறு

மாற்றவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போது, மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்புள்ள வேறு நிலம், மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்க முடிவெடுத்துள்ளது. இவை தவிர, கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்க, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பொருத்தமான நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக மேம்படுத்தப்படும்.

தீவனப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய, இத் துறையின் பல திட்டங்கள் மூலமாக பசுந்தீவன உற்பத்தியினை அதிகரிக்கப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவுகள், கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

(1) படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)

(2) ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)

(3) செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)

(4) ஓசூர் (தர்மபுரி மாவட்டம்)

(5) சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)

(6) அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) மற்றும்

(7) புதுக்கோட்டை

**இனப் பெருக்கம்:**

நாட்டினங்கள் நோய் எதிர்ப்பு சக்தி, அதிக வெப்ப நிலையைத் தாங்கக்கூடியதாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாயும், பால் கொடுக்கும் காலம் குறைந்தும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட நாட்கள் அதிகமாகவும் இருக்கின்றன. ஆனால், அயலினங்களில் முதல் கன்று ஈனும் காலம், பால் வற்று காலம் மற்றும், இரு கன்றுகளுக்கு இடைப்பட்ட காலம் ஆகியவை மிகக் குறைவானதாக உள்ளன. மேலும் பால் கறவை நாட்கள் மற்றும் உற்பத்தித் திறன் மிகச் சிறப்பாக உள்ளது. ஆனால் நோய் எதிர்ப்புத் திறனும் தட்பவெட்ப நிலையைத் தாங்கும் தன்மை குறைவாக உள்ளது. நாட்டினங்களில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்பவெட்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களைப் பாதுகாத்து, மற்ற திறன்களைக் குறுகிய காலத்தில்



குறைந்த செலவில் மேம்படுத்த கலப்பினப் பெருக்கம் செய்வது ஒன்றே மாற்று வழியாகும். நாட்டினங்கள் அவற்றின் சொந்த பிறப்பிடங்களிலேயே வளர்த்துப் பாதுகாக்கப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள மொத்தக் கால்நடை எண்ணிக்கையில் 30% பசுவினங்களாகும். மொத்த பசுவினங்களின் எண்ணிக்கையானது அயலினம் மற்றும் கலப்பினத்தில் 23%, உள்நாட்டுத் தூய்மை மரபுடைய இனத்தில் 18% மற்றும் நாட்டினத்தில் 59 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. அதிக உற்பத்தித் திறன் கொண்ட கலப்பினங்களை உருவாக்குவதே துறையின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

**கலப்பின இனப்பெருக்கம்:**

கீழ்க்கண்ட பலவகையான அனுகூலங்களினால் கலப்பின இனப்பெருக்கம் பின்பற்றப்படுகிறது :

* உள்நாட்டினங்கள் 3 ஆண்டுகள் கழித்தே இனவிருத்திக்கு உகந்தவையாக உள்ளன. ஆனால் கலப்பினங்கள் 1½ - 2 வருடங்களிலேயே இனவிருத்திக்குத் தயாராகின்றன.
* உள்நாட்டினங்களைவிட கலப்பினங்களில் பருவத்திற்கு வரும் அறிகுறிகள் எளிதாகத் தென்படுகின்றன.
* கலப்பின கால்நடைகளில் கருத்தரிப்பு விழுக்காடு அதிகமாக உள்ளதால், அதன் வாழ்நாளில் அதிகமான கன்றுகளை ஈனுகின்றன.
* கலப்பினங்களில் ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய சாரசரி பாலின் அளவு, கறவை நாட்கள் மற்றும் கறவைத் திறன் அதிகமாக உள்ளன.
* கலப்பினங்களில் பால் வற்றும் காலம் மிகவும் குறைவாகும். இதனால் விவசாயிகள் 12 முதல் 15 மாதத்திற்குள் 1 கன்று வீதம் பெறும் வாய்ப்பு உள்ளது.

மாநிலத்தில் கடைப்பிடிக்கப்படும் மாட்டினம் மற்றும் எருமையின பெருக்கக் கொள்கை பின்வருமாறு:

* நாட்டினப் பசுக்களின் இனப்பெருக்கத்திற்கு அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் ப்ரிசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்.

[ 2001 செப்டம்பர் 6

* நாட்டின எருமைகளை . முர்ரா இனப் பொலிகாளைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்.

* கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு கலப்பினப் பசுக்களை இனப்பெருக்கம் செய்தல்.

* உள்நாட்டினப் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இனங்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

**எருமையினம் தரம் உயர்த்துதல்:**

எருமையினம் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள மாட்டினங்களில் 23% ஆக உள்ளது. எருமையினம் பசுவினத்தைவிட குறைந்த தரம் கொண்ட நார்ச் சத்துப் பொருட்களைப் பயனுள்ள பொருளாக மாற்றும் . திறன் அதிகம் கொண்டுள்ளது. எருமை பாலானது பசும்பாலைவிட இரண்டு மடங்கு கொழுப்புச் சத்தும் 30% அடர்பொருளும் மிகுந்ததாகும். எருமையினம் 1989ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 31.28 இலட்சமாகக் குறைந்துள்ளது. ஆனால், பால் உற்பத்தியானது 1989-1990ஆம் ஆண்டு 1.35 மில்லியன் கிலோவாக இருந்தது. 2000-2001ஆம் ஆண்டில் 1.80 மில்லியன் கிலோவாக உயர்ந்துள்ளது. இது மாநில பால் உற்பத்தியில் 37% ஆகும். இதே காலகட்டத்தில் ஒரு மாட்டிலிருந்து ஒரு நாளைக்குக் கிடைக்கும் சராசரி பாலின் அளவு 3.227 கிலோவிலிருந்து 4.100 கிலோவாக உயர்ந்துள்ளது. முர்ரா எருமையின உறைவிந்தைப் பயன்படுத்தியதாலும், உற்பத்தித் திறனற்ற எருமையினங்களை முறையாக அகற்றியதாலும் இச் சாதனையை அடைய முடிந்தது.

**உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்:**

3572 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கீழ்க்கண்ட 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஓசூர் (தர்மபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)



2001 செப்டம்பர் 6 ]

மொத்தம் 316 எண்ணிக்கையிலான ஜெர்சி, ஹோல்ஸ்டைன் ப்ரிசியன் கலப்பினங்கள், காங்கேயம் மற்றும் முர்ரா பொலிகாளைகள் மேற்கண்ட நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் நடுத்தர உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரவ நைட்ரஜன் உற்பத்திப் பிரிவுகள் ஈச்சங்கோட்டையில் 3 எண்ணிக்கையிலும், அபிசேகப்பட்டி மற்றும் ஓசூரில் தலா 2 எண்ணிக்கையிலும், உதகமண்டலம், சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றம் (மதுரை) ஆகிய இடங்களில் ஒன்றும் ஆக மொத்தம் 10 ஆலைகள் செயல்படுகின்றன. இவை, உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகளை உறைய வைக்கவும், வீரியம் குறையாமல் பாதுகாக்கவும் பயன்படுகின்றன.

மாநிலத்தில் வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 12 இடங்களில் உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் பிரதான பணிகளாகத் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்தினைப் பாதுகாத்து பல இடங்களில் உள்ள கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்குச் செயற்கை முறை கருவூட்டல் பணிக்குப் பயன்படுத்த உதவி வருகிறது.

2000-2001ஆம் ஆண்டில் 38.19 இலட்சம் உறைவிந்து குச்சிகளும் 2.88 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும், உறைவிந்து தயாரிப்பு நிலையங்கள் மற்றும் திரவ நைட்ரஜன் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டம்:**

பசு மற்றும் எருமையின இனவிருத்திக்காக தரமான உள்ளீடுகள் மற்றும் சேவையை வழங்கவும், முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பலனை பலப்படுத்தவும், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொடர்புடைய குழுமங்களின் ஆலோசனைகளுடன் பசு மற்றும் எருமையின இனவிருத்திக்கான ஒருங்கிணைந்த திட்டம் வரையப்பட்டுள்ளது. இத் திட்டம் 2001-2002ஆம் ஆண்டு தொடங்கி, 10 ஆண்டு காலம் நடைபெறவுள்ளது.

இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

* அதிக மாட்டினங்களை செயற்கைமுறை இனவிருத்திப் பணியில் கொண்டு வந்து செயல்படுத்துவதே ஒருங்கிணைந்த இனவிருத்தித் திட்டச் செயல்பாடாகும்.
* இனவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்.
* செயற்கை முறை கருவூட்டல் பணிக்கான காளைகளின் தரத்தை உயர்த்துதல்.
* நாட்டினங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
* உள்ளீடு மற்றும் சேவையின் தரத்தை உயர்த்துதல்.
* உள்ளிருப்பு வசதிகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளுதல்.

**கால்நடைப் பண்ணைகள்:**

கால்நடைப் பண்ணைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம் மூலம் குறிப்பிட்ட கால்நடைகளை இனப்பெருக்கம் செய்து பராமரித்து வருகின்றன. பண்ணைகள் அமைந்துள்ள இடம் மற்றும் பராமரிக்கப்படும் இனங்கள் பின்வருமாறு:

| | பண்ணையின் பெயர் | பராமரிக்கப்படும் இனம் |
|---|---|---|
| 1. | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர் (தர்மபுரி மாவட்டம்) | மாடு, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, கோழி மற்றும் குதிரைகள் |
| 2. | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) | மாடு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி. |
| 3. | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) | எருமை |
| 4. | மாவட்ட கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | மாடு மற்றும் வெள்ளாடு |





| | பண்ணையின் பெயர் | பராமரிக்கப்படும் இனம் |
|---|---|---|
| 5. | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | எருமை, செம்மறியாடு, பன்றி மற்றும் கோழி |
| 6. | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | மாடு, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி |
| 7. | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | மாடு |
| 8. | அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | மாடு மற்றும் எருமை |
| 9. | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) | செம்மறியாடு |
| 10. | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்) | செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் மாடு |
| 11. | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்) | செம்மறியாடு |

ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள பண்ணையில் ஜெர்சி இன கால்நடைகளும், உதகமண்டலத்தில் அமைந்துள்ள பண்ணையில் ப்ரீசயன் இன கால்நடைகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டினங்களின் தனித்தன்மையைப் பாதுகாக்கவும், அவ்வினங்களை இனப்பெருக்கம் செய்ய ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் சிந்தி மற்றும் காங்கேயம் இன கால்நடைகள் ஒசூர் பண்ணையிலும் உம்பளாச்சேரி இன கால்டைகள் கொருக்கை பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. அபிசேகப்பட்டி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணைகளில் முர்ரா இன எருமைகள் மட்டும் வளர்க்கப்பட்டு வருகின்றன. எதிர்கால இனப்பெருக்கத் திட்டங்களுக்குத் தேவையான கலப்பினக் காளைகள் தேர்வு செய்யும் நோக்கத்துடன் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஒரு களப்பணித் தொடர்புடைய மரபு வழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் கலப்பினக் கால்நடை உற்பத்தி

மேற்கொள்ளப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கம் கலப்பினங்களின் உயிரின மரபுகள் அளவு மிகையாகாமல் கட்டுப்படுத்துவது, நோய் எதிர்ப்புத் திறனை இழக்காமலும், தட்பவெட்ப நிலையைத் தாங்கக்கூடிய வகையிலும் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது ஆகும்.

உட்கரு மாற்றல் தொழில்நுட்பம், இத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரு மாற்று தொழில்நுட்பப் பிரிவு, அயலின கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை ஒசூரில் இயங்கி வருகின்றது. இதன் வாயிலாகக் கன்றுகள் வெற்றிகரமாக பெறப்பட்டு உள்ளன.

**செம்மறியாடு மற்றும் வெள்ளாடு இனப்பெருக்கம்:**

செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் மாநில மொத்த கால்நடைகளில் 45% அங்கம் வகிக்கின்றன. செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு வறுமை ஒழிப்பிற்குப் பெரும் பங்காற்றுவதுடன் பெரும்பாலான நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்குச் சமூக நிலையில் உயர்தகுதி அளித்து அவர்களது வருவாயைக் கூடுதலாக்க உதவுகிறது. இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர, நிலத்தினை வளப்படுத்துவதற்காகச் செம்மறி ஆட்டினங்களை வயல்வெளிகளில் விட்டு பராமரிப்பதால் சிறிது வருமானம் கிடைக்கிறது. பொதுவாகக் கிராமப்புறங்களில் "கொட்டிலில் ஆடு - பெட்டியில் பணம்" என்ற பழமொழி இன்றும் வழக்கில் உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

மாநிலத்தில் உள்ள மூன்று ஆட்டுப் பண்ணைகளைத் தவிர தனியாக செம்மறியாட்டுப் பிரிவுகள் ஒசூர், புதுக்கோட்டை, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கீழக்கரிசல் செம்மறியாடு, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாட்டிலும், இராமநாதபுரம்-வெள்ளை புதுக்கோட்டையிலும் இனவிருத்தி செய்யப்படுகிறது. சாத்தூர், சின்னசேலம் மற்றும் முகுந்தராயபுரம் ஆகிய ஆட்டுப் பண்ணைகளில் முறையே வேம்பூர், மேச்சேரி மற்றும் சென்னை சிகப்பு இனங்கள் பராமரித்து வரப்படுகின்றன. மாண்டியா மற்றும் கலப்பின செம்மறியாடு, ஒசூர் கால்நடைப் பண்ணையில் இனவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இப் பண்ணையில் இனப்பெருக்கம் செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகளை விவசாயிகள் வளர்க்கும் உள்ளூர் ஆடுகளின் தரத்தினை உயர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.



உள்ளூர் வெள்ளாடுகளின் உற்பத்தித் திறனை தரமுயர்த்த தரமான வெள்ளாடுகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இத் துறையால் ஜமுனாபாரி வெள்ளாடுகள் ஆட்டுப்பண்ணை,, சின்னசேலம் மற்றும் சாத்தூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகள் செட்டிநாடு, கொருக்கை, ஒசூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த வெள்ளாடுகளின் வம்சாவழிகள் உள்ளூர் விவசாயிகளின் ஆட்டுத் தரத்தை அதிகரிக்க வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், உள்நாட்டு இனங்களான கொடி ஆடு மற்றும் கன்னி ஆடுகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையே மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர் மற்றும் ஆட்டுப்பண்ணை, சாத்தூரில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒட்டுண்ணிகளால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து ஏழை விவசாயிகளின் செம்மறியாடுகளை பாதுகாக்கும் நோக்குடன் சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக பிற மாவட்டங்களில் செம்மறியாடுகள் காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகின்றன. 2000-2001-ம் ஆண்டுகளில் செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கத்திற்கு ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் மருந்து உபயோகப்படுத்தப்பட்டது.

தென்மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 300 விவசாயிகளுக்குச் செம்மறி ஆடு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு, 226 விவசாயிகளுக்கு ஆட்டு அலகுகள் (1 கிடா, 4 பெட்டை ஆடுகள்) மானிய விலையில் அளிக்கப்பட்டன.

**மற்ற கால்நடைகள் பெருக்கம்:**

'லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர்' பன்றியினங்கள் சென்னை, சைதாப்பேட்டைப் பன்முக கால்நடை மருத்துவமனை வளாகத்திலும், மாவட்ட கால்நடைப் பண்ணை ஒசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இனப்பெருக்கத்திற்காகப் பராமரிக்கப்படுகின்றன. உள்ளின சேர்க்கையைத் தவிர்ப்பதற்காக வெளிமாநிலங்களிலிருந்து புதிய பன்றிகள் வாங்கப்பட்டு மேற்கண்ட இடங்களிலுள்ள பன்றிப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

குதிரையினத்தை இனப்பெருக்கம் செய்து பாதுகாக்க ஒரு குதிரை வளர்ப்புப் பிரிவு ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. தற்பொழுது 15 பெண் குதிரைகளும் 4 ஆண் குதிரைகளும் 10 குதிரை குட்டிகளும் இப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை சைதாப்பேட்டையில் 1980-81ஆம் ஆண்டு முதல் ஒரு நாய் வளர்ப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப் பிரிவில் நாட்டின நாய்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை மட்டுமே வளர்க்கப்பட்டு வந்தன. டாபர்மேன் மற்றும் லாப்ரடார் ஆகிய இனங்கள் 1997-98ஆம் ஆண்டு முதல் இப் பிரிவில் சேர்க்கப்பட்டது. இதன் குட்டிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தற்சமயம் இப்பிரிவில் 19 ஆண் நாய்களும் 22 பெண் நாய்களும் 71 குட்டிகளும் உள்ளன.

**கோழியினப் பெருக்கம்:**

புறக்கடையில் மட்டுமே வளர்க்கக்கூடியதாக இருந்த கோழி வளர்ப்பு, தற்போது சுறுசுறுப்பான வர்த்தகரீதியான தொழிலாக மாறி விட்டது. 1960ஆம் ஆண்டின் பின்பகுதியில் ஆழ்கூழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கோழி வளர்ப்பு மிகப்பெரிய முன்னேற்றம் காண வழிவகுக்கப்பட்டது. புதுவித அறிவியல் தொழில்நுட்பங்கள் புதிய இனக் கோழிகள் மற்றும் கலிபோர்னியா கூண்டுமுறை கோழிவளர்ப்பு போன்றவற்றின் வருகையினால் கோழி வளர்ப்புத் தொழிலில் புரட்சி ஏற்பட்டுள்ளது.

கிராமப்புற வீடுகளில் புறக்கடையில் வளர்க்கப்படும் 5 முதல் 10 கோழிகள் சிறிய முதலீட்டில் வளர்க்கப்படுகின்றன. இதன் காரணமாக இறைச்சி மற்றும் முட்டைகள் அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன. புறக்கடையில் வளர்க்கப்படும் கோழிகள், பூச்சி, புழு, வீணாகின்ற தானியங்கள் மற்றும் பண்ணை, சமையலறைக் கழிவுகளை உட்கொண்டு நமக்கு முட்டையாகவும் இறைச்சியாகவும் பயன் அளிக்கின்றன. இந்தக் கோழிகளை வெள்ளைக் கழிச்சல் என்ற நோய் தாக்க அதிக வாய்ப்புள்ளது. ஆகவே, இத் துறையானது கோழிகளை இந்நோயிலிருந்து பாதுகாக்கும்வண்ணம் அனைத்துக் கால்நடை நிலையங்களிலும் ஒவ்வொரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் மற்றும் கிளை நிலையங்களில் மாதத்திற்கு இருமுறையும் தடுப்பூசி பணி மேற்கொண்டு வருகின்றது. இந்நோய் தொடர்பாக, கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நோயிலிருந்து கோழிகளைக் காக்கும் பொருட்டும் இத் துறையால் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத் திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டு 23.33 இலட்சம் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டது.



மாநிலத்தில் 25 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்கள், ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் காட்டுப்பாக்கத்திலும், மற்றொன்று தருமபுரி மாவட்டத்தில் ஓசூரிலும் விவசாயிகளுக்குக் கோழிக்குஞ்சுகள் வழங்குவதற்குச் செயல்பட்டு வருகின்றன. கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை அறிந்து கொண்டு அவற்றைக் காலத்தே கட்டுப்படுத்துவதற்கு இரண்டு கோழி நோய் புலனாய்வுக் கூடங்கள், ஒன்று ஈரோட்டிலும் மற்றொன்று நாமக்கல் மாவட்டம், ஆண்டலூர்கேட்டிலும் செயலாற்றி வருகின்றன. விவசாயிகளிடையே வான்கோழி வளர்ப்பு பற்றி பிரபலப்படுத்த வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

தென்மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு உதவிடும் நோக்குடன் அவர்களுக்கு எவ்வித முதலீடுமின்றி கொல்லைப்புறங்களில் கோழிகளை வளர்க்க 2400 விவசாயிகளுக்கு மானிய விலையில் கோழிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை 143 விவசாயிகள் இத்திட்டத்தின் வாயிலாக கோழிகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

வல்லுநர் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகளை நிறுத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இதுநாள்வரை நடைபெற்று வந்த மதிய உணவு திட்டத்திற்கு வழங்கப்படும் முட்டைகள் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணி, தற்போது கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுக் கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

**சிறப்புத் திட்டங்கள்:**

கால்நடை வளர்ப்பானது, தொன்றுதொட்டே இலட்சக்கணக்கான கிராமப்புற வீடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வறுமை ஒழிப்பு திட்டங்களாக பயனாளிகள் பயன்பெறும் பல்வேறு திட்டங்களை இத் துறை செயல்படுத்தி வருகின்றது.

**(அ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

இத் திட்டத்தின் மூலம் அபிசேகப்பட்டியிலுள்ள உறைவிந்து வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன் ஒரு பயிற்சி மையமும் கட்டப்பட்டுள்ளது.

மேலும் கோயம்புத்தூர் மாவட்டம் வேட்டைக்காரன்புதூர் மற்றும் தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவும், திண்டுக்கல்லில் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டன.

2000-2001-ம் ஆண்டில் இரண்டு நடமாடும் கால்நடைப் பிரிவுகளுக்கும் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுக்கும் ஆகும் பணியாளர், பராமரிப்புச் செலவு மற்றும் 300 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க ரூ.16.53 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது. இவை தவிர, இத்திட்டப் பகுதியில் ரூ. 13.05 இலட்சம் செலவில் 132 கிடேரி கன்று அலகுகள் வழங்க இசைவளிக்கப்பட்டது. ஆக, கூடுதல் தொகையான ரூ. 29.58 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில் ரூ. 26.25 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

**(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஓர் உறைவிந்து உற்பத்தி நிலையம், ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு மற்றும் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு, கோத்தகிரி மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2000-2001ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றுள் ரூ.12.50 இலட்சம் செலவில் உதகமண்டலம் கால்நடைப் பண்ணையில் உள்ள உறைவிந்து வங்கியை வலுப்படுத்தவும், ரூ.7.50 இலட்சம் செலவில் ஏழை விவசாயிகளுக்கு தாது உப்புக்கள் அளிக்கவும், ரூ.2.50 இலட்சம் செலவில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவின் நிர்வாக செலவினங்களுக்காகவும் இத்திட்டப் பகுதியில் உள்ள கிளை நிலையங்களுக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் பராமரிப்புக்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

**(இ) சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்:**

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தினரின் பொருளாதார மேன்மையில் அரசு மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, 1983ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம் என்ற திட்டத்தினை அவர்களின் நலனுக்காகவே முன்னுரிமை தந்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர, பிற மாவட்டங்களில் * செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்,



பயனாளிகளுக்கு அலகு விலையில் 50% மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2700 செம்மறியாட்டின அலகும் 837 வெள்ளாட்டின அலகும் ரூ.4 கோடி செலவில் ஏற்படுத்தப்படவுள்ளது. இவற்றுள் 1336 செம்மறியாட்டின அலகும் 417 வெள்ளாட்டின அலகும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

**(ஈ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தில் பழங்குடிப் பகுதிகளில் தோற்றுவிக்கப்பட்ட நிலையங்களின் மூலமாக மருத்துவ நலப் பணிகள் அப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், கறவை மாடுகள், செம்மறியாடுகள் மற்றும் தீவன வளர்ப்புக்கு உள்ளீடுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

**(உ) கால்நடை பாதுகாப்புத் திட்டம்:**

இத்திட்டம் கால்நடை மருத்துவ வசதிகளைப் பெற, பற்றாக்குறையாக உள்ள குக்கிராமங்களுக்கும் கால்நடை மருத்துவ வசதி அளிக்கும் நோக்குடன் செயல்படுகிறது. இங்கு நடைபெறும் முகாம்களில் உடல் நலம் பேணுதல், நோய் தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் மலட்டுத் தன்மை நீக்கம் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. 2000-2001ஆம் ஆண்டில் 4,620 முகாம்கள் நடத்தப்பட்டு 96.64 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

நடப்பாண்டில் 5,094 முகாம்கள், 5,094 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ரூ.270 இலட்சம் செலவில் நடத்தப்பட உள்ளன.

**(ஊ) மாதிரி வரைவுத் திட்டம்:**

1977-1978ஆம் ஆண்டு முதல் கால்நடை பொருள்களான பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவைகளைப் பற்றி நம்பத் தகுந்த மற்றும் குறிப்பிட்ட கால அளவில் பெறப்படும் புள்ளிவிவரங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்து பருவவாரியாக, வருடந்தோறும் தொடர்ந்து நிரந்தரமாக, கணக்கெடுப்பு மூலம் அறியப்படுகின்றன.

இவ்வாறு களத்திலிருந்து பெறப்படும் புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமாக, பால் மற்றும் கால்நடை பொருட்கள் பற்றி மதிப்பீடு செய்யப்படுகின்றன. இது இத்துறையினால்

[ 2001 செப்டம்பர் 6

தொடங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கால்நடை வளர்ச்சி செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், அதன் தாக்கத்தை அறியவும் உதவுகின்றன. மேலும், இந்த ஆய்வு, அடிப்படை புள்ளிவிவரங்களை வழங்குவதால், இது பிற்கால திட்டங்களைத் திட்டமிட மிகவும் உதவுகின்றது.

2000-2001ஆம் ஆண்டின் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடுகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | பால் (000 மெட்ரிக் டன்) | - | 4,899 |
| 2. | முட்டை (மில்லியன்) எண்ணிக்கை | - | 3,929 |
| 3. | இறைச்சி (மில்லியன் கிலோ) (பதிவு செய்யப்பட்ட இறைச்சிக்கூடங்கள் மட்டும்) | - | 39 |

கால்நடை கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இரு கால்நடைக் கணக்கெடுப்புக்குட்பட்ட காலங்களில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம் 1981ஆம் ஆண்டு முதல் இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவுச் சங்கங்கள்:**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964ஆம் ஆண்டு முதல் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சங்கங்களுக்கு செயல்முறை பதிவாளராக கால்நடை மருத்துவப்பணிகள் இயக்குநர் செயல்படுகிறார். நலிவுற்ற பகுதியினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இத்துறையில் மொத்தம் 951 சங்கங்கள் உள்ளன. அதில் 258 சங்கங்கள் தீவிரமாக செயல்படுகின்றன. மற்றவை செயலற்று உள்ளன. இச்சங்கங்களும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

**பன்னாட்டு நிதியுதவியுடன் கூடிய திட்டம்:**

**டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம், 1-8-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில், அன்னவாசல், குன்றாண்டார் கோயில் மற்றும் விராலிமலை ஊராட்சி



2001 செப்டம்பர் 6 ]

ஒன்றியப் பகுதிகளில் ரூ.42 கோடி ஒதுக்கீட்டில் முதல் கட்டமாக 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டது. மேம்படுத்தப்பட்ட கால்நடை வளர்ப்பு முறைகளைக் கடைபிடித்தல் மற்றும் அவற்றை செயல்படுத்துவதனால் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன் வாரியாக இளந்தம்பதியினர் தேர்வு செய்யப்பட்டு பலவகைப்பட்ட கால்நடை பராமரிப்பு, தீவன அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விரிவாக்க தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவர்கள் தொடர்பு பணியாளர் ஆவார்கள். இலக்கு விவசாயிகள், விவசாய சங்கங்கள் மூலமாகவும், அரசுசாரா சங்கங்கள் மூலமாகவும், மாதர் சங்கங்கள் மூலமாகவும், கால்நடை நிலையங்கள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். பயிற்சி பெற்ற தொடர்பு பணியாளர் தம்பதியினர், இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவிக்கிறார்கள்.

இத்திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதால், இரண்டாவது கட்ட திட்டமானது 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி 1997ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 தென் மாவட்டங்களில் ஏழு ஆண்டு கால அளவில் ரூ.27.50 கோடி செலவில் மொத்தம் 2000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 20 இலட்சம் வேளாண்குடி மக்களை ஈடுபடுத்திப் பயன்பெறும் பொருட்டு விரிவுபடுத்தி நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தின் பயனாக நிறைவேறியவை:

* செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினை பராமரிப்போரில் 90%, கோழி வளர்ப்போரில் 70% இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர்.
* காலத்தே கோழிக் கழிச்சல் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் கோழிகளின் இறப்பு சதவீதம் வெகுவாக குறைந்துள்ளது.
* குஞ்சு பொரிப்பதற்கு வைக்கப்படும் முட்டைகளில் கரு அறியும் முறை பின்பற்றுவதால் கருத்தரிக்காமல் இருக்கும் முட்டைகள் வெகு விரைவில் கண்டறியப்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு இழப்பு குறைக்கப்படுகின்றது.

[ 2001 செப்டம்பர் 6

* அதிக அளவில் முட்டைகள் உட்கொள்வதன் மூலம் ஊட்டமான உணவு வறியோருக்கும் கிடைக்கிறது.
* குறைந்த செலவுடைய காலநடைப் பராமரிப்பு யுக்திகளை கையாண்டதினால் வளர்ச்சி விகிதம் உயர்ந்ததுடன், தொடர்ந்து செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் இனப்பெருக்கம் செய்ய வழிவகுத்தது.

இதுவரையில் 519 தொடர்பு பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, பின்பு, இத்தொடர்பு பணியாளர்கள் 12331 குறியீட்டு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில்கொண்டு அடுத்த ஐந்தாண்டுகளில் நமது மாநிலம் முழுவதும் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மொத்தம் ரூ.3.36 கோடி செலவில் இதனை விரிவுபடுத்த இவ்வரசு கருதியுள்ளது.

**வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்:**

இத்துறை உலக வங்கி நிதியுதவியுடன் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.445.84 இலட்சம் மதிப்பில் 1995-1996ஆம் ஆண்டு முதல் ஆறு ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக மேம்படுத்தப்பட்ட பயிற்சிக்கு வெளிநாடுகளுக்கு 20 அலுவலர்களும் உள்நாட்டில் 705 அலுவலர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## பகுதி - 3

## கால்நடை மருத்துவ நலப்பணிகள்

கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலத்தில் கால்நடைகளுக்கு உடல் நலம் பேணும் பணியில் முக்கிய அங்கம் வகிக்கிறது. இத்துறையின் தொழில் நுட்ப அறிஞர்கள், மாநிலம் முழுமையும் பரவியுள்ள கால்நடை நிலையங்கள் மூலமாக இப்பணியினை வழங்குகிறார்கள். உடல் நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய் தடுப்பு, நோய் அறவே ஒழித்தல், இனப்பெருக்கப் பணிக்கு உதவிடல், வேளாண்குடி மக்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



2001 செப்டம்பர் 6 ]

**1. உடல் நலம் பேணுதல்:**

**(அ) கால்நடை மருத்துவ நிலையங்கள்:**

கால்நடைகளுக்கு உடல் நலப் பாதுகாப்புப் பணியானது, களப்பணி கால்நடை நிலையங்களான பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்சமயம் 1006 கால்நடை நிலையங்கள் பின்வருமாறு உள்ளன:

| | | | |
|---|---|---|---|
| 1. | பன்முக மருத்துவமனை | .. | 3 |
| 2. | பிரதம மருத்துவமனை | .. | 25 |
| 3. | கால்நடை மருத்துவமனைகள் | .. | 139 |
| 4. | கால்நடை மருந்தகங்கள் | .. | 839 |
| | மொத்தம் | .. | **1006** |

2000-2001ஆம் ஆண்டில் 154.04 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை பணியும், 7.02 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 243.37 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்குத் தடுப்பூசி பணியும், 145.79 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கப் பணியும், 32.35 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

**(ஆ) நடமாடும் மருத்துவப் பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள்:**

மாநிலமெங்கிலும், குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண்குடி மக்கள் கால்நடைகளைச் சிகிச்சைக்காகவும், இனவிருத்திக்காகவும் அழைத்துச் செல்ல முடியாமல் போவதைத் தடுக்கும் நோக்குடன், நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள் அமைப்பட்டுள்ளன.

மாநிலமெங்கிலும் 54 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கால்நடை உதவி மருத்துவர்கள் பொறுப்பிலும், தேவையான பணியாளர்களுடனும் ஊர்தியுடனும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாதிரியான சிகிச்சை வசதிகள் மக்கள் இருப்பிடத்திலேயே கிடைப்பதால் பொதுமக்களிடையே அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளன.

[ 2001 செப்டம்பர் 6

382 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அந்தந்த கால்நடை விரிவாக்க அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. அவர்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(இ) கிளை நிலையங்கள்:**

2,126 கிளை நிலையங்கள், மாநிலத்தில் கால்நடை ஆய்வாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்நிலையங்களில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவி, பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல், சினைப் பரிசோதனை மற்றும் கிளை நிலைய எல்லையில் உள்ள கால்நடை மற்றும் கோழிகளின் வருடாந்திர கணக்கெடுப்புப் பணி நடைபெறுகின்றது. கால்நடை உதவி மருத்துவரின் தொழில்நுட்ப ஆலோசனைப்படி தடுப்பூசி பணிக்கும், குடற்புழு நீக்கப் பணிக்கும் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். 2,126 பார்வைக் கிளை நிலையங்கள், கிளை நிலயைத்திற்கு ஒன்று வீதம் 1997-98ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

**2. நோய் தடுப்பு, ஆய்வு, கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்:**

முன்கூட்டியே, தடுப்பூசிகள் போடுவது மற்றும் குறிப்பிட்ட நோய் கண்டறிவதன் மூலமாக பல்வேறு நோய்களிலிருந்து கால்நடைகளைக் காத்திட இயலும். மேலும், முறையான நோய்க் கட்டுப்பாடுகளின் மூலம் நோய்கள் உண்டாவது குறைக்கப்பட்டு, பின் நோய் முற்றிலுமாக ஒழிக்கப்படும் நிலை உண்டாக வழிவகுக்கிறது.

**(அ) நோய் தடுப்பு:**

கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில் உள்ள இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 8 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருத்துகளும் 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

**(ஆ) நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் கண்டறிவது:**

பலவகையான நோய் நிகழ்வதன் மற்றும் நோயின் தன்மைகளை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், அதனை காலத்தே கட்டுப்படுத்த



2001 செப்டம்பர் 6 ]

முடியும். இதன் பொருட்டு 15 கால்நடை நோய் புலனாய்வுப், பிரிவுகள் மாநிலத்தில் செயல்படுகின்றன. ஏற்கெனவே நிகழந்த நோய் கிளர்ச்சிகள் மற்றும் புள்ளிவிவரங்களைக் கொண்டு நோய் ஏற்படக்கூடிய இடங்கள் வரையறுக்கப்படுகின்றன. இவை களப்பணி அலுவலர்களுக்கு நோய் பற்றி முன்கூட்டியே அறிவிக்கவும், தகுந்த முறையில் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உதவுகின்றன.

தலைமையகத்தில் கால்நடை நோய் கடுங்கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கால்நடை மற்றும் கோழியின நோய்கள் மற்றும் நோய் கிளர்ச்சி குறித்து பல வகையான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கால்நடை நோய் பற்றிய தகவல் அறியும் முறை, மத்திய அரசின் தேசிய தகவல் அறியும் துறை மூலமாக ஏற்படுத்தப்பட்டு, இதன்மூலம் நோயின் தாக்குதல் உடனுக்குடன் அறியப்பட்டு அந்தப் பகுதியில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினைக் கட்டுப்படுத்தி அவற்றினை அறவே ஒழிக்க உதவியாக இருக்கின்றது. இதில் கிடைக்கும் தகவல்கள் அருகாமையில் உள்ள மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

**(இ) நோய் ஆய்வு:**

விவசாயிகள் நலன் கருதி இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர் கேட்டிலும், மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவை மூலமாக நோய் விரைவில் ஆய்வு செய்யப்படுவது மட்டுமின்றி, தீவன ஆய்வு, நீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, காலத்தே விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

நான்கு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் நோய் புலனாய்வுப் பிரிவுடன் சார்ந்து மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. நடமாடும் ஆய்வகங்கள் அனைத்திலும் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் நோய் ஆய்வு பணி மேற்கொள்ளும் வசதிகள் உள்ளன. அவை நோய் பாதிப்புள்ள இடங்களுக்குச் சென்று உடனுக்குடன் அந்த இடங்களிலே நோயைக் கண்டறிந்து தீவிர நோய் ஆய்வுப்பணிக்குத் தேவையான மாதிரிப் பொருட்களைச் சேகரிக்கின்றன.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைப்பு செய்து உதவிடவும், பணித்தளப் பணியாளர்களின்

ஆய்வு தொடர்பான பணிகளில் உதவிடவும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை, சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் பலவகையான நுண்ணுயிரியல் சோதனை, நீர் பரிசோதனை மற்றும் தசைநோய் குறியியல் பணியினை மேற்கொண்டு, நோயின் தன்மையை உறுதிப் படுத்துகின்றது. தென் மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின்கீழ், *2000-2001* ஆம் ஆண்டில் நீலநாக்கு நோய் ஆய்வுப் பிரிவு இந்த ஆய்வுக்கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**(ஈ) நோய் கட்டுப்படுத்துதல் :**

இந்தியாவில் உள்ள கால்நடை மற்றும் கால்நடை பொருட்கள், உலக சந்தையில் எளிதாக நுழைய வேண்டுமாயின் **Office International** Epizootics என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக்கட்டுப்பாட்டினை எட்ட வேண்டும். அதாவது கோமாரி, வெக்கைநோய் மற்றும் மாட்டினத்தைத், தாக்கக்கூடிய ப்லூரோத், நிம்மோனியா நோய்களிலிருந்து இப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டவை என சான்று அளிப்பதே இதன் பொருளாகும்.

**வெறிநாய்க்கடி நோய் தடுப்புத் திட்டம்:**

விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களுள் வெறிநாய்க்கடி ஒரு அபாயகரமான நோயாகும். மனிதர்களுக்கு இந்நோய் வெறிகண்ட நாய்களின் மூலமாக பரவுகின்றது. ஆகையால் இந்நோய் நாய்களுக்கும், நாய்களிலிருந்து ம்னிதனுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் பரவுவதைத் தடுக்க வெறிநாய்க்கடி நோய் தடுப்புப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**இத்திட்டப் பிரிவுகளின் முக்கிய நோக்கங்கள்:**

(1) முறையான மற்றும் காலமுறைப்படி நோய்த் தடுப்பினைச் கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(2) நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.



(3) பொதுமக்களிடேயே இந்நோய் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலமாக தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல்.

இத்திட்டம் மக்களிடையே வெகுவாக வரவேற்கப்பட்டு, மனிதர்களைத் தாக்கக்கூடிய வெறிநாய்க் கடி நோய் கணிசமான அளவில் குறைந்துள்ளது.

**கோமாரி நோய் :**

கோமாரி நோய் வைரஸ் கிருமிகளினால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும். அது மாட்டினங்கள், எருமையினங்கள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்குகின்றன. அதிக நோய் பாதிப்புத் தன்மையால் பால் உற்பத்தி குறைப்பு, மலட்டுத் தன்மை மற்றும் இளங்கன்றுகள் இறப்பு போன்றவற்றை ஏற்படுத்துகிறது. நோய் பாதிக்கப்பட்ட பயனற்ற கால்நடைகள், விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றன. அதிக மதிப்புள்ள உயர்வான உற்பத்தித் திறன் மரபணுக்கள் கொண்ட கால்நடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இத்துறை மூலம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி பணி இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது. *2000-2001* ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.26.00 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 2.23 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**நோயிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டலம் :**

மூன்று மாவட்டங்களைக் கொண்ட தென் பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கால்நடை மற்றும் கால்நடை பொருட்கள் ஏற்றுமதியை வலுப்படுத்தவும், அதிகரிக்கவும் நோயிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டலம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி திட்டப் பகுதிகளிலும் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதிகளிலும் முறையான பெருமளவிலான தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தை ஒட்டிய எல்லையோர பகுதிகளில் சோதனைச் சாவடிகள்

அமைக்கப்பட்டு திட்டப் பகுதிக்கு உள்ளே வரும் கால்நடைகளைக் கண்காணித்து தடுப்பூசி போடப்படுகின்றது. இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 29-10-1984 முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 2000-2001ஆம் ஆண்டில் கோமாரி நோயினைத் தடுக்கும் பொருட்டு 93,337 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**நோய் ஒழிப்பு:**

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1995-96 வரை 100 விழுக்காடு தடுப்பூசிப் பணி தமிழ்நாட்டில் உள்ள 14 எல்லையோர மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மற்ற மாவட்டங்களில் 100 விழுக்காடு மற்றும் எல்லையோர மாவட்டங்களில் தடுப்பூசிகள் போடப்பட்டன. தடுப்பூசிப் பணியானது 31-12-1997-ல் முடிக்கப்பட்டது. இத்துறையின் கடும் முயற்சியின் பயனாக செப்டம்பர் 1995 முதல் இம்மாநிலத்தில் வெக்கைநோய் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. இச்சீரிய முயற்சியின் பயனாக மார்ச் 1998-க்குப் பிறகு, தமிழ்நாடு, இந்நோயில்லா மாநிலமாக அறிவிக்க வழிவகுத்துள்ளது.

தற்சமயம் மாநிலத்தில் 14 வெக்கைநோய் குழுக்கள், 8 வெக்கைநோய் கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 6 வெக்கைநோய் சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன.

கால்நடைகளின் நடமாட்டங்களினால் வெக்கைநோய் ஏதேனும் மறைந்துள்ளனவா என்பதனைக் கண்டறிய, இத்துறை மூலம் 1998-99ஆம் ஆண்டு முதல் கிராமங்களில், வழித்தடங்களில் மற்றும் கால்நடை நிலையங்களில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனோடு கடுங்கண்காணிப்பின் கீழ், ஊநீரில் வெக்கைநோய் எதிர்ப்பு திறன் உள்ளனவா என்பதைக் கண்டறிய ஏதேச்சையான முறையில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள கால்நடைகளில் சோதனை செய்யப்படுகின்றன. இப்பணி 2002 ஆம் ஆண்டு வரை நடைபெறும்.



## பகுதி - 4

## விரிவாக்கப் பணி மற்றும் கால்நடை பொது சுகாதாரம்

"காண்போம் கற்போம்" என்ற கொள்கையின்படி இத்துறையானது நடைபெறும் உள்ளூர் விழாக்களிலும், பொருட்காட்சியிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில் நுட்பங்களையும், கால்நடை பொது சுகாதாரம் குறித்த நுட்பங்களையும், பொது மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் சென்னை அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி மற்றும் கூட்டுறவு வார விழாவில் இத்துறை கலந்துகொள்கிறது. பலவகையான தகவல் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ் மூலமாகவும் பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை விவரங்கள் சென்றடைகின்றன.

இத்துறைக்குத் தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்க அச்சடிப்பு பணிகளுக்கு சைதாப்பேட்டையில் (சென்னை) பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது. மக்கள் தொடர்பு சாதனங்களான அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியை இத்துறை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு வருகின்றது. கால்நடைப் பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பை வாரந்தோறும் அகில இந்திய வானொலி நிலையம் மூலமாக மேற்கொள்கிறது. 2000-2001-ஆம் ஆண்டில் 37 கால்நடை பராமரிப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

**கால்நடைகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல்:**

கால்நடைகளை முறையற்ற மற்றும் கொடூரமான முறையில் அண்டை மாநிலங்களுக்கு ஏற்றி செல்லுதலைத் தடுக்க கோரிய பல்வேறு அமைப்புகளின் வேண்டுகோளை ஏற்று இவ்வரசு கால்நடைகளைக் கொடூரமான முறையில் ஏற்றிச்செல்வது மற்றும் அதனால் ஏற்படும் அநீதிகளைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. போக்குவரத்தில் ஏற்படும் முறையற்ற செயல்களைத் தடுக்க இவ்வரசு மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இறைச்சிக்கூடங்களை நவீனமயமாக்க மற்றும் கால்நடைகளைச் சிரமமின்றி உயிர்போக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பகுதி 2 திட்டத்தின்கீழ் 2001-2002-ம் ஆண்டிற்காக ரூ.206.85 இலட்ச மதிப்பீட்டில் கீழே குறிப்பிட்டுள்ள 7 புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் (1) | திட்டத்தின் விவரங்கள் (2) | தொடர் செலவினம் (3) | தொடரா செலவினம் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 1. | 10 கால்நடை மருந்தகங்களை. தோற்றுவித்தல் | 15.00 | 8.00 | 23.00 |
| 2. | புறக்கடையில் வளர்ப்பதற்கு கோழிகளை வழங்குதல் | - | 34.65 | 34.65 |
| 3. | கலப்பின கிடேரி கன்றுகள்/தரம் உயர்த்தப்பட்ட கிடேரி எருமைகள் வழங்குதல் | - | 28.00 | 28.00 |
| 4. | கலப்பின் செம்மறியாடு அலகுகள் வழங்குதல் | - | 45.00 | 45.00 |
| 5. | அபிசேகப்பட்டி உறைவிந்து உற்பத்தி நிலையத்திலுள்ள முர்ரா இன பொலிகாளை இருப்பை வலுப்படுத்துதல் | - | 6.00 | 6.00 |
| 6. | அபிசேகப்பட்டி மற்றும் கொருக்கை கால்நடை பண்ணையில் உள்ள குட்டைகளை ஆழப்படுத்தி தூர்வாருதல் | - | 3.00 | 3.00 |
| 7. | திட்டப் பகுதி அல்லாத ஏனைய பகுதிகளில் "டானிடா" திட்டத்தைச் செயல்படுத்துதல் | 67.20 | - | 67.20 |
| | மொத்தம் .. | 82.20 | 124.65 | 206.85 |





## தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி 31-3-1999-ல் ரூ.451.95 இலட்சம் நட்டம் அடைந்ததால் திரு. எஸ்.வி.எஸ். இராகவன் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி மேற்படி கழகத்தை மூடுவதற்கு அரசு ஆணையிட்டது. 19-4-1999 நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அரசாணை எண் 86-ன்படி மேற்படி கழகம் 29-12-2000 முதல் மூடப்பட்டது. மேலும், சத்துணவு திட்டத்திற்கு முட்டை வழங்கும் கோழி வளர்ச்சிக் கழகத்தின் பணியை, அதில் பணிபுரிந்த பணியாளர்களைக் கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றி, அப்பணியைத் தொடரவும், மேற்படி ஆணையில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரிந்த 139 பணியாளர்கள் அதிலிருந்து 12-6-2000 அன்று விடுவிக்கப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறையில் சேர்ந்தனர். மீதமிருந்த 127 பணியாளர்கள் விருப்ப ஓய்வு, பணியாளர் குறைப்பு, பணியறவு மூலமாக வெளியேற்றப்பட்டனர். 2-8-2001 நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அரசாணை எண் 103-ல் இந்தப் பணியாளர்களுக்கு இழப்பீடு மற்றும் இதர பயன்களை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

### பொது

நம்நாட்டில் கால்நடை வளம் திறம்பட இருந்தும், 40 விழுக்காடு மக்கள் வறுமைக்கோட்டின்கீழ் உள்ளனர். தேசிய குடும்ப நல கணக்கெடுப்பின்படி, ஏறக்குறைய 47 விழுக்காடு குழந்தைகள் (4 வயதுக்கு உட்பட்டவர்கள்) இவர்களது வயதுக்கு உரிய எடையை விட எடை குறைவாகவும் மற்றும் 13 விழுக்காடு குழந்தைகள் அதிக எடை குறைவுடனும் உள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது. இத்தகைய குறைபாட்டிற்கு முக்கிய காரணம் போதிய உணவு கிடைக்காமை அல்லது உணவில் புரதம் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகும். இப்பல்கலைக்கழகம் கல்வி மற்றும் ஆராய்ச்சி மூலம் கால்நடை, கோழி, மற்றும் மீன் வளத்தைப் பெருக்கி மேலே குறிப்பிடுள்ள குறைபாட்டைக் களையும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகள் இவ்வகை கால்நடைகள் உற்பத்தி, மேலாண்மை மற்றும் ஊட்டசத்தியல் துறைகளில் பலப்படுத்தப்பட்டு, நவீன காலத் தேவைக்கேற்ப உற்பத்தி பெருக்கப்பட

உள்ளது. இத்தகைய கால்நடைகள் மேலாண்மைக்கு, தரம் வாய்ந்த கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டங்கள் வருங்கால கால்நடை வள மேம்பாட்டிற்கேற்ப, முறைப்படுத்தப்பட்டு அதன்மூலம் தரமான கால்நடை மற்றும் மீனவள பட்டதாரிகளை உருவாக்குதலே ஆகும். இவ்வகையில் உருவாக்கப்பட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள், இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி முகமைகள், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன்வளத் துறை மூலமாக பண்ணையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் சில முக்கிய சாதனைகள் கீழ்வருமாறு:

* கால்நடை அறிவியல், மீன்வள அறிவியல் மற்றும் அடிப்படை அறிவியல் புலங்களில் பாடங்கள் கற்பித்தல்
* கால்நடை மற்றும் மீன்வள அறிவியலில் ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்களை மேம்படுத்துதல்
* கிராமப்புற மக்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இதர முகமைகள் மூலம் கால்நடை மற்றும்மீன வள விரிவாக்கக் கல்வியினைப் பரப்புதல்.

இப்பல்கலைக்கழகத்தில் மூன்று கல்லூரிகள் உள்ளன. அவை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் மற்றும் மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி ஆகும். இக்கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகள் மற்றும் முதுகலை கால்நடை தொழில் மேலாண்மை பட்டய படிப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், ஐந்து ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவை கோழியின ஆராய்ச்சி நிலையம், நந்தனம், சென்னை; கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்; செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாண்டிநல்லா, நீலகிரி மாவட்டம்; மேச்சேரி செம்மறி ஆடு ஆராய்ச்சி நிலையம், மேச்சேரி, சேலம் மாவட்டம்; மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை, மாதவரம், திருவள்ளூர் மாவட்டம். இதைத் தவிர 16 பல்கலைக்கழக கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், 2 வேளாண் கல்வி மையங்கள், 3 விவசாய பயிற்சி மையங்கள், 5 மீன் வள ஆராய்ச்சி நிலையங்கள், ஒரு கால்நடைத் தீவன பகுப்பாய்வு மற்றும் தரக்கட்டுபாட்டு ஆய்வுக்கூடம், ஒரு கால்நடை நலக்





கண்காணிப்புப் பிரிவு, ஒரு கோழியின நோயாய்வுக் கூடம், ஒரு கால்நடை ஊட்டச்சத்தியல் நிலையம் மற்றும் ஒரு உணவு மற்றும் பால்வள தொழில் நுட்ப நிலையம் ஆகியவற்றை இப்பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த மையங்கள் பண்ணையாளர்களின் தேவைக்கேற்ப பயிற்சி வகுப்புகள் மற்றும் கால்நடை மீன்வள மேம்பாடுகளில் ஆலோசனைகளை வழங்கி வருகின்றன.

**மனித வள ஆற்றல் மேம்பாடு**

உலக வங்கி நிதியுதவியுடன் 1995 ஆம் ஆண்டு முதல் வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டம் ரூ.41.10 கோடி ரூபாய் அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நடைபெற்ற சில முக்கிய சாதனைகள் வருமாறு:

**உள் கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்: கட்டடங்கள் கட்டுதல்**

(ரூபாய் இலட்சத்தில்)

அ. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை

* மாணவர்கள் தின மையம் 479.13
* தகவல் தொழில் நுட்ப மையம் 191.43
* மாணவர்கள் விடுதி 409.69
* உள்விளையாட்டு அரங்கம் 29.84
* வெளி மாநில ஆசிரியர்கள் விடுதி 49.73

ஆ. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்

* அலுவலர் குடியிருப்பு 116.53
* மாணவர்கள் விடுதி 51.84
* உள்விளையாட்டு அரங்கம் 30.47

| | | |
|---|---|---|
| இ. | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | |
| | * கரையோர ஆய்வகத்தில் வகுப்பறைகள், உணவு விடுதி மற்றும் நூலகம் | 78.02 |
| ஈ. | பல்கலைக்கழக தலைமையகம், மாதவரம் | |
| | * பதிப்பக வளாகம் | 57.35 |
| உ. | கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம் | |
| | * மாணவர் விடுதி | 25.46 |
| ஊ. | செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாண்டிநல்லா, நீலகிரி | |
| | * ஆசிரியர்களுக்கான விருந்தினர் இல்லம் | 53.33 |
| | மொத்தம் .. | **1572.82** |

| | |
|---|---|
| கணினி மற்றும் இணைய தளம் மூலம் பல்கலைக்கழக தலைமையகத்துடன் மூன்று கல்லூரிகளையும் இணைத்து இணைய தள வசதியைப் பெறச் செய்ததுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் வகுப்பறைகள் மற்றும் கருத்தரங்கு அறைகளை நவீனப்படுத்தியதன் செலவு. | 424.01 |
| மூன்று கல்லூரிகளில் உள்ள நூலகங்களையும் நவீனப்படுத்துதல் | 500.11 |
| மாணவர் விடுதிகள் மேம்பாடு | 78.51 |
| அலுவலக உபகரணங்கள் | 226.00 |
| ஆய்வக உபகரணங்கள் | 477.91 |



**ஆசிரியர்கள் திறன் முன்னேற்ற திட்டம்:**

| | |
|---|---|
| இத்திட்டத்தின் கீழ், 14 பல்கலைக்கழக அதிகாரிகள் 86 ஆசிரியர்கள் ஒரு மாதம் முதல் 12 மாதங்கள் வரை வெளிநாடுகளில் பயிற்சி, 154 ஆசிரியர்களுக்கு கல்வி நிர்வாகம் மற்றும் மேலாண்மையில் தேசிய அளவில் பயிற்சி, அனைத்து பணியாளர்களுக்கும் கணினி உபயோகப் பயிற்சி, 30 விழுக்காடு பணியாளர்களுக்கு இணைய தள உபயோகப் பயிற்சி, மேலும் வெளிநாடுகளிலிருந்து 12 கால்நடை மற்றும் மீன் வள வல்லுநர்கள் வருகை தந்து ஆலோசனை சேவை | 701.31 |
| ஒட்டுமொத்த தொகை | ரூபாய் 3980.67 இலட்சம் |

**கல்வி**

**இப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சேர்க்கை விவரம் பின்வருமாறு:—**

| பாடப்பிரிவு | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம். |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்.சி. | 135 | 73 | .. | 208 |
| பி.எப்.எஸ்.சி. | .. | .. | 21 | 21 |
| எம்.வி.எஸ்.சி. | 33 | 9 | .. | 42 |
| எம்.எப். எஸ்.சி. | .. | .. | 13 | 13 |
| பி.எச்.டி (கால்நடை மருத்துவம்) | 6 | .. | .. | 6 |
| பி.எச்.டி. (மீன்வளம்) | .. | .. | 1 | 1 |
| மொத்தம் .. | **174** | **82** | **35** | **291** |

**ஆராய்ச்சி:**

* இப்பல்கலைக்கழகத்தில் தற்போது தமிழக அரசின் நிதியுதவியுடன் ரூ.240.38 இலட்சங்களில் 52 ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 72 ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.1687.56 இலட்ச மதிப்பீட்டில் புரவலர் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன.
* கோழிகளைத் தாக்கும் லீச்சி என்ற நோய்க்கு எதிரான தடுப்பூசி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
* ஆட்டுக்கொள்ளை நோய், கோழிகளைத் தாக்கும் மேல்குத நோய் மற்றும் வெறி நோய்க்கான கள ஆய்வுப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
* ஆடுகளைத் தாக்கும் நீல நாக்கு நோயைக் கண்டறிய உதவும் கள ஆய்வுப் பெட்டி உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
* தமிழக அரசு நிதியுதவியுடன் நாட்டின வெள்ளாடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த அவற்றை போயர் இன கிடாவுடன் கலப்பினப் பெருக்கம் செய்யும் ஆராய்ச்சி, கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கத்தில் செயல்பட்டு வருகிறது.
* இந்தியாவிலேயே முதன்முறையாக நெருப்புக் கோழியைப் பற்றிய ஆராய்ச்சி தமிழக அரசின் நிதியுதவியுடன் ரூ.25 இலட்சங்களில் கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கத்தில் நடைபெறுகிறது. இவ்வாராய்ச்சியின் வாயிலாக நெருப்புக் கோழிகள் தமிழக சீதோஷ்ண நிலைக்கு எவ்வாறு ஒத்து வருகின்றன என்பதனை அறியவும் அவற்றை தொழில் முனைவோரிடத்தில் பிரபலப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
* புரவலர் நிதியுதவி ஆராய்ச்சித் திட்டத்தில், குறிப்பாக, மரபு மாற்று முறையில், முயல் மாதிரி மற்றும் வெள்ளாடுகள் உற்பத்தி செய்தல் மற்றும் வெறிநோய்க்கான ஒருங்கிணைந்த தடுப்பூசியை தொழில் துறையுடன் இணைந்து தயாரித்தல், ஆட்டுக்கொள்ளை நோய்க்கான ஒருமைப்படுத்திய தடுப்பூசி மற்றும் ஆய்வுப் பெட்டி உருவாக்குதல், கால்நடை மற்றும் கோழிகளைத் தாக்கும் இதர நோய்களைக் கண்டறிய ஆய்வுப் பெட்டிகள் உருவாக்குதல்.



* ஆளுநரின் பேருரைக்கேற்ப, தமிழக கிராமப்புறங்களில் உள்ள கறவை மாடுகளின் இனப்பெருக்கத் திறனை மேம்படுத்த உயர் ரக இனப்பெருக்கத் தொழில் நுட்பங்களைப் புகுத்துதல், கிராமப்புற விவசாயிகள், வீரிய இன ஆடுகள் வளர்ப்பதின் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்யும் திட்டம் மற்றும் புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்தல் போன்ற திட்டங்கள் பல்கலைக்கழக வல்லுநர்களால் தீட்டப்பட்டு வருகின்றன.

**விரிவாக்கக் கல்வித் திட்டங்கள்:**

* "கறவை மாடு வளர்ப்பு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு" பற்றி சுயநிதியில் நடத்தப்படும் அஞ்சல்வழித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
* கால்நடை மற்றும் மீன்வள பட்டதாரிகள் இத்துறையின் பல்வேறு தொழில் வாய்ப்புகளை அறியவும், கால்நடை பராமரிப்பில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், தொழிற்சாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் இடையே இணைப்பை உருவாக்கவும் புதிதாக தொழில் முனைவோர் முன்னேற்ற மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
* கரூர், திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் (நெய்வேலியில்) மாவட்டங்களில் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் புதிதாக ஒரு ஆராய்ச்சி மையம் செய்யாறில் (திருவண்ணாமலை மாவட்டத்தில்) தொடங்க இப்பல்கலைக்கழகம் ஆலோசித்து வருகிறது.

**திட்டம்:**

இப்பல்கலைக்கழகம், உயர்கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில் நுணக்கங்களைப் பரப்புவதற்காக, உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காகத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. எட்டாவது திட்டக் காலத்தில், ஒதுக்கப்பட்ட ரூபாய் 2945 இலட்சங்களுக்கும் மேலாக ரூபாய் 4657 இலட்சங்கள் வரை செலவு செய்து தனது செயல் திறனை உயர்த்தியுள்ளது. இவ்வுயர்நிலை செயல்திறனைக் கருத்திற்கொண்டு இதன் ஒன்பதாவது திட்டத்திற்கான

[ 2001 செப்டம்பர் 6

நிதியாக ரூ.8168.89 இலட்சங்கள் வழங்கப்பட்டன. 2000-01 வரை ரூ.6512.47 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.1652.42 இலட்சங்கள் 2001-02ல் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நிதிநிலைச் செயல்பாடு (ரூபாய் இலட்சத்தில்)**

பகுதி-2 திட்டங்களின்கீழ், 2001-02 ஆம் ஆண்டிற்காக ரூ.38.67 இலட்ச மதிப்பீட்டில் கீழே குறிப்பிட்டுள்ள 6 புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2001-02ஆம் ஆண்டிற்கான செலவு | | | |
|---|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | குறைந்த செலவு தொழில்நுட்பம் மூலம் ஆடுகளில் ஒட்டுண்ணியைக் கட்டுப்படுத்துதல்—கா.ம.க.ம.ஆநி., நாமக்கல் | 4.25 | - | - | 4.25 |
| 2. | தமிழ்நாட்டில் கால்நடை பொருட்கள் அங்காடி அமைப்பு, நடைமுறை மற்றும் திறன் பற்றிய ஆய்வு—செ.கா.ம.க., சென்னை | 3.00 | - | - | 3.00 |
| 3. | மாதிரி நார்த்தீவனப் பண்ணை நிறுவுதல்—கா.ம.க.ம.ஆநி., நாமக்கல் | 3.15 | - | - | 3.15 |
| 4. | எருமை மாட்டுப்பண்ணை ஏற்படுத்துதல்-கா.ம.க.ம.ஆநி., நாமக்கல் | 3.00 | - | - | 3.00 |
| 5. | உடனடியாக உண்ணக் கூடிய மீன்பொருட்களைத் தயாரிக்கும் கூடத்தை நிர்மாணித்தல் மற்றும் இத்தொழில்நுட்பத்தை பெண்கள் சுய உதவிக் குழுவிற்கு பயிற்சி மூலம் அளித்தல் மீ.வ.க.ம.ஆநி., தூத்துக்குடி | 4.77 | - | - | 4.77 |
| 6. | தஞ்சாவூரில் மீனினப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்துதல்-மீ.வ.க.ம.ஆநி., தூத்துக்குடி | 20.50 | .. | .. | 20.50 |
| | மொத்தம் .. | 38.67 | .. | .. | 38.67 |

[ 2001 செப்டம்பர் 6

## இணைப்பு IV

*(166-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**கோரிக்கை எண் 10.**

## பால் வழங்கு செயல் திட்டங்கள்

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2001-2002**

### பால் பெருக்குத் துறை

மனிதனுக்குத் தேவையான உணவுப்பொருள்களில் பால் ஒரு முக்கியமான சத்துள்ள உணவாகும். கிராமப் புறங்களில் பால் வியாபாரம் மரபுவழி துணைத் தொழிலாக உள்ளது. கிராமப் புறங்களில் பொதுவாக கறவை மாடுகளைப் பராமரித்து வளர்த்து குடும்பத்தினுடைய வருவாயைப் பெருக்குவதில் பெண்களின் உழைப்பு பெரும் பங்கு வகிக்கிறது. கிராமங்களில் உற்பத்தியாகும் பாலைக் குறைந்த விலைக்கு இடைத்தரகர்கள் வாங்கி, பெருகிவரும் நகரத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதாகக் கூறி அதிக விலைக்கு நகர்ப்புறங்களில் விற்றார்கள். இந்த முறையில் உற்பத்தியாளரோ அல்லது நுகர்வோரோ எந்தப் பயனையும் அடையவில்லை. இதனால் நன்கு கட்டமைக்கப்படாத பால் துறையில் இடைத்தரகர்கள் பெரும்பயன் பெற்றார்கள். தற்பொழுது நன்கு கட்டமைக்கப்பட்ட பண்ணை வளர்ச்சியின் காரணமாக இந்தச் சூழ்நிலை முழுமையாக மாறி விட்டது. பால் உற்பத்தியாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக இடைத்தரகர்கள் ஆதிக்கம் பால்வளத் துறையிலிருந்து அறவே நீக்கப்பட்டது. பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வணிக உதவிகள் மூலம் அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி பிறந்தது. இதேபோல் நகர்ப்புறங்களிலும் பால் கூட்டுறவுகளின் மூலமாக நுகர்வோர்களின் தேவையைப் பூர்த்தி செய்து பால் மற்றும் பாலிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வழி செய்யப்பட்டது. நவீன பால் பண்ணைகளையும், பால் குளிரூட்டும் நிலையங்களையும் அமைத்தல் சிறந்த மற்றும் மேம்படுத்தப்பட்ட



2001 செப்டம்பர் 6 ]

முறைகளினால் பாலைப் பதப்படுத்தல் மற்றும் பாலை எடுத்துச்செல்ல மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிசெய்தல் ஆகியவை இம்மாற்றத்திற்கு வழி வகுத்தன. மேலும், பால்வளத் துறையின் ஒழுங்கான திட்டமிடப்பட்ட அணுகுமுறையினாலும் செயல்பாட்டினாலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுத்தது.

பால்வளத் துறை 1958-ல் தொடங்கப்பட்டு ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. பால்வளத் துறையின் வணிக நடவடிக்கைகள் ஜூலை 1972-ம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பிப்ரவரி 1981-ல் இந்த நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**ஆனந்த் பாணி கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:**

(அ) முன்பு அமைக்கப்பட்ட பால் வழங்கும் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அதன் அளவின் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. மாறாக தற்போது அமைக்கப்படும் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உறுப்பினர்கள் வழங்கும் பாலில் உள்ள கொழுப்புச் சத்து அடிப்படையில் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) இச்சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டவை அல்ல.

(இ) இச்சங்கங்கள் உற்பத்தியாளர் நலனை அடிப்படையாகக் கொண்டவை.

(ஈ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கால்நடை மருத்துவப் பணி, செயற்கைமுறை கருவூட்டல், கால்நடை சமச்சீர் தீவனம் போன்ற அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே கொடுக்கப்படுகின்றன.

(உ) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் குறிப்பிடத்தக்க வகையில் உள்ளூர் விற்பனையை மேற்கொள்வதில்லை.

(ஊ) உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஊழியர்களுக்கு, செயற்கை முறை கருத்தரிப்பு பணி மற்றும் முதலுதவி சிகிச்சை செய்யும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

[ 2001 செப்டம்பர் 6

**பால்வளத் துறையின் முக்கிய பணிகள்:**

1. பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைத்தல் மற்றும் பதிவு செய்தல்.

2. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மற்ற பால் கூட்டுறவுகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல்.

3. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் 1988, பால் கூட்டுறவுகள் தொடர்பான விதிகள் நடைமுறைப்படுத்துதல்.

பால்வளத் துறையின் செயல்பாடுகளை நிறைவேற்ற தற்போதுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 23 பால்பத துணைப் பதிவாளர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியாக கூட்டுறவு சார்பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் உள்ளனர். தலைமை அலுவலகத்தில் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை வளர்ச்சி தலைமைப் பொறுப்பில் உள்ளார். அன்னார் பால் கூட்டுறவுகளுக்கான பதிவாளர் ஆவார். அன்னாருக்கு உதவிடும் வகையில் துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு), துணைப் பதிவாளர் (தலைமையகம்), கணக்கு அலுவலர், செயற் பொறியாளர் (சேர்மம்), விவசாய அலுவலர் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்கள், கண்காணிப்பாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் உள்ளனர். இத்துறையில் உள்ள மொத்த பதவிகளின் எண்ணிக்கை 848 ஆகும். கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்பு குழுக்களும், 13 நடமாடும் கால்நடை பிரிவுகளும் பால் பெருக்கும் திட்டம் செயல்படாத விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. தேசிய பால்வள வாரியத்தின் நிதி உதவி பெற்று பால் பெருக்குத் திட்டம், 1. சென்னை, 2. காஞ்சிபுரம், 3. திருவள்ளூர், 4. விழுப்புரம், 5. கடலூர், 6. வேலூர், 7. திருவண்ணாமலை, 8. தருமபுரி, 9. சேலம், 10. நாமக்கல், 11.ஈரோடு, 12. கோயம்புத்தூர், 13. மதுரை, 14. தேனி, 15. திண்டுக்கல், 16. நீலகிரி, 17. திருச்சி, 18. கரூர், 19. பெரம்பலூர், 20. தஞ்சாவூர், 21. திருவாரூர், 22. நாகப்பட்டினம், 23. புதுக்கோட்டை, 24. அரியலூர் ஆகிய மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டதாகும்.



2001 செப்டம்பர் 6 ]

ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சி சிறந்த முறையிலும் தரமான முறையிலும் செயல்படுவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளன.

பால் கூட்டுறவுகளை சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்துவதைத் தவிர நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் அல்லது ஆண்டுக்கு 500 டன் பால் திடப்பொருள் உற்பத்தி செய்யும் தனியார் பால் பண்ணைகளைப் பதிவு செய்தல், கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 92-ன்கீழ் இத்துறை மேற்கொள்கிறது.

**பால்வளத் துறையின் முன்னேற்றம்**

| வ.எண் | இனம் | செயலாக்கம் (31-7-2001) |
|---|---|---|
| 1. | முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை (நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பால் வழங்கும் கூட்டுறவுகள் உள்ளடக்கியது) | 10041 |
| 2. | மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 3. | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 22.74 இலட்சம் |
| 4. | பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்) நாள் ஒன்றுக்கு | 21.48 இலட்சம் லிட்டர் |
| 5. | பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) நாள் ஒன்றுக்கு | 17.51 இலட்சம் லிட்டர் |
| 6. | சென்னை நகரத்தில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு | 7.65 இலட்சம் லிட்டர் |
| 7. | பால்பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை திறன் நாள் ஒன்றுக்கு | 20, 28.39 இலட்சம் லிட்டர் |
| 8. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை திறன் நாள் ஒன்றுக்கு | 40, 11.38 இலட்சம் லிட்டர் |
| 9. | தானியங்கி பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை | 213 |

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி**

1999-2000ஆம் ஆண்டில் 387 கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-3-2000 வரை 325 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2000-2001ஆம் ஆண்டில் 275 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-3-2001 வரை 163 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பால் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும்**

**தமிழகத்தில் உள்ள ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள்/ ஒன்றியங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 9977 |
| (ஆ) | பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 1 |
| (இ) | கூட்டுறவு பால் பண்ணை | 1 |
| (ஈ) | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 61 |
| (உ) | பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியம் | 1 |
| (ஊ) | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| (எ) | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் இணையம் (மாநில அளவு இணையம்) | 1 |

**பால்வளத் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**விருதுநகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம்.**

தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் கடனாக அளித்த நிதி உதவியான ரூ.325.85 இலட்சம் மற்றும் மாநில அரசால் வழங்கப்பட்ட பங்குத் தொகை/ மானியம் ரூ.139.65 இலட்சம் ஆக மொத்தம் ரூ.465.50 இலட்சம் செலவில் திருவில்லிபுத்தூரில் ஒரு பால் பண்ணை அமைக்கப்பட்டது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற கூடுதல் வசதிகள் ஏற்பாடு செய்ய ஏதுவாக தேசிய கூட்டுறவு வளர்ச்சி



நிறுவனத்திடம் கூடுதலாக ரூ.98.68 இலட்சம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்**

ஈரோடு, கோவை, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள் கட்டமைப்பு வசதிகளான பால் கொள்கலன்கள், பால் தரமளக்கும் கருவி, திரவ நைட்ரஜன் குடுவை, புல் வெட்டும் கருவி, கிட்டி ஆகியவற்றை அளிக்கும் பொருட்டு திருத்திய வரவு-செலவுத் திட்டம் 2001-2002-ல் ரூ.9.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தனி அலுவலர் நியமனம்**

அரசு ஆணை நிலை என் 204, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 25-5-2001-ன்படி மூன்றாண்டு பதவி காலம் முடித்த 9070 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ், அந்தச் சங்கங்களுக்குத் தனி அலுவலர்கள் பிரிவு 33 (10)(aa)-ன்கீழ் நியமனம் செய்யப்பட்டனர்.

தேர்தல் நடத்தப்பட்டு, பிரதம சங்கத் தலைவர் என்ற வகையில் மாவட்ட ஒன்றியத்திற்கு இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களும், அதன்வழி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் பொறுப்புக்கு வந்த அனைவரும், தமிழ்நாடு மாநில பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு இயக்குநராகவும் நியமனம் செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும், சட்டரீதியாக 25-5-2001 அன்று பதவி இழந்த காரணத்தினால் அதே நாளில் தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 16 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களும், காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் ஒன்றியத்திற்கு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் இணையத்தின் பொது மேலாளர் அவர்கள் தனி அலுவலராகவும் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு அதன் நிர்வாக இயக்குநர் தனி அலுவலராகவும், அரசு ஆணையின்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைத்தல்**

பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை, 1992-ன் கீழ் மாதவரத்தில் ஆணையரின் கட்டுப்பாட்டில் மத்திய தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்று ரூ. 69.78 இலட்சம் செலவில் மத்திய அரசின் 100% மானியத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் பால் பண்ணையிலிருந்து பெறப்படும் மாதிரிகளைப் பகுத்தாய்வு செய்து, பால் மற்றும் பால் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி உள்ளதா என உறுதி செய்யும் வகையில் செயல்படும்.

2000-2001ஆம் ஆண்டில் ரூ. 8.10 இலட்சம் மேற்காண் திட்டத்தின் கீழ் மானியமாக இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ. 34.16 இலட்சத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

**பகுதி-2 திட்டம்**

திருத்திய வரவு-செலவுத் திட்டம் 2001-2002-ல் உள்கட்டமைப்பு வசதிகள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் வகையில் ரூ. 60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பின்வரும் இனங்களுக்குச் செய்யப்பட்டுள்ளது:—

(2001-2002)
(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொடர் செலவினம் | தொடரா்ச் செலவினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட அலுமினியம் பால் கொள்கலன்கள் வாங்குதல் | - | 30.00 | 30.00 |
| 2. | பாலின் தரத்தைச் சோதனை செய்வதற்கான கருவியை வாங்குதல் | - | 30.00 | 30.00 |
| | மொத்தம் .. | - | **60.00** | **60.00** |



**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாட்டில் 1920 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பால்வள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1927 ஆம் ஆண்டில் மாநிலத்தில் முதல் கூட்டுறவு பால் பண்ணை, சென்னை நகரத்தில் அமைக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு பால் பெருக்குத் துறை மாநிலத்தில் நிறுவப்பட்டது. நியூசிலாந்து உதவியுடன் 1963 ஆம் ஆண்டு, சென்னைக்கு அருகிலுள்ள மாதவரத்தில் தினசரி 50,000 லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய திறனுள்ள நவீன பால் பதப்படுத்தப்படும் ஆலை நிறுவப்பட்டது. 1967ஆம் ஆண்டு மதுரையில் ஐக்கிய நாடுகள் பன்னாட்டு குழந்தைகள் கல்வி நிதி உதவியுடன் 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால் பண்ணை நிறுவப்பட்டது. மாநில பால் பெருக்குத் துறை, 1962ஆம் ஆண்டு முதல் கிராமப்புறங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அவை மூலம் பால் கொள்முதலை முறைப்படுத்தத் தொடங்கியது. கிராமப்புறங்களில் கொள்முதல் செய்யப்பட்ட பால் அலுமினியம் கேன்களில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களின் மூலமாக குளிரூட்டு நிலையங்களுக்கு அல்லது பால் பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் பாலுக்கு விலை லிட்டர் அடிப்படையில் வழங்கப்பட்டது. பசும்பாலுக்கும், எருமைப்பாலுக்கும் வெவ்வேறு விலை நிர்ணயிக்கப்பட்டது. கறவை மாடுகள் வாங்குவதற்காக சங்கங்களின் உறுப்பினர்களுக்கு கடன் உதவியை வழங்கியது. பெரும்பாலான நகரங்களில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசு, பதப்படுத்தும் பால் நிலையங்களைக் கூட்டுறவுத் துறையின் மூலமாக நிறுவியது. 1972-ல் பால் கொள்முதல் ஒருநாளைக்கு 40,000 லிட்டராக இருந்தது.

**பால்பெருக்குத் திட்டம்-I**

தமிழ்நாடு பால்வள மேம்பாட்டுக் கழகம், கம்பெனிகள் பதிவுச் சட்டம், 1956-ன்கீழ், 1972 ஆம் ஆண்டு பால் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகப் பதிவு செய்யப்பட்டு மிகப் பெரிய அளவில் பால் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகிய செயல்களை "பால் பெருக்குத் திட்டம்-I" என்ற பெயரில் செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் கடலூர், வேலூர், தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தேசிய பால்வள வாரியத்தின் தொழில்நுட்ப உதவியுடனும், இந்திய பால்வள கழகத்தின் நிதி உதவியுடனும், உலக உணவுத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட பால் பவுடர் மற்றும் பட்டர் ஆயில் ஆகியவற்றைக் கொண்டும் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதால் ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் பெறப்பட்ட பாலின் கொழுப்புச் சத்து மற்றும் இதர சத்தின் அளவு கூட்டுறவுச் சங்கங்களிலேயே சோதனை செய்யப்பட்டு அதன் தரத்தின் அடிப்படையில் வாரந்தோறும் பால் பணப் பட்டுவாடா செய்து, ஆண்டு முழுவதும் பால் விற்பனைக்கு வழிவகுத்தது. ஆண்டின் முடிவில் பால் உற்பத்தியாளர்களுக்கு சங்கங்களில் ஏற்பட்ட இலாபத்தில் ஒரு பகுதி விலையை வித்தியாசமாகவும் மற்றும் இலாபப் பங்கீடாகவும் வழங்கப்பட்டது. இது விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர ஊக்குவித்ததோடு, காலப் போக்கில் வலுவான சங்கங்களை ஏற்படுத்த உதவியது.

அதன் பின்னர், 1978 ஆம் ஆண்டு அரசு மூன்று அடுக்கு முறையில், கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில், பால் பெருக்குத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கொண்ட் உயர்நிலை அமைப்பாக இணையமும் அமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஆனந்த் முறை பின்பற்றப்பட்டதை அடுத்து 1-2-1981 முதல் தமிழ்நர்டு பால், உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஏற்படுத்தப்பட்டது.

முதல் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், வெளிநாட்டிலிருந்து உயர் இன ஜெர்சி காளைகள் மற்றும் கருவுற்ற கிடேரிகள் இறக்குமதி செய்யப்பட்டு ஒரு "ஜெர்சி மையக் கரு பண்ணை" (NJ&SF) உதகமண்டலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அவை தாய் பண்ணையின் அடிப்படையாக இருக்கும். 2000-2001 ஆம் ஆண்டில் 12.22 இலட்சம் ஜெர்சி/ஜெர்சி கலப்பின மற்றும் ஹோல்ஸ்டின் ஃபிரிஸ்யன்/ஹோல்ஸ்டின் ஃபிரிஸ்யன் கலப்பின காளை உறை விந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் ரூ.14.26 கோடி வழங்கப்பட்டு 2,82,000 விவசாயிகளைக் கொண்ட சுமார் 2,500 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு நாளொன்றுக்கு 3.75 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்டதும், 20 டன்கள் பால் பவுடர் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதும் கூடிய பால் பண்ணைகள் மேலே குறிப்பிட்ட 9 மாவட்டங்களில் அமைக்கப்பட்டன.





**பால்பெருக்குத் திட்டம்-II**

முதலாம் பால்பெருக்குத் திட்டத்தின் மூலம் நகர்ப் புறங்களில் பாலின் தேவை அதிகரித்ததால், பால் கொள்முதலை உயர்த்த இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் மூலம் கறவை மாடுகளின் உற்பத்தித் திறனைப் பெருக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இரண்டாவது நிலையின் செயல்பாடுகள் ரூ.32.43 கோடி மதிப்பீட்டில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் கூடுதலாக விரிவுபடுத்தப்பட்டது. பால் பெருக்குத் திட்டத்தின் அடிப்படையாக தமிழ் நாடு பால்வள நிறுவனமாக இருந்ததை, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாக மாற்றப்பட்டது. இந்த மூன்றடுக்கு அமைப்பு கிராமப் புற பால் உற்பத்திக்குத் தேவையான பால்பதப்படுத்தும் வசதிகள் மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகளையும் அளித்தது. இரண்டாம் பால்பெருக்குத் திட்ட காலத்தில்தான் சேலம் பால் பண்ணை கட்டி முடிக்கப்பட்டது. அம்பத்தூர் மைய பால் பண்ணையின் பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 2.00 இலட்சம் லிட்டரிலிருந்து 3.00 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டது. மேலும், 75 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் சென்னை மாநகரில் நிறுவப்பட்டன. இதோடல்லாமல், திருவண்ணாமலை, திருவள்ளூர் மற்றும் ஆத்தூர் ஆகிய இடங்களில் புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

இவை தவிர, எருமைகள் வைத்து பராமரித்து வரும் பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், எருமைகளின் இனவிருத்திக்காக எருமையின் உறை விந்து நிலையம் ஈரோட்டில் நிறுவப்பட்டது. செயற்கை முறை உறை விந்து கருவூட்டலுக்கு உதவிடும் வகையில் ஒரு மணி நேரத்தில் 45 லிட்டர் திரவ நைட்டிரஜன் உற்பத்தி செய்யும் திறனுள்ள திரவ நைட்டிரஜன் ஆலை ஒன்று சேலத்தில் நிறுவப்பட்டது.

கிராம நிலை ஊழியர்கள், செயலர்கள், பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்குத் தேவையான பயிற்சிகளை அளிக்க ஏதுவாக பயிற்சி நிலையங்கள் விழுப்புரம், வேலூர், சேலம் மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் நிறுவப்பட்டன.

இரண்டாம் பால் பெருக்குத் திட்ட முடிவில், 8.40 இலட்சம் விவசாய பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் 5329 பிரதம

[ 2001 செப்டம்பர் 6

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. சராசரியாக தினசரி 8 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. உபரிகாலத்தில் கொள்முதல் அளவு 10.15 இலட்சம் லிட்டர்களாக உயர்ந்தது.

**பால் பெருக்குத் திட்டம்-III வது கட்டம்**

புதியதாக தொடங்கப்பட்ட மூன்றடுக்கு செயல் திட்டமாகிய "ஆனந்த்" கூட்டுறவு அமைப்புக்கு வலு சேர்ப்பதற்கும், ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ரூ.66.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் மற்றும் மாநகர பால் பண்ணைகளிலும் செயல்படுத்தப்பட்டு, 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக புதிய பால் பண்ணை ஒன்று சோழிங்கநல்லூரில் அமைக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பால் பண்ணை, 32.6 ஏக்கர் நிலத்தில், பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள சோழிங்கநல்லூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பால் பண்ணையின் மதிப்பீடு ரூ.24.80 கோடியாகும். பால் பண்ணையின் கொள்திறன் நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டர் ஆகும். இது 8 இலட்சம் லிட்டர் வரை அதிகரிக்கக் கூடியதாகும். இந்த பால் பண்ணையில் உள்ள கருவிகள் யாவும், அதாவது பால் வருகை, பதப்படுத்துதல், பாக்கெட்டுகளில் அடைத்தல், பால் அனுப்பி வைத்தல் மற்றும் தளவாடப் பொருட்களைச் சுத்தம் செய்வது ஆகியவை யாவும், கணிப்பொறி வாயிலாக, தானாகவே இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் அமைக்கப்பட்ட 7358 கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 22.74 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பால் கூட்டுறவுகளினால் பயன் அடைந்து வருகின்றனர். பால் பெருக்குத் திட்டங்களின்கீழ் பயன் பெறாத மாவட்ட ஒன்றியங்களாகிய திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி ஆகியவையும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய அரசின் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் முறையே ரூ.11.71 கோடி மற்றும் ரூ.3.37 கோடி நிதி உதவியினைப் பெற்று இயங்கி வருகின்றன.

நல்ல முறையிலான நிர்வாகம் மற்றும் திறமையாக நிர்வகிப்பதற்காக ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், தற்பொழுது கீழ்க்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்



2001 செப்டம்பர் 6 ]

அவற்றிற்கெதிராகக் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

| வ. எண் | ஒன்றியம் | மாவட்டம் |
|---|---|---|
| (1) | காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஒன்றியம் | காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் |
| (2) | விழுப்புரம் ஒன்றியம் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| (3) | வேலூர் ஒன்றியம் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| (4) | தர்மபுரி ஒன்றியம் | தர்மபுரி |
| (5) | சேலம் ஒன்றியம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| (6) | ஈரோடு ஒன்றியம் | ஈரோடு |
| (7) | கோயம்புத்தூர் ஒன்றியம் | கோயம்புத்தூர் |
| (8) | மதுரை ஒன்றியம் | மதுரை மற்றும் தேனி |
| (9) | திண்டுக்கல் ஒன்றியம் | திண்டுக்கல் |
| (10) | நீலகிரி ஒன்றியம் | நீலகிரி |
| (11) | திருச்சி ஒன்றியம் | திருச்சி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| (12) | தஞ்சாவூர் ஒன்றியம் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| (13) | புதுக்கோட்டை ஒன்றியம் | புதுக்கோட்டை |
| (14) | விருதுநகர் ஒன்றியம் | விருதுநகர் |
| (15) | திருநெல்வேலி ஒன்றியம் | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |
| (16) | கன்னியாகுமரி ஒன்றியம் | கன்னியாகுமரி |
| (17) | சிவகங்கை ஒன்றியம் | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |

பால் கொள்முதல், பால் மற்றும் பால் உப பொருட்களின் விற்பனை ஆகிய வழக்கமான நடவடிக்கைகளை மேற்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் கவனித்து வருகின்றன.

[ 2001 செப்டம்பர் 6

இணையத்தின்கீழ் நான்கு இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | இடம் | செயலாற்றல் (நாளொன்றுக்கு) |
|---|---|---|
| (1) | அம்பத்தூர் | 4.0 இலட்சம் லிட்டர் |
| (2) | மாதவரம் | 2.0 இலட்சம் லிட்டர் |
| (3) | சோழிங்கநல்லூர் | 4.0 இலட்சம் லிட்டர் |
| (4) | அயனாவரம் | பால் உப பொருட்கள் உற்பத்தி பண்ணை |

மேற்குறிப்பிட்டுள்ள முதல் மூன்று பால் பண்ணைகளும் பால் பதப்படுத்துதல், பால் பைகளில் நிரப்புதல், அனுப்புதல் ஆகியவற்றிற்காக பன்னாட்டுத் தர நிர்ணயச் சான்று (ஐ.எஸ்.ஓ.9002) அளிக்கப்பட்டு உள்ளது. அயனாவரத்தில் உள்ள நான்காவது பண்ணையில் பால்கோவா, ஐஸ்கிரீம், மோர், தயிர் மற்றும் குளோப்ஜாமுன் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு, ஒருங்கிணைந்து வழி நடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாகத் திட்டமிடல், பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளையும் இயந்திர சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பணிகளையும் "டர்ன்கீ" (Turn key) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. மற்றும் ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களையும் இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

**பால் கொள்முதல் மற்றும் விற்பனை:**

2000-2001 ஆம் ஆண்டில், தமிழகத்தில், சராசரியாக நாளொன்றுக்கு 17.00 இலட்சம் லிட்டர் என்ற அளவில் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மற்றும் 13.71 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது இதில் 6.49 இலட்சம் லிட்டர் பால், அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாகவும், 7.22 இலட்சம் லிட்டர் பால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மூலமாகவும் சென்னை மாநகரத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 6 ]

**மாநிலத்திற்கான பால் கொள்முதல் விலை:**

பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த பால் கொள்முதல் விலை 7-4-1998 முதல் மாற்றியமைக்கப்பட்டது.

| காலம் | எருமைப்பால் (7 விழுக்காடு கொழுப்புச் சத்து 8.8 விழுக்காடு இதர சத்து) | பசும்பால் (4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 8.5 விழுக்காடு இதர சத்து) |
|---|---|---|
| | ஒரு லிட்டர் பாலிற்கான விலை | ஒரு லிட்டர் பாலிற்கான விலை |
| 7-4-1998 முதல் இன்று வரை | ரூ.10.94 | ரூ.9.00 |

**மாநகரில் விற்பனை விலை**

பதப்படுத்திய, நிலைப்படுத்திய பால் பைகள் மற்றும் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களிலும் வழங்கப்படும் முழு கொழுப்புச் செறிந்த பால் ஆகியவற்றின் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| பதப்படுத்திய பால் (ஒரு லிட்டருக்கு) 3 விழுக்காடு கொழுப்புச் சத்து 8.5 விழுக்காடு கொழுப்பில்லாத திடப்பொருள் | | நிலைப்படுத்திய பால் (ஒரு லிட்டருக்கு) 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து 8.5 விழுக்காடு கொழுப்பில்லாத திடப்பொருள் | | முழு கொழுப்புச் செறிந்த பால் (ஒரு லிட்டருக்கு) 6.5 விழுக்காடு கொழுப்புச் சத்து 9 விழுக்காடு கொழுப்பில்லாத திடப் பொருள் | | நிலைப்படுத்திய பால் (தானியங்கி பால் வழங்கும் நிலையம்) (ஒரு லிட்டருக்கு) 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து 8.5 விழுக்காடு கொழுப்பில்லாத திடப் பொருள் | |
|---|---|---|---|---|---|---|---|
| பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் |
| ரூ. 10.50 | ரூ. 11.00 | ரூ. 13.00 | ரூ. 13.50 | ரூ. 15.50 | ரூ. 16.00 | ரூ. 12.50 | ரூ. 12.50 |

[ 2001 செப்டம்பர் 6

**2000-2001 ஆம் ஆண்டில்**

நாளொன்றுக்கு விற்கப்பட்ட பாலின் சராசரி அளவு (இலட்சம் லிட்டரில்)

| | | | |
|---|---|---|---|
| 5.09 | 0.58 | 0.21 | 1.34 |

சென்னையில் ஆவினின் மொத்த விற்பனை பங்கு: 52 விழுக்காடு

## விற்பனையைப் பற்றிய குறிப்புகள்

**பால் விற்பனை:**

2000-2001 ஆம் ஆண்டில் (மார்ச் முடிய) சராசரியாக, நாளொன்றுக்கு 7.22 இலட்சம் லிட்டர் பாலை சென்னை மாநகரில் இணையம் விற்பனை செய்துள்ளது. சென்னை நகரில், நுகர்வோர் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு முறையே பால் அட்டைகள், பணம் மற்றும் சிறப்பு விற்பனை மூலமாகவும் 213 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், 195 கண்ணாடியிழை பிளாஸ்டிக் தொட்டிகள், 509 பூத்துக்கள் மற்றும் 34 பாலகங்கள் மூலமாக பால் விற்பனை செய்யப்படுகிறது. 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், சென்னையில் முகவர்கள் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது. தற்சமயம் 35 முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு, நாளொன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் தனியார் விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

**தானியங்கி பால் வழங்கும் நிலையத்தில் மாறுதல்:**

தற்சமயம் நிலைப்படுத்திய பால் மட்டும் நுகர்வோருக்குத் தானியங்கி பால் வழங்கும் நிலையம் மூலமாக விற்கப்பட்டு வருகிறது. தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் விற்பனை செய்யும் பாலைத் தவிர, பால் உபபொருட்கள் விற்பனை செய்யவும் சில தானியங்கி விற்பனை நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டு பால் பொருட்கள் விற்கப்படுகின்றன.



2001 செப்டம்பர் 6 ]

**பால்பொருட்கள் விற்பனை:**

இணையத்தின் விற்பனைப் பிரிவானது கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

(1) பெருநகர் பால் விற்பனை

(2) பெருநகர் பால் உபபொருட்கள் விற்பனை

(3) பிறமாநிலங்களில் பால் உபபொருட்கள் விற்பனை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் இணைந்த தலைமை நிறுவனமாகும். அரசாணை எண்.555, வேளாண்மைத் துறை, நாள் 21-3-1980-ன்படி சென்னை பெருநகரில் பால் விற்பனையை மேற்கொள்வதும், அதனுடன் இணைந்த மாவட்ட ஒன்றியங்கள் உற்பத்தி செய்த பால் பொருட்களை விற்பனை செய்வதும் இணையத்தின் பொறுப்பாகும். 17 மாவட்ட ஒன்றியங்களில் சேலம், ஈரோடு, மதுரை, தர்மபுரி ஒன்றியங்களில் உற்பத்தி சமன்படுத்தும் பால் பண்ணைகள் (பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகள்) உள்ளன. மற்ற ஒன்றியங்களிலுள்ள உபரி பால், அருகிலுள்ள பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால்பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பால்பொருட்களாக மாற்றப்படுகின்றன. இப்பால் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தி சமன்படுத்தும் பால் பண்ணைகளில், பால் உப பொருட்களாகிய வெண்ணெய், பால்பவுடர் மற்றும் நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

இப்பால்பொருட்கள் தவிர, உதகையில் உள்ள பால் பண்ணையில் பாலாடைக் கட்டிகளும், சேலம் பால் பண்ணையில் டெட்ரா பாக்கெட்டுகளில் பாலும், 'மாவின்' மாம்பழச்சாறும், சுவையூட்டிய நறுமணப்பாலும் தயாரிக்கப்படுகின்றன. இன்சுவை பொருட்களான ஐஸ்கிரீம், யோகர்ட், பால்கோவா போன்றவை இணையத்தின் பொறுப்பில் இயங்கி வரும் அம்பத்தூர் பால் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பால் பொருட்கள் "ஆவின்" என்ற வணிக முத்திரைப் பெயருடன் இணையத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்சுவை பொருட்கள் "ஆவின் குட்னஸ்" எனும் பெயருடனும், ஆவின் நெய் மற்றும் வெண்ணெய் "அக்மார்க்" முத்திரையிடப்பட்டும், பால் பவுடர் மற்றும் பாலாடைக்கட்டி இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் சான்றுடனும் விற்பனை செய்யப்படுகின்றன.

**புதிய பால் உபபொருட்கள்:**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பால் உப பொருட்கள் சென்னை மாநகரில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

(1) மைசூர்பா

(2) குளோப்ஜாமூன்

(3) கலாகந்த்

(4) சர்க்கரை கலந்த பால் பவுடர்

(5) இருமுறை சமன்படுத்திய பால் (டெட்ரா பேக்)

ஆவின் பால் உபபொருட்கள் தமிழ்நாடு மற்றும் இதர இடங்களில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு விற்கப்படுகின்றன:

**(1) சென்னைப் பெருநகர்:**

சென்னைப் பெருநகரிலும் மற்றும் புறநகர் பகுதியிலும் பால் உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக நந்தனத்தில் உள்ள உபபொருட்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உபபொருட்கள் அம்பத்தூர் மற்றும் அயனாவரத்தில் உள்ள கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு விற்பனை நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

உபபொருட்கள் விற்பனை ஆவின் பாலகங்கள், சில்லறை உரிமம் பெற்றவர்கள், மொத்த விற்பனையாளர்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. திருமணம் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனை மூலம் பூர்த்தி செய்கிறது.

**(2) பாலகங்கள்:**

இணையத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 34 ஆவின் பாலகங்கள் உள்ளன. அவற்றில் 7 பாலகங்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அனுப்பப்பட்ட மகளிராலும், ஒரு பாலகம் முன்னாள் இராணுவத்தினராலும் மற்றும் 26 பாலகங்கள் இணையத்தின் பணியாட்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.



**(3) சில்லறை விற்பனை உரிமங்கள்:**

சென்னைப் பெருநகர் மற்றும் புறநகர் பகுதியில் 125 சில்லறை விற்பனை உரிமம் பெற்ற நிலையங்கள் உள்ளன. பணம் பெற்றுக் கொண்ட பிறகே உபபொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. சில்லறை விற்பனை உரிமையாளர்களுக்கு ஐஸ்கிரீமிற்கு 25 விழுக்காடும், இதர பொருட்களுக்கு 6 விழுக்காடும், தரகு கொடுக்கப்படுகிறது.

**(4) மொத்த விற்பனையாளர்கள்:**

சென்னைப் பெருநகரில் 8 மொத்த விற்பனையாளர்களை இணையம் நியமனம் செய்துள்ளது. மொத்த விற்பனையில் 60 விழுக்காடு விற்பனை, மொத்த விற்பனையாளர்கள் மூலம் செய்யப்படுகின்றது. மொத்த விற்பனையாளர்கள் நகரின் பால் உப பொருட்கள் தேவையை சுமார் 2000 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் பூர்த்தி செய்கின்றனர். மொத்த விற்பனையாளர்கள் அந்தந்த இடத்தில் மாநகரம் முழுவதுமாக அமர்த்தப்படுகிறார்கள். மொத்த விற்பனையாளர்களிடமிருந்து உப பொருட்களுக்கான தொகையை கேட்பு காசோலையாகப் பெற்ற பின்னரே அவர்களுக்கு உபபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மொத்த விற்பனையாளர்கள் 4 விழுக்காடு தரகும், சில்லறை விற்பனையாளர்கள் 6 விழுக்காடு தரகும் பெறுகின்றனர்.

சென்னை மாநகர் மற்றும் பிற மாநிலங்களில், 11 சி அண்ட் எப் முகவர்களின் மூலமாகவும், டெல்லி, ஜோத்பூர், அகமதாபாத், இந்தூர், மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், காலிகட், கொச்சின், திருவனந்தபுரம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய 12 கிளைகளின் மூலமாகவும் பால் உப பொருட்களின் விற்பனை நடைபெறுகிறது. வட பகுதியில் பிற மாநில விற்பனையை டெல்லி, கொல்கத்தா, மும்பை ஆகிய நகரங்களில் இருக்கும் மூன்று உதவி மேலாளர்கள் (விற்பனை)/மண்டல மேலாளர்கள் கவனித்து வருகிறார்கள். 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து 2001-2002 ஆம் ஆண்டு (ஜூலை 2001 வரை) சி அண்ட் எப் முகவர்கள் மூலமாகவும் கிளைகளின் மூலமாகவும் நடைபெற்ற மொத்த விற்பனையின் விவரங்கள் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன:

[ 2001 செப்டம்பர் 6

| உப பொருட்களின் பெயர் | விற்பனை செய்யப்பட்ட இடம் | 1999-2000 | | 2000-2001 | | 2001-2002 (ஜூன் 2001) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மெட்ரிக் டன்னில் அளவு-இலட்சம் ரூபாயில் மதிப்பு | | | | | |
| | | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு |
| வெண்ணெய் | சென்னை | 1165.08 | | 1103.46 | | 237.7 | |
| | கிளைகளில் (சி அண்டு எப் முகவர்கள்) | 9.00 | | 405.74 | | 264.00 | |
| | மொத்த விற்பனை | 2418.00 | | 1478.00 | | 437.00 | |
| | மொத்தம் | 3592.08 | 2514.15 | 2987.20 | 2426.76 | 938.70 | 646.82 |
| நெய் | சென்னை | 700.85 | | 802.51 | | 229 | |
| | கிளைகளில் (சி அண்டு எப் முகவர்கள்) | 3433.22 | | 3356.05 | | 1804 | |
| | மொத்த விற்பனை | 280.40 | | 138.00 | | 93 | |
| | மொத்தம் | 4414.47 | 4305.46 | 4296.56 | 3204.05 | 2126 | 1764.61 |
| பால்பவுடர் | சென்னை | 29.81 | | 31.90 | | 7.30 | |
| | கிளைகளில் (சி அண்டு எப் முகவர்கள்) | 2417.66 | | 1686.12 | | 196 | |
| | மொத்த விற்பனை | 2698.50 | | 5709.00 | | 810 | |
| | மொத்தம் | 5145.97 | 2727.36 | 7427.02 | 4149.43 | 1013.30 | 755.49 |



2001 செப்டம்பர் 6 ]

**உள்ளீட்டுப்பணி:**

**பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்:**

2001-2002 ஆம் ஆண்டு (ஜூலை, 2001 வரை) காலத்தில், மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 18.00 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் (ஜூலை, 2001 முடிய) 39 பால் உற்பத்தி செய்யும் சங்கங்கள் தொடங்கப்பட்டன. மொத்தமாக 7426 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1173 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மகளிரால் பராமரிக்கப்படுகின்றன. 14.20 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றிற்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடைத் தீவனமும், பசுந்தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும் கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

கிராம அளவில் பணியாளர்களுக்கு, கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2001-2002ஆம் ஆண்டில் (ஜூலை, 2001 முடிய) உறைவிந்து மூலம் 4.08 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. 2001-2002ஆம் ஆண்டில் (ஜூலை, 2001 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை பிரிவில் உள்ள நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் மூலம் 2.85 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக அவசர கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2001-2002ஆம் ஆண்டில் (ஜூலை, 2001 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் 99 நடமாடும் காலநடை சிகிச்சைப் பிரிவுகளும், 33 அவசர கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

**உள்நாட்டு கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி:**

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக 2001-2002ஆம் ஆண்டில் (ஜூலை, 2001 முடிய) 37,858 வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள பொலிகாளை மையக்கரு பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும், உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் (ஜூலை, 2001 முடிய) தலா 3.57 இலட்சங்கள் மற்றும் 0.83 இலட்சங்கள் உறைவிந்துக் குச்சிகள் முறையே பசுவினத்திற்கும், எருமையினத்திற்கும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

[ 2001 செப்டம்பர் 6

**கால்நடை தீவன உற்பத்தி ஆலை:**

மூன்று கால்நடை தீவன உற்பத்தி ஆலைகள், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் மாதவரத்திலும், ஈரோடு ஒன்றியத்தின்கீழ் ஈரோட்டிலும், மதுரை ஒன்றியத்தின்கீழ் சுப்பலூாரிலும் கால்நடை தீவன ஆலைகள் இயங்கி வருகின்றன.

இவ்வாலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும். இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் குச்சி வகை மற்றும் தூள் வகை தீவனங்கள் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கும் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இத்தீவனம் கால்நடை பராமரிப்புத் துறைக்கும், மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த மூன்று கால்நடை தீவன ஆலைகளும் அதிக உற்பத்திச் செலவினாலும், குறைந்த அளவு உபயோகத்தினாலும் இழப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**பால் கூட்டுறவுகளுக்காக கால்நடை பராமரிப்புத் துறையின் செயலாக்கப் பணிகள்:**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களால் செய்யப்படாத இடங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளை கால்நடை பராமரிப்புத் துறை செய்து வருகிறது.

**கறவை மாடு மானியத் திட்டம்:**

1999-2000ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கறவை மாடுகள் மானிய உதவித் திட்டங்களின் விவரங்கள் வருமாறு:

| வரிசை எண் | திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | கறவை மாடுகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் நலத் திட்டம் | 928 | 1856 | 74.24 |
| (2) | ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிறிஸ்துவராக மதம் மாறியவர்கள் | 18 | 36 | 1.44 |



2001 செப்டம்பர் 6 ]

**கன்று வளர்ப்புத் திட்டம்:**

1998-99ஆம் ஆண்டில், 1,212 கன்றுகள் ரூ.129.44 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் பராமரிக்கப்படுகின்றன. தாட்கோ/ஆதி திராவிடர் நலத் திட்டம்/கிறித்துவராக மாறிய ஆதிதிராவிடர்கள் கறவை மாடுகள் மானிய திட்டத்தின் பயனாளிகளான மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஆதிதிராவிட உறுப்பினர்களின் நான்கு மாதத்திலிருந்து பத்து மாத வயதுள்ள கறவை இனக் கன்றுகளுக்கு 32 மாதங்கள் வரை கன்றுகளுக்கான தீவனம், ஈட்டுறுதி ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன.

**பின்தங்கிய மக்களின் மேம்பாட்டுத் திட்டம்:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக கறவை மாட்டுக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒன்றியத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் உறுப்பினர்களுக்கு மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய குறைந்த வட்டியுடன் கூடிய கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| திட்டம் | பயனாளிகள் | கறவை மாடுகளின் எண்ணிக்கை | பரிந்துரைக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 1,268 | 2,386 | 334.29 |
| தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 145 | 266 | 32.02 |

**அரசினால் அளிக்கப்பட்ட மானியம்:**

7-4-1998 மற்றும் 16-4-1998-ல் அரசினால் மாற்றியமைக்கப்பட்ட பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலையினால் இணையத்திற்கு

விற்பனை விலையில் ஒரு லிட்டருக்கு ரூ.0.50 இழப்பு ஏற்பட்டது. இந்த இழப்பினைச் சரிகட்டுவதற்காக, ஒரு லிட்டருக்கு ரூ.0.50 வீதம் மானியத்தை இணையத்திற்கு அளிக்க அரசு ஒப்புக் கொண்டது. அதன்படி, கீழ்கண்டவாறு அரசினால் மானியத் தொகை அளிக்கப்பட்டது:

| வருடம் | தொகை (கோடியில்) |
| --- | --- |
| 1998-1999 | ரூ.5.70 |
| 1999-2000 | ரூ.15.00 |

இதனைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள பால் பண பட்டுவாடா பற்றி 26-5-2000 அன்று பரிசீலித்து, ரூ.30.00 கோடி மானியத்தை அரசு அளித்தது.

பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தேங்கி இருக்கும் பால் பணம் பட்டுவாடா செய்வதினை கருத்திற் கொண்டு அரசு, அரசாணை எண் 62 மற்றும் 73, கால்நடை பராமரிப்பு மற்றும் மீனவளத் துறை, நாள் 31-3-2001 மற்றும் 19-4-2001 வாயிலாக ரூ.8.00 கோடி மற்றும் ரூ.20.00 கோடியினை வழிவகை முன்பணமாக ஆண்டிற்கு 17 விழுக்காடு வட்டியுடன் திரும்பச் செலுத்தப்படும் கடனாக அளித்துள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள பணமானது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டது.

தற்பொழுது வழிவகை முன்பணத்தை மானியமாக மாற்றுவதற்கும் வட்டியைத் தள்ளுபடி செய்வதற்குமான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**நிதி நிலை :**

31-3-2001 வரையுள்ள காலத்தில் இணையத்தின் திரண்ட மொத்த இழப்பு ரூ.86.88 கோடியும், மாவட்ட ஒன்றியங்களுக்கான இழப்பு ரூ.157.56 கோடியும் ஆக மொத்த இழப்பு ரூ.244.44 கோடியாகும். இந்த இழப்பிற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு:

(1) மாற்றியமைக்காத பாலின் விற்பனை விலை

(2) மூலப் பொருட்களின் விலையில் உயர்வு

(3) அதிகப் பணியாளர்கள்





**தொலை நோக்குத் திட்டம் 2010 :**

தேசிய பால் வள வாரியம், முதல் கட்டமாக தொலை நோக்குத் திட்டம் 2005-ன்கீழ் கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி, வேலூர் மற்றும் தர்மபுரி முதலிய 6 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து, மேற்குறிப்பிட்ட ஒன்றியங்களுக்கு ரூ.72.00 கோடி பண உதவியும், இணையத்திற்கு ரூ.46.00 கோடி பண உதவியும் அளிப்பதற்குப் பரிசீலித்து வருகிறது.

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்-மத்திய அரசின் திட்டம்-கூட்டுறவுகளுக்கு உதவுதல் :**

இழப்பில் இயங்கும் ஒன்றியங்கள்/இணையம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, ஒன்றியங்கள் மற்றும் இணையத்திற்கு உதவும் விதமாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் "கூட்டுறவுகளுக்கு உதவும் புனரமைப்புத் திட்டம்" ஒன்றினை உருவாக்கியுள்ளது. இத்திட்டம் 50 விழுக்காடு மத்திய அரசு மானியமாகவும் 50 விழுக்காடு மாநில அரசின் மானியமாகவும் வழங்கப்படும். இத்தொகையானது அந்தந்த ஒன்றியங்களின் மொத்த இழப்புத் தொகையைவிட கூடுதலாக இருக்கக் கூடாது என நிர்ணயிக்கப்பட்டது. மேலும், மாநில அரசு சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

தேசிய பால்வள வாரியம் கூர்ந்தாய்வு செய்து ஈரோடு மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்றியங்களை மட்டுமே புனரமைப்புத் திட்டத்திற்குத் தேர்ந்தெடுத்து அதன்படி, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.13 கோடி நிதியுதவி அளிக்க முடிவு செய்துள்ளது. அதில் மாநிலத்தின் ஈடான பங்காக ரூ.0.89 கோடி திருத்திய வரவு-செலவுத் திட்டம் 2000-2001-லும், ரூ.5.61 கோடி திருத்திய வரவு-செலவுத் திட்டம் 2001-2002-லும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்று அவர்களுக்குத் தெரிவிக்கலாமென்ற கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. ஈரோடு மற்றும் விழுப்புரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களின் புனரமைப்புத் திட்டத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை :**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, தேசிய பால்வள வாரியத்தின் ஆலோசனைப்படி, தமிழகத்திலுள்ள அனைத்து வகையான பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொண்டிருந்த வாரியம் கலைக்கப்பட்ட பின்னர், 1-10-1987 முதல், தொடங்கப்பட்டு,

தனித்துறையாகச் செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலையிலுள்ள 10,041 பால் உற்பத்தியாளர்கள் தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 17 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் இயங்கும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் சட்டரீதியான தணிக்கை, இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில், 370 பணியாளர்கள் கடன் சேவை அடிப்படையில் கூட்டுறவு மற்றும் இதரத் துறையிலிருந்து பெறப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

**தணிக்கை முன்னேற்றம்:**

**(அ) தொடக்கநிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 2000-2001-ம் ஆண்டு இறுதித் தணிக்கை:**

2000-2001-ம் ஆண்டிற்கு 10,041 தொடக்க பாலுற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், 31-7-2001 வரை 3,340 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,701 சங்கங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**(ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை:**

**1995-96ஆம் ஆண்டு தணிக்கை:**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், அனைத்து ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு சான்று அளிக்கப்பட்டுள்ளன.

**1996-97 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 16 ஒன்றியங்களின் இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டு மீதமுள்ள திருநெல்வேலி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**1997-98 இறுதித் தணிக்கை:**

17 ஒன்றியங்களில் 14 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு, காஞ்சிபுரம்-திருவள்ளூர், விழுப்புரம், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.



**1998-99 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில், 13 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 4 ஒன்றியங்களில் திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஒன்றியங்களின் தணிக்கை தொடங்கப்படாமலும், வேலூர் மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களின் தணிக்கை தொடங்கப்பட்டு, முன்னேற்றத்திலும் உள்ளது.

**1999-2000 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், 7 ஒன்றியங்களுக்கான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 7 ஒன்றியங்களுக்கான தணிக்கை தொடங்கப்பட்டு, முன்னேற்றத்திலுள்ளது. 3 ஒன்றியங்களில் முந்தைய ஆண்டுத் தணிக்கை நடைபெற்று வருவதால் தணிக்கை தொடங்கப்படவில்லை.

**(இ) 1993-94ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை:**

1993-94-ம் ஆண்டு முடிய பட்டயக் கணக்கரால் தணிக்கை செய்யப்பட்டு, பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் இயக்குநரால் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

1994-95-ம் ஆண்டிற்கு பட்டயக் கணக்கரால் தணிக்கை முடிக்கப்பட்டு, பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் சோதனைத் தணிக்கையும் முடிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு தணிக்கைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட 5 நிபந்தனை குறைகள் முழுமையாக நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் சோதனைத் தணிக்கை முடித்து தணிக்கைச் சான்று வழங்கப்படும்.

1995-96 மற்றும் 1996-97-ம் ஆண்டுகளுக்கு பட்டயக் கணக்கரால் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. சோதனைத் தணிக்கை செய்ய 1 உதவி இயக்குநர், 4 முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களைத் தற்காலிகமாக அனுமதித்து, அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவர்களைக் கொண்டு தணிக்கை செய்து தணிக்கைச் சான்று விரைவில் வழங்கப்படும்.

1997-98-ம் ஆண்டிற்கான தணிக்கை, பால் கூட்டுறவு தணிக்கைத் துறையினரால் முடிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளுக்குரிய தணிக்கைச் சான்று வழங்கப்பட்ட பின்னர் இவ்வாண்டிற்குரிய தணிக்கைச் சான்று வழங்கப்படும்.

[ 2001 செப்டம்பர் 6

1998-99-ம் ஆண்டிற்கான தணிக்கை, பால் கூட்டுறவு தணிக்கைத் துறையினரால் செய்யப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

1999-2000-ம் மற்றும் 2000-2001-ம் ஆண்டிற்கான தணிக்கைக்கு, இணையத்தின் தணிக்கை முடிக்க ஏற்கெனவே கோரப்பட்டுள்ள 1 உதவி இயக்குநர், 10 முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் பணியிடங்களைத் தற்காலிகமாக அனுமதிக்கக் கோரியுள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆணை கிடைக்கப்பெற்ற பின்னர் தணிக்கை முடித்து தணிக்கைச் சான்று வழங்கப்படும்.

**அரசு வருவாய்:**

2000-2001-ம் தணிக்கை ஆண்டில், இணையத்திடம் வசூலிக்க வேண்டிய தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணத்தின் கீழ் ரூ.30.49 இலட்சம் கேட்பில் ஜூலைத் திங்கள் முடிய ரூ.22.75 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224478
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.